
தெள்ளாற்று நந்தி

நாடகங்கள்



அ. ச. ஞானசம்பந்த

தெள்ளாற்று நந்தி

(வானொலி நாடகங்கள்)

164

அ. ச. ஞானசம்பந்தன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

இரண்டாம் பதிப்பு—நவம்பர், '64

விலை ரூ. 5-00

முத்துக்குமரன் பிரஸ், சென்னை-1.

முகவுரை

இன்று நூல் வடிவில் வெளி வரும் இந்த நாடகங்கள் அனைத்தும் 'வானொலியில்' நடிப்பதற்காக எழுதப் பெற்றவை. வானொலியில் நடிப்பதற்கு எழுதப்பெறும் நாடகங்கள் ஒருவகையில் அமைந்திருக்க வேண்டிய இன்றியமையாமை உண்டு. நாடகத்தைக் கேட்பவர் காது ஒன்றின் துணைகொண்டே நாடகத்தை அனுபவிக்கிறார். ஏனைய நாடகங்களில், கேட்பவர் காதுடன் கண்ணையும் பயன்படுத்துகின்றனர். எனவே, ஒலி செய்யாத ஒரு பகுதி வேலையைக் கண்கள் காட்சியால் பெற்று அனுபவித்துவிடுகின்றன. மேலும், நடிகரின் உடை, முகபாவம், விளக்கின் உதவி முதலிய புறச் சாதனங்களும் நாடகம் சிறக்க உதவுகின்றன. அரங்கில் நடிக்கப்பெறும் நாடகங்களில் உரையாடல் சற்று நீண்டிருப்பினும், நாடகம் பார்ப்பவருக்கு அலுப்புத் தட்டுவதில்லை. ஆனால், காதின் உதவியால் மட்டும் அனுபவிக்கப்பெறுகிற வானொலி நாடகம் எழுதுபவன், சில கட்டுப்பாடுகளைப் பெறுகிறான்.

மேலே கூறிய புறச்சாதனங்களுள் ஒன்றும் அவனுக்கு இல்லை. தான் பயன்படுத்தும் சொற்களின் ஒலி வேறுபாட்டால்மட்டும் அவன் உணர்ச்சி வேறுபாடுகளைக் காட்ட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுகிறது. எனவே, வானொலிக்கு ஏற்ற நாடகம் ஒன்று நடிப்புக்கும் ஏற்றதாய் இருக்குமென்று சொல்வதற்கில்லை. ஆகலின், இந் நாடகங்கள் நடிக்கப்படுவதில் சில குறைபாடுகள் தோன்றத்தான் செய்யும் என்பதை முன்கூட்டி அறிவிப்பது ஆசிரியன் கடமையாகிறது.

இந்தத் தருணத்தில் நாடகங்களைப்பற்றிய பொதுவான சில கருத்துகளை ஆராய்வது பொருத்தமுடையதே.

இடைக்காலத்தில் ' முத்தமிழ் ' என்ற வழக்கு ஏற்பட்டா லும், மிகப் பழங்காலந்தொட்டே தமிழில் நாடகக் கலை பயின்று வந்துள்ளது என்பது அறிய முடிகிறது. இரண் டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் பதினைன்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரேனும், பல நாடக இலக்கண நூல்களின் பெய ரைக் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் நூல்களுள் ஒன்றேனும் நம் காலத்தில் அகப்பட்டிலது. அவை போனா லும், நாடகம் என்று கூறத்தக்க ஒரு நூலாவது பத்தொன் பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இன்று கிடைத்திலது.

முத்தமிழ் என்று வழங்கப்பெற்ற மொழியில் ஒரு நாடகங்கூடக் காலதேவனது கையிற் சிக்காமல் நிலைபெற முடியவில்லை என்பது வியப்பையே விளைக்கிறது. ஆனால், இதிலிருந்து ஓர் உண்மையை நாம் அறிய முடிகிறது. மேனாட்டு இலக்கியத்தில் காணப்பெறுவதுபோலப் படிப் பதற்கென்றே ஏற்பட்ட நாடகங்கள் தமிழ் மொழியில் இல்லை. அனைத்தும் நடிப்பதற்காகவே எழுதப்பெற்றன. நாட்டில் நடிப்பு அருகியவுடன் நாடக நூல்களும் அழிந்து ஒழிந்தன.

இக் குறைபாட்டைப் போக்க முற்பட்டவர்கள் பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும் பேராசிரியர் பரிதிமாற் கலைஞர் அவர்களும். இவ்விருவரும் இயற்றிய நாடகங்கள் மேனாட்டு நாடகப் பாணியில் அமைந்தவைகளே. இற்றை நாளில் திரு. பம்மல் சம்பந்த முதலியார் போன்ற பெரி யார் சிலர் நாடகக் கலைக்கு அரும்பாடு பட்டுள்ளனர்.

முதலாவதாக உள்ள 'தெள்ளாற்று நந்தி' என்ற நாடகமும் இடைக்காலத் தமிழ் நூல்களுள் சிறந்த தொன்றாகிய நந்திக் கலம்பகத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய கற்பனை நாடகமாகும். நந்திக் கலம்பகம் சிறந்ததொரு தமிழ் இலக்கியம் என்பதும் அதிலுள்ள பல பாடல்கள், அறம் வைத்துப் பாடப் பெற்றுள்ளனவென்பதும் பலரும் அறிந்த ஒன்றாகும்.

இந் நூல் தோன்றியதன் காரணம் கர்ணபரம்பரைக் கதையாக வழங்குவதன்றி வேறொன்றுமில்லை. சிவஞான முனிவர், "நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்று சோமேசர் முதுமொழி வெண்பாவில் கூறியுள்ளது தவிர, வேறு வரலாற்றுப்பூர்வமான ஆதாரம் ஒன்றுமில்லை. எனவே, எவ்வாற்றானும் தமிழை வளர்க்க வேண்டுமென்ற உறுதிபூண்ட மன்னனாக நந்தித் தொண்டைமானைக் கற்பனைசெய்து இந் நாடகம் ஆக்கப்பெற்றுள்ளது.

'புதுமைப்பித்தன்' அவர்களுடைய சாவா வரம்பெற்ற படைப்புகளுள் 'சாப விமோசனம்' என்ற சிறு கதையும் ஒன்றாகும். அக் கதையில் ஈடுபட்ட இவ்வாசிரியன் அதனை நாடகமாக ஆக்கி ஒலிபரப்ப வேண்டுமென்ற விருப்பத்துடன், திருமதி புதுமைப்பித்தனை அணுகியபோது அவர் மிக விருப்பத்தோடு ஒப்புதல் தந்தார். பழைய அகலிகை கதையாயினும் மானிட உணர்ச்சிகள் எந்தெந்தக் கோணங்களில் போராட முடியுமென்ற மனோதத்துவ அடிப்படையைக்கொண்டு அற்புதமாக இதனைப் படைத்துள்ளார் புதுமைப்பித்தன் அவர்கள். அதையே நாடகமாக ஆக்கி, அவர் சூட்டிய அதே பெயருடன் அளித்துள்ளான் ஆசிரியன். இதற்காக மறுமுறையும் திருமதி புதுமைப்பித்தன் அவர்களுக்கு இவ்வாசிரியனின் நன்றி உரித்தாகும்.

மூன்றாவதாக அமைந்துள்ளது 'கைலாசநாதர் கோயில்' என்ற வரலாற்றுச் சித்திரம் ஆகும் (Documentary). வானொலி ஒன்றிற்கே உரிய தனிச் சிறப்புடையது இது. வரலாற்றுச் சித்திரத்தைப் படிக்கவும் ஒலிபரப்பவும் முடியுமே தவிர, நடித்தல் இயலாத காரியம். காஞ்சியை ஆண்ட பல்லவர்களுள் 'இராஜசிம்ம பல்லவன்' மிகவும் புகழ்வாய்ந்தவன். பெரிய புராணத்தில் இடம்கொண்ட பூசலார் நாயனார் காலத்தில் வாழ்ந்தவன் ஆவான் இவன். "அசரீரி கேட்டவன்" என்ற விருதுப் பெயரையும் உடையவன். அவனால் அமைக்கப்பெற்ற இம் மாபெரும் கலைக்கோயில் இறைவன் தன் பழைய இருப்பிட

மாகிய கயிலையைவிட்டு வந்து குடியேறக்கூடிய அத்துணைக் கலைச் சிறப்புவாய்ந்த இடமாகும். அதுபற்றி இன்றுவரை வெளிவந்துள்ள வரலாறுகள், கல்வெட்டுகள், கர்ண பரம்பரைக் கதைகள் ஆகிய ஆதாரங்களைக்கொண்டு இவ்வொலிச் சித்திரம் ஆக்கப்பெற்றுள்ளது. நாடகத்தையே படித்துப் பழக்கமுள்ளவர்கள் இவ் வரலாற்றுச் சித்திரத்தில் காணப்படும் குரல் 1, 2, 3, 4 என்பதனைக் கண்டு மருள வேண்டா. பலசெய்திகளை—வரலாற்றுக் காலத்தில் நடந்த செய்திகளை—வெளியிடுவதற்கு இக் குரல்தான் உதவியாக அமைந்துவிடுகின்றன.

நான்காவதாக அமைந்துள்ளது 'சேரமான் இரும்பொறை' என்ற நாடகமாகும். புறநானூற்றில் வரும் "குழவி இறப்பினும்" என்ற பாடலையும் பழைய உரையாசிரியரின் விளக்கத்தையும் தழுவி இந் நாடகம் ஆக்கப் பெற்றது.

மதுரைக் காஞ்சி என்பது பத்துப் பாட்டில் காணப் பெறும் ஓர் அழகிய பாட்டு. மாங்குடி மருதனர் என்னும் புலவர் பெருந்தகையார் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்மேல் பாடியது அது. சங்கப் பாடல்கள் எனப்பெறும் தொகுதியுள் அதுவே மிக நீண்ட பாடல். 782 அடிகளை உடைய அப் பாடல் காஞ்சித் திணையில் அமைந்தது என்பதை அதன் பெயரே விளக்குகிறது. அப் பாடலைப் படிக்கும்பொழுது என் மனத்தில் சில ஐயங்கள் தோன்றியதுண்டு. காஞ்சித் திணை என்பது உலக நிலையாமைபற்றிக் கூறுவது என்பது தொல்காப்பியங் கூறும் உண்மை. 'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும் நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'[1] என்பது காஞ்சித் திணையின் இலக்கணமாகும். இப் பகுதிக்கு உரை கூற வந்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், 'வீடு பேறு நிமித்தமாகச் சான்றோர் அறையுங் குறிப்பினது காஞ்சித் திணை என்பது பொருளாயிற்று' என்று

---

[1] தொல்காப்பியம், புறத்திணை இயல், சூ. 23.

கூறினர். அவ்வாருயின், நிலேயாமை அன்ரே பாடலின் திரண்ட கருத்தாய் இருத்தல் வேண்டும்? ஆனல், பாடலைப் படித்து முடிப்பவர்க்கு இறுதியாக மனத்தில் நிற்கும் கருத்து வேறு ஒன்ருய் இருக்கிறது. எழுநூறு அடிகளுக்குமேல் உள்ள பாடல்

‘ இலங்குஇழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும!
வரைந்துநீ பெற்ற நல்ஊழி யையே. ’

என்ற முறையில் முடிகிறது. அஃதாவது, செழியனை நோக்கி, ‘ பெரும, உனக்கு அளந்த வாழ்நாள் கழிவதன் முன்னர், அழகிய பெண்கள் பொன்ஞலாய பாத்திரத்தில் மதுவைத் தர, அதனை உண்டு மகிழ்ந்து உறைவாயாக!’ என்று கூறி முடிகிறது பாடல். ‘ நிலேயாமை கூறவந்த புலவர் இவ்வாறு பாடலை முடிப்பர்!’ என்ற ஐயம் தோன்றிற்று.

பாடலின் இடையிற் பல இடங்களில் நிலேயாமை கூறுகிருர்[1] என்பதும், போர் முதலானவற்றின் பயன் இன்மை குறித்துப் பேசுகிருர் என்பதும் உண்மை. இத்தகைய இடர்ப்பாட்டைப் படிப்பவர் பெறுவர் என்று கருதியே போலும் நச்சினர்க்கினியர் தமக்கே உரிய கொண்டுகூட்டு முறையில் பாடலின் அடிகளை மாற்றிக் காஞ்சித் திணைப் பொருள் பெறுமாறு செய்துவிட்டார். பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்நாள் முழுவதும் போரிலேயே ஈடுபட்

---

[1] ‘ பருந்துபறக் கல்லாப் பார்வல் பாசறைப்
படுகண் முரசங் காலே இயம்ப
....
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்குங் கனைஇரு முந்நீர்த்
திரைஇடு மணலினும் பலரே, உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே. ’

—அடி, 231—237.

டிருந்துவிட்டானுகலின், அவன் மனத்தை மாற்றவே ஆசிரியர் இப் பாடலை இயற்றியிருத்தல் வேண்டும்.

பழைய சங்கப் பாடல்களிலிருந்து ஒரு நாடகம் அமைக்க வேண்டுமென வானொலி நிலையத்தார் கேட்ட பொழுது மதுரைக் காஞ்சியே என் மனக்கண் முன்னர் நின்றது. எனவே, ' மதுரைக் காஞ்சியைக் கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் உலக வாழ்க்கையின் நிலையாமை உணர்ந்து, இவ்வின்பத்தை வெறுத்து வடக்கிருந்தான் என்று முடித்தால் என்ன !' என்ற ஓர் எண்ணம் தோன்றலாயிற்று. அவ்வெண்ணத்தின் விளைவே இந்த நாடகம். நாடகம் முழுவதும் கற்பனையேயாகும். நாடக பாத்திரங்களிலும், நெடுஞ்செழியன், மாங்குடி மருதனுர், கல்லாடனுர், சேரமான் இரும்பொறை, குறுங்கோழியூர் கிழார் என்பவர் நீங்க ஏனைய பாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே ஆகும். தலையாலங்கானப் போர் மட்டிலும் உண்மை. ஆனுல், இந்தப் போரில் பாண்டியனேடு போரிட்டவர் எழுவர் என்று அறிய முடிகிறதே தவிரச் சேரன் என்றும் சோழன் என்றுங் குறிப்பிடப்படுபவர் இங்குக் குறித்த சேரனும் சோழனுந்தாமா என்ருல், ' ஆம் ' என்று உறுதியாகக் கூற இயலாது.

இந் நாடகங்களைப் படிப்பவர் இவை வானொலிக்காக எழுதப்பெற்றவை என்பதை மனத்திற்கொண்டே படித்தல் வேண்டும். ' புனிதவதி ' என்பது அரை மணி நேரத்திலும், ' அருள் ஒளி, இளையவன், பிரிவு, முத்த நாதன்' என்பவை ஒவ்வொன்றும் கால்மணி நேரத்திலும் நடிக்கப்பெற்றவை.

முதற் பதிப்பில் வெளிவராத நான்கு நாடகங்கள் (முதலில் உள்ள நான்கும்) இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

சென்னை,
1-11-'64

ஆசிரியன்

உள்ளுறை

தெள்ளாற்று நந்தி

(கற்பனை நாடகம்)

[தமிழ் இலக்கியத்தில் நந்திக் கலம்பகம் என்ற ஓர் அருமையான நூல் இருக்கின்றது. இதனைப் பாடிய புலவர் யார், எந்த ஊர், எந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்ற ஒன்றும் இன்றுவரைத் தெரிய வில்லை. ஆனால், மிகச் சிறந்த பாடல்களால் ஆகிய இந்த நூல் அரம் வைத்துப் பாடப்பெற்றுள்ளது என்பது மட்டும் தெரியும். சிவஞான சுவாமிகள் பாடியுள்ள சோமேசர் முதுமொழி வெண்பா என்ற நூலில் உள்ள ''நந்தி, கலம்பகத்தால் மாண்ட கதை நாடு அறியும்'' என்று இந்த ஓர் அடியை வைத்துக் கொண்டு கற்பனையாக எழுதப்பெற்றது இந் நாடகம். நேரடியாக நடிப்பதற்கு அல்லாமல், வானொலிக்காக எழுதப்பெற்றது ஆதலின் அதற்குரிய சில குறைகள் இருக்கத்தான் செய்யும்.

அரம் பாடுதல் என்பது மிகப் பழங்காலந்தொட்டு இந் நாட்டிலிருந்து வருகின்ற ஒரு மரபாகும். பாட லில் சில சொற்கள் பயின்றுவரக் கூடாது எனப் பெரி யோர்கள் கூறியுள்ளார்கள். அதை மீறி, வேண்டு மென்றே இரண்டு பொருள்படும்படியான சொற்களை வைத்துப் பாடுவதே அரம் பாடுதல் என்று கூறப் படும். இவ்வாறு பாடினால், பாடப்பட்டவர்கள் அப்

பாடலைக் கேட்டால் உயிர்விட நேரிடும் என்பது பழைய நம்பிக்கையாகும். அதற்கேற்ற முறையில் இந்நூல் தொடங்குகின்ற கடவுள் வாழ்த்திலேயே "மண் + தலமாய் = மண்டலமாய்" என்று தொடங்குகிறது. எல்லாம் மண்ணாகப் போக என்று பொருள் தரும் சொல்லுடன் தொடங்குகின்ற இந் நூல் ஏறத் தாழ ஒவ்வொரு பாடலிலும் அரம் வைத்தே பாடப் பெற்றுள்ளது. என்றாலும் தமிழ்ச் சுவையை அறிவதற்கு அரம் வைத்துப் பாடிய பாடல்களைக்கூடக் கேட்டு இன்புற்று உயிரை விட்டவர்கள் இந் நாட்டில் உண்டு என்ற பேருண்மையை அறிவுறுத்துவதற்காகவே இந் நாடகம் எழுந்தது.]

(நாட்டை)

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளிஎன்னும் ஓர்உருவம் மூன்றுருவ
மைவடிவோ வளிவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் திருமேனி!

(கல்யாணி)

திசைநடுங்கத் தோன்றிற்று
நீ உண்ட திறல்நஞ்சம்
உயிர் நடுங்கத் தோன்றிற்று
நீ உதைத்த வெங்கூற்றம்.

(துரிதம்)

ஊழி நீ, உலகு நீ;
உருவும் நீ, அருவும் நீ;
ஆழி நீ, அமுதம் நீ;
அறமும் நீ, மறமும் நீ
எனவாங்கு,

(கானடா)

ஒரு பெருங் கடவுள் நின் பரவுதும்—
எங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை அளவும் தென்பொதியளவும்
விடையுடன் மங்கல விசையமும் நடப்ப
ஒருபெரும் தனிக்குடை நீழல்
அரசுவீற்றி ிருக்க அருளுக எனவே!

(அரசன் யானையில் ஊர்வலம்; போர்க் களப் பின்னணி ஓசை; அவ்வோசையின்மேல் குரல்களின் பேச்சு)

குரல் 1: தெள்ளாறு எறிந்த நந்தித் தொண்டைமான் வாழ்க!

பலர்: வாழ்க! வாழ்க!!

குரல் 1: அவனி நாரணன், பல்லவர் கோளரி, நாற்கடல் புலவன், பொலம்பூண் பல்லவன் வாழ்க.

பலர்: வாழ்க! வாழ்க!!

அமைச்சர்: அரசே, மக்களின் மகிழ்ச்சியைக் கண்டீர்களா? தெள்ளாற்றுப்போர் உலகப் புகழ் அடையப்போகிறது.

நந்தித் தொண்டைமான்: அமைச்சரே, எத்தனையோ போர்கள் செய்தோமே? இரட்ட வேந்தன் அமோகவர்ஷனை வென்றோமே. அப்பொழுது கூட இத்தகைய மகிழ்ச்சியடையவில்லையே மக்கள்?

மை: அரசே! இராஷ்டிரகூட வேந்தனுடன் செய்த போர் இவ்வளவு கொடுமையானதன்று. மேலும்......

நந்தி : மேலும் என்ன ?

அமை : தெள்ளாற்றுப் போரில் பாண்டியன், சோழன் என்ற இருவருமல்லவா தோற்றனர்.

நந்தி : இந்தத் தெள்ளாற்றுப் போரில் நம்முடைய தம்பிகள் இள நந்தியும் நாக நந்தியும் காட்டிய வீரத்தைக் கண்டீர்களா ?

அமை : (வெறுப்புக் கலந்த குரலில்) கண்டேன் அரசே...ஆனால், எனக்கு அவர்களுடைய அரச பக்தியில் மட்டும் இன்னும் நம்பிக்கை ஏற்பட வில்லை.

நந்தி : இப்போரில் அவர்கள் காட்டிய வீரத்தைக் கண்டுங்கூட ஏன் உமக்கு இந்த ஐயம் ?

அமை : அரசே...என்ன இருந்தாலும்......

[பின்னணியில், வாழ்க வாழ்க தெள்ளாறு எறிந்த நந்தி வாழ்க என்ற ஒலி மிகுதிப்படுகிறது.]

அரண்மனை சென்று பேசிக்கொள்ளலாம் அரசே.

நந்தி : எங்கே நம் தம்பிகள் இள நந்தியையும் நாக நந்தியையும் காணவில்லை ?

அமை : இதோ வந்துகொண்டு இருக்கிறார்களே !

[சற்றுத் தூரத்தில்]

இள : (பொறுமையுடன்) தம்பி, நாக நந்தி......ம்...ம்ம்...... பார்த்தாயா ? (கேலி) மன்னர் பிரானின்

வெற்றிவிழா வைபவத்தை. தெள்ளாறு எறிந்த நந்தி வாழ்கவாமே? எப்படி இருக்கிறது?

நாக: அண்ணு, பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன் இந்த ஆட்டு மந்தைகளின் கொம்மாளத்தை. தாங்கள் இல்லாவிட்டால் தெள்ளாற்றில் நந்தித் தொண்டைமான் வெற்றியா பெற்றிருப்பான்?

இள: நாகா...இந்த முட்டாள்களுக்கு நம் நினைவே இல்லையா?

நாக: அண்ணு...அப்படிக் கூற என் மனம் இடந்தரவில்லை. அற்ப வீரன்கூட இவ்வெற்றிக்கு 'இளநந்தி'தான் காரணம் என்பதை அறிவானே.

இள: அறிந்து பயன் என்ன? இப்பொழுது நம் பெயரையா கூறுகிருர்கள்? நாமும், இந்த நந்தித் தொண்டமானின் தந்தை நந்திவர்மப் பல்லவனின் மக்கள் தாமே.

நாக: ஏன்? அதை யாரேனும் மறுப்பார்களா? மறுக்கத் துணிவுதான் உண்டா?

இள: மறுப்பதா? நந்திப் பல்லவனே அதைப் பலமுறை கூறி நம்மைத் தம்பிகள் என்று ஏற்றுக்கொண்டுள்ளானே.

நாக: பின்னர் ஏன் இந்த ஆராய்ச்சி? யாரேனும் இப்பொழுது அதனை மறுக்கிருர்களா?

இள: அதற்குக் கூற வரவில்லை. பல்லவ நாட்டுப் பட்டத்திற்கு இந்த நந்தித் தொண்டைமானுக்கு உள்ள உரிமை நமக்கு இல்லையா?

நாக: அவன் அரசனாயிற்றே?

இள: அரசன் ஆகவாவது. பிறக்கும்பொழுதே இவன் மட்டும் அரசனாகவே பிறந்தானா? நாம் வேண்டாமென்று சும்மா இருந்துவிட்டதால் இவன் அரசன்; இல்லாவிட்டால்?

நாக: இப்பொழுதுதான் என்ன? குடியா முழுகி விட்டது?

காவலன்: இளவரசே, மன்னர்பிரான் அழைக்கிறார்.

இள: இதோ வருகிறோம் என்று சொல்.

[அரசனின் பல்லக்கின் அருகில்சென்று இருவரும் நிற்கின்றனர்]

நந்தி: இளநந்தி...எங்கே வெற்றி விழாவில் உன்னை யும் தம்பி நாக நந்தியையும் காணவில்லையே?

இள: (வஞ்சகச் சிரிப்புடன்) என்ன அப்படிக் கூறுகிறீர்கள் அரசே? (கேலிகலந்த குரல்) தெள் ளாறு எறிந்த நந்திவர்ம மகாராஜாவின் வெற்றி விழாவில் இளவரசனாகிய நான் கலந்துகொள்ளா மல் இருப்பேனா?

நந்தி: இதுவரை எங்கே போயிருந்தீர்கள் இருவரும்?

இள : பொதுமக்களோடு கலந்து அவர்கள் மகிழ்ச்சியில் பங்குகொண்டோம். நாங்களும் பொது மக்கள் தாமே ?

நந்தி : இளநந்தி!...என்ன வார்த்தை? உன்னையும் நாகநந்தியையும் பொதுமக்கள் என்று யார் கூறினர்கள்? நீங்கள் முன்னர்ச் செய்த தவறுகளை என்றாவது நான் நினைவூட்டினேனா?

இள : இல்லை அரசே...அதற்குச் சொல்ல வரவில்லை. அரசனை அல்லாத பிறர் அனைவருமே பொதுமக்கள் என்ற கருத்தில் கூறினேன். தவருக எடுத்துக் கொள்ளவேண்டா.

நந்தி : தம்பி...இப்போரின் வெற்றியில் உனக்குப் பெரும் பங்கு உண்டென்பதை யான் மறக்கவில்லை.

இள : (மெல்லிய சிரிப்பு) நான் என்ன செய்து விட்டேன்! மன்னர் பிரானின் வீரத்துடன் ஒப்பிட்டால் என் வீரமெல்லாம் எங்கோ சென்று மறைந்துவிடும்!

நந்தி : இளநந்தி, என் தந்தைதானே உன் தந்தையும்? நம் இருவர் வீரமும் சமமாகத்தானே இருக்க முடியும்?

இள : ஆனல்......

நந்தி : தம்பீ, என்ன ஒருமாதிரியாகப் பேசுகிருய். உன் முகமும் செழிப்பாக இல்லை. உன் விருப்பம்

எதுவென்று தெரிவித்தால் அப்படியே செய்வேன் என்று தெரியாதா? ஆனால் என்று இழுப்பானேன்? (சற்று மௌனம்) ஏன் வாய்மூடி இருக்கிறாய்?

இள: (இழுத்தாற்போல்) அதற்கில்லை...

நந்தி: அஞ்சாமல் கூறு...ஏன் இழுக்கிறாய்?

இள: ஒன்றுமில்லை. நம் தந்தையர் ஒருவர் என்றாலும்...என் தாய் வேறு என்பதை நான் மறக்கவில்லை அரசே!

நந்தி: ஐயனே, இதற்கா இவ்வளவு வருத்தம்? அப்பெருமாட்டியை என் தாயாகவே நான் மதிக்கிறேன். என் தந்தையார் விரும்பி ஏற்றுக்கொண்ட அவர் என்னுடைய தாய்தானே? அதற்காக ஏன் வருந்தவேண்டும்? நாளை அரண்மனையில் சந்திக்கலாம்.

[மீட்டும் வாத்திய இசையும் வாழ்க ஒலியும்.]

* * *

[இளநந்தி வீடு. நேரம் - இரவு]

மங்கை: என்ன? இப்படி உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக விடியுமட்டும் உறங்காமல் சுற்றி வருகிறீர்களே?

இள: (எதையோ யோசித்துப் பேசும் குரலில்) ஆ...நிச்சயம்...உறுதி...இன்னும்...

மங் : என்ன, நான் கூறுவதே காதில் விழவில்லையா? எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தத் தீவிர ஆராய்ச்சி? எது நிச்சயம்? எது உறுதி? இளவரசே?

இள : என்ன சொன்னாய் மங்கை, இளவரசா? யார்? நானா? இளநந்தியா? உன்னை இளவரசி என்று பிறர் அழைப்பதை நீ விரும்பினால், அதற்கு நான் ஏன் பிணையாகவேண்டும்? (கேலிச் சிரிப்புடன்) இளவரசு! இளவரசன்! ...... இளநந்தியா இளவரசன்? வேடிக்கைதான்! வெட்கம்! வெட்கம்!!

மங் : நாதா, என்ன இப்படி நீங்களே பேசிக்கொள்கிறீர்கள்? ஐயோ...எனக்குப் பயமாக இருக்கிறதே! இதில் என்ன வேடிக்கை? வெட்கப்பட வேண்டியது என்ன இருக்கிறது?

இள : உன் கணவன் அரசன் என்று நினைத்துப் பெருமைப்படுவதை விட்டுவிட்டு, இளவரசன் என்று நினைக்கவும் பேசவும் உனக்கு வெட்கமாக இல்லையா?

மங் : ஐயோ! இதென்ன பேச்சு? மீட்டும் பழைய பைத்தியம் பிடித்துக் கொண்டு விட்டதா? இன்னும் ராஜத் துரோக எண்ணம் உங்களைவிட வில்லையா? உறுதி கூறினீர்களே?

இள : போடீ பைத்தியம்......அரசர்கள் சத்தியம் செய்வதும் தேவைக்காக அதனை மீறுவதும் புதுமையல்ல; அது நியாயமுந்தான்.

மங் : நந்திவர்மர் உப்பைத் தின்றுவிட்டு அவருக்கே துரோகம் நினைப்பது...

இள : மங்கை ! நாவை அடக்கிப்பேசு. நானு அவன் உப்பைத் தின்கின்றேன் ? என் தந்தையின் சொத்தில் எனக்கு இல்லாத உரிமை இவனுக்கு என்ன வந்தது ?

மங் : என்ன பேச்சு இது? யார் காதிலாவது இது எட்டினுல் நம் கதி என்ன? அது போகட்டும். எவ்வளவு பெருந்தன்மையுடன் அவர் உங்களை மன்னித்தார்? வேறு மன்னராக இருந்து......

இள : என்ன உளறுகிருய் மங்கை? வேறு மன்னராக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? தலையை வாங்கி இருப்பானு? இந்த இளநந்தியை இன்னும் நீ புரிந்து கொள்ளவில்லை.

மங் : நிறுத்துங்கள் உங்கள் வீரப் பிரதாபத்தை... என்னிடமே அளக்கத் தொடங்கி விட்டீர்களா? அண்ணன், தம்பி இருவரும் கடல்போன்ற படையுடன்தான் நந்தித் தொண்டைமானை எதிர்த்தீர்கள். பலன் என்ன ஆயிற்று? ஒரே நாளில் அவ்வளவு பெரிய சேனையையும் தோற்று, இருவருமே மன்னரிடம் சிறைப்பட்டீர்கள்.

இள : ஏன் தோற்ருேம் என்று தெரியாதா உனக்கு? என்னதான் இருந்தாலும் அவன் பல்லவச் சக்ரவர்த்தி. எனக்குத் துணை வந்தவர்கள் கூலிப் படைகள்தாமே?

மங் : மன்னருடைய பலத்தைப் பெரிதாக்கிக் கூறுவதன் மூலம் உங்கள் தோல்வியை எளிதாக்கிவிட வேண்டா. அவரும் இரட்டபாடிப் போரில் இராஷ்டிரகூடனை வென்று, களைத்துப் போன சமயம் பார்த்துத்தானே தாக்கினீர்கள் ? அவரும் தம்முடைய படையில் பெரும் பகுதியை அப்பொழுது இழந்துவிட்டிருந்தாரே.

இள : யானை படுத்தாலும் குதிரை மட்டத்திற்குக் குறைவில்லை. ஆனால், இப்பொழுது...

மங் : இப்பொழுது மட்டும் என்ன வந்துவிட்டது? ஏன் இந்த அறியாமை? ஆ ! எவ்வளவு பெருந்தன்மை யுடையவர் பல்லவர் கோளரி !

இள : சீ பேதையே ! வாயை மூடு! என் எதிரிலேயே என் பகைவனைப் புகழத் தொடங்கிவிட்டாயே, நீ என் மனைவியா?

மங் : இளவரசே ! ஆத்திரத்தில் அறிவை இழந்துவிட வேண்டா. உங்கள் இருவரையும், ஏன்? உங்களுடன் சேர்ந்துகொண்டு படை எடுத்தவர் களையுங்கூட எவ்வளவு பெருந்தன்மையுடன் மன்னித்தார் அரசர்?

இள : முட்டாளே, மன்னிக்கவில்லை அவன். என்னையும் தம்பியையும் கொன்றுவிட்டால் நாட்டில் கலகம் உண்டாகிவிடும் என்ற அச்சத்தால்தான் விட்டுவிட்டான்.

மங் : “அறிகொன்று அறியான் எனினும் உறுதி உழை இருந்தான் கூறல் கடன்” என்பது தமிழ் மறையின் கட்டளை. உங்களுக்கு வெறுப்பாக இருப்பினும் கூறித் தீரவேண்டியது என் கடமை யாகும். “தற்காத்துத் தன்கொண்டான் பேணித் தகைசான்ற சொல் காத்துச் சோர்விலாது” கடமையைச் செய்யவேண்டியவள் நான்.

இள : (கேலியும் சினமும் நிறைந்த குரலில்) வள்ளுவர் வகுத்த வழி நிற்கும் தமிழ்ப் பெண்ணே!...உன் உபதேசம் என்னவாம்? கூறிவிடு. கேட்கச் சித்தமாக இருக்கிறேன்.

மங் : இளவரசே, அரசியல் சூழ்ச்சியை அறிந்து கொள்ளும் அறிவைக்கூட ஆத்திரம் மறைத்து விட்டதா? குழப்பத்தைத் தடுக்க விரும்பி இருந் தால் மன்னர் என்ன செய்திருப்பார் தெரியுமா?

இள : (கேலிக் குரலில்) அறிவுக் களஞ்சியமே! அதையுந்தான் நீயே சொல்லிவிடு பார்க்கலாம்.

மங் : குழப்பத்திற்குக் காரணமான உங்கள் இருவரை யும் உடனே கொன்றிருப்பார். மன்னித்து வாழ விட்டால் மேலும் மேலும் குழப்பம் ஏற்பட்டுக் கொண்டே யல்லவா இருக்கும்? உங்கட்கு வேண் டியவர்கள், உங்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் நீங்கள் உயிருடன் இருக்கும்வரை கலகம் செய்து கொண்டேதான் இருப்பார்கள்.

இள: பின்னர் ஏன் அந்த முட்டாள் எங்களை மன்னித்துவிட்டான்? எங்களால் மீண்டும் படை திரட்டி எதிர்க்க முடியாது என்ற மமதையா? திரட்டி வந்தாலும் ஒரு கை பார்க்கலாம் என்ற திமிரா? எதுவாக இருப்பினும் இவனை விடப்போவதில்லை!

மங்: காரணமின்றிச் சினங் கொள்ளவேண்டா ஐயனே...அவர் பெருந்தன்மை காரணமாகவே உங்கள் இருவரையும் மன்னித்துவிட்டார். அது மட்டுமா? உங்கட்கு இளவரசு உரிமையையும் வழங்கியுள்ளார். அனைவரும் உங்களை மதித்து நடக்கவும் கட்டளை இட்டுள்ளார்.

இள: மங்கை, இது பெரிய அரசியல் விஷயம். இதில் நீ தலையிட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டா. ஆனல், என் மனக்கருத்தை......

மங்: (குறுக்கிட்டு) மாற்றிக்கொள்ள மாட்டீர்களா, உங்கள் நலந் தீங்குகளில் உங்கள் மனைவிக்கும் பங்குண்டு என்பதைக்கூடவா மறந்துவிட்டீர்கள்?

இள: மறக்கவில்லை. ஆனல், நீ என் வாழ்வு முன்னேற்றத்திற்கே தடையாக இருந்தால் உன்னை என் செய்வது? தமிழ் நாட்டுப் பெண் கணவன் முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டையாக இருக்கும் விந்தையை உன்னிடந்தான் காண்கிறேன்.

மங் : காதலரே, முன்னேற்றத்திற்கு நானு தடையாக இருப்பேன் ? ஆனுல், தாங்கள் அறிவை இழந்து படுகுழியில் விழ முயன்ருல் அதனைத் தடுப்பது என் கடமையன்ரு ? தவருன வழியில் செல்பவர்களை உண்மைக் காதல் தடை செய்யாமல் இருக்குமா ? என் உடம்பில் உயிருள்ளவரைத் தாங்கள் இத்தவருன வழியில் செல்வதைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்கமாட்டேன். உங்கள்மேல் ஆணை.

இள : ஆ! மங்கை! இதென்ன அறியாமை ? ஏன் ஆணை இடுகிருய் ?

மங் : உங்கள் உயர்வில் மட்டும் பங்கு கொள்ளும் உங்கள் காதல் பரத்தையாகிய 'செல்வி' என்று என்னையும் நினைத்துக் கொண்டீர்களா? நீங்கள் வாழ்ந்தால் அவளும் வாழ்வாள், வீழ்ந்தால் 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்' அவள் அது பற்றிக் கவலைப்பட மாட்டாள். அடுத்து, வாழ இருப்பவனை நாடுவதே அவளுடைய தொழில். ஆனுல், என்னை நினைந்து பாருங்கள், வாழ்விலும் தாழ்விலும் நீங்களே எனக்குக் கதி. காகத்தின் இரு கண்ணுக்கும் ஒரு விழி இருப்பதுபோல் நம் இருவர்க்கும் இன்ப துன்பம் ஒன்றுதான். எப்படியும் தங்கள் போக்கைத் தடுத்தே தீருவேன். உங்கள்மேல் ஆணை.

இள : (தனக்குள் பேசுவதுபோல்) இவளிடம் கூறினுல் தீமையே விளையும். (உரக்கக் கூறுதல்)

சரி மங்கை, உன் மனக் கருத்துப்படியே நடந்து கொள்கிறேன்; கவலைப்படாமல் உறங்கு.

* * *

[அரண்மனைக் கொலு மண்டபம், அரசன், அமைச்சன் முதலியோர்கள்.]

காவலன்: ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, தெள்ளாற்று எறிந்த நந்தித் தொண்டைமான்; பல்லவர் கோளரி; அவனி நாரணன் பராக்.

அமை: அரசே வருக வருக! அனைவரும் தங்கள் வருகைக்காகக் காத்து நிற்கின்றனர். புலவர் பெருமான் பெருந்தேவனார், தாங்கள் பெற்ற தெள்ளாற்று வெற்றியைப் பாடியுள்ளார்.

நந்தி: அப்படியா செய்தி...புலவர் பாடியுள்ளார் என்றால் அதைக் கேட்டு அனுபவிப்பதுதானே முதற் கடமை? மற்ற வேலைகள் அனைத்தும் ஒரு புறம் இருக்கட்டும். புலவரை முதலிற் பாடச் செய்யுங்கள்.

அமை: ஒரு விண்ணப்பம் அரசே!

நந்தி: தாராளமாகக் கூறலாமே. ஆனால், கவிதையை அனுபவிக்க என் மனம் விரைகின்றது. சொல்ல வேண்டியவற்றை விரைவிற் கூறிவிடும்.

அமை: அரசே, எத்தனையோ அலுவல்கள் அரசர் வருகைக்காகக் காத்து நிற்கின்றன.

நந்தி: என்ன அப்படித் தலைபோகிற காரியம்?

அமை: தெள்ளாற்றுப் போரில் போரிட்ட வீரர்கட்குப் பரிசுகள் வழங்கவேண்டாவா? தங்கள் தம்பிக்குத் தனி மரியாதைகள் செய்ய வேண்டும் என்று கூறினீர்களே?

நந்தி: ஆம், செய்யவேண்டியதுதான். ஆனால், நம்முடைய அரசாட்சியில் தமிழுக்கும் தமிழ்க் கவிதைக்குந்தான் முதலிடம்.

அமை: அரசே! முக்கியமான அலுவல்கள்...

நந்தி: கவலை இல்லை அமைச்சரே! தமிழ் காத்துக் கொண்டு நிற்கையில், தமிழ்க் கவிதையை அனுபவிப்பதை விட்டுவிட்டு வேறு என்ன வேலை இருந்தாலும் அதற்காக நான் கவலைப்படப் போவதில்லை.

அமை: அரசே! இந்தத் தமிழ்ப் பற்றுத் தங்கட்குப் பெருந்தீங்கை உண்டாக்கவும் காரணமாகலாம். அதுபற்றி எச்சரிப்பது அமைச்சனாகிய எனது கடன்.

நந்தி: அமைச்சரே! அஞ்சவேண்டா. தமிழால் அழிவு வருவதாயின் அதை வரவேற்கிறேன். முன்னர் இத் தமிழ் நாட்டில் வள்ளல் தன்மைக்காக உயிர் விட்ட பாரி வாழ்ந்தான். இன்று தமிழ் என் உயிரை விரும்பினால் அதை விருப்பத்துடன் தரக் காத்து நிற்கிறேன்.

அனைவர்: ஆஹா! என்ன தமிழ்ப் பற்று? என்ன தமிழ் அன்பு! வாழ்க தெள்ளாற்று நந்தி!!

நந்தி: புலவரே! உலக இலக்கியங்களில் ஒன்ருகிய மஹா பாரதத்தைத் தமிழில் பாடிப் பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்ற சிறப்புப் பெயர் பெற்றீர். பாரதம் பாடிய அத்திருவாயால் என்னையும் பாடும் பெருமையைப் பெற்றேனே... அதுவே என் தவம்.

புலவர்: நந்தி! உன் வீரமும், தமிழ்ப் பற்றும், பல்லவ மரபில் மிகச் சிறந்த மன்னனுக, உன் பெயர் விளங்க வழி வகுத்துவிட்டன.

நந்தி: புலவரே! இதுவரை வாழ்ந்த பல்லவ மன்னர்கள், உலகம் இதுவரைக் காணுத குடைவரைக் கோயிலைக் கட்டி உலகப் புகழ் பெற்றனர். அது மகிழ்ச்சிக்குரிய செயல்தான். என்ருலும் மகேந்திரவர்மன், நரசிம்ம வர்மன் போன்றவர் தமிழ்ச் சுவை அறியாது போய்விட்டனர்.

புலவர்: நந்தி! மகேந்திரன், நரசிம்மன் என்பவர்கள் காலத்தில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெரியார்கள் வாழ்ந்தார்களே...

நந்தி: ஆம் ஐயனே! திருவதிகை வீரட்டானத்தில் குணபர ஈச்சுரம் கட்டின மகேந்திரன் திருநாவுக்கரசர் பாடலை அனுபவியாமல் போனது வருத்தத்துக்குரியதே... அஃது அவன் தவக்குறை.

புலவர்: வாழ்க உன் தமிழ்ப் பற்று. மன்னு!

நந்தி: பெருந்தேவனுரே! தங்கள் பாடலைக் கேளாமல் இதுவரை ஏதேதோ பேசிக்கொண்டிருந்து

விட்டேன். எங்கே பாடலைப் பாடுங்கள், கேட்க லாம்.

புலவர். இதோ,

[சங்கராபரணம்]

'வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரான் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே(டு)
யார்வேந்தர் ஏற்பார் எதிர் ?'

நந்தி: ஆஹா! ஆஹா! என்ன பாடல்? என்ன அழகு? அமைச்சரே, ஆயிரம் பொற்காசுகளைப் புலவர்க் குப் பரிசிலாக வழங்குக.

அமை: அப்படியே அரசே. இனித் தம்பியாருக்குச் சன்மானம் செய்யலாமா ?

நந்தி: அப்படியே செய்யலாம். எங்கே இளநந்தி யும், நாகநந்தியும்? நம்முன் வாருங்கள்.

இள, நாக: வணங்குகிறோம் அரசே! உமது புகழ் மேலோங்குவதாக.

நந்தி: தம்பி, தெள்ளாற்றுப் போரில் நீங்கள் காட்டிய வீரமும் மனத் திடமும் நமக்குப் பெரு வியப்பை அளித்தன. பல்லவ சாம்ராச்சியம் உங்கட்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

இள: அரசே! ஏன் எங்களை எல்லைமீறிப் புகழ்கிறீர் கள்? எங்கள் கடமையை நாங்கள் செய்தோம்.

எங்களைக் காட்டிலும் பெருந்தொண்டு செய்பவர்கள் பலருண்டு இப்பெரு நாட்டில்! யாங்கள் அறியாமல் இல்லை.

நந்தி: தம்பீ, இளநந்தி! தாய் நாட்டின்மேல் படையெடுத்து வந்த பகைவனை முறியடிப்பதைக்காட்டிலும் பெருந் தொண்டு வேறு யாதுளது?

இள: சக்கரவர்த்தி அவர்கள் கருத்துப்படி நாட்டுக்கு நன்மை செய்பவர்கள் போர் வீரர்கள் அல்லரே!

நந்தி: தவறு, வீரர்களே பெருநன்மை புரிபவர். இதில் ஐயம் என்ன?

இள: ஏன்? நம் ஆட்சியில் அது வேறுவிதம். உதாரணமாகப் புலவர்கள் வீரர்களைவிட அதிக மரியாதைக்கு உரியவர்கள் என்று தெரிகின்றதே!

நந்தி: தம்பீ, புலவர்களையும் தமிழையும் ஒதுக்கி விட்டுப் பேசு. அவர்கள் புரியும் தொண்டை இந்த முறையில் அளவிட்டுப் பேசுதல் ஆகாத காரியம்.

இள: (ஆத்திரத்துடன்) ஆம்! பாடல்கள் பாடிப் பரிசில் பெற்றே நாட்டுத் தொண்டு செய்கிறார்கள். பாடல்கள் பாடி அரசரை மகிழ்விப்பதால் வீரர்களைவிட அதிக நாட்டுப்பற்றும் அதிகத் தொண்டும் செய்கிறார்கள். ஆகவே, அவர்களே நாட்டைக் காப்பவர்கள் என்றுதான் நானுங் கூறுகிறேன்.

புலவர்: (சிரிப்புடன்) இளவரசே! தொண்டு செய்கிறோம் என்று நாங்கள் என்றுமே கூறினதில்லையே!

நந்தி: இளநந்தி! ஏன் இத்துணைச் சீற்றம் கொள்கிறாய் கவிஞர்களிடத்து? நீயும் நானும் அழியினும் புலமை என்றும் வாழும். நம் வெற்றியுடன் நாமும் சேர்ந்து அழிந்துவிடுவோம். தெள்ளாற்றுப் போரில் வெற்றி கிடைத்தவுடன் குருகோட்டைப் போரை மறந்துவிட்டோம். மக்களும் அப்புகழ் பெற்ற போரை மறந்துவிட்டார்கள். நம் வெற்றியெல்லாம் இப்படித்தான்.

இள: உயிரைவிட்டு நாம் இவ்வாறு பெற்ற வெற்றியைவிட, அரண்மனையிலிருந்து கொண்டே கவிபாடும் இவர்கள் வெற்றி பெரிதுபோலும்.

நந்தி: தம்பீ, உண்மைதான். நீயும் நானும் மறக்கப்பட்டு, நம் வெற்றிகளும் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போன பிறகும் பெருந்தேவனாரின் பாரதம் தமிழ்கூறும் நல்லுலகில் நின்று நிலவத்தான் போகிறது. இன்னுமொன்று கூறுவேன் கேள். இத் தண்டமிழ் நாட்டைப் பல்லவர்கள் ஆள்வதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆட்சி செய்த சோழன் கரிகாலன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலானோர் பெற்ற வெற்றிகளை நினைத்துப் பார்த்தால், அந்த வெற்றிகளை நம்முடைய

வெற்றியோடு ஒப்பிட்டுப்பார்த்தால், நாம் பெற்றதை வெற்றியாகவே கூற முடியாது. கங்கை வரை சென்று இருக்கின்றான் கரிகாலன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் சேரன் செங்குட்டுவனும் கங்கை வரை சென்று வந்துள்ள னர். ஆனால், இன்று அவர்கள் பெற்ற வெற்றியோ, அவர்கள் ஆக்கிய பேரரசோ இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. ஆனால், கரிகாலன் காலத்தில் புலவர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலையும், செங்குட்டு வனைப்பற்றி இளங்கோவடிகள் பாடிய சிலப்பதி காரமும் இன்றும் இருக்கின்றன. இந்த மாபெரும் மன்னர்களைப்பற்றி இன்று நாம் அறிந்து கொள்வ தற்கு, ஏன் அவர்கள் பெயர் நிலைத்து நிற்பதற்குக் கூட, இப் பெரும் காப்பியங்களே காரணமாக உள்ளன. அதற்கு நீயும் நானும் வருத்தப்பட்டு என்ன பயன்? சரி, இதோ இந்தப் பரிசில்களைப் பெற்றுக்கொள்.

குரல் 1 : இளவரசர் இளநந்தி வாழ்க! வாழ்க!

குரல் 2 : இணையற்ற அடலேறு இளநந்தி வாழ்க! வாழ்க!

[இளநந்தி முதலியோர் செல்லல்; மன்ன னும் அமைச்சரும் மட்டும்]

அமை : அரசே, இளநந்தியின் மனநிலையைக் கவனித் தீர்களா?

நந்தி : ஏன் அமைச்சரே ? எனக்கு ஒன்றும் புதுமையாகத் தெரியவில்லையே ? முதலில் அவனுக்குப் பரிசில் கொடுக்காமல் புலவருக்குத் தந்ததில் அவன் வருத்தமடைந்துவிட்டான்.

அமை : இல்லை, நான் அவ்வாறு நினைக்கவில்லை. இளவரசரின் மனநிலையிலும் அரச பக்தியிலும் யான் கொண்டுள்ள ஐயம் வலுப்படுகிறது. தான் செய்த தவற்றை நினைந்து வருந்தும் ஒருவனுடைய மனநிலையை அவனுடைய முகக் குறிப்பிலிருந்தே காணலாம். ஒரு மனிதனின் முகக் குறிப்பைக் கொண்டு அவனுடைய உள்ளத்தில் ஓடுகின்ற எண்ண ஓட்டங்களை உள்ளவாறு அறிவது அமைச்சனாகிய எனது கடமையாகும். எப்பொழுதும் 'உம்' என்று முகத்தை வைத்துக் கொண்டு இருப்பதும், சக்கரவர்த்திகள் பேசும் போது வஞ்சகம் நிறைந்த சிரிப்புடன் பதில் பேசுவதும், சிரிக்க வேண்டிய காலங்களில் சிரிக்காமல் இருப்பதும், இளவரசர் இளநந்தி தோல்வியினால் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை மறக்கவேயில்லை என்பதை அறிவிக்கின்றன. எனவே, எதிர்காலத்தில் இளநந்தியால் அரசர் பெருமானுக்கு என்ன ஊறு விளையுமோவெனச் சிந்தித்துக்கொண்டேயிருக்கின்றேன்.

நந்தி : அமைச்சர் எதிர்காலத்தை ஆய்வது முறை என்றாலும், தகுந்த காரணமின்றி ஒருவன்மேல் ஐயம் கொள்வது முறையன்று.

அமை : நாய் வாலை நிமிர்த்த முயல்வதும், பாம்புக்குப் பால் வார்ப்பதும், பால் வார்த்து அதனுடன் நட்புச் செய்தலும் இயலாத காரியம் அரசே. யானையைப் போன்றவர்களுடன் நட்புக் கொள்ளலாகாது எனப் பெரியவர்கள் கூறிய அறிவுரையை இந்நிலையில் அரசர் பெருமானுக்கு நினைவூட்ட வேண்டியது அமைச்சனாகிய எனது கடன்.

நந்தி : உம் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதாயினும் அவனால் என்ன செய்துவிட முடியும்? ஒருமுறை படையெடுத்து நம்மிடம் பட்ட பாட்டை அதற்குள் மறந்துவிட அவ்வளவு முட்டாளா அவன்? என் தந்தையின் மைந்தனை அவ்வளவு குறைத்து மதிக்க யான் விரும்பவில்லை.

அமை : அரசே, இளநந்தி படைகொண்டு நம்மேல் வருவதை நான் என்றுமே அஞ்சவில்லை. வாள் போல் வெளியே புறப்பட்டுவிட்ட பகைவரை அஞ்சமாட்டேன் அரசே. ஆனால், கேள் போல் பகையாக, உட்பகையாக அவர் வஞ்சக மனத்துடன் இருத்தலையே அஞ்சுகிறேன்.

நந்தி : (சிரித்துவிட்டு) அமைச்சரே, இளநந்தியிடம் நீர் இத்துணை அச்சங்கொண்டிருப்பீர் என்று நினைக்கவும் நாம் வெட்கப்படுகிறோம். அது கிடக்கட்டும், அவன் படைகொண்டு தாக்கமாட்டான் எனில் வேறு எவ்வாறுதான் நம்மைப் பழிவாங்கப் போகிறான்?

அமை: அதுபற்றிதான் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

நந்தி: கடம்பூர், வெறியலூர், வெள்ளாறு, பழையாறு முதலிய இடங்களில் எல்லாம் சோழனையும் பாண்டியனையும் முறியடித்த நம் வெற்றித் திறனைக் கண்ட யார்தாம் நம்மைத் தாக்கத் துணிவார்கள்? அச்சத்தை விட்டொழியும் அமைச்சரே.

அமை: அரசே! மன்னித்தருளவேண்டும். தாங்கள் கூறிய அனைத்தும் வாளால் பெற்ற வெற்றிகள். வாள் கொண்டு எதிர்த்துவரும் பகையை நான் அஞ்சவில்லை. ஆனால் சூழ்ச்சி, தந்திரம், வஞ்சகம் இவற்றை இதுவரை எதிர்த்துப்போராடி நமக்குப் பழக்கம் இல்லையே! இவற்றை எதிர்த்து இவற்றிற் குத் தக்கவகையில் வஞ்சகத்திற்கு வஞ்சகமும் சூழ்ச்சிக்குச் சூழ்ச்சியும் செய்ய வேண்டியது அமைச்சனாகிய என்னுடைய கடமை என்பதை யான் என்றும் மறவேன்! சக்கரவர்த்திகள் தமிழ் இலக்கியக் கடலுள் ஆழ்ந்துவிட்டமையாலும், ஒப்பற்ற வீரம் பெற்றிருத்தலாலும், உலகில் மறைந்துள்ள ஒரு பகுதியைக் காணவே மறந்துவிட்டீர்கள். உண்மையைக்கூறப்போனால், பொய், வஞ்சகம், சூழ்ச்சி, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், அடுத்துக் கெடுத்தல், நம்பினோர்க்கு நயவஞ்சகம் புரிதல் ஆகிய பல குணங்கள் சக்கரவர்த்தியின் சிந்தனைக்

கும் காட்சிக்கும் அப்பாற்பட்டிருக்கின்றன. அரசர் பெருமான் அதனைக் காணமுடியாத காரணத்தால் இவையெல்லாம் இல்லையென்றோ, இருப்பினும் ஒன்றும் செய்யமாட்டா என்றோ நினைப்பது சரியன்று. இவற்றின் உண்மையை அறிவதும், இவை யாரிடம் குடிகொண்டுள்ளன என்று சிந்திப்பதும், இவற்றைப் போக்குவதற்கு வழிகள் யாவை என்று நினைப்பதும் என்னுடைய கடமை என்பதை நான் மறவேன்.

நந்தி: அமைச்சரே, பகைவர்களைப்பற்றி நீர் சிந்திப்பதை நாமும் வரவேற்கின்றோம். ஆனால், ஓயாமல் இதனையே சிந்திப்பதன்மூலம் நண்பர்களையும் பகைவர்களாகக் காணும் காமாலைப் பார்வையைப் பெற்றுவிட வேண்டா.

அமை: அரசே, மறுபடியும் மன்னித்தருள வேண்டுகிறேன். தாங்கள் போன்ற பண்புடையாளர் அருகேயிருக்கின்ற காரணத்தால் அத்தகைய காமாலை நோக்கு எனக்கு வாராது என்றே நினைக்கின்றேன். என்றாலும் கவனக் குறைவு ஏற்படாமல் இருக்கவே விரும்புகிறேன்.

* * *

[இளநந்தியின் காதல் பரத்தை செல்வியின் வீடு]

(தோழி, செல்வி.)

செல்வி: தோழி, என் மனம் ஒரு நிலையில் இல்லை. எங்கே, அந்தப் பாடலைப் பாடு கேட்கலாம்?

தோழி: (பாடுதல்)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றூரோ தடவினர்—பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்.

[பாட்டு முடிந்ததும் கதவு தட்டப் படும் ஓசை.]

செல்வி: தோழி! அவர் வந்துவிட்டாரடி!

தோழி: இதோ போய்க் கதவை திறக்கிறேனம்மா!

[இளநந்தி உள் வருதல்]

செல்வி: இளவரசே, இத்தனை நாட்கள் கழித்தாவது என் நினைவு தங்கட்கு வந்ததே?

இள: கண்ணே, செல்வி, உன் நினைவு வந்ததா என்று கேட்கிறாய்? இல்லை, உறுதியாக உன் நினைவு அறவே வரவில்லை.

செல்வி: (பொய்க் கோபத்துடன்) பார்த்தீர்களா, தெரியும் எனக்கு. என்ன இருந்தாலும் கட்டிய மனைவி மங்கை இருக்கும்போது என்மேல் எவ்வாறு நினைவு வரும்? என்னைத் தொடவேண்டா.

இள: அடி பைத்தியமே! உன் நினைவு வந்ததா என்றல்லவோ நீ கேட்டாய்? உன்னை மறந்தால் அல்லவோ நினைப்பதற்கு? என் பிறவிப் பகைவன் நந்திவர்மப் பல்லவனை மறந்தாலும் உன்னை நான் மறப்பேனா? பால் புளித்து, பகல் இருண்டு,

நால் வேதமும் நெறி தவறினும் உன்னை யான் மறவேன். இது உறுதி.

செல்வி: காதலா! ஏன் இவ்வளவு கலக்கம் இன்று? திடீரென்று சக்கரவர்த்தியின் நினைவு வரக் காரணம்?

இள: காதலி! இன்று அந்த அறிவிலி, அரசவையில் என்னை அவமதித்துவிட்டான் கண்ணே!

செல்வி: ஆ! தங்களை மன்னர் அவமதித்தாரா? நம்ப முடியவில்லையே?

இள: ஆம் செல்வி! எனக்குமுன் அந்தப் பெருந் தேவன் என்ற புலவனுடைய பாடலைக் கேட்டுப் பல்லை இளித்துவிட்டு, அவனுக்குப் பரிசிலும் தந்து பாராட்டிய பிறகுதான் எனக்கு மரியாதை செய்தான். ஆம், அந்த அறிவிலியைப் பல்லவ அரியணையிலிருந்து எவ்வாறாயினும் இறக்கிவிட வேண்டும். இன்றேல் யான் பிறந்தும் பிறவாதவனே.

செல்வி: இளவரசே, சினந் தணிக. நடைபெறக் கூடாத செயலுக்கு ஏன் இப்படி மனத்தைப் புண்ணாக்கிக் கொள்கிறீர்கள்?

இள: செல்வி! என்ன கூறினாய்? யாரைப் பார்த்துக் கூறினாய்? இளநந்தியை யாரென்று நினைத்து விட்டாய்? இரும்பின் வலியை அதன் சிறிய வடிவைக் கொண்டு ஆராயப் போகிறாயா? ஆற்றின் வேகத்தை அதன் அகலங் கொண்டு

கணிக்கப் போகிருயா? புலியின் பாய்ச்சலை அதன் உடம்பில் உள்ள வரிகளைக் கொண்டு கணக்கிடப் போகிருயா? என்ன அறியாமை?

செல்வி: காதலா! தங்கள் வன்மையைக் குறைத்து மதிக்கவில்லை நான். ஆனல், எத்துணை வன்மையும், மனத்திடமும் இருப்பினும், காலம், இடம் என்பனபற்றிச் சிந்திக்க வேண்டாவா? "பகல் வெல்லும் கூகையைக் காக்கை, இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்றும், "கால் ஆழ் களரின் நரியடும் கண் அஞ்சா வேல் ஆள் முகத்த களிறு" என்றும் அறநூலாம் குறள் கூறுவதை அவசரத்தில் ஆத்திரப்பட்டு மறந்து விடலாமா? இன்றைய நிலையில், பல்லவச் சக்கரவர்த்தியின் வெற்றியும், செல்வாக்கும் இமயத்தையொத்து உயர்ந்து நிற்கின்றன. எளிய பகைவனுக இருந்தால்கூட அவனை வெல்வதற்குக் காலம் பார்க்கவேண்டுமென்று குறள் கூறுகிறதே; வலிமை மிக்க கூகையைக்கூட பகல் காலத்தில் காக்கை வென்றுவிடும் என்றல்லவா அறநூல் பகர்கின்றது. அப்படியிருக்க, மாபெரும் மன்னன் ஒருவனை எதிர்க்க வேண்டுமானல் அதற்குரிய காலம் பார்க்க வேண்டாவா? மேலும், காஞ்சீபுரம் பல்லவனின் தலைநகர் ஆயிற்றே. சகதியில் அகப்பட்டுக் கொண்டால் யானையையும் நரி வென்றுவிடும் என்ற குறளை மறந்து இத் தலைநகரிலேயே இருந்துகொண்டு பல்லவனைப் பகைப்பது எங்ஙனம்? இவற்றையெல்லாம் தாங்கள் சிந்தித்

துப் பார்த்துச் சிறந்ததோர் திட்டம் தீட்ட வேண்டுமென்று கூறினேனே தவிரத் தங்கள் வல்லமையையோ, அறிவுக் கூர்மையையோ குறைத்து மதிப்பிட்டுவிட்டேன் என்று எண்ண வேண்டா.

இள : இவை எல்லாம் வன்மையும் தன்னம்பிக்கை யும் அற்ற எளிய மன்னர்கட்காக எழுதப் பெற்றவை என்பதை யான் அறிவேன். வல்லவன் கையில் புல்லும் ஆயுதமாம். தனி நின்று போர் செய்தால் இந்த நந்தித் தொண்டைமான் என் முன் எம்மாத்திரம்? எலிகள் பலவாக இருப் பினும் நாகம் சீறியவுடன் அனைத்தும் அழிந்து விடாவா? தெள்ளாற்றில் பெற்ற வெற்றியால் மதி மயங்கி இருக்கும் இவனுக்கு விரைவில் அழி வைத்தேட வேண்டும். பகைமையை இளமையி லேயே களைய வேண்டும்.

செல்வி : ஆருயிரே! பகைமையை இளமையில் களைய வேண்டும் என்பது சரி. ஆனால், எவ்வாறு? முள்ளை முள்ளாலும் வஞ்சனையை வஞ்சனை யாலும் அறிவை அறிவாலுமே வெல்ல வேண்டும். பல்லவ மன்னனைப் படை கொண்டு வெல்ல முடியாதென்பதை முன்னரே கண்டுவிட்டோமே?

இள : செல்வி! ஓயாமல் அதையே நினைவூட்டி என் நொந்த மனத்தில் வேல் கொண்டு பாய்ச்ச வேண்டா. இனி, அவனை ஒழிக்க வழி யாது?

செல்வி: வழியை யான் அறியேன். ஆனால், படையெடுத்து வெல்லக் கருதுவது அறியாமை என்பதை மட்டுமே என்னுற் கூற முடியும். 'காதல, காதல் அறியாமை உய்க்கிற்பின் ஏதில ஏதிலார் நூல்' என்பது குறள். எனவே, ஒருவன் எதில் அதிக விருப்பம் கொண்டுள்ளானே அந்த வழியிற் புகுந்து அவனை வீழ்த்தவேண்டும். இந்தக் குறளைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் ஒருண்மை புலப்படும். எத்தகைய பெருவீரருக்கும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். எதிரி அறிவுடையவனாக இருப்பின் இந்தக் குறைபாட்டை நன்கு ஆராய்ந்து அதையே தான் புகும் வாயிலாக அமைத்துக் கொள்ளவேண்டும். எல்லை மீறிய விருப்பம் எப்போதும் ஆபத்தையே செய்யும். பகைவனுக்கு எதில் அதிக விருப்பமோ அந்த விருப்பத்தையே துணையாகக் கொண்டால் வெற்றி பெறுவது உறுதி.

இள: (சிந்தனையைக் கிளறும் குரல்) ஆ, எதில்... எதில்... அதிக... விருப்பம்?... கொண்டுள்ளானே? அதே... வழியில்... புகுந்து, அவனை வீழ்த்த வேண்டும்? அன்று கிழட்டு அமைச்சன் கூறினனே, இத் தமிழ்ப்பற்று என்றுவது உங்கட்குத் தீங்கு விளைவிக்கும் என்று. (மகிழ்ச்சியுடன் உரத்து) ஆம், ஆம்... கண்டேன் வழி! தொலைந்தான் நந்தி! இனி எனக்குப் பகை என்பதொன்றில்லை. வெற்றி, வெற்றி, வெற்றி எனதே.

செல்வி: (பதற்றத்துடன்) காதலரே, என்ன கூறு கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே?

இள: செல்வி! இப்பொழுது ஒன்றும் என்னைக் கேட்காதே. விரைவில் உன் காதலன் பல்லவ மன்னன். சில நாட்கள் வெளியூர் சென்றுவிட்டு விரைவில் மீள்வேன். அதுவரை பொறுத்திரு.

[இள நந்தி போதல்]

* * *

[சிறிய வீடு; இள நந்தி, கலம்பகப் புலவர்]

கல. புல: இளவரசே, வரவேண்டும். என்னுடைய சிறிய குடிலைத் தேடித் தாங்கள் வர என்ன தவஞ் செய்தேனோ? எளியேனால் ஆகக்கூடிய காரியம் எதுவாயினும் ஆணைக்குக் காத்து நிற்கின்றேன்.

இள: ஐயா, கலம்பகப் புலவரே, நீர் கலம்பகம் பாடுவதில் மிக்கத் திறமையுடையவர் என்று கேள்விப் பட்டு வந்தேன்.

கல. புல: மகிழ்ச்சி, ஐயனே, தாங்கள் ஆணை யாதோ?

இள: நம் சக்கரவர்த்தி தெள்ளாறு எறிந்த நந்தி வர்மர்மேல் ஒரு கலம்பகம் பாட முடியுமா?

கல. புல: ஆகும்! அவ்வாறே செய்கிறேன். மிக்க மகிழ்ச்சியோடு செய்யக் காத்து நிற்கிறேன்.

இள: புலவரே, நீர் அரம்பாடுவதில் வல்லவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் அரம் வைத்துப்

பாடினால் பாடப்பட்டவர் உறுதியாக இறந்து விடுவார் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அது முற்றிலும் பயன்பட வேண்டும்.

கல. புல: (அச்சத்துடன்) இளவரசே, நான் இன்னுஞ் சிலகாலம் உயிர்வாழ விரும்புகிறேன்.

இள: கலம்பகப் புலவரே, கவலை விடுக. உம் பெயரையே வெளியிட மாட்டேன். பாடல் பயனளித்துவிட்டால் நாம்தான் பல்லவநாட்டுச் சக்கரவர்த்தி. பிறகு உம்மை நன்கு கவனித்துக் கொள்கிறேன்.

கல. புல: (மிகுந்த அச்சத்துடன்) பெருமானே......

இள: கவலை வேண்டா புலவரே, பாடல் சிறந்திருக் கட்டும். பத்து நாட்களில் உம்மிடம் வந்து பாடலைப் பெற்றுப் போகிறேன்! யான் வந்து போன தகவல் (இரகசியக் குரலில்) யாருக்கும் தெரிய வேண்டா. நினைவிருக்கட்டும்.

* * *

[இடம்: செல்வி வீடு]

செல்வி: வாருங்கள் அடிகளே, வணக்கம். ஏது, இந்த ஏழையின் வீட்டைத் தேடி வந்தது?

இள: நன்று, நன்று, என் வேஷம் நன்கு பலித்து விட்டதடி செல்வி! நீயே என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையானால், இளநந்தியின் வெற்றி உறுதிதான்! சந்தேகமில்லை, வெற்றி பெற்றுவிடுவான் இளநந்தி.

செல்வி: ஏன் இம் மாறுவேஷம்? இத்துணை நாட்கள் எங்குச் சென்றிருந்தீர்கள்?

இள: (பெருஞ்சிரிப்புடன்) எங்குச் சென்றிருந்தேனு? அப்படிக் கேள். என் பகைவனை ஒழிக்க வழி தேடிச் சென்றேன்.

செல்வி: மீட்டும் அதே கவலைதானு? இன்னும் படை சேர்த்துக் கலகம் செய்யும் எண்ணத்தை விடவில்லையா?

இள: போடி பைத்தியமே? படை எதற்கு? எளிதாக எண்ணத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்து விட்டேன்.

செல்வி: (ஆச்சரியத்துடன்) என்ன, என்ன? ஏற்பாடு செய்துவிட்டீர்களா? என்ன ஏற்பாடு? எனக்குச் சொல்லக் கூடாதா?

இள: ஒரு புலவனைப் பிடித்து நந்தியின்மேல் ஒரு கலம்பகம் பாடச் செய்தேன்.

செல்வி: பூ, இவ்வளவுதானு? போயும் போயும் புரட்சி செய்வதற்கு ஒரு நூலைப் பாடி முடித்துக் கொண்டு வந்தீர்களாக்கும்?

இள: அப் பாடல்களில் 'அரம்' அதாவது, 'வசை' வைத்துப் பாடப்பெற்றுள்ளது. யார்பேரில் அது பாடப்பெற்றுள்ளதோ, அவன் அப் பாடல்

கள் முழுவதையும் கேட்டால், உடனே இறந்து விடுவான்.

செல்வி: (நம்பிக்கையற்ற குரலில்) ம்ம் இதெல்லாம் இக் காலத்தில் நடைபெறக்கூடியவையா? சற்று விளங்கத்தான் கூறுங்களேன்?

இள: அறம் வைத்துப் பாடுவது என்றால், ஒரு பாட்டில் சில சொற்களில் இரண்டு பொருள்படும்படி அமைத்துப் பாடவேண்டும். உதாரணமாக ஒரு பாட்டில் 'உலகுடையான் திருமுடியும்' என்று வருகிறது. சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்குத் 'திருமுடியும்' என்ற சொல்லுக்குக் 'கிரீடம்' என்ற பொருள்தான் விளங்கும். ஆனால், திருமுடியும் என்பதன் பொருள் 'அரசனுடைய செல்வம் அழியும்' என்பதாகும். 'கரியாய் நின்ற மன்னா' என்றால், 'சாட்சியாய் உள்ள அரசே' எனப் பொருள் காண்பர் படிப்பவர். ஆனால், 'எரிந்து சாம்பலான அரசனே' என்று பொருள்படும் இச் சொல். அப்படி நூல் முழுவதும் வசை வைத்துப் பாடப்பட்டுள்ளது.

செல்வி: (அச்சத்துடன்) ஐயோ, இதை அரசர் முன் சென்று பாடச் செய்வதா?

இள: அஞ்சாதே. நம் இருவரையும் தவிர ஒருவர்க்கும் இவ்வுண்மை தெரியாது. உன் தோழிக்கு இப் பாடல்களுள் சிலவற்றைக் கற்றுக்கொடுத்துப் பாடச் செய். நம் காரியம் விரைவில் கை

கூடும். யாரும் நம்மேல் ஐயங்கொள்ள மாட்டார்கள். காரியம் முடியும்வரை யான் இத் துறவியின் கோலத்திலேயே இருப்பேன்.

செல்வி: இளவரசே! என் உடல் பதறுகிறது. இச் செயலை நினைந்துகூடப் பார்க்க முடியவில்லை என்னால்.

இள: அஞ்சாதே செல்வி. அதனால் நமக்கு வருவது தீமையன்று, நன்மையே. உன் தோழிக்கு இப் பாடல்களை முழுவதும் கற்றுக்கொடுத்துப் பாட வை. கற்றுச்சொல்லியையும் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

செல்வி: (நடுங்கும் குரலில்) இளவரசே, பாவ காரியத்தில் நாம் ஈடுபட்டுத்தான் பட்டமும் பதவியும் அடையவேண்டுமா? வேண்டா இளவரசே. சொல்ல முடியாத அச்சத்தால் என் உடல் நடுங்குகிறது.

இள: செல்வி, காரியம் கைகூடும் நேரத்திலா கலங்குவது? யாரும் நம்மேல் ஐயங்கொள்ள மாட்டார்கள். கவலையை விடு. நான் சொல்லும் திட்டப் படி நடந்துகொண்டால் போதும். பயன் தானாகவே நம்மைத் தேடி வரும்.

செல்வி: எனக்கென்னவோ அச்சமாக இருக்கிறது. இளவரசே...

இள: காரியத்தில் ஈடுபாடு ஏற்பட்டால் அச்சம் தானாக அகன்றுவிடும் செல்வி. இதோ கேள்.

அரசரின் பிறந்த தினத்தன்று நீ அவர் முன் நாட்டியமாட வேண்டும். உன் தோழி கலம்பகப் பாடல்களைப் பாட அதற்கேற்ப அபிநயம் நீ பிடிக்கவேண்டும். இதுதான் திட்டம்.

செல்வி: உங்கள் துணிவுக்கு நான் துணை செய்ய முடியுமா என்ற ஐயம் ஏற்படுகிறது இளவரசே.... நம் இருவர் தலைக்கும்......

இள: (சிரித்து) பல்லவநாட்டு மணிமுடி கிடைக்கப் போகிறது. இதோ பார் செல்வி, நான் இங்கிருந்தால் பிறர் ஐயங்கொள்ள நேரிடும்...ஆகையால்...

செல்வி: (அச்சத்துடன்) என்ன, என்ன? தாங்களும் இங்கு இருக்கப்போவதில்லையா?

இள: ஆம், புளியங்காட்டில் துறவி வேடத்தில் ஒளிந்துகொண்டிருப்பேன்.

செல்வி: (நடுக்கத்துடன்) இளவரசே......

இள: செல்வி! உன் கலைத்திறமை பல்லவநாட்டுச் சரித்திரத்தையே மாற்றி அமைக்கப்போகிறது. நான் வருகிறேன். பல்லவநாட்டு அரசியே, நான் சென்று வருகிறேன். (லேசாகச் சிரித்துக் கொண்டே செல்கிறான்)

* * * *

[அரண்மனை]

(நந்தி, அமைச்சர்)

நந்தி: அமைச்சரே, உம்முடைய அச்சத்திற்கு உண்மையில் காரணமில்லை என்பதை இப்பொழுதாவது உணர்ந்தீரா?

அமை: அரசே, புயலுக்கு முன் ஏற்படும் அமைதி யாகவே இதனைக் கருதுகிறேன். சில நாட்களாக இளநந்தி தலைநகரத்தை விட்டு வெளியே சென்று விட்டார் என்று நம் ஒற்றர்கள்மூலம் அறிந்தேன். ஆனால், எங்குத் தேடியும் அவர் அகப்படவில்லை.

நந்தி: ஆம், இளநந்தியின் மனைவி மங்கையும் ஒரு நாள் நம்மைக் கண்டு பேசினாள். என்னைப் பழி வாங்கவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந் தானும் அவன். அவள் அறவுரை கூறி அவன் மனத்தை மாற்றிவிட்டாளாம்.

அமை: அப்படியா அரசே? என்னிடம் முன்னமே இதனை அறிவிக்கவில்லையே.

நந்தி: தம்பியோ மனைவியின் சொற்கேட்டு மனம் மாறிவிட்டான். தான் செய்த தவறுகளை நினைத்து மனம் வருந்தி, அவ் வருத்தத்தைப்போக் கிக் கொள்ள ஊர் சுற்றப் போய்விட்டான். அத னால்தான் உம்மிடம் இதுபற்றிக் கூறவில்லை.

அமை: இனித்தான் நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும். பாம்பு முதலிய விஷ விலங்குகள் அனைவரும் காணும்படி கிடக்கின்ற வரையில் ஒன்றும் ஆபத்து நேருவதில்லை. ஆனால், அதே பாம்பு செடி, புதர் மறைவில் புகுந்துவிட்டால் மாபெரும் படையும்கூட அதனைக் கண்டு நடுங் கும். உள்ளத்தில் கரவுடைய இளநந்தி போன்ற வர்கள் எதிரே நடமாடிக்கொண்டிருக்கின்ற

வரையில் ஓரளவு அவர்களைக் கண்காணித்துக் கொள்ள முடியும். ஆனால் தலைமறைவாகிவிட்டார் என்றால், மிகவும் விழிப்புடன் இருந்து நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். இன்றிரவு நகர் சோதனைக்கு மாறுவேடத்துடன் செல்வோமா?

நந்தி: அப்படியே செய்யலாம். ஆனால், ஊரை விட்டு ஓடிப்போனவனைத் தேட மாறுவேடம் பூண்டு இரவிலா செல்லவேண்டும்?

அமை: அரசே, என் சொற்களைத் தட்டவேண்டா என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

நந்தி: அவ்வாறே ஆகட்டும் அமைச்சரே. இரவு பத்து நாழிகைக்குப் புறப்படுவோம்.

* * *

[இரவு]

(நந்தி, அமைச்சர்)

(முன்னணியில் இசைப்பாடலின் ஒலி)

அமை: (தணிந்த குரலில்) அரசே, அதோ தெரிகின்றதே, அதுதான் இளநந்தியின் காதற் பரத்தை செல்வியின் வீடு. அங்கிருந்துதான் இவ்வினிய இசை வருகிறது. இசைக்குரிய நேரமல்லவே இது. எதற்கும் வாருங்கள் நெருங்கிச் சென்று கேட்போம்.

நந்தி: அமைச்சரே, காதற்பரத்தையின் வீட்டில் இசையைக் கேட்க இரவிலா வரவேண்டும்? சரி,

கலையை அனுபவிக்கக் காலம் பார்ப்பது தவறு தான்.

[வீட்டுள்ளிருந்து பாடல் கேட்கிறது]

(மாயாமாளவம்)

மலர்ச்சூழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவிலிளந் தளிர்கோதும் காலம்
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்
தீவினையேற் கத்தென்றல் தீவீசும் காலம்
பலர்க்கெல்லாம் கோன்நந்தி பன்மாடக் கச்சிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடும் காலம்
அலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்
அகன்றுபோ னவர்நம்மை அயர்த்துவிட்ட காலம்.

நந்தி: அமைச்சரே, கேட்டீரா பாடலை? ஆ, இது வன்றோ கவிதை? இத்தகைய பாடலை என்மேல் பாடவல்ல ஒரு புலவன் இந் நாட்டவனா? இத் தகைய புலவனைக் காணாமற் கழித்த நாட்கள் அத்தனையும் வீணே. ஆ, இதோ பாடல் தொடர் கிறது. கேட்போம்.

(சகானா)

சிவனை முழுவதும் மறவாத சிந்தையான்
செயமுன் உறவு தவிராத நந்தியூர்க்
குவளை மலரின் மதுவாரும் வண்டுகாள்
குமிழி சுழியில் விளையாடு தும்பியே
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
அவரும் அவதி சொனநாளும் வந்ததே
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவர் உறவு கதையாய் முடிந்ததே.

அமை: அரசே, வாருங்கள் போகலாம்.

நந்தி: அமைச்சரே, இவனைக் கண்டு, இப் பாடலை எங்குக் கற்றான் என்று அறியாமல் யான் வர மாட்டேன்.

அமைச்சரே! எவ்வளவு இனிமையான பாடல். இனிமை எனும் பொருளுடைய தமிழ் மொழியில் இனிமை எலாம் சாறாகப் பிழிந்து இங்ஙனம் யார் கவிதையாகத் தந்தனர்? கார்கால வருணனையா இது? இல்லை, தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தை அப்படியே பிழிந்து எடுத்து அதனுடன், கவிஞனுடைய கற்பனையை யும் உடன்கூட்டித் தந்துள்ளானே? ஆ, ஆ...... எத்தனை பிறவி எடுத்தாலும்.... எங்கே அடுத்த பாடல்.

அமை: அரசே, நாம் இரவில் மாறுவேடத்துடன் இங்கு வந்துள்ளோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். காலையில் இவனை அழைத்து, உண்மையை அறியலாம்.

* * *

(சேவகன், தோழி, செல்வி)

[செல்வி வீடு]

சேவகன்: (கதவைத் தட்டி) வீட்டில் யார்?

தோழி: யாரய்யா?

சேவகன்: அரண்மனைச் சேவகர்கள், இதுதானே இளநந்தியின் காதற்பரத்தை செல்வியின் வீடு?

தோழி: ஆமாம். என்ன வேண்டும் உங்களுக்கு?

சேவகன்: உடனே உங்கள் தலைவியை அழைத்து வரும்படி அரசர் ஆணை.

தோழி: (சற்று மகிழ்ச்சியுடன்) அரசரா அழைத்து வரச் சொன்னர்?

சேவகன்: ஆம்... காலம் தாழ்த்தக்கூடாது. உடனே வரவேண்டும்.

தோழி: சற்று இருங்கள். (உள்ளே பேசும் குரல்) அம்மணி, அரசர் உங்களை உடனே அழைத்து வரச் சொன்னராம். அரண்மனைச் சேவகர்கள் வாயிலில் காத்துக்கொண்டிருக்கிருர்கள்.

செல்வி: (கலவரத்துடன்) ஹா............அரசரா? அழைக்கிருரா?......

தோழி: ஏன் அம்மணி திடீரென்று இந்தக் குழப்பம்? உங்கள் நாட்டியத் திறமையைக் கேள்விப் பட்ட பிறகு, அவருக்குத் தன் பிறந்த தினம் வரை காத்திருக்கப் பொறுமையில்லைபோல் இருக்கிறது. இன்றே உங்கள் கலையை அனுபவிக்க விழைகிருர்.

செல்வி: (அதே கலவரத்துடன்) அங்கயற்கண்ணி, நீ......காரணம் கேட்டாயோ?

தோழி: சேவகர்கள் காரணம் சொல்லவில்லை அம்மணி. ஆனல், காரியம் மிக்க அவசரமானது என்று அவர்கள் பதட்டத்திலிருந்து தெரிகிறது.

செல்வி: (பதட்டத்துடன்) நான் என்ன செய்வேன்? இளவரசர் இளநந்தியும் இங்கு இல்லையே...

தோழி: ஏனம்மா இப்படிப் பதறுகிறீர்கள்? முகம் எல்லாம் வெளுத்துவிட்டதே? என்னிடம் சொல்லுங்கள் அம்மா. நான்......

செல்வி: (சமாளித்துக்கொள்பவள் போல்) ஹூம், ம்......ஒன்றுமில்லை ஒன்றுமில்லை. அங்கயற்கண்ணி, நீ......நீ......போய் (மீண்டும் பதட்டம்) ஹா, இல்லை, இல்லை......நான்......நானே போகிறேன்.

* * *

[அரண்மனைக் கொலுமண்டபம்]

(அரசன், அமைச்சன், புலவர்.)

நந்தி: அமைச்சரே! நேற்று அவ்வரிய பாடலைப் பாடிய பெண்ணை அழைத்து விசாரிக்கலாம் என்று கூறினீர்களே? எங்கே அந்தப் பெண்?

அமை: அரசே, அழைத்துவரத்தான் காவலர்களை முன்னரே அனுப்பிவிட்டேன். இதோ அவளும் வந்துவிட்டாள்.

[செல்வியும் காவலர்களும் வருதல்]

நந்தி: வருக, பெண்ணே! செல்வி என்பது உன் பெயர் என அறிந்தோம். எத்தகைய இனிய குரலைப் பெற்றிருக்கிறாய் நீ! ஆ, எவ்வளவு இனிய பாடல்களைப் பாடினாய்? அத்துணைச் சிறந்த பாடல்களை யார் உனக்குக் கற்றுத்தந்தனர்?

செல்வி: (மிகுந்த அச்சத்துடன்) அரசே, மன்... னித்துக்... கொள்ள... வேண்டுகிறேன். எனக்கு

ஒன்றும் தெரியாது. யான் ஒன்றும் பாடவும் இல்லையே... எப்பொழுது பாடினேன்?

நந்தி: பெண்ணே, செல்வி! அஞ்சவேண்டா. பல்லவன், பெண்கட்கு அச்சமூட்டும் பண்புடையான் அல்லன். நேற்று இரவு 10 நாழிகை அளவில் நீ பாடிக்கொண்டிருந்தாயே, அதைத்தான் கேட்கிறேன். "சிவனை முழுதும் மறவாத சிந்தையான்" என்ற பாடல், யார் பாடியது?

செல்வி: (அழுகையும் அச்சமும் கலந்த குரலில்) ஐயோ, என்னை விட்டுவிடுங்கள். அரசே, எனக்கு ஒன்றும் தெரியாது. என்னை ஒன்றும் செய்ய வேண்டா. ஐயோ, என்னை விட்டுவிடுங்கள்.

அமை: பெண்ணே, ஏன் இவ்வளவு அச்சமும் பதட்டமும்? யார் உனக்கு இப் பாடலைக் கற்றுத் தந்தவர் என்றுதானே அரசர் கேட்கிறார்? அதற்கு விடை கூறுவதை விட்டுவிட்டு ஏன் இவ்வாறு அழுது அடம் பிடிக்கிறாய்? இதில் ஏதோ சூது இருக்கிறது. இதனைக் கண்டுபிடிக்காமல் உன்னை விடமாட்டேன்.

நந்தி: அமைச்சரே, ஏன் அவளை அச்சுறுத்துகிறீர்? தமிழ்ப் பாடலைக் கேட்டு, அதில் சூது இருக்கிறது என்று கூறும் அளவிற்கு உம்முடைய அச்சம் வளர்ந்துவிட்டதா? செல்வி, அப் பாடலையாவது இப்பொழுது ஒருமுறை பாடு, கேட்கலாம். இச் சபையில் உள்ளவர் அனைவரும் அதனைக் கேட்டு மகிழட்டும்.

புலவர்: நந்தி, நீ கூறுவனவற்றைக் கேட்டதிலிருந்து அப் பாடல்களை எவ்வாறாயினும் ஒரு முறை கேட்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்துவிட்டது. எங்கே பெண்மணி! பாடு பார்க்கலாம்?

செல்வி: ஐயோ, அரசே, நான் பாடவில்லை; என் தோழிதான் பாடினாள். என்னை விட்டுவிடுங்கள். அப் பாடலை நீங்கள் கேட்கக் கூடாது. நான் போய்விடுகிறேன்.

நந்தி: (சினத்துடன்) என்ன உளறுகிறாய்? என்னைப் பற்றிப் புகழ்ந்துபாடும் பாடல்களை நான் கேட்கக் கூடாதா? ஏன்?.....

செல்வி: நான்... சொல்லமாட்டேன். எனக்குத் தெரியாது.

நந்தி: என்ன தெரியாது உனக்கு?

செல்வி: இப் பாடல்களை நீங்கள் என்றுமே கேட்கக் கூடாது என்றுமட்டுமே தெரியும். ஏன் கேட்கக் கூடாது என்று தெரியாது.

நந்தி: (மிக்க சினத்துடன்) யாரிடம் இப் பாடல்களைப் பயின்றாள், உன் தோழி?

செல்வி: அதுவா?.... அதுவா.... அது.... அது.... அதை... ஒரு துறவி என் தோழிக்குக்...கற்றுத்... தந்தார்.

நந்தி: நன்று நன்று! துறவிகள் தவஞ் செய்வதை விட்டுப் பரத்தையின் தோழிக்குப் பாட்டுச் சொல்லித் தரும் நிலை வந்துவிட்டதா தமிழ் நாட்டில்? இனி இந்த நாடு வாழ்ந்தாற்போலத்தான். துறவி கடவுளைப்பற்றிப் பாடாமல் அரசனைப் பற்றிப் பாடுவது ஒரு வியப்பு? அதைவிட வியப்பு அதை ஒரு பரத்தைக்குச் சொல்லித் தருவது? (சிறுநகை) யாரம்மா அந்தத் துறவி...?

செல்வி: எனக்குத் தெரியாது அரசே.

அமை: உன்னைச் சிறையில் தள்ளிக் கசையடி தரச் சொல்லப் போகிறேன். உண்மையைச் சொல்லப் போகிறாயா, இல்லையா? யாரங்கே... இவளைப் பாதாளச் சிறைக்கு இழுத்துச் செல்லுங்கள்.

செல்வி: ஐயோ, வேண்டா, வேண்டா அரசே! இதோ கூறிவிடுகிறேன்.

நந்தி: ஏன் இப்பாட்டை நான் கேட்கக் கூடாது?

செல்வி: (விக்கல் அழுகையுடன்) அதை... நீங்கள் கேட்டால், நீங்கள்... (துக்கம்) ஐயோ, என்னால் சொல்ல முடியாது.

நந்தி: இருக்கட்டும். உன் தோழி யாரிடம் இதனைக் கற்றாள்?

செல்வி: தங்கள்... தம்பி... இளநந்திதான் கற்றுக் கொடுத்தார்.

நந்தி: இளநந்தியா? இத்துணைப் பெரிய கவிஞஞ அவன்? தெரியாமற் போய்விட்டதே? எங்கே அவன்?

செல்வி: அவர்... துறவியாக...புளியங்காட்டில்.....

நந்தி: அவன் இங்கு இல்லையா? பின் இப்பாடலை இளநந்தி சொல்லிக்கொடுத்தான் என்ருயே?

செல்வி: இளவரசர் ஏற்பாடு செய்த கற்றுச் சொல்லி சொல்லிக்கொடுத்தான்.

நந்தி: அப்படியா? மகிழ்ச்சி. அமைச்சரே, இச் செல்வியை அவள் வீட்டுக்குக் கொண்டுவிடச் சொல்லுங்கள். உடனே அந்தக் கற்றுச்சொல் லியை அழைத்துவரச் செய்யுங்கள். தம்பி என் மேல் எவ்வளவு அன்புடன் அரிய பாடல்களைப் பாடியுள்ளான். ஆ! எம் தந்தை தந்திவர்மப் பல்லவர் இருந்திருந்தால், தம் மக்களில் ஒருவன் வீரன், மற்றவன் உடலிலும் வீரன், அறிவிலும் சூரன், கவிஞன் என்று கண்டு எவ்வளவு பூரிப் படைவார். தம்பீ, நீ இத்துணைப் பெரிய கவிஞன் என்பதை அறியாமல் இருந்துவிட்டேனே? என்னே என் அறியாமை.

ஆ... இத்தகைய அரிய பாடல்களைக் கேளாமல் எனக்கு உணவு செல்லவில்லை. உறக்கம் பிடிக்க வில்லை. பெற்ற தாய்தனை மக மறந்தாலும் இப் பாடலை நான் மறவேன்.

அமைச்சர்: அரசே, பாடல்கள் நன்ருக இருக்கலாம். ஆனால், முன்பின் ஆராய்ந்து பாராமல் இவ்வளவு பற்று வைப்பது சரியன்று. பரத்தையின் பதட்டத்திலிருந்தும் அவள் சொல்லத் தயங்கினதிலிருந்தும் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று நினைக்கிறேன்.

நந்தி: அமைச்சரே, (கேலிக் குரல்) இப் பாடல்களால் எனக்கு ஏதேனும் தீங்கு வருமென்று நினைக்கின்றீரா? அன்ருெருநாள் யான் கூறியது நினைவில்லையா? போர்களும், வெற்றிகளும், பேரரசுகளும் அழிந்து மறையக்கூடியவை. மாபெரும் சக்கரவர்த்திகளும் முடிவில் ஒருபிடி சாம்பல்தான். ஆனால், கலையும் கலையை அனுபவிக்கும் மனமுமே என்றும் நிலைபெற்றவை. யானும் நீரும் அழிந்த பிறகும் இப் பாடல்கள் அழியா இயல்பு பெற்று வாழும். அத்தகைய பாடல்களைக் கேட்பதற்குப் பணயமாக, என் உயிரையும் தரச்சித்தமாக இருக்கிறேன்.

அமை: (கவலை கலந்த குரல்) அப்படி ஏதேனும் நிகழ்ந்துவிடுமோ என்றுதான் அஞ்சுகிறேன்.

நந்தி: கவலை இல்லை. வீரனும் கலைஞனும் ஒரே முறைதான் இறப்பார்கள். வீரன் போர்க்களத்தில் உயிர் விடுவதையே விரும்புவான். ஆனால், போர் இனி இல்லையாகலின், எனக்கு அந்த வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. கலைஞனுகையின் சிறந்த கலையை அனுபவிப்பதனுல், உயிர்

போவதாயின், யான் அதனையே பெரிதும் விரும்புகிறேன். கற்றுச்சொல்லி வர ஏற்பாடு செய்யுங்கள்?

அமை : இதோ வந்துவிட்டான்.

நந்தி : கற்றுச்சொல்லி! செல்வியின் தோழிக்கு நீ கற்றுத்தந்த பாடலைப் பாடு. கேட்க ஆவலாக இருக்கிறேன்.

கற்று : (அழுகை) அரசே, அதுமட்டும் என்னால் முடியாது.

நந்தி : (உறுதியுடன்) ஏன் முடியாது? செல்வியாகிய பரத்தை கேட்கலாம்; ஊரிலுள்ள பிறர் கேட்கலாம். நான்மட்டும் கேட்கக் கூடாதா? அதுவும் என்னைப் புகழ்ந்து பாடும் தமிழ்ப் பாடலை நான் கேட்கக் கூடாதா? வேடிக்கைதான்! அதைக் கேட்கத்தான் வேண்டும்.

கற்று : அரசே, இப்பாடல்களைக் கேட்பதானால், இங்கிருந்து சுடுகாடுவரை பச்சைக் கீற்றுக்களால் 99 பந்தல்கள் போடவேண்டும். ஒவ்வொரு பந்தலின் கீழும் நின்று ஒவ்வொரு பாடலைப் பாடுவோம். 100ஆவது பாடலை இடுகாட்டில் சிதையின்மேல் இருந்துகொண்டுதான் கேட்டல்வேண்டும். இன்னுமா பாடல்மேல் பற்று?

அமை : ஈதென்ன புதுமை? இப்படி யாராவது பாடல்கள் கேட்பதுண்டா?

கற்று: அரசே! நான் வேண்டா என்றுதான் கூறு கிறேன். இப் பாடல்கள் ஒவ்வொன்றும் அரம் வைத்துப் பாடப்பெற்றுள்ளன. இப் பாடல்கள் யார்மேல் பாடப்பெற்றுள்ளனவோ அவர்கள் இப் பாடல்களைக் கேட்டால் இறக்க நேரிடும். அரசே! மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் தமிழ்ப்பற்றை அறிந்துகொண்டு அதன்மூலமே தங்களை ஒழிக்க வழிதேடிவிட்டார் இளநந்தி. தயைகூர்ந்து இதனைக் கேட்கவேண்டா?

நந்தி: (சற்று ஆலோசித்து) சரி! இளநந்திக்கு நாளை ஓர் ஓலை அனுப்பி அவனை வருமாறு செய்வோம். எவ்வாறாயினும் பாடலைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

* * *

[இடம்: காஞ்சியில் ஒரு தெரு]
(புலவர், அமைச்சர்)

புல: அமைச்சரே! எங்கே இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டீர்? மன்னருக்கு மனமாற்றம் தர ஏதாவது வழி கண்டீரா?

அமை: புலவரே! விதியை வெல்ல யாராலும் இய லாது என்பதை நாள்தோறும் கண்டுகொண்டே வருகிறேன். 'ஊழில் பெருவலி யாவுள? மற் றொன்று சூழினும் தான்முந்துறு'வதன்றோ அது? மன்னரிடமிருந்து கயவன் இளநந்திக்கு ஓலை கொண்டு செல்கிறேன்.

புல: என்ன? என்ன? ஒருசிறிதும் மன்னர் மனம் மாறவில்லையா? இளநந்திக்கு ஓலை அனுப்பு

கிருரா? பாம்புக்குப் பால் வார்க்கின்ருரா? என்னதான் ஓலையில் எழுதி இருப்பார்?

அமை: அறம் வழுவாச் சிங்கம் அமர்ந்த அரியணையை அறிவிலிக்கு உடமையாக்குகிறது இந்த ஓலை.

புல: என்ன கொடுமை இது? இளநந்தியின் விருப்பம் நிறைவேறிவிட்டதா?

அமை: நான் ஐயுற்றது உண்மையாகிவிட்டது. மன்னரின் தமிழ்ப் பற்றை வைத்துக்கொண்டு தன் காரியத்தைச் சாதித்துவிட்டான்.

புல: அமைச்சரே, நந்திவர்மரின் பெருந்தன்மையை உணராமல் இக் காரியம் செய்துவிட்டானே? இருந்தாலும்...

அமை: காரியம் மிஞ்சிவிட்டது புலவரே. இனி...

புல: இல்லை—எனக்கு ஒன்று தோன்றுகிறது. இளநந்தி வீண் நாடாசையில் செய்த தவறுதான் இது. தவறு செய்தவனையே தவற்றை உணரும்படி செய்துவிட்டால்..... ஆம், அதுதான் சரி. அவன் ஒருவன்தான் அரசர் உயிரைக் காப்பாற்ற முடியும். அமைச்சரே, ஓலையை என்னிடம் கொடுங்கள். நானே நேரில் போகிறேன்.

அமை: தங்களால் அரசரைக் காப்பாற்ற முடியும் என்று சொல்கிறீர்கள்?

புல: கடைசி முயற்சி. வெற்றிபெற்ருலும் பெறலாம் அல்லவா? நான் சென்றுவருகிறேன்.

அமை : தண்டமிழ் மொழிக்குக் கொலை செய்யும் கொடுமையும் உண்டு என்ற கறை வராமல் காப்பாற்றுங்கள்.

புல : தமிழ் மொழி என்றைக்கும் தூய்மையானது அமைச்சரே. தன் செல்வத்தையே பிறர்க்களிக்கும் ஒரு வள்ளல் கொடை ஓலை எழுதுகிறான் எழுதுகோலைப் பயன்படுத்தி; அதே எழுது கோலால், கள்ளக் கையெழுத்திட்டு, கலகத்தையும் சூழ்ச்சியையும் விளைக்கிறான் வேறொருவன். தமிழ் மொழிக்கு இந்தக் கயவர்களால் மாசு ஏற்பட்டுவிடாது. நந்திவர்மனைப்போல் உள்ள வள்ளல்கள் இருக்கும்வரை தமிழுக்குக் குறைவு ஏது? நான் வருகிறேன்.

* * *

[காஞ்சித் தெருவில் பச்சைமட்டைப் பந்தலின் கீழ்]

(அரசன், அமைச்சன், கற்றுச்சொல்லி முதலியோர்)

(நாதநாமக்கிரியை)

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்களிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன்பெய் ஏகத்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்.

பலர்: ஆ! இதோ, அதோ... பச்சைமட்டை பற்றி எரிகின்றதே?

பெருந்தேவ: அமைச்சரே, இதென்ன கொடுமை? யாரோ அரம் பாடிவிட்டார்கள்: அதனுல்தான் பச்சைமட்டைப் பந்தல் பற்றி எரிகிறது.

அமை: பெருந்தேவனுரே, இந்தப் பாடலில் அரசர்க்குத் தீங்கு ஏற்படும் என்றுமட்டும் எனக்குத் தெரிகிறது. என்ன செய்யலாம்? அதோ, அதோ, செல்வி ஓடிவருகிருள்...

செல்வி: (தூரத்திலிருந்து) நிறுத்துங்கள், நிறுத்துங்கள், பாடுவதை நிறுத்துங்கள்.

பலர்: யாரது? ஒரு பெண் அல்லவா ஓடி வருகிருள்?

சேவகன் 1: இவளா?

சேவகன் 2: இவள்... இளநந்தியின் காதல் பரத்தையல்லவா?

சேவகன் 1: இவள் ஏன் ஓடிவந்து பாடலைநிறுத்தச் சொல்கிருள்?

செல்வி: அரசே! மன்னிக்கவேண்டும். இப் பாடலை இனிக் கேட்க வேண்டா.

நந்தி: (கேலிச் சிரிப்புடனும், அசதி நிறைந்த குரலுடனும்) செல்வி, ஏன் பதறுகிருய்? இளநந்தி வந்துவிட்டான?

செல்வி : அரசே! விஷப் பரீக்ஷை செய்ய வேண்டு மானல், அதற்கும் ஒரு எல்லை வேண்டாவா? தயைகூர்ந்து பொறுத்தருளுங்கள். அரண்மனை திரும்பலாம்.

அமை : (வருத்தத்துடன்) அரசே, இதனுடன் 98 பாடல்கள் முடிவடைந்துவிட்டன. 98 பந்தல் களும் தீப்பற்றி எரிந்துவிட்டன. தங்கள் உடலும் களைத்துக்கொண்டே வந்துவிட்டது. நிற்கவும் சக்தி இல்லை. இன்னுமா இக் கலைப் பைத்தியம்? உங்களை மிகவும் வேண்டிக்கொள் கிறேன். அரசே! புலவர் பெருந்தேவனாின் சொற்களை நினைவு கூர வேண்டுகிறேன். அரச ராகிய தாங்கள் தங்கள் இன்பத்தைமட்டும் கருதாமல் நாட்டு மக்களின் நலத்தைக் கருத வேண்டாவா? இப் பல்லவ சாம்ராஜ்யத்துக் காகவாவது தாங்கள் இதை நிறுத்தித்தான் ஆகவேண்டும்.

செல்வி: (அழுகை கலந்த குரலில்) அரசே, அமிழ்தினும் இனிய என் தமிழ் மொழி கயவர்கள் கையில் அகப்பட்டால் கொல்லும் ஆயுதமாகவும் பயன்படும் என்பதைக் காண்கிறேன். பெரு மானே! உங்களைப் போன்ற ஒரு பெருங் கலைஞரைத் தமிழ்ப் பாடல் கொன்றுவிட்டது என்ற பழிச் சொல்லை நம் தமிழ் மொழிக்கு வாங்கிவைப்பது முறையா? சிந்தித்துப் பாருங் கள். இதனுடன் நிறுத்திக்கொள்ளுங்கள்.

பல்லவநாட்டுப் பெருமக்களே, உங்கள் மன்னரை இவ்வாறு இறக்கவிடுவது முறையா? எங்கே சென்றுவிட்டீர்கள்? பல்லவ நாட்டுப் பெருமக்களே! ஏன் தயக்கம்? ஏன் அஞ்சி நடுங்கி நிற்கிறீர்கள்?

பலர்: கூடாது கூடாது, நிறுத்துங்கள். நிறுத்துங்கள் பாடலை. பல்லவச் சக்கரவர்த்தியைச் சாக விடமாட்டோம். தெள்ளாறெறிந்த நந்திவர்மரை விடமாட்டோம்.

சேவகன் 1: உஸ்ஸ்ஸ்..அதோ அரசர் பேசப்போகிறார். இரைச்சல் வேண்டா. அமைதி, அமைதி.

நந்தி: அருமைச் செல்வி! எப்படியும் மேற்கொண்டு பாடலைக் கேட்டல் வேண்டும்.

[பாடல் தொடர்கிறது]

செல்வி: உங்கள் மன்னரை இப்படியே இழக்கப் போகிறீர்களா? ஆ... இனி என்ன செய்வேன்?

நந்தி: (மூச்சுவாங்கும் குரலில்) செல்வி; ஏன் தயக்கம். என்றோ ஒரு நாள் இறக்கத்தானே போகிறேன். இவ்வரிய பாடல்களைக் கேட்டுவிட்டு இறப்பதில் ஓர் இன்பம் இருக்கிறது. கற்றுச் சொல்லி! மேலே பாடு!

(ஆகிரி)

கொம்புயர் வாமை நாகம் எதிர்வந்த
நந்தி குலவீரர் ஆகம் அழியத்

தம்பியர் எண்ணம் எல்லாம் பழுதாக
வென்ற தலைமான வீர துவசன்
செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து
மாயச் செருவென்ற பாரி முடிமேல்
வம்புயர் தொண்டை காணும் மடமாதர்
தங்கை வளைகொண்ட தென்ன வலமே.

[பாடல் முடிந்தவுடன் நெருப்புப் பற்றிப் பந்தல் எரிகிறது]

* * *

[புளியங்காட்டிலிருந்து காஞ்சி செல்லும் சாலை]
(புலவரும் இளநந்தியும்)

இளநந்தி : விரைந்து வாருங்கள் புலவரே! ஐயோ இதற்குள் என்ன நேர்ந்திருக்குமோ?

புலவர் : இதோ நெருங்கிவிட்டோம். மன்னரைக் காப்பாற்றிவிடுவோம். எப்படியும் நூறு பாட்டு முடிவதற்குள் தடுத்துவிடலாம்.

* * *

[காஞ்சியின் இடுகாடு]
(இளநந்தி, சிதையின்மேல் அமர்ந்திருக்கும் நந்திவர்மன்)

[தூரத்தில், குதிரைக் குளம்பொலி மெள்ளக் கேட்டுச் சத்தம் மிகுதிப்படுகிறது. அந்த ஒலியின்மேல், "நிறுத்துங்கள், நிறுத்துங்கள், பாடலை நிறுத்துங்கள்" என்ற இளநந்தியின் அலறல் மேலோங்கிக் கேட்கிறது]

இளநந்தி : (அலறல்) ஐயோ, அண்ணா......அண்ணா, அப் பாழும் பாடல்களைக் கேட்க வேண்டா, நிறுத்திவிடுங்கள். தமிழின் பேரால், நம் இறந்த தந்தையின் பேரால் உங்களை வேண்டிக்கொள்கிறேன். பாவியாகிய என்னை மன்னித்து இதனை நிறுத்திவிடுங்கள்...

நந்தி: இளநந்தி! சிதையின்மேல் உட்கார்ந்து விட்டேன். இனி வாழவேண்டும் என்ற விருப்பமும் இல்லை எனக்கு. உன்மேலும் வெறுப்பில்லை எனக்கு. இதோ இக் கணையாழியை நீயே எடுத்துக்கொள். இறுதிப் பாடலையும் என் மனங் குளிர, காது குளிரக் கேட்டுவிட்டு உயிர் விடுகிறேன்......தம்பி இளநந்தி, சென்று வருகிறேன். கவலை வேண்டா. என் போன்ற அரசர்களும், இப் பல்லவச் சாம்ராஜ்யம் போன்ற பேரரசுகளும் தோன்றும்; மறையும். இஃது இயற்கைதான். ஆனால், தமிழும், அதன் இலக்கியமும், கலையும் என்றும் வாழும். சென்று வருகிறேன். தமிழை மறவாதே!

(வராளி)

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானுமென் கவியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நம்தயா பரனே.

[தீப்பற்றி எரியும் ஒலி ஓங்கி அடங்குகிறது.]

முற்றும்.

சாப விமோசனம்

மூலக் கதை "புதுமைப் பித்தன்"

[ஆசிரியரின் மனைவியாரின் அனுமதியுடன் நாடகமாக்கப் பெற்றது]

பாத்திரங்கள் :

கோதம முனிவர்	அகலிகை
இராமன்	விசுவாமித்திரன்
சீதை	சதானந்தன்
ஜனகன்	கைகேயி
இந்திரன்	

[கோதம முனிவன் மனைவி அகலிகை, அறியாமை காரணமாக, உள்ளத்தில் தவறு இல்லாமல் உடலால் தவறு இழைத்ததைப் பலரும் அறிவர். இராமனுடைய கால்பட்டவுடன் அவள் சாபம் நீங்கிக் கல்லுருவம் மாறி, மீட்டும் கணவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டாள் என்று பழங்கதை பேசிச் செல்கிறது. அதற்குமேல் கோதமன் அகலிகை வாழ்க்கை எவ்வாறு நடைபெற்றிருக்

கும் என்பதைக் கற்பனைக் கண்கொண்டு கதை யாகத் தீட்டியுள்ளார் மூல ஆசிரியர்.]

அடர்ந்த பெருங் காட்டில் அழகிய கற்சிலை ஒன்று கிடக்கிறது. அழகு வடிமான அந்தப் பெண் சிலையின் அருகே ஒரு கரையான் புற்று வளர்ந்திருக்கிறது. மோனத்தில் ஆழ்ந்து தன் நினைவு அகற்றித் தவம் கிடக்கிறான் கோதமன். அன்னை கங்கை அனைத்தையும் அறிந்திருந்தும் மெல்லிய ஓசையால் தன் உள்ளக் கருத்தை அறிவித்தபடி ஓடிக்கொண்டிருக்கிறாள். இவ் வாறு பல்லாண்டுகள் கழிந்தன. தசரதனிடம் சென்ற விசுவாமித்திரன் 'நின் சிறுவர் நால் வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்று கேட்டு, இராமனை அழைத்துக்கொண்டு இக் காட்டு வழியே வருகிறான். அவர்கள் வரும் அந்த வேளையில்......!

[இடம்: காடு]

(இராமன், விசுவாமித்திரன், கோதமன், அகலியை)

இராமன்: விசுவாமித்திர முனிவரே! அதோ ஒரு கரையான் புற்றும், அதன் பக்கத்தில் ஓர் அழகான சிலையும் இருப்பதைக் கண்டீர்களா? இந்த நடுக்காட்டில் அழகே வடிவான இந்தச் சிலை எவ்வாறு வந்தது?

விசுவா: (ஆழ்ந்த சிந்தனையுடன்) (தனக்குள் பேசு வது போல்) இராமா! தாடகையைக் கொன்ற பொழுது நின் கைவண்ணம் அங்குக் கண்டேன். இனி நின் கால்வண்ணம் இங்குக் காணப்

போகிறேன். (உரக்க) விரைவில் நடந்து வா என் செல்வமே!

இரா: இதோ வந்துவிட்டேன்.

[திடீரென்று சிலை பெண்ணாக மாறுகிறது]

ஆ! முனிவரே! ஐயனே! ஈதென்ன புதுமை? திடீரென்று இச் சிலை பெண்ணாக மாறிவிட்டதே! எப்படி இம் மாற்றம் ஏற்பட்டது? ஒருவேளை இவ்வம்மையாரை யான் சிலை என்று முன்னர்த் தவறாகக் கருதிவிட்டேனா?

விசுவா: அஞ்ச வேண்டா. அரசகுமாரா! நீ தவறாகக் கருதவில்லை. முன்னர்க் கல் சிலையாகத் தான் இப்பெண்ணரசி நின்றாள். அதோ...அந்தக் கரையான் புற்றை இப்பொழுது பார்.

இரா: இதென்ன புதுமை! இப் புற்று ஆடுகிறதே. ஆ! இவர் யார்? தங்களைப் போன்று தவத்தால் முறுக்கேறின உடலுடன் காணப்படுகிறார். முகத்தில் ஒளி நிறைந்துள்ளது. இதோ நம்மை நோக்கி வருகிறார். முனிபுங்கவா! வணக்கம்.

கோதமன்: தசரத குமாரா! மங்களம் உண்டாகட்டும். விசுவாமித்திர முனிவரே, கோதமன் வணங்குகிறேன்.

விசுவா: வணக்கம் அடிகளே. இராமா! இவரை நீ அறிந்து கொள்ளவேண்டும்.

இரா: அறியத் துடித்துக்கொண்டிருக்கிறேன் ஸ்வாமி.

விசுவா: இவர் கோதம முனிவர். அதோ சிலை யிலிருந்து பெண்ணுக மாறி அப்பால் நிற்கும் அகலியைதான் இவருடைய மனைவி.

இரா: வணக்கம் தாயே! என்னை வாழ்த்தி அருள வேண்டுகிறேன்.

அகலியை: (பெரிய விம்மலுக்கிடையில் மெல்லிய குரலில்) மங்களம் உண்டாகட்டும்.

இரா: தாயே! நீங்கள் வருந்தவேண்டிய காரணம் யாது? தங்கள் துயரம் எதுவாயினும் அதனைப் போக்க இச் சிறுவனுக்கு ஆற்றல் உண்டு.

அக: ஆம். இராமன்தான் நீ. தசரத குமாரன் தான் நீ. சாப விமோசனம்....சாப விமோசனம்... சாப...விமோசனம் கடவுளே, மாசுபட்ட என் தசைக் கூட்டம் பவித்திரம் அடைந்துவிட்டது.

இரா: தாயே. நீங்கள் யார்? என்ன சாப விமோ சனம் நடந்துவிட்டது? விசுவாமித்திர முனி வரே. கல்லாகக்கிடந்த இவர் எவ்வாறு இப்பெண் வடிவம் பெற்ருர். எனக்கு ஒன்றும் புரிய வில்லையே.

விசு: குழந்தாய்! அஃது ஒரு பெரிய கதை. பலகாலம் முன்பு நடந்தது. இந்த ரிஷிபத்தினியின் அழகில் தேவேந்திரன் மயங்கிவிட்டான். இவளை எவ்வா ருயினும் அடைய வேண்டும் என முடிவு செய்து கொண்டான். அதற்காக ஒரு தந்திரமும் செய்

தான். ஒருநாள் விடியற்கால நேரம். இந்திரன் கோழி வடிவில் கோதம முனிவன் ஆஸ்ரமத்தின் அருகில் வந்து......

* * *

[இடம்: கோதம முனிவன் குடில்.
(கோதமன், அகலியை, இந்திரன்.)

(கோழிகூவுகிறது)

கோத: அகல்யா! அகல்யா!! உஷா காலம் ஆகி விட்டது. இன்னுமா உறக்கம். விழித்துக்கொள். யான் கங்கைக்கு நீராடப் போகிறேன்.

அக: ஆ! நாதா! நீங்களா என்னை எழுப்பினீர்கள்? இன்னும் பொழுது விடியவில்லைபோல் இருக்கிறது.

கோத: அடி பேதை! கோழி கூவிவிட்டது. உஷா காலம் தொடங்கிவிட்டது. யான் ஆற்றுக்குச் செல்கிறேன். பூசைக்கு வேண்டியவற்றை ஏற்பாடு செய்துவை.

(முனிவன் பாடிக்கொண்டுபோகிருன். உபநிஷத் பாடல் எழுந்து தூரத்தில் மறைகிறது.)

(இந்திரன் கோதமன் வேடத்தில் வந்து அகலியையை நெருங்குகிருன்.)

அகல்: நாதா! நதிக்குச் சென்றீர்களே! ஏன் அதற்குள் திரும்பிவிட்டீர்கள்? இன்னும் பொழுது சரியாக விடியவில்லையா?

இந்தி: ஆம் அகல்யை! என் மனம் ஒருநிலையில் நிற்கவில்லை. பலகாலமாக அலைமோதிக்கொண்

டிருந்த என் மனத்துக்கு ஒரு ஆறுதல் தரவே உன்னை நாடி வந்தேன்.

அகல்: என்ன? நாதா! பலகாலமாக என்று கூறுகிறீர்களே! திடீரென்று உங்கள் பேச்சில் ஏதோ மாறுதல் தெரிகின்றதே.

இந்தி: (அசட்டுச் சிரிப்புடன்) நான் தவருக ஒன்றும் கூறவில்லை. உன் தொடர்பு வேண்டும் என்று என் மனம் வருந்திய வருத்தத்தை எடுத்துக் கூறினேன். இன்னும் உஷா காலம் வரவில்லை. எனக்கு அமைதி வேண்டும்.

* * *

[கங்கைக் கரை]

(கோதமன்)

கோத: ஈதென்ன புதுமை. உஷா காலம் இன்னும் வரவில்லையே! கோழி எவ்வாறு கூவிற்று. அன்னை கங்கை உஷா காலத்துக்குரிய ஒலியுடன் இன்னும் ஓடத் தொடங்கவில்லையே. ஒருநாளும் இல்லாத புதுமையாகக் கோழி கூவியதும், யான் விழித்ததும் ஏன்? என் மனமும் ஏதோ தீமையை எதிர்பார்ப்பதுபோல் நடுங்கக் காரணம்? ஒருவேளை அகல்யைக்கு ஏதேனும் தீமை ஏற்பட்டிருக்கலாமோ? அவளை எழுப்பி நான் சொல்லிக்கொண்டு புறப்படும்பொழுது நன்ருகத் தானே இருந்தாள். ஆ!...ஏன் இவ்வாறு என் நெஞ்சம் அலை மோதுகிறது?...ஓஹோ அப்படியா செய்தி? ஈதென்ன கொடுமை? விரைவில் ஆசிரமம் திரும்பிச் சென்ருல் உண்மையை அறியலாம்.

* * *

[இடம் : கோதமமுனிவன் குடில்.]

(கோதமன், இந்திரன், அகலியை)

(கோதமன் வேகமாகத் திரும்பி ஆஸ்ரமம்வருகிறுன்)

(கோதமன் ஆஸ்ரமத்தில் நுழையும்பொழுது இந்திரன் பூனை வேடத்தில் மெல்ல வெளியேறுகிறுன்-பூனை கத்தும் ஒலி)

கோத: இந்திரா! இந்திரா!! நில் ஓடாதே. பூனை வடிவம் எடுத்துக்கொண்டால், நான் உன்னைத் தெரிந்துகொள்ள முடியாது என்று நினைத்துக் கொண்டாய்? தூ! நீயும் ஒரு தேவனு? உன்னைப் போன்ற காமப் பித்து ஏறியவனை, மிருகத்திலும் கேடு கெட்டவனைக் கண்ணுல் பார்ப்பதும் கொடிய பாவம். ஆயிரம் யாகங்கள் செய்து எத்துணைக் காலம் சேர்த்த புண்ணியத்தை ஒரு விநாடியில் அழித்துக்கொண்டாயே! உன்னைக் கண்டு கோபிப்பதா? அல்லாமல் வருந்துவதா? இதோ என்னுடைய சாபம். பிறர் உன்னைக் காணும் பொழுதெல்லாம் உன் தவறை அறிய அதுதான் தக்கவழி. ஒழிந்துபோ.

(இந்திரன் தேவலோகத்தை அடைகிறுன்)

கோத: அகல்யா! அகல்யா!! என்ன அப்படி நிற்கிறுய்? உன் இன்பத்துக்கு இடையூருக நான் வந்துவிட்டேன் என்று நினைக்கிறுயா? துரோகி! ஏன் தலைகுனிந்துகொண்டு நிற்கிறுய்? வெட்கம் வந்துவிட்டதா?

அகல்: (தழுதழுத்த குரலில்) நாதா! என்னை மன்னித்து......

கோத: சீ! கொடியவளே! நாதா் என்று இனியும் என்னை அழைக்க உனக்கு நெஞ்சில் எவ்வளவு அழுத்தம் இருக்கவேண்டும்? உன் செயலின் பாதகத்தை நீ அறிவாயா? இதற்கு எங்காவது மன்னிப்பு உண்டா?

அகல்: முனிபுங்கவா! என் நிலையைக் கேட்காமலே தாங்கள் கோபிப்பது, தங்கள் பண்பாட்டிற்கு ஏற்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

கோத: என் பண்பாட்டிற்கு உன்னுடன் பேசுவதும் தவறுதான்.

அகல்: வந்தவன் தங்கள் வேடத்தில் வந்தான். யான் உறக்க மயக்கத்தில் இருந்தேன். என் உள்ளத்தில் எவ்வித மாசும் இல்லை என்பதை எவ்வாறு உங்கட்கு நிரூபித்துக் காட்ட முடியும்? கடவுளே! நீயும் என்னை இவ்வாறு கைவிட்டு விட்டால்......

கோத: கொடியவளே! நிறுத்து உன் வஞ்சகப் பேச்சுகளை. இன்னும் பேசி என் மனத்தை நீ மாற்ற முயல்வதற்குள் உன்னைச் சபித்துவிட வேண்டும்.

அகல்: (அழும் குரல்) ஐயனே! யான் செய்த பிழைக்கு எத்தகைய தண்டனை கொடுத்தாலும் பெறச் சித்தமாக இருக்கிறேன். என் பாபத்தை நினைத்து அணு அணுவாக இற்றுக்கொண்டிருக்

கும் என்னை, மேலும்மேலும் உங்கள் சொல் அம்புகளாலும் வதைக்க வேண்டா.

கோத: மேலும் பேசாதே. நீ கல்லாக......

அகல்: நான் கல்லாகவே மாறிவிடுகிறேன். மனித உடம்புடன் இருந்தால் என் வேதனை என்னை அரித்துத் தின்றுகொண்டே இருக்கும்.

(தனக்குள்) என்றுதான் என் சாபம் விடியுமோ?

* * *

[மீட்டும் பழைய காட்சி: இராமன் விசுவாமித்திரன் முதலியோர்]

விசு: இராமச்சந்திரா! இதுதான் அந்த நிகழ்ச்சி, நின் கால்பட்ட பெருமையால் இம் மாதரசி சாப விமோசனம் பெற்றாள்.

இராம: கோதம முனிவரே! இப்பெருமாட்டியை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

கோத: (விசனக் குரலில்) நீ இப்பொழுது என்ன கூறுகிறாய்?

இராம: ஐயனே! நான் கூறுவதில் வேறு இரண்டாவது பொருள் ஒன்றும் இல்லையே. தவறாக ஏதேனும் கூறிவிட்டேனா? மன்னித்தருள வேண்டுகிறேன்.

விசு: கோதமரே! இராமன் இந் நிகழ்ச்சியை அறிவுக் கண்கொண்டு காண்கிறான். நெஞ்சால் தவறு இழைக்கவில்லையே அகலிகை. பிறன் ஒருவன் அவளை ஏமாற்றினான். ஏமாற்றப்படுவது ஒரு குற்றமா?

கோத: இராமனுடைய தார்மீகமான அறிவைக் கொண்டு அறத்தை ஆய்ந்தால் அவன் கூறுவது சரிதான். ஆனால், அனுபவம் என்னும் சாணையில் பட்டை தீட்டப்படாத அவனுடைய முடிவுகளை, அனுபவத்தாலும் தவத்தாலும் மிக்கவராகிய தாங்கள் ஏற்றுக்கொள்வதுதான் விந்தையாக இருக்கிறது.

விசு: அனுபவ வழியில் பார்த்தாலும் இதுவே முடிவு. அகலிகையிடம் இன்னும் நீர் அழியாக் காதல்கொண்டு இருக்கிறீர். அவளும் அவ்வாறே இருக்கிறாள். இருவருடைய கண்களும் இதனை விளக்குகின்றன.

கோத: (கலங்கிய குரலில்) அப்படியானால்...அப்படியானால்...நீங்கள் கூறுவதுபோலவே......

விசு: ஆம், சற்றும் யோசனை வேண்டா!

இராம: பெரிதும் நன்றியுடையேன் ஐயனே!

விசு: நாங்கள் நெடுந்தூரம் செல்லவேண்டும். எங்கட்கு விடை கொடுக்க வேண்டுகிறோம்.

கோத: மங்களம் உண்டாகட்டும்.

இராமன் முதலியோர் செல்லல்: சில விநாடிகள் கழித்து)

கோத: (சந்தேகம் கலந்த குரலில் மெதுவாக) அகலியே! என்ன வேண்டும்?

அகல்: (சற்றுத் தாமதித்து) பசிக்கிறது.

கோத: வயிற்றுப் பசிதானே?

அகல்: நான் கல்லாவே இருந்திருந்தால் எவ்வளவோ நன்ருக இருந்திருக்கும்.

கோத: ஏன் அவ்வளவு வெறுப்பு?

அகல்: வாழ்வில் அமைதி இல்லாதபொழுது, அது கிட்டாதபொழுது, வேறு என்ன செய்வது? மனம் கடலாகக் கொந்தளித்தால் வேறு என்ன செய்வது?

கோத: ம்......

அகல்: என்ன யோசிக்கிறீர்கள்?

கோத: கொந்தளிப்பில் இன்பம் இருக்கிறதே தவிர, மனத்தைச் சாகடித்துவிட்டால் அதற்குப் பெயர் அமைதி இல்லை.

அகல்: அப்படியானல் தங்களுடைய மனம் ஏன் இப்படிச் சலிக்கிறது. தசரதகுமாரன் கூறும் பொழுது காணப்பட்ட அமைதி அவனுடனேயே சென்றுவிட்டதா?

கோத: சற்றுப் பொறு! நான் சென்று பழவகை களைக் கொண்டு வருகிறேன். இருவரும் உண்டு பசியாறலாம்.

* * *

[விடியற்காலை]

(அகலியை, கோதமன்)

அகல்: ஏன்? காலைக்கடன்களை முடிக்கச் செல்ல வில்லையா? ஏதோ பறிகொடுத்தவர்போல் ஏன் அமர்ந்திருக்கிறீர்கள்?

கோத: இதோ செல்கிறேன். விரைவில் நீராடிக் கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வரு கிறேன்.

[கோதமன் போகிறான்]

அகல்: (தனக்குள்) என்ன வாழ்வு? மறுமலர்ச்சியா இது? தானாகப் பழுக்காத பழத்தைத் தடி கொண்டு அடித்துப் பழுக்கவைத்தால் என்ன சுவை ஏற்படும் அதில். இராமன் என்ற வண்டு வந்து மோதித்தானே எங்கள் வாழ்வை மலரச் செய்தது. அதனால்தான் அதில் மணம் ஏற்பட வில்லையோ? ஆம்! இரண்டாம் முறை வாழ்வு மலர்ந்தால், அதில் மணத்துக்கு இடம் ஏது? விரைவில் கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு வருகிறாரோ? மீண்டும் பழைய பயமா? என்னுடைய அன்பின் ஆழத்தை அறிவாரா அவர்.

கோத: (தனக்குள்) ஆம்! அகலியை தூய்மையானவள்தான்... நெஞ்சினுல்!தவறு செய்யாதவள்... அவள் என்ன செய்வாள் பாவம்...தவறு முழுவதும்...அவனுடையது. நான்தான் பாவம் அவளிடம் சற்றுக் கடுமையாக நடந்துகொண்டேன். என்பால் எவ்வளவு அன்பு வைத்திருக்கிருள்? இவ்வளவு தூய அன்புக்கு நான் தகுந்த பாத்திரந்தானு?

[கோதமன் வருகை]

அகல்: (கரகரப்பான குரலில்—நிதானமாக) நாதா! தங்களிடம் ஒன்று கேட்கவேண்டும். கேட்கலாமா?

கோத: (ஏதோ யோசனையில்) தாராளமாகக் கேட்கலாமே.

அகல்: நாம் இந்த இடத்தைவிட்டு அயோத்தியின் பக்கத்தில் குடிபுகுந்துவிட்டால் என்ன?

கோத: தாராளமாகப் போகலாம். ஏன் இராமனையும் சிதையையும் அடிக்கடி காணவேண்டும் என்ற விருப்பமா?

அகல்: அதுவுந்தான்.

கோத: அதுவுந்தான் என்ருல், வேறு என்னவாம்? அவதூறு பேசுகின்ற மக்களிடமிருந்து போய் விடப் பார்க்கிருயா? மற்ற ரிஷிபத்தினிகள் உன்னைப்பற்றிப் பேசிக்கொள்வதை நானும்

அறிவேன். அதனால் என் மனம் சிறிதும் வேதனை அடையவில்லையே.

அகல்: வேதனை அடைவதற்குரிய தவறு நீங்கள் என்ன செய்தீர்கள்? (அழுகைக் குரலில்) நானல்லவோ......

கோத: போதும்! அதுபற்றி மறுபடியும் பேச வேண்டா.

* * *

[அயோத்தியை அடுத்துள்ள பர்ணசாலை]

(கோதமன், அகலியை)

கோத: அகல்யே! நாம் அயோத்தியின் பக்கத்தில் குடியேறியதன் பயன் இல்லாமல் போய்விட்டது. இராமனுடைய நட்புக் கிடைக்கும் சூழ்நிலை மாறிவிட்டது.

அகல்: என் பாபம் என்னுடன் சேர்ந்தவர்களையும் சேர்த்து வாட்டுகிறது. இராமனும் சீதையும் காட்டுக்குப் போகவேண்டிய அவ்வளவு பெரிய தவறு என்ன செய்துவிட்டார்கள்?

கோத: (வருத்தக் குரலில்) பல யுகங்கள் கல்லாகக் கிடக்கவேண்டிய அவ்வளவு பெரிய தவற்றை நீ செய்தாயா? என் மனம் பெரிதும் குழம்பிக் கிடக்கிறது. பாபம் என்பது, மனம் அறிந்து செய்யும் செயலுக்குத்தான் உண்டே தவிர, மனம் அறியாமல் செய்யப்படுவது பாபம் அன்று.

அகல்: அப்படியானால்......

கோத: ஆம்! பிரியே! தாய் மயக்கம் உற்ற நிலையில் சிசுவின்மேல் விழுந்து அதனுல் குழந்தை இறந்து விட்டால், தாய் கொலைக்குற்றம் செய்தவளா? இல்லையே!

அகல்: கொலை செய்த பாபம் அவளைச் சேராமல் இருக்கலாம். ஆனுலும் அவள் கொல்லுதலைச் செய்தவள் தானே. அவளுடைய துயரத்தைத் தணிக்க முடியுமா?

கோத: இதுவரை நான் செய்த முடிவுகள் அனைத்தும் குறைபோய்விட்டன. இராமனுடைய பட்டாபிஷேகமே தடைப்பட்டுவிட்டது என்ருல் என்ன கருத்து? மனிதனுடைய அளவைகளுள் அடங்காத ஒரு சக்தி, குருட்டுத்தனமாக ஏதோ செய்துகொண்டு போகிறது. மறுபடியும் நான் அமைதியை நாடிச் செல்லப்போகிறேன்.

அகல்: நீங்கள்மட்டும் தனியே சென்றுதான் அமைதியை நாடப்போகிறீர்களா? நானும் உங்களுடன் வரலாமென்று நினைக்கிறேன். எங்கே செல்லலாம்? இராமனும் சீதையும் சென்றுவிட்ட பிறகு அயோத்தியின் அருகில் இருக்கவேண்டும் என்ற ஆவலும் தணிந்துவிட்டது.

கோத: சரி, மிதிலைக்குச் செல்லலாமா? நம் மகன் சதானந்தனைக் கண்டு பல காலம் ஆய்விட்டதே... மிதிலைக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் அவனையும் பார்த்துவிட்டு வரலாமென்று நினைக்கிறேன்.

அகல்: சரி...அப்படியானுல் இப்பொழுதே புறப் பட்டுவிடலாம்.

[இருவரும் வழிநடை செல்கிருர்கள்]

• • •

[இடம்: மிதிலேக்குச் செல்லும் வழி]
(கோதமன், அகலியை)

கோத: (தனக்குள்) அமைதி...அமைதி! எங்கே கிடைக்கிறது அந்தப் பொருள்? காலாதீதப் பழம் பொருளின் கையிலகப்பட்ட சிறு பூச்சிகள்தாமா நாமெல்லாம். பாவம் அகலியை...தான் பெற்ற மகனேக் காணக்கூடக் கூச்சப்படுகிருள். நானே அவள் குற்றத்தை மன்னித்துவிட்டபொழுதுகூட அவள் ஏன் இன்னும்···உடன் வரக்கூடப் பிடிக் காமல் பின் தங்கியே நடக்கிருள்.

அகல்: (தனக்குள்) அவர் என்னே உள்ளபடியே மன்னித்துவிட்டாரா? மன்னித்திருந்தால் ஏன் இவ்வளவு அமைதியற்றிருக்கிருர்? நான் பெற்ற மகனேக் காணக்கூட எனக்கு வெட்கமாக இருக் கிறது. பாவம் அவர் தம்மகனேக் காணுவதற்கு முன், அமைதியை நாட முற்படுகிருர். வாழ்க்கை யாரும் விடை காண முடியாத புதிராக இருக் கிறதே. கல்லாகக் கிடந்தபொழுது, எப்பொழுது மனித வடிவம் பெறலாம் என்ற ஆசை...மானிட வடிவம் பெற்றவுடன் மீண்டும்......

கோத: (உரக்க) அகல்யா ... அ க ல் ய ா ... வ ா! என்னுடன் நடந்துவா.

அகல்: இதோ வந்துவிடுகிறேன் (நாணத்துடன்) என் அருகில் அழைத்தீர்கள்?

கோத: பிரியே...என் கையைப் பிடித்துக்கொண்டு நட. சிறிதும் அஞ்சவேண்டா.

அகல்: (நாணத்துடன்) நீங்கள் இருக்கும்பொழுது அச்சம்...

* * *

[இடம்: கங்கைக்கரை]
(கோதமன், அகலியை, சதானந்தன்)

[தூரத்தில் தண்ணீரின் சலசலப்பும் காயத்திரி மந்திரம் ஓதும் ஒலியும் சிறிது மென்மையாகக் கேட்கிறது]

கோத: அதோ சதானந்தன். கங்கையில் நின்று ஜபம் செய்கிறான். (தூரத்தில் இருந்து) சதானந்தா சதானந்தா...

சதா: அப்பா...அம்மா...வாருங்கள், வாருங்கள். வணக்கம்.

கோத: மங்களம் உண்டாகட்டும் மகனே !

சதா: அம்மா வணங்குகிறேன்.

அகல்: (தழுதழுத்த குரலில் தனக்குள்) எவ்வளவு பெரியவனாகிவிட்டான் நம் மடியில் கிடந்து வளர்ந்த இவன்! (உரக்க) மங்களம் உண்டாகட்டும் குழந்தாய்.

சதா: அம்மா, அப்பா ! இருவரும் வாருங்கள் ஆஸ்ரமத்திற்கு.

* * *

[இடம்: மிதிலா நகரம்]
(கோதமன், சதானந்தன்)

கோத: குழந்தாய்...ஈதென்ன ஜனகன் ஆட்சி செய்கின்ற மிதிலையில்கூட எல்லாம் பொலிவிழந்து

காணப்படுகின்றனவே! திருமஞ்சனம கொண்டு வரும் யானை, காட்டில் பாரமிழுக்கும் யானையைப் போல் முகத்தை வைத்துக்கொண்டு வருகிறதே... உடன்வரும் அர்ச்சகனும் பொலிவிழந்து காணப் படுகிறான்.

சதா: தந்தையே! இராமன் காடு சென்ற செய்தி மிதிலையை எட்டியதிலிருந்து மிதிலா நகரம் இப் படித்தான் இருக்கிறது.

கோத: கர்ம யோகியாகிய ஜனகன் ஆட்சியிலும் நிலை இதுதானா? இராஜ ரிஷி என்று அவனை அழைப் பது வெறும் உபசார வழக்குத்தானா?

சதா: நாம் இப்பொழுது ஜனகனுடைய ஆத்ம விசாரணை மண்டபத்திற்குத்தானே செல்கிறோம். அங்கே உங்கள் சந்தேகத்திற்கு விடை கிடைத்து விடும்.

* * *

[ஜனகன் ஆத்ம விசாரணை மண்டபம்]

(கோதமன், ஜனகன்)

கோத: (தனக்குள்) ஆத்ம விசாரணை மண்டபமா இது...இந்தப் பெரிய கூட்டம் ஏதோ பெரிய சந்தையில் வியாபாரம் செய்ய வந்த கூட்டம் போல் அல்லவா இருக்கிறது...இதில் எவ்வாறு ஒன்றைப்பற்றிச் சிந்திப்பது?

ஜன: முனிபுங்கவா...நீங்கள் நினைப்பது தவறு. ஆத்ம விசாரணை செய்வது, தனிமையில்தான் முடியும் என்று ஏன் கருதுகிறீர்கள்?

கோத.: (திடுக்கிட்டு) நான் நினைத்ததை அப்படியே கூறிவிட்டீர் ஜனகரே...நான் நினைத்ததற்கு விடை கூறவில்லையே?

ஜன : கோதம முனிவ! கோசலம் என்னும் கனவு நாட்டை அரிதாக முயன்று படைத்த வசிஷ்ட முனிவன் உணர்ச்சிக்கு மதகு அமைக்காமல் போனது வருந்தற்குரியது.

கோத : என்ன கூறுகிறீர் ஜனகரே...உணர்ச்சியின் முடியிலேதான் உண்மை பிறக்கும் என்பதை உமக்கு நான் கூறவேண்டுமா?

ஜன : உணர்ச்சியின் முடியிலே உண்மைமட்டுமா பிறக்கும்? அதனை அடக்கி ஆளத் தெரியவில்லையானால் துன்பமும் பிறக்கும். பெரிய சக்கரவர்த்தியாகிய தசரதன் கடமையை மறந்து பிள்ளைப் பாசத்தினால் உயிரை விட்டதும், பரதன் முடி சூடாமல் ஆட்சி செய்வதும் எல்லாம் உணர்ச்சிக்கு மதகு வைக்காததனால் ஏற்பட்ட விளைவுகள்தாமே!

கோத : தாங்கள் அரசியலை எவ்வாறு நடத்துகிறீர்கள்?

ஜன : நான் அரசியலை நடத்துகிறேனா?

கோத : அரசியல் உங்களை நடத்துகிறதா?

ஜன : இரண்டும தவறு. அரசியல் தானாக நடைபெறுகிறது. சாட்சி மாத்திரையாய் இருந்து நான்

அதைப் புரிந்துகொள்ள முயல்கிறேன். சரி தங்கள் தர்ம விசாரணை நன்கு நடைபெறுகிறதா?

கோத: இல்லை ஜனகரே...உண்மை என்பது கானல் நீர் போல, தேடிச் செல்லச் செல்ல அப்பால் சென்றுகொண்டே இருக்கிறது. புதிய புதிய பிரச்சினைகள் நாள்தோறும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. சரி நான் வருகிறேன்.

ஜன: (புன்சிரிப்புடன்) பாவம் கற்பகோடிக் காலம் தவம் புரிந்தும் கோதம முனிவருக்கு அலை அடங்கவில்லை.

* * *

[விடியற்காலை]

(கோதமன், அகலிகை)

கோத: பிரியே...அகல்யா! அதற்குள் நீராடி வந்து விட்டாயா? கங்கையில் நீண்ட நேரம் விளையாட விரும்புவாயே.

அகல்: இல்லை பிரபோ!

கோத: ஏன்? உன் முகமும் வாடி இருக்கிறதே.

அகல்: (அழுகையுடன்) சுவாமி சாப விமோசனம் கிடைத்ததே தவிர, பாப விமோசனம் கிடைக்கவில்லையே எனக்கு.

கோத: என்ன நடந்துவிட்டது?

அகல்: (துயரக் குரலில்) ரிஷிபத்தினிகள் கங்கையில் நீராடிவிட்டு வரும்பொழுது என்னைக் கண்டால்

அருவருப்புடன் எட்டி ஓடுகிருர்கள். நீண்ட தூரத்தில் இருந்து 'அதோ அகல்யை' என்று வெறுப்புடன் சுட்டிக் காட்டுகிருர்கள்.

கோத: இதற்கா இவ்வளவு வருந்துகிருய்? நீயா வது உள்ளத்தளவில் தூய்மை உடையவளாக இருக்கிருய். உள்ளத்தால் தீமை செய்பவர்கள் அகப்பட்டுக்கொள்வதாக இருந்தால், உலகில் ஏறத்தாழ அனைவருமே அகப்பட்டுக்கொள் வார்கள்.

அகல்: நாம் இந்த மனித சஞ்சாரமுள்ள இடத்தை விட்டுத் தீர்த்தயாத்திரை சென்ருல் என்ன?

கோத: இதோ இப்பொழுதே புறப்படலாம். எங்கே என் தண்டு கமண்டலம்?

சதா: அம்மா, அப்பா...அதற்குள்ளாகவேயா புறப் பட வேண்டும்?

கோத: எப்பொழுதானுல் என்ன மகனே? சென்று வருகிருேம்.

* * *

வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கரனுடைய கோயில்போல திடமற்றவர்கள் கால்களுக்குள் அடைபடாத கைலையங்கிரியின் பனிச் சிகரங் களை அவர்கள் கண்டு வணங்கினுர்கள்.

தமது துன்பச் சுமையான நம்பிக்கை வறட்சியை உருவகப்படுத்தின பாலையைக் கடந்தார்கள்.

தம் உளளம்போலக் கொழுந்துவிட்டுப் புகை மண்டிச் சாம்பலையும், புழுதியையும் கக்கும் எரிமலைகளை வலம் வந்து கடந்தார்கள்.

(கடைசியில் சரயு நதிக்கரை வந்தடைந்தார்கள்)

கோத: பிரியே! இதோ பதினான்கு ஆண்டுகட்கு முன்னர் நாம் கட்டி வாழ்ந்த......குடிசை இருந்த இடம்.

அகல்: சுவாமி...என் மனம் இடிந்து கிடப்பது போலவே, இக் குடிசையும் இடிந்து கிடப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

கோத: அஞ்சாதே...இரண்டையும் தழைக்கச் செய்ய நான் இருக்கிறேன்.

அகல்: யான் சரயு நதிக்குச் சென்று நீராடிவிட்டு வருகிறேன்.

* * *

[சரயு நதிக்கரை]

(கைகேயி, அகலியை)

கைகேயி: யாரது? அகல்யாதேவியா? இதோ கைகேயி சாஷ்டாங்கமாக வணங்குகிறேன் தாயே.

அகல்: சக்கரவர்த்தினி...இஃதென்ன கூத்து. பரி சனங்கள்கூட இல்லாமல் இப்படி வரலாமா? தங்கள் விதவைக் கோலம் என் மனத்தைத் துளைக்கிறது.

கைகேயி: (சாந்தமான குரலில்) அறத்தின்மேல் கொண்ட அதிகப் பற்றின் காரணமாகப் பரதன் தன் மனத்தில் எனக்கு இடம் கொடுக்க மறுத்து விட்டான்; என்னை மறந்துவிட்டான்.

அகல்: (புன்சிரிப்புடன்) பரதனுடைய தர்ம வைராக்கியத்திற்கு யார் காரணம்?

கைகேயி: குழந்தை வைத்த நெருப்பினுல் ஊர் வெந்து போயிற்று என்ருல், அதற்காகக் குழந்தையைக் கொன்றுவிடுவதா?

அகல்: குழந்தையைக் கொல்வது முறையன்று. ஆனுலும் எரிந்தது எரிந்ததுதானே.

கைகேயி: எரிந்த இடத்தைச் சுத்தப்படுத்தாமல் சாம்பலை அப்படியே குவித்து வைத்துக்கொண்டு சுற்றி உட்கார்ந்திருந்தால் என்ன லாபம்?

அகல்: சாம்பலை அகற்றுகின்றவன் இன்னும் ஒரு நாளில் வந்துவிடுவானே.

கைகேயி: (வருத்தக் குரலில்) ஆமாம். அப்படித் தான் இதுவரையில் கருதி இருந்தேன். ஆனுல், நாலா திசைகளிலும் சென்ற ஒற்றர்கள் இராமனைக் காணுது திரும்பிவிட்டனர். பரதன் நெருப்பில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிருன். அவன் போவதற்கு முன்னர் யானும் தனிப்பட்ட முறையில்......

அகல்: தேவி...இஃதென்ன கொடுமை? வசிட்டரைக் கொண்டாவது பரதனுக்கு எடுத்துக் கூற முடியாதா?

கைகேயி: (விரக்திக் குரல்) பரதன் அறம் ஒன்றுக்குத்தான் கட்டுப்படுவானே தவிர, வசிட்டருக்குக் கூடக் கட்டுப்பட மாட்டானே.

அகல்: (கோபக் குரலில்) மனிதனுக்குக் கட்டுப் படாத அறம், மனித குலத்துக்கே பகை என்பது தான் என் முடிவு.

* * *

[இடம்: காட்டில் கோதமன் பர்ணசாலை]

(கோதமன், அகலியை, சீதை, இராமன்.)

[தேர் ஒன்று வந்து நிற்கிறது]

கோத: வரவேண்டும் ... வரவேண்டும்... இ ரா ம ச் சந்திரா! வாம்மா சீதா...என்ன மாதவம் செய்தது இச் சிறுகுடில்.

அகல்: வாம்மா சீதா...உன்னைக் கண்டவுடன் என் மனம் துன்பம் நீங்கி இன்பமடைகிறது.

கோத: அகல்யே...இராமனும் நானும் வெளியே சென்று சற்று உலாவிவிட்டு வருகிறோம். நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருங்கள்.

[கோதமனும் இராமனும் சென்ற பிறகு]

அகல்: என்ன சீதா...பதினைந்து வருஷங்கள் கழித்து உன்னைப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. இந்த இடைக்காலத்தில் எவ்வளவு அனுபவம் பெற்றுவிட்டாய் எத்தனை இடங்கள் சுற்றிப் பார்த் தாய்?

சீதை: தாயே அகல்யா! எல்லாம் கனவுபோல இருக் கிறது. இலங்கையில் அசோக வனத்தில் இருந்த காலத்தை நினைத்தால் இப்பொழுதும் உடல் நடுங்குகிறது.

அகல்: அது கிடக்கட்டும். இராமன் என்ன கூறினன் அதுபற்றி?

சீதை: சொல்வதென்ன? அக்னிப் பிரவேசம் செய்த பிறகுதான் ஏற்றுக்கொண்டார்.

அகல்: (உச்சஸ்தாயையில்) என்ன? அக்னிப் பிரவேசம் செய்தாயா? எதற்கு? யார் செய் என்று கூறினது?

சீதை: யார் கூறுவது? அவர்தான் கட்டளை இட்டார். பலகவனிடம் சிறை இருந்தபொழுது தூய்மையுடன் இருந்தேன் என்பதை நிரூபிப்பதற்கு.

அகல்: (கத்தும் குரலில்) அவனு உன்னை அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னுன். அகலிகைக்கு ஒரு நீதி அவனுக்கு ஒரு நீதியா? இஃது என்ன ஏமாற்று? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

சீதை: (மெல்லிய குரலில்) உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாவா?

அகல்: (கத்திக்கொண்டு) உலகத்துக்கு நிரூபிக்க வேண்டுமா? உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? என்றைக்காவது யாராவது உண்மையை உலகத்துக்கு நிரூபித்துக் காட்டியதுண்டா? காட்டத்தான் முடியுமா?

சீதை: அதனுல் தவறு ஒன்றும் இல்லையே?

அகல்: தவறு இல்லையா? அகல்யைக்கும் கோதமனுக்கும் கூறிய நியாயத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டான் தசரத குமாரன்? உலகத்துக்கு நிரூபித்துக் காட்டிவிட்ட ஒன்று உண்மையாகி விடுமா? தன் நெஞ்சு அறிந்த ஒன்றுக்கு நிரூபணம் வேறு தேவையா?

[இராமனும் கோதமனும் உள் நுழைகின்றனர்]

இராம: (தனக்குள்) ஆம்...அகல்யாதேவி கூறுவது முற்றிலும் உண்மைதானே...அன்று கால்பட்டுக் கல்லுருவம் மாறியபொழுது, காலும் மனமும் குளிர்ந்தது. இன்று அந்த உருவம் பேசும் பொழுது காலும் உள்ளமும் சுடுகின்றனவே. (சாதாரணக்குரலில்) நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம்.

(இராமனும் சீதையும் தேரில் சென்ற பிறகு)

கோத: (தனக்குள்) என்ன செய்தாலும் அகல்யையின் மனப்பாரம் குறையாதுபோல் இருக்கிறதே... இதற்கு என்ன செய்யலாம்?...ஆம்...அவளுடைய மனத்தை மாற்ற ஒரேயொரு வழிதான் உண்டு. சாதானந்தனுக்குப் பிறகு நீண்ட காலமாக அவள் தாய்மையை அடையவில்லை. இப்பொழுது ஓர் இளம் குழந்தை அவளுக்கு இருந்தால் அவள் மனம் மாறினாலும் மாறலாம். அகல்யா... அகல்யா...

அகல்: (மயக்க நிலையில்) யாரது? என்னை அழைப்பது? இந்திரா...இன்னுமா நீ என்னைவிட

வில்லை, வேண்டா; உள்ளத்தின் தூய்மையை உலகம் அறியும் நாள் இன்னும் வரவில்லை. அந்த நாள்வரை, யான் மறுபடியும் கல்லாகவே இருக்க விரும்புகிறேன்.

கோத: அகல்யா...அகல்யா...என்ன பேசுகிருய் பிரியே...எங்கே இந்திரன்? ஏன் இந்த மயக்கம்? இதோ கோதமனுகிய நான் நிற்கிறேன்.

அகல்: யார்? யார்? கோத...

கோத: ஆ அகல்யா...மீண்டும் கல்லாகிவிட்டாயா? நீயாகப் பெற்ற இந்த நிலையை யார் மாற்ற முடியும்?

கயிலையங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப் பாலைவனத்தின் வழியாக விரைந்து கொண்டிருக்கிறது. அதன் குதிகாலில் விரக்தி வைரம் பாய்ந்து கிடந்தது.

அவன்தான் கோதமன்

அவன் துறவியானுன்.

“ கயிலாசநாதர் கோயில் ”

(வரலாற்றுச் சித்திரம்)

[காஞ்சியிலுள்ளதும் இராஜசிம்மப் பல்லவன் கட்டியதுமான புகழ்பெற்ற கயிலாசநாதர் கோயில்பற்றிய வரலாற்றை வரலாறு, கல்வெட்டு என்பவற்றின் துணைகொண்டு ஒலி நாடகமுறையில் கூறுவது.]

குரல் 1 : கல்வியிற் கரையிலாத காஞ்சி

குரல் 2 : 'மாறிலாது' இருந்திடு வயங்கொள் காஞ்சி

குரல் 3 : அகன் அமர் காஞ்சி

குரல் 4 : கற்றவர் மலி காஞ்சி

குரல் 1 : கடிகைகள்சூழ் திருக்காஞ்சி

குரல் 2 : விழவு அருக் காஞ்சி

குரல் 3 : நேரிமை அறம்புரிந்திடு காஞ்சி

குரல் 4 : பீடுதங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும் காஞ்சி

குரல் 1 : தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத் தூய மாந்தர்வாழ் திருக்காஞ்சி.

குரல் 2 : அம்மை காம கோட்டத்து முப்பதோடு இரண்டு அறம் புரக்கும் காஞ்சி.

அறிவிப்பாளர் :

தேரொலிக்க, மா ஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ் படைத்த காஞ்சி மாநகரம் இரண்டாயிரம் ஆண்டுகளாகவே பெரும் புகழ் படைத்தது. 'நகரேஷு காஞ்சி' என்று பிறமொழியிலும் சிறப்புறப் பாராட்டப்பட்டது. பல்லவர் காலந் தொடங்கி அதன் சிறப்பு மேலும் வளர்ந்தது. நாளந்தாப் பல்கலைக் கழகம் போன்ற பெரியதொரு கடிகையைத் தன்பால் பெற்று விளங்கியது.

சைவம், வைணவம், ஜைனம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய எல்லாச் சமயங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கி வளரத் தன்பால் இடந் தந்து பொலிந்தது காஞ்சி மாநகரம்.

இத்தகைய காஞ்சியில் கி. பி. 680 முதல் 720 வரை இராஜசிம்மன் என்ற பல்லவன் செங்கோல் செலுத்துகிறான். அவனுடைய கொலுமண்டபத்தில் சிறந்த சிற்பிகளும் அமைச்சர்களும், கடிகையில் கல்வி கற்பிக்கும் பேராசிரியர் சிலரும் அமர்ந்துள்ளனர்.

[கொலுமண்டபம்—பெரிய இரைச்சல், வாத்திய முழக்கம்—திடீரென்று இரைச்சல் குறைதல்]

கு 1: அத்யந்த காமன் வாழ்க

கு 2: அபராஜிதன் வெல்க

கு 3: அமித்திரமல்லன் வெல்க

கு 4: காஞ்சி மகாமணி வாழ்க

கு 1: ரணவீரன் வெல்க

கு 2: ரணதீரன் வெல்க

கு 3: ரணசண்டன் வெல்க

கு 4: ரணவிக்ரமன் வாழ்க

கு 1: அகண்டசாசனன் வாழ்க

கு 2: லோக சிகாமணி வாழ்க

கு 3: அவனிபஜானன் வாழ்க

கு 4: சிவ சூடாமணி வாழ்க

இராஜசிம்: அமைச்சர்களே!...சிற்பிகளே!....அனை வர்க்கும் என்னுடைய வணக்கம். பல்லவப் பேரரசில் நீங்கள் அனைவரும் எவ்விதக் குறையு மின்றி இருப்பீர்கள் என நினைக்கிறேன்.

கடிகை ஆசிரியர்: அபராஜித!....உனக்கு வெற்றி உண்டாகட்டும்....உனது முன்னோனான ஸ்கந்த சிஷ்யன் இக் காஞ்சிபுரத்தை வெல்லும்பொழுது இங்கே நிலைபெற்றிருந்த கடிகையையும் சத்ய ஸேனன் என்பவனிடமிருந்து வென்றான்.

இராஜ: சத்யபுத்ர வம்ஸத்தவனுன சத்யசேனன் இந்தக் கடிகையைப் போற்றி வந்ததும் அதை எம் முன்னேனுன ஸ்கந்தசிஷ்யன் கைப்பற்றினதும் யாம் அறிந்தவையே...அதற்கு இப்பொழுது என்ன குறைவந்துவிட்டது?

கடிகை ஆசிரியர்: சக்கரவர்த்தி...அந்தக் கடிகை இப்பொழுது ஓரளவு கவனிப்பாற்றுக் கிடக்கிறது. அதை நீ நல்நிலைக்குக் கொண்டுவந்து பழைய புகழ் மங்காதிருக்கும்படி செய்யவேண்டும்.

அமை: மகாமல்ல...ஒரு விண்ணப்பம்

இராஜ: அமைச்சரே...தாராளமாகக் கூறுங்கள்.

அமை: கடிகையை நல்ல நிலையில் நிறுவவேண்டியது மிகவும் முக்கியந்தான். ஆனுல், கடவுள் பக்தியுடன் கலந்து நில்லாத கல்வி பயனற்றது. ஆகவே, பெரிய கல்விச் சாலையாக உள்ள இந்தக் கடிகையின் பக்கத்தில் ஒரு பெரிய கோயில் அமைக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

இராஜ: அமைச்சர் கூறுவது முற்றிலும் சரியே... நானும் அவ்வாறே நினைக்கின்றேன். சிற்பாசாரியார் இதுபற்றி என்ன கூறுகிருர்?

சிற்: அரசே...ஸ்கந்தசிஷ்யன் ஜயித்த கடிகையை உங்கள் முன்னேர் போற்றிப் பாதுகாத்தது உண்மைதான். ஆனுல், அதற்குமேல் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அமைச்சர் கூறினது

போல் கடவுள் பக்தியோடு சம்பந்தப்படாத கல்வி விழலுக்கிறைத்த நீராகவே ஆகிவிடும். ஆகவே, தாங்கள் கருதுவதுபோல் ஒரு கோயிலை யும் நிறுவுவது முற்றிலும் பொருத்தமானதே.

அமை: அரசே.........மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலைத் தாங்கள் கட்டியது பிற நாடுகளிலிருந்து வருபவர்கட்குப் பல்லவர்களின் சிற்பச் சிறப்பை எடுத்துக்காட்டப் போதுமானதாக உள்ளது. ஆனால், தலைநகராகிய காஞ்சியில் அத்தகைய ஒரு கோயில் இருக்கவேண்டியதன் அவசியத்தை நான் எடுத்துக் கூறவேண்டிய தேவையே இல்லை என நினைக்கின்றேன்.

இராஜ: மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலைவிடப் பெரியதாகவும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தாகவும் தலைநகரக் கோயில் அமையவேண்டும் என்பதே என்னுடைய எண்ணம்.

சிற்: ஆம்...என்னுடைய எண்ணமும் அதுவே. மாமல்லன் முதலானவர்கள் பாறைகளைக் குடைந்து செய்த குடைவரைக் கோயில்களில் ஒரு தொல்லை உண்டு. சிற்பிகளின் விருப்பம்போல் செதுக்குவதற்கு அந்தக் கற்கள் இடந்தரவில்லை.

இராஜ: சிற்பாசாரியாரே......அப்படி இருந்தும் அவர்கள் இன்றும் உலகம் கண்டு வியக்கும் படியான சிற்பங்களை மாமல்லபுரத்தில் செதுக்கி விட்டார்கள். நாமும் கற்கோயில்தான் கட்ட வேண்டும் என்று நினைக்கிறோம்.

சிற் : கற்கோயில்தான் எழுப்பவேண்டும் என்ருலும் அந்தக் கல் கருங்கல்லாக இல்லாமல் பொறைக் கல்லாக, அதாவது மணற் கல்லாக இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். அரசரின் ஆணை யாதோ ?

இராஜ : மணற் கல்லின் சிறப்பு என்ன ?

சிற் : அஃது உளிவேலைக்கு மரத்தைப்போல் எளிதாக இருக்கும். எவ்வளவு அழகான சிற்பத்தை வேண்டுமானுலும் அதில் செதுக்க முடியும்.

இராஜ : அப்படியே ஆகட்டும். சிவபெருமான் அமர் வதற்குரிய சகல சிறப்புக்களுடனும் அக்கோயில் அமையட்டும். விரைவில் வேலை தொடங்கட்டும்.

[காலப்போக்கைக் குறிக்கும் இசை—கல்லில் உளி செதுக்கும் ஓசை—ஆரவாரம்—அரசன் வருகையைத் தெரிவிக்கும் ஓசை]

குரல் 1 : அத்யந்தகாம மகா ராஜாதி ராஜ இராஜ சிம்மப் பல்லவர் நீடுழி வாழ்க.

குரல் 2 : சிவசூடாமணி ராஜசிம்மர் நீடுழி வாழ்க!

இராஜ : சிற்பாசாரியரே ... கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாமா ?

சிற் : தூரத்தில் இருந்து பார்த்தால் திருக் கயிலாயத் தின் தோற்றம்போலவே காட்சியளிக்கும் இக் கோயிலின் எதிரே உள்ள இது திருக்குளம்.

அதனை அடுத்து நந்தி தேவருக்குரிய சிறிய மண்டபம். பெரிய இந் நந்தியும் கல்லால் ஆகியதே.

இராஜ: தூண்கள் அனைத்தும் பல்லவ முறையில் தானே அமைத்துள்ளீர்.

சிற்: ஆம்...தங்கள் காலத்தில் கட்டப்பெற்ற எல்லாத் தூண்களும் பின் கால்களில் எழுந்து நிற்கும் சிங்கங்கள் தாங்கும் தூண்களாகவே இருக்குமாறு அமைத்துள்ளேன்.

இராஜ: கோவில் எந்த முறையில் அமைக்கப் பெற்றுள்ளது?

சிற்: நீண்ட சதுர வடிவில் கிழக்கு நோக்கிய வாயிலுடன் அமைக்கப்பெற்றுள்ளது. வாயிலில் எட்டுச் சிறிய கோயில்களை அமைத்துள்ளேன்.

இராஜ: ஏன்?

சிற்: பட்டத்தரசி ரங்கபதாகையும் இளைய மகாராணியும், தங்கட்கும் இப் பெரிய தொண்டில் பங்குவேண்டும் என்று விரும்பினர்கள். ஆகவே, வாயிற்புரத்தில் அமைத்துள்ள சிறிய கோயில்களில் வடபுறம் இருப்பவற்றில் மூன்ருவது கோயில் பட்டத்தரசி ரங்கபதாகை பெயரிலும், ஐந்தாவது கோயிலை அழகில் ஈடு இணையற்ற இளைய மகாராணி பெயரிலும் அமைத்துள்ளேன்.

இராஜ: மிகவும் சரி...அப்படியானல் மற்றக் கோயில்கள் யார் பெயரில் உள்ளன.

சிற் : இன்னும் ஒன்றும் முடிவு செய்யவில்லை; அரசரின் ஆணையின்வண்ணம் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.

இராஜ : கற்கோயிலை அமைக்கும் வழக்கத்திற்கு ஆதி கர்த்தாவான என் மூதாதையார் மகேந்திரவர்மர் பெயரில் முதற் கோயில் வழங்கட்டும். அவருடைய பல்வேறு பட்டப் பெயர்களுள் ஒன்றான 'நித்யவினோதன்' என்ற பெயரைச் சேர்த்து 'நித்யவினோதேஸ்வரம்' என்று முதற் கோயில் அமையட்டும்.

சிற் : சக்கரவர்த்தியின் திருவுள்ளப்படியே ஆகட்டும். உள்ளே திருச்சுற்று முழுவதிலும 58 சிறிய கோயில் கள் அமைந்துள்ளன. வாயிலின் நேர் பின்புறம் மேற்குமுக !வாயில் ஒன்று அமைத்துள்ளேன். இந்த இரண்டு வாயில்கள் நீங்க, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்குச் சுற்றுச் சுவர்கள் நான்கிலும் 58 சிறிய கோயில்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றி லும் சிவபெருமானின் பல்வேறு படிவங்கள் அமைந்துள்ளன.

இராஜ : சிற்பியாரே ...சுற்றுக்கோயில்கள், ஒவ்வொன் றும் ஒரு கோயில்போல் முழுத் தன்மையுடன் விளங்குமாறு அமைத்தது சிறப்புடையது. ஒவ் வொரு சிறிய கோயிலையும் ஒரு விமானமாக அமைத்தது இதுவரை யாரும் செய்யாத புதுமை. ஆமாம். அன்று கோயில் அமைப்பு முறையைப் பற்றி என்னிடம் ஆராயும்பொழுது, திருச்சுற்றில்

செய்துள்ள இச் சிறு கோயில்கள்பற்றி நீர் ஒன்றும் கூறவில்லையே.

சிற்: ஆம் அரசே...அன்று யான் இதுபற்றி ஒன்றுங் கூறுத காரணம், நானே இதனை நினைக்காதது தான்.

இராஜ: பின்னர் எப்பொழுது இந்த முடிவுக்கு வந்தீர்?

சிற்: இந்தக் கற்பனையின் பெருமை இளவரசர் மகேந்திரவர்மருக்கே உரியது. அவர்தாம் இவ் வாறு திருச்சுற்று முழுவதும் சிறிய கோயில்கள் அமைக்குமாறு கட்டளை இட்டார்.

இராஜ: அப்படியா...மிகவும் நல்லது. வாயிற்புறத்தில் இவ்வளவு பெரிய இடைவெளி ஏன் விட்டீர்? இந்தக் கோயிலுக்கு ஏற்ற கோபுரம் அமைக்க இவ்வளவு பெரிய இடைவெளி வேண்டுமா?

சிற்: அதுவும் இளவரசர் மகேந்திரவர்மரின் ஆணை யின்படியே விடப்பட்டுள்ளது. அங்கே அவர் தம் விருப்பப்படி ஏதோ ஒன்றை அமைக்கப் போகின்ருராம்.

இராஜ: சரி...உள்ளே சென்று முக மண்டபத்தையும் இறைவன் அமரும் கருவறையையும் காணலாமா!

சிற்: கர்ப்பக்கிருஹத்தைத்தானே! ஓ! காணலாமே! இந்த முகமண்டபம் இக் கோயிலுக்கு ஏற்ற அமைப்பையுடையது. முகமண்டபத்தை அடுத்து

உள்ளே கருவறையும் விமானமும் அமைக்கப் பட்டுள்ளன.

இராஜ: கருவறையில் என்ன வடிவம் அமைத்துள் ளீர்?

சிற்: சக்கரவர்த்தி! சிவசூடாமணி என்ற தங்கள் பெயருக்கேற்ப சோமாஸ்கந்த வடிவத்தையே கரு வறையில் செதுக்கியுள்ளேன். பார்வதிக்கும் பரமேஸ்வரனுக்கும் கந்தப்பெருமான் பிறந்தது போலப் பரமேஸ்வரவர்மருக்குத் தாங்கள் பிறந்ததை நினைவுகூர்தற்பொருட்டே சோமா ஸ்கந்த சிற்பத்தை அமைத்துள்ளேன்.

இராஜ: அனைத்தும் நன்றாக அமைந்துவிட்டன. அடுத்த திங்கள் கும்பாபிஷேகத்திற்கு நாள் குறித்தாய்விட்டது. அதற்குள் எல்லா வேலை களும் முடிந்துவிடட்டும்.

[இசைக் கலவை—கனவு இசை—இரவு ஒலிக் குறிப்புகள்]

குரல்: என்ன இராஜசிம்மா? நானே நீ எழுப்பிய கற்கோயிலுக்குக் கும்பாபிஷேகமாமே.

இராஜ: ஆம்! நீங்கள் யார்? குரல்மட்டும் கேட்கிறது. ஆனால், வடிவம் ஒன்றும் தெரியவில்லையே!

குரல்: ஆம்! நான் உருவமற்றவன்தான்! ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலாத எனக்கு ஆயிரம் பேர்கள் இட்டு இந்த உலகம் அழைக்கிறது.

இராஜ: ஐயனே! நான் எழுப்பிய கோயிலுக்கு நாளை தான் கும்பாபிஷேகம். அதுபற்றி என்ன?

குரல்: இராஜசிம்மா! திருநின்றவூரில் பூசலார் என்ற ஒருவர் வாழ்கின்றார். நீண்டகாலம் முயன்று எனக்கு ஒரு கோயில் கட்டி இருக்கின்றார். நாளை தான் அதற்கும் கும்பாபிஷேகமாம். எனவே, நீ விரும்பிக் கட்டிய கோயிலின் கும்பாபிஷேகத்தை மாற்றி வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

இராஜ: (விழித்துக்கொண்டு) பெருமானே! ஈதென்ன புதுமை? நானும் அசரீரி கேட்கக்கூடிய பெரும் பேறு பெற்றுவிட்டேனா? இறைவா! நீயே விரும்பி ஓர் அன்பர் கட்டிய கோயிலில் நாளை குடிபுகுவ தானால் அந்தக் கோயிலை நான் சென்று முதலிற் காண வேண்டாவா?

[அரசன் படைகளுடன் திருநின்றவூர் வந்துள்ளான்]

இராஜ: ஐயா! இதுதானே திருநின்றவூர்? இங்கே பூசலார் என்பவர் கோயில் கட்டி இருக்கின்றாராமே? எங்கே அந்தக் கோயில்?

குரல்: அரசே! திருநின்றவூர் இதுதான். ஆனால், இங்கே கோயில் ஒன்றும் யாரும் கட்டவில்லையே! அதோ அந்த மரத்தின் அடியில் கண்ணை மூடிக் கொண்டு அமர்ந்திருக்கும் ஆள்தான் பூசலார். இதோ அழைத்து வருகிறேன்.

இராஜ: வேண்டா! வேண்டா! இதோ நானே சென்று அவரைக் கண்டு வணங்கி வருகின்றேன்.

[சிறு தாமதம்]

சுவாமீ! வணங்குகிறேன்! நான்தான் இராஜ சிம்மன்.

பூசலார்: அரசர்போலத் தெரிகின்றதே! வணக்கம். இந்த ஆண்டியிடம் அரசர் எதனை வேண்டி வந்துள்ளார்?

இராஜ: பெருமானே! தாங்களா ஆண்டி? முழு முதற் பரம்பொருளான சிவபெருமான் அரசனாகிய அடியேன் கட்டிய கோயிலில் வரமறுத்துத் தாங்கள் கட்டிய கோயிலில் நாளையே குடிபுகுவதாகக் கூறினாரே! அக்கோயில் எங்கே உள்ளது? அதனைக் காண ஆவலுடன் வந்துள்ளேன்.

பூசலார்: இறைவனே கூறினாரா? நான் கோயில் கட்டியுள்ளதாகவா இறைவன் கூறினான்? என்ன புதுமை! இறைவனுடைய கருணை இருந்தவாறு என்னே!

இராஜ: ஆம் ஸ்வாமி! கயிலையில் வாழ்கின்ற கருணாகரன் காஞ்சியில் வந்து மகிழ்வோடு உறைய வேண்டும் என்ற எண்ணத்தால் அக் கயிலை மலையைப் போலவே குன்றம் அன்னதோர் கோயில் எடுப்பித்தேன். இன்று அப்பெருங்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்வதாகவும் ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால்......

பூசலார்: அப்படியா! அதற்குள் என்ன இடையூறு நேர்ந்துவிட்டது.

இராஜ: இறைவன் அடியார்க்கு இடையூறு என்ன வரமுடியும்! ஒன்றுமில்லை. ஆனால், அசரீரியாக இறைவன் தோன்றித் தாங்கள் கட்டிய கோயிலில் இன்று குடிபுகப் போவதாகவும், எனவே நான் கும்பாபிஷேகம் செய்வதற்கு வேறு ஒருநாளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறி விட்டார். இறைவனே விரும்பிக் குடி புக நினைந்துள்ள தங்கள் கோயிலை நான் காணலாமா?

பூசலார்: அரசே! நான் கட்டிய கோயில் தாங்கள் கட்டியதைப் போன்ற கற்கோயில் அன்று. தங்களை ஒத்த பேரரசர்கள்மட்டுமே கட்டக் கூடிய கற்கோயிலை ஆண்டியாகிய நான் எங்ஙனம் அமைக்கமுடியும்? பல நாள் முயன்றும் பயன் ஒன்றும் இல்லாமையால் இறுதியாக மனத்தாலேயே இறைவனுக்குக் கோயில் கட்ட முனைந்தேன். மனத்தில் கட்டிய அத் தாபரத்திற்கு இன்றுதான் குடமுழுக்குச் செய்ய வேண்டுமென்று நாள் இட்டிருந்தேன். உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு உறையும் பெருமான் என் உள்ளக் கோயிலில் குடிபுக வருகின்றான் என்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இராஜ: செயற்கரிய செய்யவல்ல பெரியீர்! அடுத்து நான் அமைத்துள்ள கற்கோயிலுக்கும் குடமுழுக்கு நடைபெறும்போது தாங்கள் வந்து சிறப்பிக்கவேண்டும்.

பூசலார் : அங்ஙனமே ஆகட்டும்!

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல்
[செய்வான்
நாடமால் அறியா தாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்ற வேய்ந்தார் இரவிடைக் கனவில் எய்தி

'நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ(டு) ஆலயத்து நாளைநாம் புகுவோம் நீஇங்(கு)
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய்' என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்
[டருளப் போந்தார்.

[இசைக் கலவை—தாமதம்]

[கும்பாபிஷேக ஓசையும் வேத கோஷமும்—ஆரவாரமும் மணிச்சத்தம் நகாரா முதலியனவும்]

குரல் 1 : எவ்வளவு அற்புதமான கற்கோயில்!

கு 2 : பல்லவர் மரபிலேயே இத்தகைய சிறந்த கற்றளியை எடுத்தவர் இதுவரை இல்லை!

கு 3 : அத்யந்த காமன் வாழ்க!

கு 4 : ஸ்ரீ நரேந்த்ர சூடாமணி வாழ்க!

கு 1 : ஸ்ரீ காஞ்சி மகாமணி வாழ்க!

கு 2 : ஸ்ரீ கரவிக்ரமன் வாழ்க!

கு 3 : ஸ்ரீ நித்ய வினீதன் வாழ்க!

கு 4 : ஸ்ரீ மகேந்திர பராக்ரமன் வாழ்க!

கு 1 : ஸ்ரீ நயன மனோஹரன் வாழ்க!

கு 2 : ஸ்ரீ பீம விக்ரமன் வாழ்க!

கு 3 : ஸ்ரீ ராஜ குஞ்சரன் வாழ்க!

கு 4 : ஸ்ரீ பலப்ரமதன் வாழ்க!

கு 1 : ஸ்ரீ கின்னுனு கம்பி வாழ்க!

[கும்பாபிஷேகம் — மேள வாத்யங்களுடன் முற்றுப்பெறும் ஓசை]

இராஜ : ஆஸ்தான கவி அவர்களே! இக்கோயிலும் இதன் சுற்றுப்புறமும், கயிலைமலையில் வாழும் சிவபெருமானும் விரும்பி உறைவதற்குரிய இடமென்றே நான் நினைக்கின்றேன்.

ஆஸ்-கவி : ஆம் அரசே! மறக்க முடியாத இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பிற்காலச் சந்ததியார்களும் அறிந்துகொள்ளும்படியாகப் பாடல்களாகப் பாடியிருக்கின்றேன். இப் பாடல்களை இராஜசிம்மேஸ்வரம் என்று வழங்கப்போகும் இக்கோயிலைச் சுற்றியே கல்வெட்டுகளில் பொறித்துவைத்துவிட, தங்கள் ஆணையை எதிர்பார்க்கின்றேன்.

இராஜ : அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. எங்கே உமது பாடல்கள் சிலவற்றை, விளக்கத்துடன் எங்களுக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

ஆஸ்-கவி : இதோ!

'முப்புரங்களை அழித்த பரமேஸ்வரனுக்குக் குமாரன் என்றும் குகன் என்றும் சொல்லப்படும்

சுப்ரமணியன் தோன்றியதுபோல, உக்கிரசண்டன் என்ற பெயரை உடைய பரமேஸ்வரவர்மனுக்கு—ரணரஸிகனுகிய சாளுக்கியனுடைய நகரத்தை அழித்தவனுகிய பரமேஸ்வரனுக்கு, பெருமை பொருந்திய அத்யந்தகாமன் என்ற பெயரை உடைய ராஜஸிம்மன்—சைவசித்தாந்த நெறியைப் பரப்புகின்ற ராஜஸிம்மன் தோன்றினுன். இந்தப் பொருள்படும்படியாக இதோ இந்த ஸ்லோகத்தை அமைத்துள்ளேன்.

தேஸாம்வம்ஸே ப்ரஸூதாத் ரணரஸிக ப்ரோர்மர்த்தநா
[தக்ரதண்டாது
ஸுப்ரமண்ய: குமாரோ குஹஇவ பரமாத் ஈஸ்வராது
[ஆத்தஜந்மா
ஸக்தி: சுந்நாரி வர்க்கோ விதிதிபஹுநயஸ்
[சைவசித்தாந்த மார்க்கே
ஸ்ரீமாந் அத்யந்தகாம: ஷதஸகலமலோ நூர்த்தர:
[பல்லவாநாம்

* * *

கிருத யுகத்தில், துஷ்யந்தன்போன்ற அரசர்களும் கண்வர்போன்ற முனிவர்களும் அசரீரி கேட்டார்கள் என்றுல் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனுல், என்ன ஆச்சரியம்! நன்மைகள் எல்லாம் குறைந்துள்ள இந்தக் கலி யுகத்தில் ஸ்ரீபரன் என்ற பெயரை உடைய ராஜ சிம்மன் அசரீரி கேட்டது வியப்பிலும் வியப்பே.

துஷ்யந்த ப்ரமுகையி ஹ்ருதாம்பரகதா வாணி
[ஸரீரம்விநா
கிஸ்மாநாதய்யி ஸுரத்ருஷ்வ பிர், யதி, க்ருதே
[கண்வாதிபி ஸ்வீஹ்ருதை:

தந்நாஸ்சர்யம் இதம்புந: கலியுகே தூரிபவத் ஸத்குணே
சோஷ்ஸ்ரோஷித் இதீதாம் கிரம்மஹத் தஹோ
[விஸ்மாபனம் ஶ்ரீபர:

* * *

ரணஜெயன் என்ற பெயர்கொண்ட ராஜசிம்மன் பல்வேறு அரசர்களினுடைய ஆணவத்தையும் அடக்கி, அவர்களுடைய ராஜ்யங்களை எல்லாம் பறித்து, கண்மூடித் திறப்பதற்குள் வெற்றிகொண்டான். புருஷோத்தமனாகிய மஹாவிஷ்ணுவைப்போலக் கலியுகம் என்ற ராக்ஷஸனுடைய வயிற்றிலே அமிழ்ந்துகொண்டிருக்கிற மக்களினுடைய பாவங்களை எல்லாம் போக்கி அவர்களை உய்விக்கத் தோன்றினான்.

யேனேமே நயவிக்ரமாத்த கமலா ஸம்பத்தி
[தர்ப்போத்ததா
ப்ருபாங்க க்ஷணமாத்ர தூததீஷண நம்ரீக்ருதா:
[பார்த்திவா:
ஜாதோஸௌ புருஷோத்தமோ ரணஜய: த்ராதும்
[ஜநாநுமஜ்யதா:
பாபாத்தேஹே கலிகாலபீம மகரக்ரஸ்தாநு ஸ:
ஜீயாதுசிரம்

இராஜ: ஆஸ்தான கவிஞரே! நம்முடைய பெருமையை மட்டும் கூறிப் பயன் என்ன? சிவபெருமான் நாம் கட்டிய அந்தக் கோயிலில் வந்து தங்கவேண்டும் என்று அவனைப் பிரார்த்திக்க வேண்டாவா?

ஆஸ்-கவி: இதோ பாடிவிடுகிறேன். பாம்புகளை ஆபரணமாகக்கொண்ட சங்கரன்—அரசர்களும், தெய்வங்களும், கணங்களும் போற்றுகின்ற அந்தச்

சங்கரன் இராஜசிம்மேஸ்வரம் என்ற இந்தக் கோயிலில் நீண்டகாலம் உறைவானாக.

ஸ்ரீராஜஸிம்ஹ பல்லவேஸ்வரே
நாகேந்த்ரபோக பீமபூஷண :
தேவாஸுரேந்த்ர ப்ருந்தவந்தித
ஸ்தாநேஸ்திதோஸ்து சங்கரஸ்சிரம்

* * *

ரிஷபக்கொடியை உடையவனாகிய சிவபெருமான், மேகமண்டலத்தைத் தொட்டுக்கொண்டிருப்பதும் கயிலாயத்தின் அழகை வென்றுவிட்டதும் ஆகிய இந்த இராஜசிம்மேஸ்வரத்தில், அரசர்களுக்கெல்லாம் சிம்மம் போன்றவனும் பகைவர்களுடைய யானைப்படையை வென்றவனுமான இந்த இராஜசிம்மன் கட்டிய திருக்கோயிலில் உறைவானாக!

அஸ்மின் உத்வ்ருத்த ஸத்ருத்விரத கனகடா
[ராஜஸிம்ஹேன ராக்ஞா
ராக்ஞாம் ஆக்ஞாவிதேயி க்ருதசகல திசாநிர்மிதே
[தர்மிபாஜா
ஸைலே கைலாஸ லீலாம் அபஹரதிக்ருஹே
[ராஜஸிம்ஹேஸ் வராக்யாம்
பிப்ரதி அப்ரம் லிஹாக்ரே விரசயது ஸதா ஸந்நிதானம்
[வ்ருஷாங்க :

* * *

யுத்தத்தில் வெற்றி பெறுபவனும், நாட்டிற்கு நன்மையைச் செய்பவனும், ஒப்பற்ற வில்லாளனும், சிறந்த வெற்றி வீரனும், சிவலிங்கத்தைத் தலையில் அணிந்தவனும் ஆகிய இராஜசிம்மன் இப்பூமியை நீண்டகாலம் காப்பாற்றுவானாக.

ராஜஸிம்மோ ரணஜய :

ஸ்ரீபர : சித்ர கார்முக :

ஏகவீர : சிரம்பாது

சிவசூடாமணி : மஹீம்

மகேந்திரன் : அப்பா! சாளுக்கியர்கள் மறுபடியும் பல்லவ நாட்டின்மீது, போர்தொடுக்கப் பிரயத்தனம் செய்வதாகத் தெரிகிறது. இந்தப் போருக்குச் சக்கரவர்த்தியாகிய தாங்கள் செல்வது அவ்வளவு பொருத்தமாக எனக்குப் படவில்லை. ஆகவே, நானே சென்று பகைவர்களை முறியடித்து வருகின்றேன்.

இராஜ : மகேந்திரா! நம்முடைய மூதாதையருள் மிகப் பிரசித்திபெற்றவராகிய மகேந்திரவர்மரின் பெயரை நீ பெற்றுள்ளாய். ஆகவே, நீயே சாளுக்கியர்களுடன் போர்புரியத் தகுதிவாய்ந்தவன். உன் விருப்பம் போலவே செய்யலாம்.

மகேந் : தந்தையே! சளுக்கர்களுடன் நான் செய்யப் போகும் இந்தப் போர் எங்ஙனம் முடியுமோ என்று சொல்வதற்கில்லை. ஆகவே, நான் திரும்பி வராவிட்டால் என் பெயரும் நிலைத்திருக்கும்படியான செயல் ஒன்றைச் செய்ய விரும்புகின்றேன்.

இராஜ : சுத்த வீரனான நீ இப்படிப் பேசுவது ஏன் என்றே தெரியவில்லை. எவ்வாறாயினும், உன் விருப்பம் என்ன என்பதைத் தெரிவிக்கலாமே.

மகேந் : உலகம் உள்ளளவும் புகழ்பெற்று விளங்கக் கூடியதும், ராஜசிம்மேஸ்வரம் என்ற பெயரைப் பெற்றதுமான கைலாசநாதர் கோயிலைத் தாங்கள் கட்டினீர்கள். அப் பெருங்கோயிலின் வாசலில் நானும் ஒரு கோயிலைக் கட்ட விரும்புகிறேன். தலைமைச் சிற்பி லலிதாலயருக்கு உத்தரவு கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

இராஜ : என்ன லலிதாலயரே! இளவரசர் சொல்வதைப் போல் செய்வதற்கு ஏதேனும் தடையுண்டா?

லலி : தடை ஒன்றுமில்லை. தூரத்திலிருந்து பார்ப்பதற்கு ஒரு கோபுரம்போலக் காட்சி அளிக்கக் கூடிய முறையில் இளவரசர் பெயரால் மகேந்திர வர்மேசுரம் என்ற கோயிலைக் கட்டிவிடலாம்.

* * *

அறிவிப்பாளர் : இளவரசன் மகேந்திரவர்மன் பெயரால் எழுப்பப்பெற்ற இக் கற்கோயில் கயிலாசநாதர் கோயிலின் வாயிலில் கம்பீரமாக நிற்கின்றது. இக் கோயிலைக் கட்டிய மகேந்திரவர்மன், தந்தையாகிய இராஜசிம்மன் காலத்திலேயே போருக்குச் சென்று வீர ஸ்வர்க்கம் எய்தினன் என்று அறிகின்றோம். இத் துயரச்செய்தி நந்திவர்மப் பல்லவ மல்லன் காஞ்சியில் எழுப்பிய வைகுந்தப் பெருமாள் கோயிலிலிருந்து அறியப்படுகிறது. நந்திவர்மன், பரமேஸ்வர விண்ணகரம் என்ற பெயருடன் எழுப்பிய கோயிலின் உட்புறச் சுவர்களில் பல்லவர் வரலாறு முழுவதையும் சிற்பங்களாகச்

செதுக்கியுள்ளான். அவற்றில் நந்திவர்மன் வரலாற்றைத் தெரிவிக்கும் சிற்பத்திற்குமுன்னர், அழகிய ஓர் அரசனும் அரசியும் துயரமே வடிவாக அமர்ந்திருக்கின்றனர். இறந்துபட்ட ஒருவனைத் தொட்டிலில் கிடத்தி இருவர் சுமந்து வருகின்றனர். எனவே, இது ராஜசிம்மன் மகனாகிய மூன்றும் மகேந்திரவர்மன் இறந்ததையே குறிக்கும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இறப்பதற்குமுன் மகேந்திரவர்மன் தன்னுடைய பெயரை நிலைக்கச் செய்துவிட்டான்.

* * *

குரல் 1: மகேந்திரவர்மன் கட்டிய மகேந்திரவர்மேஸ்வரத்தில் காணப்படும் கல்வெட்டுகள் அவன் தந்தையினிடம் கொண்டிருந்த பெருமதிப்பை வெளியிடுகின்றன.

கு 2: ராஜசிம்மேஸ்வரத்தின் திருச்சுற்றிலுள்ள சிறிய கோயில்கள் அனைத்தும் மூன்றுவகையான எழுத்துக்களில் கல்வெட்டுகள் பெற்றுள்ளன.

கு 3: இச் சிறு கோயில்கள் அனைத்திலும் ராஜசிம்மனுடைய விருதுப் பெயர்களான 'ஸ்ரீராஜசிம்ஹ' என்பதில் தொடங்கி ஸ்ரீ ஈஸ்வரபக்தஹ என்பது வரை 160-க்கும் மேலான பெயர்களைத் தாங்கியுள்ளன.

கு 4: ராஜசிம்மேஸ்வரத்தின் உட்புறத்திலும் 40-க்கும் மேற்பட்ட விருதுப் பெயர்கள் எழுதப் பெற்றுள்ளன.

கு 1: இப் பெயர்களுள் எல்லாம் 'அத்யந்தகாமன்' என்ற பெயர் மிகுதியும் வழங்கப்படுகிறது.

கு 2: பல்லவர் காலத்தில் கச்சிப்பதி திருக்கோயில் கள் நிறைந்த ஊராய் விளங்கியமை கண்கூடு.

கு 3: கயிலாசநாதர் கோயில்.

கு 4: மகேந்திரவர்மேஸ்வரம்.

கு 1: திருவாலீஸ்வரர் கோயில்.

கு 2: இறவாத்தானம் கோயில்.

கு 3: பிறவாத்தானம் கோயில்.

கு 4: முக்தேஸ்வரர் கோயில்.

கு 1: மதங்கேஸ்வரர் கோயில்.

கு 2: ஐராவதேஸ்வரர் கோயில்.

கு 3: திரிபுராந்தகேசுவரர் கோயில்.

கு 4: பரமேச்சுர விண்ணகரம்.

கு 1: இத்துணைக் கோயில்களும் பல்லவர்கள் தம் தலைநகருக்கு அளித்த செல்வங்களாகும்.

[காலப்போக்கைக் குறிக்கும் நீண்ட இசை]

அறிவிப்பாளர்: மகேந்திரவர்மன் சகோதரனாகிய பரமேஸ்வரனுடன் சிம்மவிஷ்ணுவின் மரபு முடிந்து விட, இவனை அடுத்து இரணியவர்மன் மகனாகிய இரண்டாம் நந்திவர்மன் பன்னிரண்டு வயதில் பல்லவமல்லன் என்ற சிறப்புப் பெயருடன் கி.பி.

731 முதல் 796 வரை ஆட்சி செய்கின்ருன். இவனுடைய காலத்தில் சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சியின்மேல் படையெடுக்கிருன்.

* * *

விக்கிர : இதோ! பல்லவன் தலைநகராகிய காஞ்சிபுரத்திற்கே வந்துவிட்டோம். எங்கே அந்தப் பல்லவர்கள்? மாமல்லன் என்ற பெயரை உடைய நரசிம்மவர்மன் காலத்தில் எங்கள் தலைநகரத்தின் மேல்படையெடுத்துவந்தார்களே, வீராதிவீரனும் ஹர்ஷ சக்ரவர்த்தியை வென்று புறங்கண்டவனுமான எங்கள் பாட்டன் இரண்டாவது புலிகேசியையுமல்லவா தோற்கடித்தார்கள். வாதாபியையே வெற்றி கொண்டுவிட்டோம் என்று பறையடித்துக்கொண்ட அந்தப் பல்லவர்கள் எங்கே இப்போது? அமைச்சரே! பல்லவன் எங்கே ஓடி ஒளிந்துகொண்டான் என்ற செய்தி ஏதாகிலும் கிடைத்ததா? காஞ்சி நகரையே சுட்டுப் பொசுக்கிச் சூறையாடச் சொல்லுங்கள்.

அமைச்சர் : விக்கிரமாதித்ய வேந்தே! இளையவனை பல்லவன் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டான். குபேரனுடைய நகரம்போன்ற இக் காஞ்சிபுரத்தைச் சளுக்க வீரர்கள் முற்றிலும் சூறையாடிவிட்டனர். ஆனல், எல்லையற்ற செல்வத்தை உடையதாக, அழகின் உறைவிடமாக நிற்கும் கயிலாசநாதர் கோயிலை......

விக்கிர : மறந்தேவிட்டேன். அமைச்சரே! சிற்பக் கலையின் மணிமகுடமான அக் கோயிலை இப்

பொழுதே சென்று பார்க்கவேண்டும். (தாமதம்) அமைச்சரே! நம் சளுக்கிய நாடு முழுவதும் தேடினாலும் இத்தகைய ஓர் அழகான கலைக்கோயிலைக் காணமுடியாது. கலைகளுக்கெல்லாம் உறைவிடமான இக் கயிலாசநாதர் கோயிலையும் அதனுடைய செல்வத்தையும் நானென்றும் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. கயிலைமலைபோன்ற இக்கோயிலையும் மலைபோன்ற இச்செல்வத்தையும் இப் பெருமானுக்கே விட்டுவிடுகின்றேன். என் ஆணையைக் கூறும் இக் கவிதையையும் இந்த ராஜசிம்மேஸ்வரத்தில் நம்முடைய கன்னட மொழியிலேயே பொறிக்குமாறு ஏற்பாடு செய்கின்றேன்.

[காலப் போக்கைக் குறிக்கும் நீண்ட இசை]

* * *

குரல் 1: பல்லவர் காலத்தில் தோன்றிப் பெருவளர்ச்சி அடைந்தது கைலாசநாதர் கோயில். சாளுக்கியனாகிய விக்கிரமாதித்தன்கூட பகைவனுடைய நாட்டிலே பகைவனால் கட்டப்பட்ட கோயில் என்பதை மறந்து எல்லையற்ற பெருஞ் செல்வத்தை இக்கோயிலுக்கே விட்டுவிட்டுச் சென்றான். இந் நிலையில் பல்லவர் ஆட்சி மறைந்து இடைக்காலச் சோழர்களுடைய ஆட்சி மேலோங்குகிறது. சரித்திரத்தின் போக்கில் மாறுதல்கள் தோன்றத் தொடங்கிவிட்டன.

கு 2: இக் கோயிலைச் சுற்றிச் சீரும் சிறப்புடனும் விளங்கிய ஊர் மெள்ளமெள்ள கிழக்கே வளரத்

தொடங்கியது. இக்கோயிலை அடுத்துக் காணப் படும் 'கச்சி அநேகதங்காவதம்' என்ற சுந்தர மூர்த்திகளின் பாடல்பெற்ற திருக்கோயில், பாடல்பெற்ற பெருமையால் சோழர் காலத்தில் தலைதூக்கத் தொடங்கியது. என்றாலும் சோழர் கள் கயிலாசநாதர் கோயிலை மறக்கவில்லை என்ப தற்கு இக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.

[கால மணிச் சப்தம்]

கு 3: இதோ முதலாம் பராந்தகசோழன் கல்வெட்டு ஒன்று கயிலாசநாதர் கோயில் முன்மண்டபத்தில் இருக்கிறதே!

ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட
கொப்பரகேசரி பன்மர்க்கு
யாண்டு பதினைஞ்சாவது கச்சிப்
பெட்டுப் பெரிய திருக்கற்றளி
மகாதேவர்க்கு
சண்ட பராக்கிரம மன்றாடி எழுத்து
திருக்கற்றளி தெவர்க்கு முந்நூறு
நுந்தா விளக்கு......

கு 2: சரி! கல்வெட்டு என்ன கூறுகிறது?

கு 3: இந்தக் கல்வெட்டினால் இக்கோயில் இருக்கும் பகுதிக்குக் கச்சிப்பேடு என்று பெயர் உண்டாகி விட்டது என்றும் கயிலாசநாதர் கோயிலுக்குத் திருக்கற்றளி என்று பெயர் உண்டாகிவிட்டது என்றும் தெரிகின்றது.

கு 3: இன்னும் ஏதாவது கல்வெட்டுகள் இருக்கின்றனவா?

கு 4: கயிலாசநாதர் கோயில் மண்டபம் ஒரு பெரிய ஆவணக்களரி அல்லவா? இதோ முன்மண்டபத்தின் அடிப்பகுதியில் கோப்பரகேசரிவர்மரின் நாலாவது யாண்டுக் கல்வெட்டு என்று இருக்கின்றது. ஆனால், எந்தச் சோழ மன்னன் இவன் என்று அறியக்கூடவில்லை.

கு 1: இந்தக் கல்வெட்டால் ஏதாவது புதுமையை அறியமுடிகின்றதா?

கு 2: கல்லெடுப்பூரில் உள்ள மக்கள் செலுத்தவேண்டிய கடன்பற்றி இக் கல்வெட்டுப் பேசுகின்றது.

கு 3: இந்த ஊரைப்பற்றி இதுவரை கேள்விப்பட்டதில்லையே!

கு 4: கயிலாசநாதர் கோயிலைக் கட்டவேண்டிய கற்களை எடுத்த ஊராக இருக்கலாம். கல் எடுத்த ஊராகலின் கல் எடுப்பூர் என்று பெயர் பெற்றது.

கு 1: திருச்சுற்றில் உள்ள சிறு கோயில்களில் ஏதாவது கல்வெட்டுகள் உண்டா?

கு 2: இருக்க முடியாது. பலவற்றில் காரைபூசி ஓவியம் வரையப்பட்டிருக்கிறதே.

கு 3: இல்லை, காரைப்பூச்சும் வர்ண ஓவியமும் பிற்காலத்தில் செய்யப்பெற்றவை. 21ஆவது சிறு

கோயிலில் காரை உதிர்ந்துவிட்டிருக்கின்றது. அங்கே 'ஸ்ரீ சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர்க்கு' என்று ஒரு கல்வெட்டிருக்கிறது. அதிலிருந்து இச் சிறு கோயில்களிற்கூட அந்த நாளில் கல்வெட்டு இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

கு 4 : சுங்கந் தவிர்த்த சோழர் என்றால் முதற் குலோத்துங்கனல்லவா? அவனுடைய கல்வெட்டு இதில் இருந்தும் முற்றிலும் கிடைக்காமற் போனது வருத்தத்திற்குரியதே!

கு 1 : அஃது இருக்கட்டும். வெளி மண்டபத்தின் முதல் தூணில் ஒரு சோழர் கல்வெட்டுத் தமிழில் இருக்கின்றதே!

'ஸ்வஸ்தி ஸ்ரீதிரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு பதினாறுவது ஐப்பசி மாசத்துக் கச்சிப்பேட்டுத் திருக்கற்றளியான ராஜ சிம்ம பன்மீசுவரம் உடைய நாயனாருக்கு நாளொன்றுக்கு சந்திவிளக்கு' என்ற அளவில் கல்வெட்டு நின்று விடுகின்றது.

கு 4 : அப்படியானால் மூன்று சோழர்களுடைய கல் வெட்டுக்கள் இருக்கின்றன இக் கோயிலில்.

கு 1 : யார் யார் என்று வரிசைப்படுத்திக் கூற முடியுமா ?

கு 2 : அப்படியே! முதலாவது பராந்தகன்; அடுத் துள்ளது சுங்கந் தவிர்த்த முதலாம் குலோத்துங்

கன் ; மூன்றாவது, திரிபுவனச் சக்ரவர்த்தி என்ற மூன்றாம் ராஜராஜ சோழன் என்ற மூவருடைய கல்வெட்டுகளும் உள்ளன.

கு 3 : இதில் ஏதாவது சிறப்பு உண்டா?

கு 4 : இல்லாமல் என்ன? சோழர் காலத்தில் கயிலாசநாதர் கோயிலின் சிறப்பு ஓரளவு குறையத் தொடங்கிவிட்டது.

கு 1 : எப்படி?

கு 2 : இப்பொழுது காஞ்சீபுரம், காமாட்சி கோட்டத்தைச் சுற்றி வளர்ந்துவிட்டது. காமாட்சி கோயில் ஆதி பல்லவர்கள் காலத்தில் பிரசித்தி அடையவில்லை. ஆனால், ஆதிசங்கரர் காலத்தில் காமகோட்டம் பிரசித்தம் அடையத் தொடங்கிவிட்டது. அதனால், ஊரும் அக் கோயிலைச் சுற்றியே வளரத் தொடங்கிவிட்டது.

கு 3 : இக்காரணத்தால்மட்டும் இந் நிலை ஏற்படுமா?

கு 4 : மேலும் ஒரு காரணமும் உண்டு.

கு 1 : என்ன காரணம்?

கு 2 : சுந்தரமூர்த்தி நாயனாரும் காமகோட்டத்தைக் குறித்துப் பாடியுள்ளார். ஆதிசங்கரர், சுந்தரமூர்த்தி நாயனார் இருவருமே காமாட்சி கோயிலுக்குச் சிறப்பளித்துவிட்டனர்.

கு 3 : அதனால் என்ன?

கு 4 : சுந்தரமூர்த்தி நாயனர் இக் கோயிலை அடுத்துள்ள அநேகதங்காவதம் என்ற கோயிலைப் பாடியுள்ளார். ஓணகாந்தன்தளி என்ற சமீபத்தில் உள்ள கோயிலைப் பாடுகையில் காமகோட்டத்தைத் குறிப்பிடுகிறார். இதனாலும் கயிலாசநாதர் கோயில் ஓரளவு சிறப்பிழக்கத் தொடங்கியது.

வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்மது
[விம்முகொன்றைத்
தாரிருந்தட மார்புநீங்காத் தையாள்உல குய்யவைத்த
காரிரும்பொழில் கச்சிமூதூர்க் காமக்கோட்டம்உண்
[டாகநீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே

கு 1 : இதன் பிறகு நீண்டகாலம் கயிலாசநாதர் கோயிலின் நிலைபற்றி ஒன்றும் அறியக்கூடவில்லை. மறுபடியும் விஜயநகர அரசர் காலத்தில்தான் இக் கோயில்பற்றிய செய்திகள் கேட்கப்படுகின்றன.

[காலப்போக்கைக் குறிக்கும் இசை]

கு 1 : சக ஆண்டு 1286-ன்மேல் அதாவது கி.பி. 1365 விசுவாவசு ஆண்டில் கம்பண உடையார் என்பவர் ஒரு கல்வெட்டுத் தந்துள்ளார். அதன்படி ஒரு புதுமை இக் கோயில்பற்றி நடைபெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

‘ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வர அரிராய விபாடன், பாஷைக்குத் தப்புவராயர், கண்டன், பூர்வ சமுத்ராதிபதி ஸ்ரீ கம்பண உடையார் ப்ரித்வீராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகவருஷம்

ஆயிரத்து இருநூற்றி எண்பத்து ஆறின்மேல் செல்லாநின்ற விஸ்வாவசு வருஷத்து ஆடி மாதம் முதல், ஸ்ரீமன் கோப்பணங்கன் காஞ்சிபுரத்தில் இராஜசிம்மேஸ்வரமுடையாரான எடுதத்து ஆயிரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு நிருபம். எடுதத்து ஆயிரமுடைய நாயனார் தானத்தை முன்பே குலோத்துங்க சோழ தேவர் காலத்திலே இறங்கலிட்டு, நாயனார் திருநாமத்துக் காணியும் மாறி திருவிருப்பும் திருமடைவிளாக மும், அநேகதங்காவதமுடைய நாயனாருக்குக் கொடுத்த இதுவும் எடுதத்து ஆயிரமுடைய நாயனார் தானத்தை இறங்கல் இட்ட இதுவும் தர்மம் அல்லாதபடியாலே இன்னாயனார்

கு 2 : தானம் இறங்கல், மீண்டு ஆடி மாத முதல் பூசை திருப்பணி நடக்கும்படிக்குத் தென்கரை மணவிற் கோட்டத்து பன்மாநாட்டு முருங்கை யூர் அடங்கலும் சர்வமான்யம் இறைஇலியாக நாற்பாற்கு எல்லை தெரித்துக் கொடுத்தோம். இவை கோப்பணங்கன் எழுத்து.

இந்தக் கல்வெட்டு ஒரு புதிய செய்தியை அறிவிக்கின்றதே!

கு 3 : அது என்ன?

கு 4 : குலோத்துங்கன் என்ற அரசன் இந்தக் கயிலாசநாதர் கோயிலுக்கு உரிய சொத்துகளில் பெரும் பகுதியை சமீபத்தில் உள்ள அநேகதங் காவதமுடையார் கோயிலுக்கு மாற்றிவிட்டார் என்றல்லவா தெரிகின்றது.

8

கு 1 : அநேகதங்காவதம் பாடல்பெற்ற திருத்தலமாகலானும், அதற்குப் பூசை முட்டுப்படும்படியான அளவிற்கு வறுமை ஏற்பட்டிருக்கும் ஆகலானும் இவ்வாறு சொத்துகள் மாற்றப்பட்டிருக்கலாம்.

கு 2 : குலோத்துங்கன் என்றால் எந்தக் குலோத்துங்கன் என்று தெரிய முடியவில்லையே!

கு 3 : முதற் குலோத்துங்கன் சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழன் என்று புகழப்படுகிறான். மேலும், அவனுடைய கல்வெட்டு உட்சுற்று சிறு கோயில் சொத்தை மாற்றி இருக்க முடியாது.

கு 4 : இரண்டாம் குலோத்துங்கன் பெரிய புராணம் பாடிய சேக்கிழாரை அமைச்சராகப் பெற்றவன். அநபாயன் என்று சிறப்பிக்கப்பட்டவன் அவனாகலின், அவனும் இவ்வாறு மாற்றி இருக்க முடியாது.

கு 1 : அப்படியானால் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில்தான் இம் மாற்றம் செய்யப்பெற்றிருத்தல் வேண்டும்.

கு 2 : என்றாலும் உறுதியாக இன்னார்தான் என்று கூறவியலாது.

கு 3 : கொப்பணர் என்பவர்கள் யார்?

கு 4 : அவர்கள் விஜயநகரத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசரின் பிரதிநிதிகளாக இங்கிருந்து ஆட்சி செலுத்தினவர்கள்.

கு 1 : அவர்களா சோழர் காலத்தில் நடைபெற்ற இத் தவற்றைப் போக்கி அதற்கு ஈடுசெய்துள்ளனர்?

கு 2 : ஆம்! அதுமட்டுமன்று. அவர்கள் கல்வெட்டு மூலம் கயிலாசநாதர் கோயிலில் உள்ள இறைவனுக்கு எடுதத்து ஆயிரமுடைய நாயனுர் என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிகின்றது.

கு 3 : இப் பெயரே ஓரளவு புதுமையாக இருக்கின்றதே! இதன் பொருள் என்னவோ?

கு 4 : 'இஷிதம்' என்ற வடசொல்லுக்கு அம்பருத் தூணி என்பது பொருள்.

கு 1 : அப்படியாளுல் எடுதம் என்ற சொல் இஷிதம் என்ற சொல்லின் திரிபாக இருத்தல் வேண்டும். எடுதத்து ஆயிரம் உடைய நாயனுர் என்ருல் அம்பருத் தூணியில் நிறைந்த அம்புகளை உடையவர் என்ற பொருள் இருக்கவேண்டும்.

கு 2 : இக் கல்வெட்டின்படி பார்த்தால் இடைக் காலத்தில் கயிலாசநாதர் கோயிலுக்கு நேர்ந்த ஒரு நஷ்டத்தைக் கம்பண உடையார் ஆட்சிக் காலத்தில் ஈடு செய்துவிட்டதாகத் தெரிகின்றது.

கு 3 : ஆம்! இதேபோலக் கம்பண உடையாரின் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. மூன்ருவது கல்வெட்டு கி.பி. 1369-ல் தரப்பட்டுள்ளது.

இது வீர கம்பண உடையார் காலத்தே செய்யப்பட்டது என்று தெரிகிறது.

கு 4: இக் கல்வெட்டால் கயிலாசநாதர் கோயில் எந்தப் பிராந்தியத்தில் சேர்ந்திருந்தது என்பதும் தெளிவாகின்றது.

கு 1: ஸ்வஸ்திஶ்ரீ ஶ்ரீவீர கம்பண உடையார்க்குச் செல்லாநின்ற லேக வருஷத்து மகர ஞாயற்று அமர பக்ஷத்து சப்தமியும், செவ்வாய்க்கிழமையும் பெற்றதோர்நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற் கோட்டத்து நகரங் காஞ்சீபுரத்துடையார் திருக்கற்றளி மகாதேவரான எடுதத்து ஆயிரமுடைய நாயனுர் கோயிலில்......

கு 2: அப்படியானுல், சோழர்காலந்தொட்டு காஞ்சீபுரத்தை எயிற் கோட்டத்தில் சேர்த்திருக்கின்றுர்கள் என்று தெரிகின்றது.

கு 3: தொண்டை மண்டலத்தின் தலைநகரான காஞ்சியம்பதி எயிற் கோட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டதாக அறிவதே இக்கல்வெட்டின் பயனுகும்.

கு 4: இந்தப் பதினுன்காம் நூற்றுண்டிலும் கயிலாசநாதர் கோயில் சிறப்புடன் விளங்கியதுபோலும்.

முற்றிற்று

சேரமான் இரும்பொறை

நாடக பாத்திரங்கள்

சோழன் செங்கணான் — மந்திரி
புலவர் பொய்கையார் — சேவகன்-1
சேரமான் கணைக்கால் இரும்பொறை — சேவகன்-2

[இடம்: சோழன் அரசவை]

(செங்கணான், மந்திரி, புலவர் பொய்கையார், சேவகன் முதலியோர்)

மந்திரி: அரசே இந்தக் கடும்போரில் வெற்றி கண்டு வாகை சூடிவிட்டோம். இன்னும் தங்கள் பெயருக்கேற்றபடியே இருக்கிறீர்களே.

செங்கணான்: ஓஹோ! செங்கணான் என்னும் நம் பெயருக்கேற்ப கண்கள் சிவந்திருக்கின்றன என்று கூறுகிறீரோ அமைச்சரே, நல்லது. வாகை சூடியதாகச் சொன்னீரே, இதில் யாருக்கு யார்மேல் வெற்றி?

மந்: என்ன, சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் தோற்கடிப்பது என்றால், அஃது

எளிதான செயலா? போரில் வெற்றியை அன்றி, வேறு ஒன்றையும் அறியாத நம் சேனையும் சேனைத் தலைவர்களுமல்லவா திணறிவிட்டார்கள். அப்பப்பா! எத்தனை முறை வெற்றி இங்கும் அங்கும் ஊசலாடியது. இறுதியில்.........

செங்: இறுதியில் என்ன......... செயற்கரிய செயல் ஒன்றையும் நாம் சாதித்துவிடவில்லையே.

மங்: இல்லையா அரசே? சேரமான் இரும்பொறை நமது சிறைப் பாதுகாவலில் இருக்கிறுர் என்றால் அது செயற்கரிய செயலன்றி வேறு என்ன? யானை வேட்டுவன் குட்டியையும் சேர்த்துப் பிடித்ததுபோலச் சேரனைப் பிடித்த நாம், சேர அவைக் களப்புலவர் பொய்கையாரையும் அல்லவா சிறை செய்திருக்கிறோம்.

செங்: அமைச்சரே! நீர் சேரமான், பொய்கையார் மன நிலையை உணராது பேசுகிறீர். போரில் கொண்ட வெற்றி உண்மையான வெற்றியாகுமா? அதைக் கண்டு மகிழ்வது எவ்வளவு தவறு.

மங்: அரசே! அவ்வாருனால்...

செங்: போர் என்பது சூதாட்டந்தானே. இச்சூதாட்டத்தில் கண்ட வெற்றிக்கு நமது வன்மையை உயர்த்திப் பேசுதல் தகுமா? அவ்வளவு எளிதாகப் புலவரைக் கூறிவிட்டீரே, புலவரை எவ்வளவு தூரம் நீர் சிறை செய்திருக்கிறீர் என்பதை இதோ கண்கூடாகக் காட்டுகிறேன் பாரும். யாரங்கே...

சேவகன்: உத்தரவு மகாராஜா.

செங்: சிறைக்கூடம் சென்று போரில் சிறை செய்யப்பட்ட புலவர் பொய்கையாரை அழைத்து வா. உம், தகுந்த மரியாதையுடன் அழைத்துவர வேண்டும். என்ன, தெரிந்ததா?

சேவ: உத்தரவு மகாராஜா.

செங்: அமைச்சரே நமக்கு வெற்றி கிட்டிவிட்டது என்பதற்காகப் பகையை இழித்துப் பேசுதல் தகாது. அதிலும், சேரமான் இரும்பொறையைப் போன்ற வீர புருஷனையும், பொய்கையாரைப் போன்ற உத்தமப் புலவரையும் இடித்துக் கூறுதல் அறவே கூடாது.

[புலவர் பொய்கையார் அரசவைக்குள் நுழைதல்]

செங்: வருக வருக. புலவர் மணியே வருக. தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் ஒழுங்காகக் கிடைக்கின்றனவா?

பொய்கையார்: செங்கண் சோழா, என்னென நினைத்துக் கொண்டாய் எம்மை. உனது சிறைக்கூடத்தில் நாம் இருப்பதால் இவ்வாறு கூறினையா?

செங்: பொய்கையாரே, யான் கேட்டதில் தவறு ஏதாவது உண்டா? வராத விருந்தினர்கள் வந்தால் அவர்களை நன்கு உபசரிக்கவேண்டாவா?

பொய்கை: ஆம், கேட்கமாட்டாயா? வராத விருந்தினரைக் கண்டால் சோழன் அவர்களைச் சிறைக்

கூடத்தில் வைத்துதான் உபசரிப்பான் என்பதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டோம். நல்ல தாயிற்று. நாளைச் சோழர்கள் சேர நாட்டிற்கு வந்தால் எப்படி உபசரிப்பது என்று தெரிய வேண்டாவா?

மங் : அரசே, பார்த்தீர்களா புலவர் மிடுக்கை. தமது நிலையை மறந்து வேடிக்கை பேசப் புறப்பட்டு விட்டார். புலவர் சிகாமணியே, சோழர்களை எப் பொழுது உபசரிக்க உத்தேசம்? சோழர் சிறைக் கூடத்திலிருந்து விடுதலை அடைந்த பிறகா. இல்லை. அதற்கு முன்னமேயா?

செங் : அமைச்சரே, பொறும். அவர் நமது கைதி அல்லர். மேலும், அவர் நம்மிடம் எது வேண்டு மானாலும் பேசலாம். புலவர் பெரும, தங்கள் மனத்தில் உள்ளவற்றைக் கூறுங்கள்.

பொய்கை: அரசே, இந்தமட்டிலுமாவது நீ அறிந்திருப் பதுபற்றி யாம் மகிழ்ச்சி அடைகிறோம். சோழனே, நீ ஆள்வது அழியும் மண்ணுலகம், யாம் ஆள் வதோ அழியாச் சொல்லுலகம். அழியும் உலகை உடல்வலியால் ஆட்சிசெய்யும் உன்னை, அழியா உலகை அறிவுத்திறனால் ஆளும் யாம் ஏன் மதிக்க வேண்டும்? உன் மந்திரி எம்மைச் சிறையிட்டு விட்டதாக இறுமாப்படைவது விந்தையிலும் விந்தையாக அல்லவோ இருக்கிறது.

மங் : அரசே ஒரு விண்ணப்பம்.

செங் : என்ன ?

மந் : நம் சிறைக்கூடத்திலிருந்துதானே காவலாளன் இவரை அழைத்துவந்தான்.

செங் : அதனுலென்ன ?

மந் : இன்றும் அங்குதானே இவரைக் கொண்டு போகப் போகிருன். அப்படியிருக்க, யார் என்னைச் சிறையிட முடியும் என்று இந்தக் கவிஞர் கூறுவது கவிமரபோ ? அல்லது தமக்கு இட்ட பெயருக்குப் பொருத்தமாகப் பேசுகிருரோ ஒருவேளை.

செங் : இதற்கும் அவருடைய பெயருக்கும் சம்பந்தம் என்ன ?

மந் : பொய்கையார் என்ற இவர் பெயரைத்தான் சொல்லுகிறேன். பொய்யில் கசப்புத் தட்டாதவர் என்று பொருள் கூறுவது எவ்வளவு தகுதி.

பொய்கை : அரசே, உன் மந்திரியின் அறியாமைக்கு எதனை நான் உவமை கூறுவது. எம்மையும் எம் உயிர்த்தோழன் சேரமான் இரும்பொறையையும் சிறையிட்டுவிட்டதாக இறுமாப்படைந்திருக்கும் உங்கள் கூற்றை என்னவென்று சொல்வது? நான் என்பது கேவலம் உடம்பா? நாயும் நரியும் உரிமை கொண்டாடும் உடம்பைச் சிறையில் இட்டு எங்களை வென்றுவிட்டதாகக் கொக்கரிக்கிறீர்கள். நன்கு ஆராய்ந்து பார். உண்மை விளங்கும். யான் சென்று வருகிறேன்.

[புலவர் பொய்கையார் சிறைக்குத் திரும்பிச் செல்கிருர்]

செங் : அமைச்சரே! இப்போது தெரிந்துகொண்டீரா தமிழ்ப் புலவன் மான உணர்ச்சியை. இத்தகைய ஞானிகள் எங்கிருந்தால் என்ன. அது சிறைக்கூடமானாலும் அறக்கூடமாகவன்றே மாறும்.

மந் : அரசே, என்னை மன்னிக்கவேண்டும். புலவர் கூறியதன் பொருள் எனக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது.

செங் : ஔவையார் பாடிய ஒரு பாடல் என் நினைவுக்கு வருகிறது.

மந் : எந்தப் பாடலைச் சொல்லுகிறீர்கள்? அரசே.

செங் :
நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும், பள்ளமானாலும் மேட்டு நிலமானாலும் எங்கே நல்லவர்களிருக்கிறார்களோ அந்த இடமே நல்ல நாடு ஆகும். ஔவை மூதாட்டியின் பாடல் சிறப்பை என்னென்று சொல்வது.

மந் : உண்மை அரசே. இவ்வௌவையும் கண்டபிறகு அச் சேரமான் இரும்பொறையைக் கண்டு அவர் மனநிலையையும் காணவேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது.

செங் : அமைச்சரே. நாமே சிறைக்கூடம் சென்று சேரமானின் மனநிலையை அறிந்துவருவோம் வாரும்.

* * *

[இடம் : சோழன் சிறைக்கூடம்]

(செங்கணன், சேரமான், மந்திரி, சேவகன் முதலியோர்)

செங் : சிறைக்காவல! உள்ளே சேரமான் என்ன செய்கிறார்?

காவ : அரசே! தங்கள் உத்தரவுப்படியே நாங்கள் மிக்க மரியாதையுடன்தான் இருக்கிறோம். ஆனால்...

செங் : என்ன ஆனால் என்று இழுக்கிறாயே ?

சேவ : மகாராஜா! அவர்மட்டும் புதிதாகக் கூண்டில் அடைபட்ட புலியைப்போலச் சிறைக்கூடத்தைச் சுற்றிச்சுற்றி வருகிறார். எவரிடமும் பேசாமல், ஆகாரம் எதுவும் இன்றித் தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கிறார்.

செங் : சரி, காவல! நீ அப்பாற் செல்.

[சிறையில் சேரமான் மான உணர்ச்சி வயப்பட்டவனாய் தன்னுடன் புலவர் பொய்கையார் உரையாடுகின்ற பாவனையில் பேசிக்கொண்டிருக்கிறான்.]

சேரமான் இரும்பொறை : ஆ! புலவர் மணி பொய்கையாரா ? இதோ வரவேண்டும் வரவேண்டும். ஐயனே! நம் அரண்மனை ஏதோ புதுமாதிரி மாறி விட்டதாகத் தெரிகிறதே ?

பொய்கை : சேரமானே! கனவு காண்கிருயா ? நன்கு விழித்துப் பார் ; இஃது எவ்விடம் என்று தெரியும்.

சேர : ஓஹோ, இது சோழன் செங்கணுன் சிறைக் கூடமல்லவா ? நான் எப்படி இங்கு வந்தேன் ? தாங்களும் எப்படி ...?

பொய்கை: எப்படி வந்தாயா? முந்தையநாள் போரில்...

சேர : சரி சரி. முந்தையநாள் போரில் தோற்றுவிட்டேன்; உயிரையும் விடவில்லை. எனக்கு ஏற்ற இடம் இச் சிறைக்கூடந்தான். நான் கோழை.

பொய்கை : இரும்பொறை என்ன உளறுகிருய்? யார் உன்னைக் கோழை என்று கூறினுர் ?

சேர : ஒருவர் கூறவேண்டுமா ஐயனே. பார்க்கப் போனுல், சோழன் செங்கணுன்தான் கூறினுன்.

பொய்கை : எப்பொழுது? எனக்குத் தெரியாதே ?

சேர : எப்பொழுதா ? என்னைச் சிறையில் அடைத்த அப்பொழுதே. கோழைக்கு ஏற்ற இடம் அரண்மனை அன்று, சிறைக்கூடம் என்பதனுல் தானே என்னை இங்கே அடைத்தான்.

பொய்கை : சேரமானே! இங்கே இருப்பதால் ஒருவனைக் கோழை என்று கூறிவிட முடியுமா ?

சேர : கூருமல் என்ன ? போரில் வெற்றி; இன்றேல் சாவு. இவ்வுண்மையை மறந்தவன் கோழை.

அவனுக்கு ஏற்ற இடம் சிறைதான். சீ! மானம் இழந்த இவ்வாழ்வு ஏன் இன்னும் இருக்கிறதோ தெரியவில்லை.

பொய்கை : கணைக்காலா! போராகிய சூதாட்டத்தில் வெற்றியுந் தோல்வியும் இயல்புதானே. இதற்கும் மானத்திற்கும் என்ன தொடர்பு?

சேர : சரிதான் ஐயனே, நல்ல அறிவு புகட்டினீர். உமக்கு மிகுந்த நன்றி. போரில் தோற்ற எனக்குத் தகுந்த இடம் சிறை என்று சோழன் காட்டினான். சோழன் சேவகன், மானமிழந்தவன் தண்ணீர் கேட்கக்கூட உரிமையிழந்தவன் என்பதை எடுத்துக்காட்டினான். ஆஹா! எவ்வளவு மறதி. முன்பு ஒருமுறை நமது புலவர் பெருந்தகை பொய்கையார், 'மானம் இழந்த பின் வாழாமை முன் இனிதே' என்று கூறியுள்ளார். இத் தண்ணீரைப் பருகி, மானத்தை இழந்து, உயிர் வாழ்வதைவிட, உயிர் விடுவது எவ்வளவோ சிறந்தது.

[திடீரென மயங்கிக் கீழே விழுகிறான்]

சேவ 2 : அடே தம்பி, ஓடு ஓடு; அரசரிடம் சென்று இவர் மயக்கமா விழுந்துவிட்டார்னு சொல்லு. ஓடு.

[இதையறிந்த செங்கணானும் மந்திரியும் ஓடி வருகின்றனர். செங்கணான் கீழே விழுந்துகிடக்கும் சேரமானைத் தூக்கித் தன் மார்பின்மீது சார்த்திக் கொள்கிறார்.]

செங் : சேரமானே, மன்னர் மன்னரே, எங்கே கண்ணை விழியுங்கள். என்னைப் பாருங்கள், நான் தான் சோழன் செங்கணான்.

மங் : அரசே! தண்ணீர் கேட்டீர்களே? இதோ, தண்ணீர், அருந்துங்கள். (கொஞ்சம் மயக்கம் தெளிகிறது) இதோ, தண்ணீர்.

சேர : யார்? சோழரா, நன்று நன்று. தண்ணீரா? வேண்டா. தமிழன் மரபு எப்படிப்பட்டது? குழந்தை இறந்தே பிறந்தாலும் தசைப் பிண்ட மாகவே பிறந்தாலும்கூடப் புதைப்பது இல்லையே. வீரச் சாவு அடையவேண்டும் என்ப தற்காக அதனை வாளால் வெட்டி அல்லவா புதைப்பார்கள். அந்த மரபில் தோன்றிய யான், ஆஹா! என்ன நிலை?

செங் : அரசே? வருந்தாதீர்கள். தாங்களும் அந்த மரபில் தோன்றியவர்தாமே? ஏன் கவலை அடை கிறீர்கள்?

சேர : நானா அம் மரபில் தோன்றியவன்? இல்லை இல்லை, பகைவர் கையில் சிக்கினேன்; நாய்போல் கட்டப்பட்டேன்; வெட்கமின்றிப் பசியைப் போக்கத் தண்ணீர் கேட்டேன். இனி உலகத்தில் என்போன்ற மானமில்லாத மக்களைப் பெருமல் இருப்பார்களாக.

செங் : சேரமானே! தாங்கள் என்ன பேசுகிறீர்கள்? யார் தங்களுக்குத் தண்ணீர் தர மறுத்தார்கள்?

சேர : சோழரே! அதுபற்றி ஒன்றும் இல்லை. ஆனால், என் மானம் எங்கே? ஆ, எங்கே புலவர் பொய்கையார் ?

‘ குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்(று) என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்(து) இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இறந்(து) உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் உலகத் தானே ’

சென்றுவருகிறேன். மானம்.... மானம்....

[சேரமானின் உயிர் பிரிதல்]

செங் : அமைச்சரே, இறந்துவிட்டார் சேரர்.

மங் : பெருந்தகை இறந்துவிட்டார். உயிரை விட்டார்; மானத்தைக் காத்தார்.

செங் : சோழனாகிய என்னை இறுதியில் வென்றே விட்டார். மானமுடையவர்கள் சிறையில் அடைபடக்கூடியவர்களா ? இல்லை ! இல்லை ! என் தவறு இது ! என் தவறு !! சேரமான் இரும்பொறை தோற்கவில்லை : வென்றுவிட்டார். யானே தோற்றேன் ! எனதே தோல்வி !!

முற்றிற்று

செழியன் துறவு

நாடக பாத்திரங்கள்

நெடுஞ்செழியன்	சோழ மன்னன்
சேரமான் இரும்பொறை	சோழ தூதுவன்
வீர பாண்டியன்	நல்லினி
வில்லவன்கோதை	நற்சோணை
மாங்குடி மருதனார்	ஒற்றன்—1
குறுங்கோழியூர் கிழார்	ஒற்றன்—2
கல்லாடர்	காவலன்

அங்கம்—I காட்சி—I

[சேரர் தலைநகரான வஞ்சிமாநகரில் சேரன் அரண்மனை. சேரமான் இரும்பொறை அத்தாணி மண்டபத்தில் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்துள்ளான். யானைத் தந்தம் இரண்டு பின்புறம் இருக்கின்றன. அமைச்சன் வில்லவன்கோதை அரசனுக்கு வலப்புறம் அமர்ந்துள்ளான். ஏனைய அமைச்சரும் வீரரும் நிற்கின்றனர்.

சேரமான் இரும்பொறை நல்ல உயரமும் கட்டுடலும் உடையவன்; வயது நாற்பதுக்குமேல். அமைச்

சன் வில்லவன்கோதை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவன்; கட்டுடல் வாய்ந்தவன். அவனது அமைதியான முகம் பொலிவுடன் விளங்குகிறது. அவன் எதனையும் ஆய்ந்து செய்பவன் என்பதை அவனது நெற்றிச் சுருக்கம் காட்டுகிறது. கவிஞர் குறுங்கோழியூர் கிழார் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்; அகன்ற நெற்றியும் கவிஞருக்குரிய குறுகுறுத்த பார்வையுமுடையவர். இளவரசி நல்லினி பதினெட்டு வயதுடையவள்; சிவந்த மேனியள்; இளையவளாயினும் கற்றறிவுடையவள்.]

இரும்பொறை : அமைச்சரே, கேட்டீரா ஒற்றர் கொண்டு வந்த செய்தியை? நேற்றுப் பிறந்த சிறுவன்! பெயர்தான் நெடுஞ்செழியனே தவிர, ஆண்டாலும் அனுபவத்தாலும் குறுஞ்செழியன்தானே இவன்! என்ன ஆணவம்! என்ன செருக்கு! எத்தனைப் புலவர் இவன் புகழைப் பாடுவது. அப்பப்பா! இன்னும் சிறிது காலம் நாம் சும்மா இருந்தால் ......! (பல்லை நறநறவென்று கடிக்கிறான்.)

வி. கோதை : சேரர் தலைவரே, பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு பெரிய அரசின் தலைவனல்லவா? பாம்பு சிறியது என்று அதனை மிதிக்கலாமா? உருண்டுசெல்லும் பெரிய தேரை விழாமல் காப்பது உருவத்தால் சிறிய கடையாணி அல்லவா? உருவத்தையும் வயதையும்கொண்டா ஒரு மன்னனை மதிப்பிடுவது? உருள்பெருந் தேர்க்கு அச்சாணி அன்னாரை, உருவு கண்டு இகழலாமா?

இ. பொ: என்ன வில்லவன்கோதை! நீர் அமைச்சர் என்பதால் இப்படிப் பேசுகிறீரா, அல்லது உண்மையாகவே பாண்டியன் புகழைக் கேட்டு நடுக்கமா? பாம்பாவது, கடையாணியாவது! பகையை இளமையிலேயே அழிப்பதை விட்டு விட்டு, அது பெரியது என்று அஞ்சிக்கொண்டிருப்பதா அழகு? 'இளைதாக முள்மரம் கொல்க'[1] என்று அறநூல் அறைவதை அமைச்சராகிய உமக்கு நான் நினைவூட்டவேண்டுமா?

வி. கோ: அரசே, பகையை இளமையிலேயே அழிக்கவேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதே அறநூல் பகைவர்களை அழிக்கக் காலம், இடம் முதலியன பார்க்கவேண்டும்[2] என்றும் கூறுகிறதே? முள்மரத்தை வெட்டப் போய்க் கோடரியையே உடைத்துவிடுவது நகைப்புக்கு இடமாகும். மேலும், நெடுஞ்செழியன் நமக்கென்ன தீமை செய்துவிட்டான்? என்ன காரணம் கூறி அவன்மேல் போருக்கு எழுவது?

இ. பொ: என்ன தீமை செய்துவிட்டான் என்று கேட்கிறீர்? நம் அவைக்களப் புலவர் குறுங்கோழியூர் கிழாரிடம் அவன் என்ன கூறினன் என்பது தெரியுமா? தெரிந்தால், இப்படிப் பேசமாட்டீர்! ஆணவத்தின் எல்லையில் நின்று

---

[1] 'இளைதாக முள்மரம் கொல்க ; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.' —குறள், 879.

[2] குறள், அதிகாரங்கள், 49, 50.

அந்தச் சிறுவன் பேசிய பேச்சுக்களை இப்பொழுது நினைத்தாலும் குருதி கொதிக்கிறது!

வி கோ: நீங்கள் கோபப்படுவதற்கு ஏதுவாகப் புலவர் எதுவும் கூறியதாக எனக்கு நினைவில்லை. என்னதான் கூறினர்? சற்று விளக்கமாகவே கூறுங்கள்.

இ. பொ: நம் புலவர் குறுங்கோழியூர் கிழார் மதுரை சென்றபொழுது பாண்டியனையும் பார்த்து விட்டு வரலாம் என்ற கருத்துடன் நெடுஞ்செழியன் அவைக்களம் சென்ருராம். மாங்குடி மருதனுர், குடபுலவியனுர், கல்லாடனுர் முதலிய புலவர்கள் புடைசூழ வீற்றிருந்தானும் அந்தச் சிறுவன்!

வி. கோ: அரசே, தமிழ் வளர்த்த மதுரையிலே புலவர்கட்கு என்ன குறை? புலவர்கள் சூழ்ந்து இருப்பது ஒரு தவரு என்ன?

இ. பொ: அதற்குக் கூறவில்லை நாம்! இந்தப் புலவர்கள் சூழ்ந்தவுடன் செருக்கு மிகுந்துவிட்டது அவனுக்கு! யாரோ ஒரு புலவன் சோழ நாட்டிலிருந்து வந்தானும். 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய தமிழ்நாடு' என்னும் பொருள் தோன்றும்படி ஒரு பாடல் பாடினனும். உடனே செழியன் ஏளனமாகச் சிரித்தானும். என்ன சொல்கிறீர் இப்பொழுது?

வி. கோ: அரசே, இதை நம்ப முடியவில்லையே! செழியன் சிறந்த தமிழ்ப் புலவன். அவன் ஒரு

கவிஞனுங்கூட. அப்படி இருக்க, ஒரு புலவன் பாடலைக் கேட்டு அவன் நகையாடினான் என்பது பொருத்தமாய் இல்லையே!

இ. பொ : உமக்கு இன்னும் விளங்கவில்லையா? இப்படித்தான் அந்தப் புலவனும் விழித்தானாம். உடனே அந்தச் சிறுவன் புலவனை நோக்கிப் 'புலவரே, அடுத்தமுறை நீர் இங்கு வரும்பொழுது இந்தப் பாடற்பொருளைப் பொய்யாக்கிவிடுகிறேன்!' என்றானாம். மூவர் இருந்தால்தானே மூவர்க்கும் உரிய தமிழ் நாடு என்று கூறமுடியும்? நம்மையும் சோழனையும் ஒழித்துவிடப் போகிறானாம்! பாவம்! வேப்பமாலைக்கு வெறிதட்டிவிட்டது! வில்லின் ஆற்றலை வேப்பமாலை விரைவில் அறிந்துகொள்ளுமாறு செய்துவிடுகிறேன்.

வி. கோ : அரசே, பதற்றம் வேண்டா. சிறுபிள்ளைத்தனத்தால் பாண்டியன் இவ்வாறு கூறினான் என்று நான் நினைக்கவில்லை. தக்க பலம் இல்லாமல் இவ்வாறு நம்முடைய புலவர் முன்னிலையில் கூறியிருக்க மாட்டான். எதற்கும், அவன் படைப் பலத்தைப்பற்றிய உளவை விரைவில் அறிந்துகொள்கிறேன். நீங்கள் இவற்றை எல்லாம் மறந்துவிடுங்கள்.

இ. பொ : வில்லவன்கோதை, என்ன சொன்னீர்! மறப்பதா? எதை மறப்பது? நமது குல மானத்தையா, அல்லது அந்தச் சிறு பேதையின் செருக்கையா? இமயவரம்பன் பரம்பரையில் வந்தவன்

அல்லவா நான்? மறப்பதாவது! இந்த உடம்பில் உயிர் ஊசலாடும்வரை மறப்பது என்பது இல்லை! இதை நீர் மறந்துவிடாதீர்!

[காவலன் ஒருவன் வருகிறான்.]

காவலன்: அரசே, புலவர் குறுங்கோழியூர் கிழார் வந்துள்ளார்.

இ. பொ: என்னடா பேதை! புலவர் வந்தால் உள்ளே அழைத்து வராமல், உத்தரவு கேட்கவா வந்தாய்? உடனே வரச் சொல்!

[புலவர் பாடிக்கொண்டு வருகிறார்.]

கு. கிழார்: திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் உண்ணும் செம்மல்! நின்னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே!
அம்புதுஞ்சும் கடிஅரணால்
அறம்துஞ்சும் செங்கோலையே!
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புற வறியா ஏமக் காப்பினை!
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே! [1]

இ. பொ: (இருக்கையினின்றும் எழுந்து கூப்பிய கையுடன்) வருக! வருக! புலவர் மணியே, உங்களைப்பற்றித்தான் இதுவரை பேசிக்கொண்டிருந்தோம். 'மன்னுயிர் எல்லாம் நின் அஞ்சும்மே!'

---

[1] புறம். 20

என்று பாடினீர்களே, நான் என்ன அவ்வளவு கொடியவனு? மக்கள் என்னைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்?

கு. கிழார்: இரும்பொறையீர், பாட்டு முழுவதையும் விட்டுவிட்டு ஏன் இந்த ஓர் அடியைமட்டும் பிடித்துக்கொண்டீர்? உம் பகைவர்கள் அழியும் படி செய்து அவர்கள் மண்ணை நீர் கவர்கிறீர். ஆனால், உம் மண்ணைப் பிறர் விரும்பி உண்கிருர் கள் என்று கூறினேனே! கவனிக்கவில்லையா?

இ. பொ: கிழாரே, என் மண்ணைப் பிறர் அபகரிக்க வாவது, உண்ணவாவது! ஒன்றும் விளங்க வில்லையே!

கு. கிழார்: ஆம் அரசே, சூல்கொண்ட பெண்கள் மசக்கைக்காலத்தில் மண்ணை விரும்பி உண்பார் களாம். சேர நாட்டுப் பெண்கள் மசக்கையில் மண் தின்ன விரும்பினுல் உம் நாட்டு மண்ணைத் தானே உண்ண முடியும்?

இ. பொ: (சிரித்து) சரி சரி! புலவரே, அவர்கள் உண்ணுவதை நாம் தடை செய்ய இயலாது. பிறகு என்ன கூறினீர்?

கு. கிழார்: மிகுந்த பாதுகாவலை உடையது உமது நாடு என்றேன். அப்படி இருந்தும், உயிர்கள் உம்பொருட்டு அஞ்சுகின்றன என்றேன். — இது கிடக்கட்டும். என்னைப்பற்றி நீங்கள் என்ன பேசினீர்கள்?

இ. பொ : சரி புலவரே, தக்க சந்தர்ப்பத்திலேதான் நீரும் வந்தீர். நம் அமைச்சருக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரைக் கேட்பதும் பெரிய நடுக்கத்தை உண்டாக்குகிறது! அந்தச் சிறுவனுக்கு நல்ல அறிவு புகட்டவேண்டும். நீர் என்ன சொல்கிறீர்?

கு. கிழார் : அரசே, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! நாம் ஏன் நெடுஞ்செழியனுக்கு அறிவு புகட்ட வேண்டும்? அதுவும் நெடுஞ்செழியனுக்கா!

இ. பொ : என்ன கிழாரே, உமக்கும் நடுக்கம் கண்டு விட்டதா? 'மூவேந்தர் என்ற பெயர் இல்லாமல் செய்துவிடுகிறேன்!' என்று செழியன் கூறினன் என்று நீர்தானே கூறினீர்? அதற்குள் மறந்து விட்டீரா?

கு. கிழார் : மறக்கவில்லை அரசே; ஆனால், அந்தச் சொற்களுக்கு நீர் இத்தகைய பொருள் செய்து கொண்டு போருக்குப் புறப்படுவதுதான் விளங்க வில்லை. அப்படிக் கூறின பாண்டியன், படை எடுத்து வந்து, தான் சொன்னதை நிலைநாட்ட வேண்டுவது அவன் கடமையல்லவா? நாம் ஏன் இதில் முந்தவேண்டும்?

இ. பொ : அவன் படை சேர்த்து நம்மிடம் வருவதற்குள் நாமே அவனிடம் சென்று அவனை முறி யடிப்பதுதான் அரசமுறை.

கு. கிழார் : சேர வேந்தரே, நம் ஊரில் யானையாய் உள்ள நாம், அவன் ஊரில் பூனையாகிவிடுவோம். சேற்று நிலத்தில் அகப்பட்டுக்கொண்டால் யானையைக்கூட நரி வென்றுவிடும்.[1] இந்த உண்மையை மறந்து நாம் ஏன் படைகொண்டு பாண்டி நாடு செல்லவேண்டும்?

வி. கோ : புலவர் பெருமானீர், நீவிர் கூறுவதுதான் உண்மை. நீவிர் வருவதற்குமுன் மன்னரிடம் இதே கருத்தைத்தான் நானும் தெரிவித்தேன். செழியன் கூறிய வார்த்தைகள் நமக்குமட்டுமா? சோழனுக்கும் அச் சொற்கள் உரியவைதாமே? சோழ மன்னன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சாதாரணமானவனு?

இ. பொ : சரி சரி! அவனையும் புகழத்தொடங்கி விட்டீரா? அவன் பெரியவன் ஆனுல் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்?

வி. கோ : ஏன் இச் சொற்களைக் கேட்டும் அவனே பேசாமல் இருக்கிறுன்? மலைநாட்டிலிருக்கும் நம்மைக்காட்டிலும் சோழன் எளிதாகப் போர் தொடுக்கலாமல்லவா? இருந்தும், அவன் ஒன்றுஞ் செய்யவில்லை என்றுல், காரணம் ஏதாவது இருக்குமல்லவா? ஆராயாமல் நாம் ......

இ. பொ : அமைச்சரே, சோழன் கோழையாயிருந்தால் நாமும் சும்மா இருந்துவிடுவதா? அப்படித்

[1] 'காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா
வேல்ஆழ் முகத்த களிறு.' —குறள், 500.

தான் அந்தச் சோழன் என்ன பெரிய வீரன்! அவன் பெயர்தான் ஒரு முழுநீளம் இருக்கிறது. நம்மிடம் அவன் போர் செய்தானே, வெல்ல முடிந்ததா நம்மை? அவனைப் பெரிய வீரன் என்று சொல்கிறீர்?

வி. கோ. அரசே, மன்னிக்க வேண்டும். உறுதி கூற வேண்டுவது என் கடமை. நாமாவது சோழனை வெல்ல முடிந்ததா? முடிவு தெரியாத போராகத் தானே இருந்தது அது? எண்ணித் துணிய வேண்டும் கருமத்தை; துணிந்தபின் எண்ணுவது இழுக்கந்தானே தரும்![1]

இ. பொ: வில்லவன்கோதை, இனி எண்ணவேண்டுவது ஒன்றுமில்லை. நம் படைகள் தயாராகட்டும். இன்னும் மூன்று நாட்களில் நான் செழியனுடன் போருக்கு எழுகிறேன். உடனே அதற்கு வேண்டுவன செய்யுங்கள்.

வி. கோ: அப்படியே.

இ. பொ: புலவரே, நீர் நம் அருமை மகள் நல்லினிக்குத் துணையாக நாட்டில் இருந்துவாரும். நான் விரைவில் வெற்றிமாலை சூடி வருகிறேன்.

[சேரன் மகள் நல்லினி வலப்புறமிருந்து உள்ளே வருகிறாள்.]

நல்லினி: என்ன அப்பா, பெரிய மந்திராலோசனை நடைபெறுகிறது போலிருக்கிறதே!

---

[1] குறள், 467.

இ. பொ: வா அம்மா, உன்னைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன். உட்கார்.

[அரசன் வலப்புறம் நல்லினி அமர்கிருள்.]

நல்: அமைச்சர் என்றும் புன்முறுவல் தவழ இருப்பவர், இன்று பேய் அறைந்தவர்போலக் காட்சி அளிக்கிருரே! கவிஞர்கூட முகமலர்ச்சி இன்றி இருக்கிருரே! ஏதேனும் கெட்ட செய்தி உண்டா அப்பா?

இ. பொ: கெட்ட செய்தியா? நமக்கு ஏன் கெட்ட செய்தி வரப்போகிறது? துன்பம் வருவதற்குள் நாமே அதனை எதிர்த்துச்சென்று அதனை முறியடித்துவிட்டால், துன்பம் நம்மை என்ன அம்மா செய்யும்?[1]

நல்: ஆம் அப்பா! 'எடுத்த காரியத்தில் எருது போல உழைக்கக்கூடிய ஒருவனைத் துன்பம் நாடி வந்தால், அத் துன்பத்திற்குத்தான் கேடுகாலம்!'[2] என அறநூல் கூறுகிறது. உங்கள் முயற்சியும் வலிமையும் உலகமெல்லாம் அறிந்தன அல்லவா! நமக்கு ஏன் இடுக்கண் வரப்போகிறது!

இ. பொ: நீயே இவர்களுக்கு எடுத்துக்கூறு. பாண்டியன் பெயரைப் பகர்ந்தாலே பதறிவிடுகிருர் நம் அமைச்சர். அதற்குச் சரி கூறுகிருர்

[1] 'இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர்.' —குறள், 622.

[2] குறள், 624.

கவிஞர்பிரானர். இவர்களை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வது!

நல்: என்ன அமைச்சரே, பாண்டியர் நெடுஞ்செழியர் நல்லவராமே! கற்ற கவிஞருமாமே! அப்படியாயின், அவர் பெயரைக்கேட்டு நடுங்குவானேன்?

வி. கோ: இளவரசியாரே, வணக்கம்! பாண்டியனுடைய கவித்திறமைபற்றி நம் அரசர் பேசினுல் நான் ஏன் மறுத்துக் கூறப்போகிறேன்? அவனிடம் போருக்குப் புறப்படவேண்டும் என்பது அரசர் ஆணை. அதுவும் மூன்று நாட்களுக்குள் நிகழவேண்டுமாம்.

இ. பொ: இதில் தவறு என்ன? நீயே கூறு அம்மா.

வி. கோ: சோழனை எதிர்த்துச் செய்த போரின் களைப்பு இன்னும் தீரவில்லை. அதற்குள் சோழனைவிடப் பன்மடங்கு பலமுடைய பாண்டியனை எதிர்க்கவேண்டுமாம். அஞ்சாமல் என் செய்வது?

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்'[1]

என்பது அறநூல்.

இ. பொ: வில்லவன்கோதை, போதும் உம்முடைய உபதேசம்! நீர் கூறுவதைக் கேட்டுக்கொண்டே

---

[1] குறள், 473.

இருந்தால், வீரனும் கோழையாகிவிடுவான்! நீர் இவ்வளவு அஞ்சுகிறபடியால், யான்மட்டும் சென்று பாண்டியனுக்கு அறிவு கொளுத்தி வருகிறேன்.

நல்: அப்பா, அமைச்சர் கூறுவதிலும் நியாயம் இருக்கிறதுபோலத் தோன்றுகிறது. அமைச்சருடைய கடமையை அவர் செய்கிறார். அவர் கருத்துப்படி இன்னும் சிறிது ஆராய்ந்து செய்தால் போகிறது!

இ. பொ: நல்லினி, நீ இன்னும் குழந்தைதானே? எந்த முடிபுக்கும் வர உன்னால் ஆகாது. இதில் நீ தலையிட வேண்டா. இந்தப் பாண்டியப் பதருக்கு உன்னை மணம் முடிக்கலாம் என்று கூட ஒரு காலத்தில் நான் கருதினேன். என்ன அறியாமை!

நல்: பெண்ணுக்குக் கணவனைத் தேடப்போகும் முறை இதுதானா அப்பா? சரி. நீங்கள் சென்றே தீரவேண்டும் என்றால், நானும் உடன் வருகிறேன். நான் வருவது உங்கட்கு உதவியாகும்.

இ. பொ: வேண்டா அம்மா, நீண்ட நாள் தங்குவதாயின், நீயும் வருவது சரி. ஆனால், இந்தப் போர் இரண்டொரு நாட்களுக்குமேல் நீடிக்காது. நீ இங்கேயே இரு. கவிஞரும் உனக்குத் துணையாய் இருப்பார்.—அமைச்சரே, அனைத்தும் தயாராகட்டும்.

* * *

அங்கம்—I காட்சி—2

[சேரன் அரண்மனையில் ஓர் அறை. கவிஞர் குறுங்கோழியூர் கிழார் உயர்ந்த இடத்திலும், இளவரசி சற்றுத் தாழ்ந்த பீடத்திலும் அமர்ந்துள்ளனர். இளவரசியின் பீடத்திற்குச் சம உயரமான இடத்தில் அமைச்சன் வில்லவன்கோதை அமர்ந்துள்ளான்.]

நல் : அமைச்சரே, போர்க்களத்திலிருந்து வந்த செய்தி என் மனத்தைக் கலக்குகிறது! எப்பொழுதும் அனைவரையும் கலந்து முடிவு செய்யும் அரசர், ஏனோ இம் முறை அனைவர் பேச்சையும் தட்டி விட்டுச் சென்றார்! அவர் புறப்படும்பொழுது என் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது! ஏதோ விவரிக்க முடியாத தீமை நிகழ்ந்துவிடும் போல ஒரு கவலை மனத்தைச் சூழ்ந்து வாட்டுகிறது!

கு. கிழார் : அம்மா, நல்லினி, இப்படி நீ கவலைப்படுவது முறையா? இத்தனை நாள் உன்னை ஆண் குழந்தையாக நினைத்துத்தானே அரசர் வளர்த்தார்? போர்ப் பயிற்சி அனைத்தும் பெற்ற நீ அறிவுப் பயிற்சியும் பெற்றாயே! 'கவி பாடுவதில் சேரன் மகள் இணையற்றவள்!' என்று உலகம் கூறுவது வீணுக்கா?

நல் : ஆசிரியரே, கவி பாடுவதற்கும் தந்தையாரது பிரிவால் வருந்துவதற்கும் என்ன தொடர்பு? ஏன் கல்வி வீண் என்று கூறுகிறீர்கள்? கற்றவர்கள் உற்றாரைப் பிரிந்தால் வருந்தாமல் இருப்பார்களா?

கு. கிழார்: ஆம் அம்மா, உண்மையில் கற்றவர்கள் வருந்தமாட்டார்கள். உண்மைக் கவிஞன், உலகத் துன்ப இன்பங்களால் அல்லற்பட மாட்டான். கவி பாடுதல் எளிது; ஆனால், கவி மனம் பெறுதல் எளிதன்று. எனக்கும் கவலை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அக் கவலை கடமையை மறக்கச் செய்யாது.

காவலன்: (உள் வந்து வணங்கிவிட்டு) அரசியாரே, வணக்கம்! போர்க்களத்திலிருந்து ஓர் ஒற்றன் அவசரமான செய்தி கொண்டுவந்து காத்திருக்கிறான்.

நல்: அப்படியா! உடனே அவனை வரச்சொல்.

[காவலன் போகிறான். ஒற்றன் வந்து விழுந்து வணங்கி எழுந்து கைகூப்பி]

ஒற்றன்; வணக்கம்!

வி. கோ; போர் முனையிலிருந்து வருகிறாயா? போர் என்ன நிலையிலிருக்கிறது?

[ஒற்றன் கவலை தேங்கிய முகத்துடன் ஒன்றும் பேசாதிருக்கிறான்.]

நல்: உடனே சொல்! ஏன் தயங்குகிறாய்? அரசருக்குத் தீங்குண்டா?

ஒற்றன்: சேரநாட்டுப் படை தோற்றுவிட்டது என்பது மட்டும் அன்றி, முறியடிக்கப்பட்டது என்றும் சொல்லவேண்டும். நம் அரசர் இறுதிவரைப்

போர் செய்து முடிவில் பாண்டியனோடு தனிப் போரும் நடத்தினார். முடிவில்.........

வி. கோ : முடிவை உடனே சொல்! அரசருக்குத் தீங்கு ஏதாவது நேர்ந்துவிட்டதா?

ஒற்றன் : உயிருக்குத் தீங்கு ஒன்றுமில்லை. ஆனால், அரசர் பாண்டியனால் சிறையிடப்பட்டு இப் பொழுது பாண்டிநாட்டுச் சிறையில் இருக்கிறார். எப்படியேனும் சேரநாட்டு மானத்தைக் காக்கத் தம்மை விடுதலை செய்யவேண்டுவது இளவரசி யார் பொறுப்பு என்று கூறச் சொன்னார்.

நல் : (அழுகையுடன்) ஆ! அப்பா! சேரர் குலக் கொழுந்தே! அரியணை அன்றி வேறு இருக்கை அறியாத நீங்களா சிறையில் கிடந்து வதங்குவது! நான் பிறந்தும் பயனில்லாது போய்விட்டதே! அமைச்சரே, உடனே புதுப் படையுடன் நாம் போய்த் தந்தையாரை விடுதலைசெய்ய வேண்டும்! எல்லாம் சித்தமாகட்டும்!

வி. கோ : நல்லது ஒற்றா, நீ போகலாம். [ஒற்றன் மீண்டும் வணங்கிப் போகிறான்] இளவரசியீர், ஒரு வார்த்தை; தந்தையாரைப்போலவே நீங்களும் அவசரப்படுவதால் பயன் என்ன? ஆற அமரச் சிந்திக்கவேண்டிய காரியத்தை ஒரு நொடியில் முடிவு செய்துவிடுவதா?

நல் : அமைச்சரே, அங்கு அரசர் சிறையில் கிடந்து வாடுகிறார். இங்கு நாம் ஆற அமரப் பல நாட்கள்

சிந்திப்பதா? உடனே வேலை செய்யத் தொடங்கினுற்கூடப் பல நாட்கள் ஆகிவிடுமே?

வி. கோ: இளவரசியிர், மன்னிக்கவேண்டும்! உங்கள் உத்தரவுப்படி நானும் புறப்பட்டால் பாண்டியன் சிறைக்கூடம் நம்மையும் வரவேற்பதைத் தவிர வேறு பயன் காணமுடியாது. நானே நான் இதற்கு ஒரு வழி கூறுகிறேன்.

கு. கிழார்: அம்மா, நல்லினி, அமைச்சருடைய அரச அன்பு நம்முடையதைவிடக் குறைந்ததன்று. அவர் கூறும் முடிவுப்படியேதான் நாம் நடந்து கொள்ளவேண்டும். உடனடியாகப் படை கொண்டு செல்வது பயனற்ற காரியம் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

* * *

அங்கம்—I காட்சி—3

[பாண்டியன் தலைநகரான மதுரை. பாண்டியன் அரண்மனையில் கொலு மண்டபம். நெடுஞ்செழியன் மீனக்கொடி பின்புறம் அழகு செய்யக் கொலுவில் வீற்றிருக்கிருன். அவன் வயது 20-க்கு மேல் 25-க்குள் இருக்கவேண்டும். பாண்டியர்களுக்குரிய பெரிய முத்து மாலை ஒன்றை அணிந்திருக்கிருன். அவன் முகம் அறிவும், ஒளியும், எதற்கும் கவலைப்படாத பெருந்தன்மையும் நிரம்பி உளது. அவன் வலப்புறம் சமமான ஓர் இருக்கையில் புலவர் மாங்குடி மருதனுர் அமர்ந்துள்ளார். அவரது வயது 50-க்குமேலிருக்கும். அவர் உடல் சிறிது பருத்துள்ளது. அவர் செல்வ

வாழ்க்கை உடையவர் என்பதைக் காட்டக்கூடிய வடிவம். இடையில் பட்டு; மேலே மடித்துப் போடப் பட்ட ஒரு சரிகைச் சாதரா; காதுகளில் குண்டலம்; நெற்றியில் பெரிய பொட்டு; புன்முறுவல் பூத்த முகம். இவ்விருவரும் அமர்ந்திருக்கும் நிலையில் காட்சி ஆரம் பிக்கிறது. உடனே கல்லாடர் வலப்புறமாக உள் நுழைகிருர்.]

[அரசன் எழுந்து மரியாதை செய்து]

நெ. செ: வருக! வருக! புலவர் மணியே, நுமது வரவு நல்வரவாகுக! கல்லாடனுர் என்றவுடன் மற்றைய புலவர்கள் உங்களுடன் மல்லாடுதல் பெருந்தீங்கு என நினைக்கிருர்கள்.

கல்லாட: நெடுஞ்செழியனே, கடல் மணலினும் பல காலம் நீ வாழ்க! நின் பகைவர் தேய்பிறை போல அழிக! வளர்பிறை போல உன் புகழ் வளர்வதாக! உன் பெயரைக் கேட்டவுடனே உன் பகைவர் குலை நடுங்குகின்றனர்!

நெ. செ: புலவரே, எல்லாம் உங்களைப் போன்ற பெரியார்களின் ஆசியினுலேதான்.

கல்லாட: அரசே, நீயும் நானும் ஒவ்வொரு வகையில் பிறருக்கு அச்சத்தை விளைவிக்கிறோம். ஆனுல், இதோ இங்கு வீற்றிருக்கும் மாங்குடி மருதனுர் (அவரைச் சுட்டிக்காட்டி) என்னையும் உன்னையும் விடப் பெரிய புலவர்; கவிஞர். என்றுலும், அவர் பிறருக்கு அச்சத்தை உண்டாக்குவதில்லை!

மா. ம: புலவரே, உங்கள் புகழுரைக்கு நன்றி கூறு கிறேன். நீங்கள் போர்க்களம் சென்று போரைப் பார்வையிட்டதாக அரசர் கூறினர். அஃது உண்மையா?

கல்லாட: ஆம்; நம் அரசரோ இளையவர். சேரனோ பல போர்கள் செய்து அனுபவம் பெற்றவன். எனவே, முடிவு என்ன ஆகுமோ என்று அஞ்சிப் போரைக் காணச் சென்றேன். ஆனல், இறுதி வரை அங்கு இருக்க முடியவில்லை. முடிவு.....

மா. ம: இதோ முடிவை நீங்களே காணலாம். அதோ விலங்கிட்டுக் கொணரப்படுகின்றவரே சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை!

[இடப்புறமிருந்து விலங்கிட்ட கைகளுடன் சேரன் கொண்டுவரப்படுகிருன். சேவ கர் மூவர் உடன் வருகின்றனர்.]

நெ. செ: சேர வேந்தே, வருக! வருக! அட! இது யார் இட்ட கட்டளை? ஏன் விலங்கிட்டீர்கள்? சேர வேந்தர் என்பதை மறந்து யார் விலங் கிட்டது இவருக்கு? உடனே விலங்கைக் களையுங் கள்!

[விலங்கு அவிழ்க்கப்படுகிறது.]

காவலன்: மன்னர் மன்னரே, இவர் சிறையிலிருந்து இங்கு வர மறுத்தார். ஆகவேதான் விலங்கிட நேரிட்டது.

நெ. செ: சேர வேந்தரே, அமர வேண்டுகிறேன். (வலப்புறம் உள்ள இருக்கையைக் காட்டுகிறான்) பாண்டியர் உபசரிப்பை ஏற்றுக்கொள்ள நீங்கள் மேற்கொண்ட வழி விந்தையானதுதான்! என் மீது என்ன குற்றம் கண்டு பகைத்தீர்கள்? படை எடுக்கும்படி அவ்வளவு பெரிய குற்றம் யான் என்ன செய்துவிட்டேன்?

இ. பொ: இளையவனே, வெற்றி எக்களிப்பு உன்னை இவ்வாறு பேசத் தூண்டுகிறது! அளவுக்கு மிஞ்சிய செருக்கு என்றும் நன்மை பயவாது.

மா. ம: சேர மன்னரே, நெடுஞ்செழியர் எவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் பேசுகிறார்? நீங்கள் அவரை இழித்துப் பேச அவசியம் ஏது?

இ. பொ: நீர் ஏன் பாண்டியனுக்குப் பரிந்து பேச மாட்டீர்? பொருளுக்குக் கவி பாடும் புலவர் அல்லவா நீர்? உம் மன்னன், மாங்குடி மருதனார் என்று உம்மை உயர்த்திப் பேசினாலும் உண்மை இதுதானே?

நெ. செ: சேரர் பெருமானே, தமிழ் மொழியின் ஆபரணங்களுள் ஒன்றாகிய 'ஐங்குறு நூறு' என்ற நூலை நீவிர் தொகுப்பித்தீர் என்று கேட்டபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை! இவ் அருங்காரியத்தைச் செய்த உம்மைப் பெரிய அறிஞர் என்று மதித்திருந்தேன். ஆனால், நீவிர் புலவரை அவமதிக்கும் தன்மையுடையவர் என்று

கருதவில்லை. இப்போதாவது உமது பிழைக்கு இரங்குவீராயின், உம்மைச் சேர நாட்டுக்கு இன்றே அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். இன்றேல்...

இ. பொ: செழியனே, பிழை செய்தால் அல்லவோ வருந்தவேண்டும்? உனக்கு மனவாற்றல் உண்டாயின், சிறையில் வைத்துப் பார்க்கலாமே!

நெ. செ: யாரங்கே!

காவ: (உள்ளே வந்து வணங்கி) உத்தரவு.

நெ. செ: சேர மன்னரைச் சிறைக்கு அழைத்துச் செல். யாரும் என் ஆணையின்றி இவரைக்காணல் கூடாது! ஆம்! அழைத்துச் செல்.

காவ: ஆணை அரசே. அப்படியே.

[சேரனை அழைத்துக்கொண்டு காவலன் செல்கிருன்.]

நெ. செ: சேரவேந்தர் இவ்வளவு அறியாமையும் மமதையும் உள்ளவர் என்று நான் கருதவே இல்லை! பட்டபொழுதும் அறிவு பெருதவர் உலகிடை அரசராய் இருக்க அருகதை இல்லாதவரே.

கல்லாட: ஆயினும், அவரைப் பேரரசருக்குரிய மரியாதையுடன் நடத்தவேண்டுமென்று ஆணையிட்ட உங்களை நான் என்றென்றும் புகழ்வேன்.

தம் நிலைமையை அறிந்துகொள்ளாத அவரை இன்னும் எவ்வளவு காலம் சிறை வைத்திருப் பீர்கள்?

நெ. செ: புலவர் பெருமக்களே, சேர நாட்டிலிருந்து நேற்று மாலை வந்த ஒற்றன் கொண்டுவந்த செய்தியைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்.

மா. ம: (வியப்புடன்) மன்னரே, நாங்கள் அதை அறியலாமா?

நெ. செ: உங்கட்குக் கூறுமல் என்ன? சேரன் மகள் நல்லினி போர்ப் பயிற்சி பெற்றுப் போர்க்களம் செல்லும் இயல்பினளாம். அவளும் அமைச்சர் வில்லவன்கோதையும் பாண்டி நாட்டுக்கு மீண்டும் படையோடு வந்து சேர மன்னரை மீட்டுப்போகப் போகிருர்களாம். வஞ்சிமாநகர் முழுவதும் இதே பேச்சாய் இருக்கிறதாம்.

கல்லாட: என்ன! பெண் போர்க்களம் புகுவதா! தமிழ் மகள் செய்யும் செயலா இது!

நெ. செ: ஆம் புலவரே, அவசியம் என்று கருதும் போது வழக்கத்துக்குக் கட்டுப்பட முடியுமா? நாம் இன்னொரு படையெடுப்பை எதிர்பார்ப் போம். நல்லினி திறமையுந்தான் போரில் பார்த்து விடலாமே!

* * *

அங்கம்—I காட்சி—4

[பாண்டியன் அரண்மனையில் தனி அறை. அரசன் சாதாரண இருக்கையில் அமர்ந்துள்ளான். வலப்புறம் அதே உயரத்தில் உள்ள இருக்கையில் மாங்குடி மருதனும் இடப்புறம் கல்லாடனும் இருக்கின்றனர். அமைச்சன் வீரபாண்டியன் இவர்கள் எதிரே நிற்கின்றான்.

சேரன் மகளாகிய நல்லினி தந்தையை விடுவிப்பதற்குத் துணிந்து ஒரு சூழ்ச்சி செய்கிறாள். அதன் படியே அவள் 'வேண்மாள்' என்ற புனைபெயருடன் பாண்டியனைக் காண வருகிறாள். இந்தக் காட்சியில் அவள் 'வேண்மாள்' என்ற பெயருடன் வரினும், படிப்பவர் மனத்தில் ஐயம் தோன்றாமல் இருப்பதற்காக நல்லினி என்ற பெயரே உரையாடல் கொளுவில் தரப்பட்டுள்ளது.]

நெ. செ: வீரபாண்டியரே, சேர வேந்தர் சிறைப்பட்டு இன்றோடு ஒரு திங்கள் ஆகிறதல்லவா?

வீ. பா: ஆம் அரசே, உங்கள் உத்தரவின்படி அவருக்கு ஒரு குறைவும் இல்லாமல் பார்த்து வருகிறோம். ஆனால், அவர் மட்டும் பெருங்கவலையில் ஆழ்ந்திருக்கிறார்.

நெ. செ: அமைச்சரே, அவர் கவலை எதனால் என்பதை அறிய உம்மாலுமா இயலவில்லை?

வீ. பா: அறிய முடியாமல் என்ன! முன்னர் வேறு விதமாக எண்ணியிருந்தேன். ஆனால், சென்ற வாரத்தில் அவர் கேட்ட கேள்வியிலிருந்து உண்மை உணர்ந்துவிட்டேன்.

நெ. செ: அப்படியா? என்ன நினைத்திருந்தீர்? என்ன கேள்வி கேட்டார் சேரர்?

வீ. பா: தாம் சிறைப்பட்டதை நினைந்தும், விடுதலை பெற முடியாதது கண்டும் அவதிப்பட்டார் என்று நினைத்திருந்தேன். ஆனால், சென்ற வாரம், நீங்கள் இன்னும் மதுரையிலேதான் இருக்கிறீர்களா என்று கேட்டார்.

நெ. செ: யான் மதுரையில் இருக்கிறதுபற்றி அவருக்கு என்ன?

வீ. பா: வேறு என்ன? சேர நாட்டினர் படை எடுத்து வந்தார்களா என்று கேட்கவேண்டும். அது முடியாதபொழுது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டால், அதன்மூலம் படையெடுப்புப்பற்றி அறியலாம் அல்லவா?

நெ. செ: நல்லது! நல்லது! குறிப்பில் குறிப்பு உணர்வாரை அமைச்சராகக் கொள்ளவேண்டும் என்று நீதிநூல் கூறியது பொய்யாகுமா? நீர் என்ன விடை கூறினீர்?

வீ. பா: கூறுவது என்ன அரசே! நீங்கள் இங்கேயே அமைதியுடன் இருப்பதாகவும் எங்கும் எவ்விதச் சலனமும் இல்லை என்றும் கூறினேன்.

நெ. செ: ஐயோ பாவம்! அவர் மிகவும் ஏமாற்றம் உற்றிருப்பாரே!

வீ. பா: நாம் பெற்ற வெற்றியையும் யான் கூறக் கேட்டு இடிந்தே போய்விட்டார்!

நெ. செ: எந்த வெற்றியைக் கூறுகிறீர்?

வீ. பா: ஏன்? சென்ற வாரம் பெற்ற வெற்றியைத் தான் கூறுகிறேன். வேள் எவ்வியின் மிழலைக் கூற்றமும், முத்தூற்றுக் கூற்றமும் சாதாரண மான கோட்டைகளா? எத்தகைய கடும்போர் செய்து அவற்றைப் பிடிக்கவேண்டும் என்பதைச் சேரமன்னர் அறியாதவரா?

நெ. செ: இந்த வெற்றியை ஏன் அவரிடம் கூறினீர்? அதைக் கேட்டு அவர் இடிவானேன்? நாமே நமது வெற்றியை மிகுத்துப் பேசுவது அழகாகுமா?

வீ. பா: மன்னர் மன்னரே, என்னை மன்னிக்க வேண்டும். நமது வெற்றியை நாமே கூறிக் கொண்டு பெருமை அடையவேண்டும் என்ற கருத்தால் நான் கூறவில்லை.

நெ. செ: சரி! வேறு ஏதாவது காரணம் உண்டா?

வீ. பா: ஆம்; சேரமான் இரும்பொறை இந்த இரண்டு கோட்டைகளையும் பிடிக்கப் பல நாட் களாக நினைந்திருந்தார்; நீங்கள் அரசராவதற்கு முன்னரே ஒரு முறை முயன்றார்; ஆனால், தோல்வி தான் எய்தினார்.

நெ. செ: ஆ! அப்படியா? நான் இதுவரை இச் செய் தியை அறிந்தேனில்லை. இக் கோட்டைகளைப்

பிடிக்க முடியாத இவரா பாண்டி நாட்டை எதிர்த்தார்?

வீ. பா: அரசரே, மன்னிக்கவேண்டும். சேரர் படை பலத்தை நாம் குறைத்து எண்ணிவிடக்கூடாது. வேள் எவ்வியுடன் செய்த போரிலும், நம்முடன் தொடுத்த போரிலும் அவர் தோற்றதற்குத் தக்க காரணம் உண்டு.

நெ. செ: அப்படியா? அமைச்சரே, நீர் சேரருக்குக் கூட அமைச்சராக இருக்கலாம்போலத் தோன்றுகிறதே! நல்லது! அக் காரணம் என்ன?

வீ. பா: இந்த இரண்டு போர்களும் சேரர் காரணமில்லாமல் தொடுத்தார். சேரப் படை வீரர்கள் தங்கள் நாட்டைக் காப்பதிலும், காரணத்துடன் செய்யப்படும் போரிலும் பின்வாங்கமாட்டார்கள். ஆனால், வலுச் சண்டையை அவர்கள் விரும்பவில்லை.

நெ. செ: அப்படியானால், தற்காப்புக்கு அல்லாமல் வேறு காரணங்கொண்டு போர் செய்யக்கூடாது என்பதுதான் உங்கள் கருத்தா?

வீ. பா: அரசே, கவிஞரும் அறிஞரும் பலர் இருக்க, என் கருத்து என்று ஒன்றைக் கூற நான் யார்?

நெ. செ: மாங்குடி மருதனாரே, உங்களது கருத்து என்னவோ? அரசன் தற்காப்பு ஒன்றுக்காகவே

போர் செய்வது என்ருல், அவன் சாதாரணமான மனிதனிலும் வேறுபட்டவன் அல்லனே?

மா. ம : பாண்டியர் தோன்றலே, அமைச்சர் கூறுவதில் ஆழமான உண்மை இருப்பதாகவே நான் நினைக்கிறேன்.

நெ. செ : சரி, கல்லாடனுரே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

கல்லாட : அரசே, உங்கள் கருத்தே என் கருத்தும் ஆகும். தன் அரசு சிறியது என்ற எண்ணத்தால் தூண்டப் பெற்று, மேலும் மேலும்போர் செய்து தனது அரசைப் பெருக்குபவனே நான் விரும்பும் அரசன்.

நெ. செ : நல்லது! நல்லது! அழகாகக் கூறினீர்கள்! என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் போர் செய்தல் ஒன்றையே நான் விரும்புகிறேன். (நிறுத்தி ஒவ்வொரு சொல்லாக) போர்...வெற்றி! ஆ! எவ்வளவு இனிய செயல்கள்!

காவ : (வணங்கி) அரசே, வாழ்க! சேரநாட்டிலிருந்து ஓர் ஒற்றன் வந்துள்ளான்.

நெ. செ : உடனே வரச்சொல். இங்கு ஒருவரும் வாராதபடி பார்த்துக்கொள்.

ஒற்றன் : (உள்ளே வந்து வணங்கி) பாண்டி மன்னர் நீடூழி வாழ்க! மீனக்கொடியும், வேப்பமாலையும் என்றும் உயர்க!

நெ. செ : சேரநாடு எவ்வாறுள்ளது ஒற்றரே? ஏதாவது படை புறப்பட ஏது இருக்கிறதா ?

ஒற் : அரசே, எவ்விதமான அமளியும் இல்லை வஞ்சியில். வஞ்சி, அரசர் இல்லாத நாடு போலவும் இல்லை. அமைச்சர் வில்லவன் கோதையும் இளவரசியார் நல்லினியாரும் நாட்டாட்சியைச் செம்மையாகச் செய்து வருகிறார்கள்.

நெ. செ : என்ன ? நீர் கூறுவது வியப்பாக அல்லவா இருக்கிறது! தம் அரசர் சிறை இருப்பதையும் மறந்து......ஒருவேளை புறத்தில் காணும் இந்த அமைதி......

ஒற் : இல்லை அரசே, நீங்கள் நினைப்பது போலப் புயலுக்கு முந்திய அமைதி அன்று இது. புயலுக்கு உரிய அடையாளமோ, சூழ்நிலையோ ஒன்றும் இல்லை சேரநாட்டில்.

நெ. செ : நல்லது, நீர் போகலாம். ஏதேனும் அறிகுறி காணப்படின், உடனே நமக்கு அறிவிக்க வேண்டும். எந்தச் சிறு மாற்றமும் நாம் உடன் அறியவேண்டும்.

[ஒற்றன் வணங்கி வெளியேறுகிறான். காவலன் உள்ளே வருகிறான்.]

காவ : அரசே, வாழி! யாரோ ஓர் அம்மையார் வந்திருக்கிறார். பார்த்தால் புலவர்போலத் தோன்றுகிறது! உங்களைக் காணவேண்டும் என்று அறிவிக்கச் சொன்னார்.

நெ. செ: புலவர் என்றால் உடனே அழைத்துவா, போ.

[சேவகன் போகிறான்.]

கவிஞரே, யாராக இருக்கலாம் அப் புலவர்?

[புலவர் வருகை]

ஒருவேளை சோழநாட்டிலிருந்து...! இதோ வருகிறார். அம்மையீர், வருக! வருக!

நல்லினி:[1] நெடுஞ்செழிய மன்னரே, நீர் நெடுங்காலம் செழித்து வாழ்க! மீனக் கொடியும் வேப்பமாலையும் எங்கும் செழித்து வளர்க! ஆ! மாங்குடி மருதனார் என்று நினைக்கிறேன் இப் பெருமானை!

நெ. செ: புலவர் சிகாமணியே, உமது புலமையின் சிறப்பை நன்கு அறிகிறோம். ஆம்! இப் பெருந்தகை மருதனாரே, உங்கள் வரவால் பாடுதமிழ் வளர்க்கும் கூடற்பதி மேலும் தழைப்பதாக!

நல்: வேந்தர் வேந்தே, கவிமழை பொழியும் புலவர்க்கு விரும்பிய எல்லாம் தரும் கடல் நீங்கள் எனக் கேட்டு உங்கள்பால் வந்தேன். எனது புன்கவியையும் கேட்டருள்புரிக!

நெ. செ: அம்மையீர், பாடியருள்க! கேட்கக் காத்திருக்கிறேன்!

---

1. சேர மன்னன் புதல்வியாகிய நல்லினியே இங்கு வந்துள்ளாள் கவிஞர் வேடத்தில்; அதற்கேற்ப அவள் 'வேண்மாள்' என்ற புனைபெயர் கொண்டுள்ளாள்.

நல்: அரசே, உங்கள் இளமையையும், போரின் கடுமையையும், உங்களை எதிர்த்த வீரர்களின் பலத்தையும், அவர்களை நிலத்தில் புடைத்து நீங்கள் கொன்றதையும் உட்கொண்டு இப்பாடல் விளங்கும்படி இசைத்துள்ளேன்.

'கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண் தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்'

நெ. செ: ஆஹா! என்ன அழகு! என்ன சொல் ஆழம்! அருமை! அருமை!

நல்: 'உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே! அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினும் இலனே.'

நெ. செ: ஆ! மாங்குடி மருதனாரே, இளங்கவிஞர் தம் பாடலைக் கேட்டீர்களா?

மா. மரு: அரசே, தமிழ்க் கவிதையின் சுவையை அனுபவிக்க ஒருவரை அழைக்கவும் வேண்டுமா? இக் கவிஞர் போர்க்களத்தில் நீங்கள் செய்யும் போரை நேரே கண்கூடாகக் கண்டதுபோலப் பாடி உள்ளாரே!

நெ. செ: ஆம்! கவிதையைக் கேட்டால், இவர் இந்த அனுபவத்தை நேரே பெற்றவர் போலத்தான் தோன்றுகிறது! ஆனால், இவர் இளமை நாம் நினைப்பது தவறு என்று கூறுகிறது. மேலும் இவர் பெண்பாலார் அல்லரா?

நல்: பாண்டி மன்னரே, நீங்கள் நினைப்பது முற்றி லும் சரியே! நான் போர்க்களம் புகுந்து நீங்கள் செய்த போரைக் கண்டதில்லை.

நெ. செ: அப்படியானால், உணர்ச்சி நிரம்பிய இக் கவிதையைக் கற்பனையின் துணை மட்டும் கொண்டா இயற்றினீர்கள்?

நல்: ஆம் மன்னரே, நீங்கள் கவி பாடும் வன்மை உடையவர் என்றும் கேள்விப்பட்டேன். அஃது உண்மை என்பதை இப்போது அறிந்து மகிழ் கிறேன்!

நெ செ: கவிஞரே, யான் கவிதை ஒன்றும் பாட வில்லையே இப்பொழுது! உண்மையை இப் பொழுது தெரிந்துகொண்டதாகக் கூறுவது ஏன்?

நல்: கற்பனையின் துணைமட்டும் கொண்டு இப் பாடலை நான் பாடியதை உடனே அறிந்து விட்டீர்கள் அல்லவா? ஒரு கவிஞனே இவ் உண்மையைக் காண்டல் கூடும். வாழ்க கவி மன்னரே!

செ. நெ : அம்மையீர், நீங்கள் கூறுவது உண்மையானால், அதன் பெருமை இதோ இங்கு வீற்றிருக்கும் கவிஞர் தலைவர் மாங்குடி மருதனாரையே சேரும்.

நல் : கவிஞர் தலைவரே, வணக்கம்! இத்தகைய அரசமாணாக்கரைப் பெற்ற உங்கள் திரு என்றும் வாழ்வதாக!

மா. ம : பெண் குலத்தை விளக்கவந்த பெருந்தகையீர், உமது கவியின்பத்தில் மூழ்கியதால் நீவிர் இன்னார் என்பதை இன்னும் யான் தெரிந்துகொள்ளாமலிருந்துவிட்டேன்!

நல் : பெருமானீர், நான் சேரநாட்டைச் சேர்ந்தவள்; சேர நாட்டுக் கவிஞர்பிரானார் குறுங்கோழியூர் கிழாரிடம் பயிலும் கடை மாணவியருள் ஒருத்தி. என் பெயர் வேண்மாள் என்பது.

நெ. செ : ஆ! சேரநாட்டுக் குறுங்கோழியூர் கிழாரா! இவை என் மனத்தில் சில நினைவுகளை உண்டாக்குகின்றனவே!

நல் : அரசர் பெருந்தகையீர், அவை என்ன நினைவுகள்?

நெ. செ : புலவரே, உங்கள் நாட்டு இளவரசியாரது பெயர் நல்லினி என்பதுதானே? உங்கட்கு அவரைத் தெரியுமோ? அவர் நலமாய் இருக்கிறாரா!

நல் : ஆம் அரசே, அவர் பெயர் நல்லினி என்பது தான். எனக்கு அவரோடு ஓரளவு நட்பும் உண்டு. ஆனால், அவர் இளவரசியார் ; நான் பரிசில் வாழ்க்கை உடையவள்.

நெ. செ : ஆ! மறந்தே போய்விட்டேன்! உங்கட்குப் பரிசில் வழங்கவேண்டும் என்ற நினைவை அடியோடு மறந்துவிட்டேன்! நூறு ஊர்களும் ஆயிரம் பொன்னும் உங்கட்கு வழங்குகிறேன்.

நல் : செழிய வேந்தரே, நன்றி கூறுகிறேன். ஆனால், பரிசிலை விரும்பி யான் உங்கள்பால் வரவில்லை. உங்களைக் கண்டு செல்லவேண்டும் என்ற விருப்பாலேயே நெடுவழி கடந்து வந்தேன்.

நெ. செ : புலவரே, உங்கள் அன்பு கைம்மாறு செய்ய இயலாதது எனினும், பரிசில் வழங்காதிருப்பது எனக்குத் தகுதியன்று.

நல் : நீங்கள் தரும் இப் பரிசிலை யான் மறுப்பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்! யான் விரும்பும் ஒன்றை நீங்கள் தருவதாயின்......

நெ. செ : சேரநாட்டுப் புலவரே, நீங்கள் அஞ்சாது கேட்கலாம். எது விரும்பினாலும் இல்லையென்னாது தருகிறேன்.

நல் : கேட்ட பிறகு அரசர்பிரானுக்கு அது முடியாததாயின், என் செய்வது ?

மா. ம: நீங்கள் கேட்பது பாண்டியர் நெடுஞ்செழியரால் இயலாத ஒன்ருக இருக்க முடியாது. மூன்று உலகத்திலும் உள்ள பொருள் முற்றுங் கொண்டுவர வேண்டினும், எங்கள் அரசர்க்கு ஆகாதது ஒன்றில்லே.

நல்: அம் மாதிரி ஒன்றும் வேண்டா. ஆனல், அரசர் நான் கேட்பதைத் தர மனம் வருந்துவரோ என அஞ்சுகிறேன்!

நெ. செ: அம்மையீர், நீங்கள் எது விரும்பினும் தருகிறேன். இல்லேயென்று சொல்லுதல் தமிழர் வழக்கன்று. அதிலும், புலவர் பாடும் புகழுடைய பாண்டியர், புலவர்க்கு ஒன்று இல்லே என்று கூறுவதினும் உயிரையே விரும்பி விட்டுவிடுவர்.

நல்: நல்லது! மன்னரே, எங்கள் நாட்டு வேந்தர் உங்கள்பால் சிறை இருக்கிருர் அல்லரோ?

நெ. செ: (சில விஞடிகள் ஆழ்ந்த யோசனேக்குப்பின்) ம்ம்ம்...ஆம்! அவரே வலுவில் சண்டைக்கு வந்தார்.

நல்: ஆம்; அவர் தவற்றை நான் அறியாமல் இல்லே. அவரை.........

நெ. செ: (கவலே தோய்ந்த முகத்துடனும் குரலுடனும்) ஐயோ! அவரை விடுதலே செய்ய வேண்டுமா?

நல்: அன்று அரசே, நான் யார் அவர் விடுதலையை உங்களிடம் கேட்க? அஃது அரசியல் சம்பந்த மானது என்பதை யான் அறிவேன்.

நெ. செ: மிகவும் நல்லது! அப்படியானால் அவரைப் பற்றி.........

நல்: ஒன்றுமில்லை. அவரைக் கண்டு செல்ல வேண்டும். கண்டு சென்றதாக என் தோழி நல்லினிக்கு அறிவித்தால், அவள் மகிழ்வாள்.

நெ. செ: ஆ! என்ன! நீ ஒற்றர்போலும்! உம் இள வரசியார் தம் தந்தையாருக்குச் செய்தி அனுப்பி உள்ளாரா?

நல்: இல்லை அரசே; இளவரசியாருக்கு நான் வருவது கூடத் தெரியாது.

நெ. செ: மருதனாரே, இதை எவ்வாறு நம்புவது? அரிய கவிதை பாடிய இவர் ஒற்றராகவா இருக்கவேண்டும்! என்ன கொடுமை!

மா. ம: அம்மையீர், நீவிர் ஒற்றர் என்ற எண்ணம் அரசர் மனத்தில் உண்டாகிவிட்டதே! ஒற்ற ரல்லீர் என்பதற்குத் தக்க சான்று உண்டா?

நல்: மருதனாரே, யானோ ஏழை; கவி பாடும் பாணர் வகுப்பைச் சேர்ந்தவள். மற்றவர்க்குத் தீங்கு அறியாத கவிஞர் வாழ்க்கையில் ஒற்று அறிதலுக்கு அவசியம் இல்லையே! யான் ஒற்று

அல்லேன் என்பதை எங்ஙனம் விளக்க இயலும்?

நெ. செ: புலவரே, இதுவரை எந்தப் புலவரும் கேளாத பரிசில் இது.

நல்: அரசரே, சேர வேந்தர் உங்கட்குப் பகைவர். ஆனால், எங்கட்கு அவர் அரசர்தானே? அவரைக் காண வேண்டும் என்னும் விருப்பம் எழுவது தவறா?

நெ. செ: ஆனால், என்னிடம் சிறை இருக்கும் ஒருவரைக் காண வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு பொருந்தும்?

நல்: அரசே, உங்கள்பால் உண்மையைக் கூறிவிடுகிறேன். எங்கள் அரசரும் கவிதைப் பித்துக் கொண்டவரே.

நெ. செ: அதை அறிவேன். அவர் ஐங்குறுநூறு என்ற நூலைத் தொகுப்பித்த பெருமையை யாரே அறியார்?

நல்: அடியேனும் அதற்கு ஆகும் உதவியளித்தேன். நீண்ட நாட்களாக அவரைக் காணுமல் என் மனம் வருந்துகிறது.

நெ. செ: (மனமாற்றம் குரலில் தெரியும்படி) உண்மை. நம் கவிஞரைக் காணுமல் என்னுலும் ஒரு நாள் இருக்க இயலாது.

மா. ம: அரசே, இதில் ஐயத்திற்கு இடம் ஏது?

நெ. செ: அம்மையீர், நீவிர் விரும்பியபடியே உம்முடைய அரசரைக் காணலாம். இதோ இந்த மீன இலச்சினையைக் காட்டினுல் சிறைக் கதவு திறக்கப்படும்.

நல்: அரசரே, நன்றி! செழியர் சொல் தவருதவர் எனக் கேட்டிருந்தேன். ஆ! அஃது எவ்வளவு உண்மை! முன் பின் அறியாத எனக்கு எவ்வளவு கருணை காட்டினீர்கள்!

நெ. செ: புலவரே, நீரும் நானும் வேறு நாட்டினராயினும், தமிழ் எனும் அருங்கயிற்ருல் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளோம். சென்று வருக.

அங்கம்—II காட்சி—1

[சிறைக்கூடம். சிறைக்கதவின் வெளியே வீரன் ஒருவன் உலவிக்கொண்டிருக்கிருன். உள்ளே ஏறத்தாழ நல்ல நிலையில் வாழும் ஒருவருக்கு இருக்க வேண்டிய வசதிகள் அனைத்தும் இருக்கின்றன. பழங்காலத்து உயர்ந்த கட்டிலில் ஒரு மெத்தையும் அமர்வதற்கு இரண்டு இருக்கைகளு முள்ளன. எல்லாவற்றைக்காட்டிலும் நன்கு தெரியும்படி பல ஓலைச் சுவடிக் கட்டுகள் இருக்கின்றன. அவற்றின் பக்கத்தே ஒரு பெரிய குத்து விளக்கு எரிகிறது. நல்லினி உள்ளே நுழைகிருள். சேர மன்னன் அவளுக்கு முதுகுப்புறம் காட்டிக்கொண்டு விளக்கினருகில் உட்கார்ந்து ஏடுகளைப் புரட்டிக்கொண்டிருக்கிருன்.]

நல்: சிறைக்காவல, யாம் சேர மன்னரைக் காண வந்துள்ளோம்.

சி. கா : சிறைக்கூடம் பெண்டிர் வருவதற்குரிய இடம் அன்று என்பதை நீங்கள் அறியீர்களா? மன்னிக்கவேண்டும் அம்மணி!

நல் : யாம் சேர நாட்டைச் சேர்ந்த வேண்மாள் என்னும் கவிஞர். எம் மன்னரைக் காண நீண்ட வழி வந்திருக்கிறோம்.

சி. கா : யாராயிருந்தாலும் சரி. அரசர் ஆணை இல்லாமல் நான் சிறைக் கதவைத் திறக்க முடியாது.

நல் : இதோ பார், இஃது என்னவென்று!

சி. கா : ஆ! மீன இலச்சினை! அம்மணி, மன்னிக்க வேண்டும்! இதனை முன்னமே கூறலாகாதா? நீங்கள் யாரானால் என்ன? இதோ திறந்து விட்டேன்! சென்று வாருங்கள்.

[சிறைக் கதவைத் திறந்து விட்டுவிட்டு வெளியே நின்றுவிடுகிறான்.]

நல் : அப்பா!

இ. பொ : யாரது? நல்லினி! கண்ணே! இஃதென்ன வியப்பு! இங்கு எப்படி.........?

நல் : உஸ்! உஸ்! பேசாதீர்கள்! இதோ இலச்சினை இருக்கிறது. என் பெண்ணுடைகளை அணிந்து கொண்டு இந்த இலச்சினையை எடுத்துச் சென்றால் யாரும் தடைசெய்ய மாட்டார். விரைவில் உடை மாற்றம் செய்துகொண்டு உடனே செல்லுங்கள்!

இ. பொ : ஆ! என்ன! நான் காண்பது கனவா? பெண்ணுடையை நான் அணிந்து செல்வதா! பின்னர் உன் கதி என்ன ஆவது? என்ருல் முடியாது!

நல் : அப்பா, தயைகூர்ந்து என்னைப்பற்றிக் கவலைப் பட வேண்டா. உள்ளே வந்த எனக்கு வெளியே வரவும் தெரியும். உடனே புறப்படுக!

இ. பொ : ஆம்! ஆம்! பழிக்குப்பழி வாங்க அரிய வாய்ப்பு. இதோ..............

[சேரன் பெண் உடையுடன் வெளியே சென்றுவிடுகிருன்.]

அங்கம்—II காட்சி—2

[அதே சிறைக்கூடம். அந்தக் காவலன் உலவுகிருன். திடீரென்று நெடுஞ்செழியன் அவன் முன்னே தோன்றுகிருன்.]

சி. கா : மன்னர் மன்னரே, வணக்கம்!

நெ. செ : காவல, சிறையில் அரசர் நன்ருய் இருக்கிருரா?

சி. கா : அரசரே, இரவு நேரங்களில் ஓயாது விம்மலும் அழுகையும் கேட்கின்றன. உள்ளே சென்ருல் சுவர்ப் பக்கம் திரும்பிக்கொள்கிருர்.

நெ. செ: சரி; கதவைத் திறந்துவிட்டு நீ வெளியில் சென்று இரு.

[சிறைக் கதவைக் காவலன் திறக்க, பாண்டியன் உள் செல்கிருன்.]

நெ. செ: சேர மன்னரே, இதோ நெடுஞ்செழியன் உங்களைக் காண வந்துள்ளேன். உங்களை நன்கு கவனித்துக்கொள்கிருர்களா? (வியப்பு, ஏமாற்றம், கோபம் கலந்த முகம், குரலுடன்) ஆ! இது யார்? சேரர் எங்கே?

நல்: அரசரே, மன்னிக்க வேண்டுகிறேன். நான் உங்கள் அடைக்கலம். என்னைக் காப்பது உங்கள் கடன்.

நெ. செ: நீ யார்? சேரர் எங்கே தப்பிப்போய் விட்டார்!

நல்: அரசரே, ஆண் வேடம் தரித்திருப்பதால் என்னைத் தெரியவில்லையா?

நெ. செ: ஆ! சேரநாட்டுப் புலவரா? ஏன் இந்த வேடம்? சேரர் உங்களை ஏமாற்றி உள்ளே இருத்திவிட்டுப் போய்விட்டாரா? அடே, யார் அங்கே?

நல்: அரசரே, யாரையும் அழைக்க வேண்டா. உங்களிடம் பேச வேண்டிய செய்திகள் உள.

[காவலன் உள்ளே வருகிறன்.]

சி. கா: மன்னர் மன்னரே, ஆணைக்குக் காத்திருக்கிறேன்.

நெ. செ: சரி, நீ வெளியே சென்று காத்திரு. யாரையும் உள்ளே வர அனுமதிக்காதே.

[சேவகன் வெளியே செல்லுகிறுன்]

நல்: செழிய மன்னரே, நான் ஒற்று வந்தவள் அல்லள் என்பதை முதலில் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுகிறேன்.

நெ. செ: பின்னர் நீ யார்? செய்த காரியத்திற்கு என்ன தண்டனை என்பது தெரியுமா?

நல்: தெரியும்! நன்ருகத் தெரியும்! உங்கள் கையால் எந்தத் தண்டனையையும் ஏற்க இந்த அடிமை எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறேன்.

நெ. செ: வேண்மாள், உன் அழகு என் மனத்தில் கலவரத்தை உண்டாக்குகிறது. ஆனுல், நீ செய்த இந்த அடாத செயலுக்குரிய தண்டனையை நீ அறிவாயா?

நல்: அரசரே, நான் வாராவிடினும் நீங்கள் சேரரை என்ருவது ஒரு நாள் விடுதலை செய்துதானே இருப்பீர்கள்?

நெ. செ: அப்படியே இருப்பினும் என்ன? நானுக விடுதலை செய்வதைவிட்டு, அவர் தப்பிப் போய்

விட்டார் என்று உலகம் அறிந்தால், என் மானம் என்ன ஆகும் ?

நல்: அரசரே, என் சொற்களை முதலில் கேட்டருளுங்கள்.

நெ. செ: என்ன சொல்ல விரும்புகிறாய் ?

நல்: சேரர் சென்றது இதுவரை யாருக்கும் தெரியாது. எனவே, நீங்களே அவரை விடுதலை செய்து அவர் நாட்டுக்கு அனுப்பிவிட்டதாக அறிவித்துவிட்டால் என்ன ?

நெ. செ: சரி, அவ்வாறு செய்துவிடுவது எளிது. ஆனால், மீண்டும் சேரர் எனக்குத் தீங்கை இழைக்க முற்படின், அதற்கு வேண்டிய பரிகாரமும் தேட வேண்டாவா ? கவிஞர்கள் முரண்பட்ட இரண்டு அரசர்களிடையே சந்துசெய்விக்க முயன்றதைக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், நீமட்டும் ஒரு முறை போர் செய்யத் தூண்டிவிட்டாய்.

நல்: அரசரே, சேர மன்னர் உங்கட்குத் தீங்கு இழைக்காதபடி பார்த்துக்கொள்வது என் பொறுப்பு.

நெ. செ: உன்னை இனியும் நம்புவதா ?

நல்: ஆ ! என்ன கூறினீர்கள் ? என் உயிரை வேண்டுமானாலும் உங்கட்காகத் தருகிறேன். உங்கள்மேல் ஆணை !

நெ. செ: ஆ! என்ன கூறினாய்? என்மேல் ஆணையா? நான் யார்? நீ யார்? என்மேல் ஆணையிட உனக்கு என்ன உரிமை உள்ளது?

நல்: நீங்கள் விரும்பினும் விரும்பாவிடினும், நான் அந்த முடிவுக்கு வந்துவிட்டேன். உங்களை முதல் நாள் கண்டபொழுதே நான் உங்கள் அடிமையாகி விட்டேன்.

நெ. செ: என்ன கூறினாய்? உண்மையாகவா? நீ தான் பேசுகிறாயா?

நல்: ஆம் அரசே; என் நிலையையும் உங்கள் நிலையையும் பாராது என் மனம் உங்கள்பால் சென்று விட்டது. இது நடவாத காரியம் எனப் பல முறை எனக்கு நானே கூறிக்கொண்டுங்கூட என் மனம் கேட்கவில்லை.

நெ. செ: நீ கூறுவது உண்மைதான். முதன்முறை உன்னைக் கண்டபொழுதே என் மனமும் நிலை கொள்ளவில்லை. எதற்கும் சலியாத என் மனம் உன்னைக் கண்டவுடன் சலித்த காரணம் என்னவோ?

நல்: அரசே, அந்தப் பாடல் உங்களுக்கு ஞாபகம் இல்லையா?

'யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே!'

நெ. செ : வேண்மாள், சரியாகக் கூறினாய்! ஞாபகத்துக்கு வருகிறது அப் பாடல். சேரர் சிறையில் இருந்ததும் நன்மையேயாயிற்று. உன்னைச் சேரர் தந்த செல்வமாகவே கொள்வேன். இன்றேல், வாழ்க்கைக்கு உறுதுணையான கலைச்செல்வியாகிய உன்னை எங்கே கண்டிருக்கப்போகிறேன்!

நல் : ஆம் அரசரே, 'வருவதெல்லாம் நன்மைக்கே' என நம் நாட்டில் வழங்கும் பழமொழி நம்மிடையே உண்மையாயிற்று.

நெ. செ : வேண்மாள், இன்னும் நீ யாரென்பதைக் கூறவில்லையே?

நல் : அரசே, யான் திக்கற்றவள் என்பதை அறிந்தால் நீங்கள் என்னைக் கைவிட்டுவிடுவீர்களா?

நெ. செ : திக்கற்றவளாய் இருப்பினும், என் மனங்கவர்ந்த நீ இனித் திக்கற்றவளாய் இருக்க வேண்டுவதில்லை. நீ யார் என்பதைக் கூற வேண்டாவா? உன் தந்தையார் யார்?

நல் : அரசே, அந்த ஒரு கேள்விமட்டும் கேட்க வேண்டா. தயைகூர்ந்து மன்னித்துவிடுங்கள்! காலம் வரும்பொழுது...

நெ. செ : காலம் வருவதா? எப்பொழுது? காலத்தை நாம் அல்லவா வரவேற்கவேண்டும்? நீ யாரென்

பதை அறியாமல் எவ்வாறு திருமண ஏற்பாடுகள் செய்வது? உடனே கூறு.

நல்: அரசே, பொறுத்தருள வேண்டுகிறேன். என் தாய் தந்தையர் பெயரை வெளியிடும் உரிமை எனக்கு இப்பொழுது இல்லை. விரைவில் வந்து உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவேன்.

நெ. செ: ஆ! என்ன சொன்னாய்? விரைவில் வந்தா? அப்படியானால், எங்காவது போக வேண்டும் என்று கூறுகிறாயா?

நல்: ஆம் அரசே, யான் என் தாய் நாடு சென்று மீள வேண்டும்.

நெ. செ: தாய் நாடு செல்வதா? ஏன்? எவ்வாறு உன்னைப் பிரிந்து நான் உயிர் வாழ்வேன்? அது முடியாத காரியம்! உன் தாய் தந்தையர் பெயர் கூறாவிடினும் கவலை இல்லை. திருமண ஏற்பாடுகள் நடைபெற ஏவிவிடுகிறேன்.

நல்: வேண்டா! வேண்டா! உங்களைப் பிரிந்து இருக்க என்னால்மட்டும் இயலுமா? இருந்தாலும், காலத்தையும் என் நிலையையும் நினைத்து இச் செயலுக்குத் துணிகிறேன்.

நெ. செ: வேண்மாள், ஏன் இந்தப் பிடிவாதம்? திருமணம் முடிந்த பிறகு பாண்டிமாதேவியாகப் பலர் அறிய உன் நாட்டுக்குச் சென்று வரலாகாதா?

நல்: அரசே, அது முடியாத காரியம். நமது காதலின் மேல் ஆணை! நான் உறுதியாகத் திரும்பி

வருகிறேன்; என் தந்தையார் அனுமதியுடன் மீண்டு வருகிறேன்.

நெ. செ: அன்பே, நீ வரமாட்டாய் என யான் சந்தேகிக்கவில்லை. தாய் தந்தையர் அனுமதி பெற்றுத்தான் திருமணம் நடைபெற வேண்டும் என்பது தமிழர் மரபு அல்லவே!

நல்: அறிவேன் அரசே, எடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிக் காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு படுவதே தமிழர் மண வாழ்க்கை என்பதை நன்கு அறிவேன்.

நெ. செ: பின்னர் ஏன் திருமணத்தின் முன்னர் ஊர் சென்று வர வேண்டும்?

நல்: அன்பரே, உங்களிடம் மனம் திறந்து பேச உரிமை அற்றவளாய் இருக்கிறேன். ஒரு முறை ஊர் சென்று மீள உத்தரவு தர வேண்டும்.

நெ. செ: வேண்மாள், ஏதோ என் மனத்தில் ஒரு கலக்கம் ஏற்படுகிறது!

நல்: அரசே, அஞ்ச வேண்டா. எக்காரணத்தாலும் நான் வருவது தடைப்படாது.

நெ. செ: அன்பே, என் அன்பிற்குரிய மாங்குடி மருதனாரை ஒரு சொல் கேட்டுவிட்டால் ஓரளவு ஆறுதல் ஏற்படும். அவரைக் கேட்டுவிட்டு உனக்கு விடை தருகிறேன்.

நல்: ஐயோ! வேண்டா! அவர்கள் நமது காதலை அறிந்தால், நான் யாரென்பதைக் கூற வேண்டும்.

அந்த இக்கட்டான நிலைக்கு நாம் செல்லவேண்டா. என்மேல் உங்கட்கு நம்பிக்கை பிறக்கவில்லையா இன்னும்?

நெ. செ: அன்பே, நம்பிக்கை இல்லாமலா, சேரர் தப்பியதையும் மறந்து, உன்னுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன்? ஆனால், மனம் அமைதி இழந்துவிட்டதே! என் செய்வேன்!

நல்: விரைவிற்சென்று மீள்வேன். நீங்களாவது அரசியல் அலுவல்களில் ஈடுபட்டு என்னை மறந்தும் இருக்கலாம். ஆனால், நான் எவ்வாறு பிரிந்து செல்வேன்? எனினும், நம் இருவருடைய நலம் கருதியே நான் செல்ல வேண்டும்.

நெ. செ: என்ன! நம் இருவருடைய நலமா? நீ போகாவிடின் எனக்குத் தீங்கு விளையும் என்று கூறுகிறாய்?

நல்: ஆம் அரசே.

நெ. செ: இதற்காகவா நீ செல்ல வேண்டும்? வேண்டா! நெடுஞ்செழியனுக்குத் தீங்கிழைக்கக் கடவுளைத் தவிர ஒருவராலும் இயலாது. அஞ்ச வேண்டா! நீ செல்லவும் வேண்டா!

நல்: அரசே, நான் ஊர் சென்று மீண்டால் ஒழிய, அமைதியாக வாழ முடியாது. அமைதியற்ற வாழ்க்கை வாழ நான் விரும்பவில்லை.

நெ. செ: சரி! சென்று வருவது உனக்கு நலமானால், நான் ஒன்றும் தடை கூறவில்லை. ஒரு வேளை நீ வரத் தாமதித்தால், உன் தந்தையார் பெயரும்

தெரியாத நிலையில் உன்னை எவ்வாறு தேடுவது? அதையாவது கூறிவிட்டுச் செல்.

நல் : (வருத்தமான குரலில்) வேண்டா அன்பரே! உறுதியாக வந்து சேருகிறேன். இறப்பதாயினும் உங்களிடம் வந்துதான் இறப்பேனே தவிர, அங்கு இறக்க மாட்டேன்! வாழ்க நம் அன்பு! சென்று வருகிறேன். விடை தருக.

நெ. செ : (வருத்தமான குரலில்) வேண்மாள், இதோ இந்தக் கணையாழியைக் கொண்டு செல். கோட்டை வாயிலைக் கடந்து வெளியேற இஃது உதவும்; நீ சென்றவிடத்திலும் என் நினைவை உண்டாக்கும். சென்று வா!

[நல்லினி வெளியே செல்கிருள்.]

ஆ! சென்றுவிட்டாளா! வெறுங்கையோடு வந்தவள் என் உயிரையே அல்லவா கவர்ந்து சென்றுவிட்டாள்!

அங்கம்—II காட்சி—3

[சேரனது அரண்மனை. ஒரு தனிப்பட்ட அறையில் சேரமான் இரும்பொறையும் அமைச்சன் வில்லவன் கோதையும் பேசுகின்றனர். மூன்று இருக்கைகள் காலியாய் இருக்கின்றன. அந்தரங்க ஆலோசனை நடைபெறுகிறது என்பதை அறிவிக்க உருவிய வாளுடன் காவலன் ஒருவன் வெளிப்புறத்தில் உலவுகிருன்.]

இ. பொ : (இங்கும் அங்குமாக உலவிக்கொண்டு) வில்லவன்கோதை, என்ன இருந்தாலும் அவன்

உயிருடன் இருக்கும் வரை நான் அமைதியாய் இருக்க முடியாது.

வி. கோ : (நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு) அரசரே, இதற்குள் போரைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டீர்களா ? தயைகூர்ந்து இன்னும் சில காலத்திற்கு இந்த யோசனையே செய்ய வேண்டா.

இ. பொ : (சற்று நேரம் அமைதியாய் உலவிவிட்டுத் திடீரென்று நின்று) அமைச்சரே, பாண்டி நாட்டு மக்கள் நமக்கு ஒன்றும் தீங்கு செய்ய வில்லை அல்லவா ?

வி. கோ : யார் அவர்களைப்பற்றிக் குறை கூறினார்கள் ?

இ. பொ : அந்தப் பாண்டியப் பதர்தானே நமக்குப் பகைவன் ? பகைவன் உயிருடன் இருக்கும் பொழுது நாம் அமைதியாக இருக்க முடியுமா ?

வி. கோ : அரசே, பகை என்றாலும் காலம் பார்த்து …………

இ. பொ : ஒருவனை அழிக்கக் காலம் பார்ப்பது எதற்கு ?

வி. கோ : அந்த ஒருவன் எவ்வளவு படை சூழ இருக்கிறான் என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டாவா ?

இ. பொ : அறிவு மிகுந்த உமக்கும் நான் கூறுவது விளங்கவில்லையா ?

வி. கோ : எதைச் சொல்லுகிறீர்கள் ?

இ. பொ : போர் செய்து அவனை ஒழிக்க நாளாகுமானால், ஏன் வேறு வழியில் அச் செயலை முடிக்கக்கூடாது ?

வி. கோ : வேறு வழியென்றால்...........?

இ. பொ : (தணிந்த குரலில்) வஞ்சகமாக ஏன் அழிக்கக்கூடாது என்கிறேன்.

வி. கோ : ஆ ! அரசே, நீங்களா இவ்வாறு கூறுகிறீர்கள் !

இ. பொ : ஏன் ? இதில் தவறு என்ன ?

வி. கோ : ஒரு தமிழன் செய்யும் காரியம் அன்றே இது !

இ. பொ : பாண்டியன் நெடுஞ்செழியனை அழித்தே தீரல் வேண்டும் ! அது போரால் முடியாது என்றால் வேறு வழி செய்வதில் தவறு என்ன ?

வி. கோ : அரசே, உலகம் உள்ளவரையில் தீராத பழியைத் தேடிக்கொள்வதா ?

இ. பொ : பழி வாராத முறையில் ஏன் செய்யக் கூடாது ?

வி. கோ : அரசே, 'பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'[1] என்றும் 'கழியக் காதலர் ஆயினும் சான்றோர், பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்'[2] என்றும் பெரியோர் கூறுவன நமக்கு அல்லவா?

இ. பொ : இவை எல்லாம் எனக்கு இப்பொழுது தேவை இல்லை. என் மனம் இம்முறையில் ஈடுபடத் துணிந்துவிட்டது!

வி. கோ : அரசே, அமைச்சன் என்ற முறையில் கூற வேண்டுவது என் கடமையல்லவா? நீங்கள் இச் செயலில் ஈடுபடுவதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கமுடியாததற்கு வருந்துகிறேன்!

இ. பொ : என்ன வில்லவன் கோதை! என் கருத்துக்கு நீர் உடன்படவில்லையானால் நீர் வெளியே இருப்பதே தீமை. ஆகவே, உம்மைச் சிறையில் வைக்கப்போகிறேன். நான் நினைத்தது முடியும் வரை நீர் சிறையில் இருக்கவேண்டும்.

நல் : (நல்லினி உள்ளே நுழைந்து) யார் அப்பா சிறையில் இருக்கவேண்டும்? ஏன்?

இ. பொ : வா, வா, என் கண்ணே, உன் உடல் நிலை நன்றாய் இருக்கிறதா? அந்தக் கயவர்களிடமிருந்து நீ தப்பிவந்த பின் உன் உடல்நிலையைப்பற்றியதே என் கவலை எல்லாம்.

---

1. புறம். 182. 2. அகம். 112

நல் : அவர்கள் கயவர்கள் அல்லர் அப்பா; மனிதரை மனிதராக நினைத்து நடத்தும் தமிழ்ப் பண்பு நிரம்பியவர்கள்.

இ. பொ : (கோபமான குரலில்) நல்லினி, நீயுமா அவர்கள் புகழைப் பாடத் தொடங்கிவிட்டாய்?

நல் : அப்பா, சிறைக்கு அனுப்பப் போவதாக அமைச்சரிடம் கூறிக்கொண்டிருந்தீர்களே? யாரை ?

இ. பொ : ஆம். வில்லவன் கோதையைத்தான்.

நல் : என்ன கூறினீர்கள்! நீங்கள் இல்லாதபொழுது ஒப்பற்ற முறையில் ஆட்சி செய்து, உங்களை மீட்கவும் வசதி செய்த நம் குலதெய்வம் அல்லரோ இவர்! இவரையா நாம் சிறைக்கு அனுப்புவது!

இ. பொ : நல்லினி, நான் அமைக்கும் திட்டங்கள் அனைத்திற்கும் முட்டுக்கட்டை இடுவதுதானு அமைச்சர் கடன் ?

நல் : அப்பா, 'இடித்துச் சொல்லுபவரை அமைச்சராகப் பெற்ற மன்னனை யாரும் கெடுக்க முடியாது'[1] என அறநூல் கூறுவதை மறந்து விடக்கூடாது. நீங்கள் கூறுவது பொருத்தமற்றதானுல் அமைச்சர் வேலை அதை மறுத்துப் பேசவேண்டுவதுதானே ?

---

1. 'இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்?' —குறள், 447

இ. பொ : பகைவரை அழிக்கவேண்டும் என்ருல், அதைக்கூட மறுத்துப் பேசுவதுதான் முறையா ?

நல் : அமைச்சரே, அப்படி என்ன கூறினீர் ? நான் அறியலாமா ?

வி. கோ : உங்கட்குக் கூறலாகாத மறைபொருளும் உண்டா ? ஆனுல், அதைக் கூறவும் என் மனம் நடுங்குகிறதே !

இ. பொ : அந்தப் பாண்டியப் பதர் நெடுஞ்செழியனை வஞ்சகத்தால் வெல்ல வேண்டும் என்று கூறினேன்.

நல் : என்ன ! நீங்கள்தான் பேசுகிறீர்களா அப்பா ! தமிழன் செய்யும் காரியமா அது? மேலும், பாண்டியர் எவ்வளவு நல்லவர் ! அவரை அழிப்பதா ! அதுவும் வஞ்சகச் சூழ்ச்சியாலா ?

இ. பொ : நல்லினி, ஏன் பதறுகிருய் ? பாண்டியன் நம் குலப்பகைவனல்லவா ?

நல் : அப்பா, ஏன் இப்படி அவரைப்பற்றி அவதூறு பேசுகிறீர்கள் ? நீங்கள் தப்ப வழிசெய்த என்னை மன்னித்து இங்கு வருமாறு செய்த பரம கருணை உடையவரையா வஞ்சனையால் அழிப்பது ?

இ. பொ : (வருத்தம் தோய்ந்த குரலில்) பெற்று வளர்த்த என்னைவிட உனக்கு அவன் நல்லவனுகிவிட்டானு ! தாயில்லா உன்னைத் தாயாகவும் இருந்து தாங்கிய எனக்கு நீ செய்யும் கைம்மாறு

இதுதானா? 'பாம்பை வீட்டிலேயே வளர்த்தான் சேரன்!' என்ற பழிக்கும் இடம் உண்டாகிவிட்டதா?

நல்: அப்பா, தயைகூர்ந்து இத்தகைய சுடு சொற்களைக் கொட்டவேண்டா. நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால், அமைச்சரைச் சிறையிடவேண்டா.

இ. பொ: சரி, நீங்கள் இருவரும் போகலாம்.

[இருவரும் போகின்றனர். சேரன் சற்று நேரம் உலாவுகிறான்.]

இ. பொ: யார் அங்கே? காவல!

காவலன்: அரசே, ஆணை.

இ. பொ: வெளியே காத்திருக்கும் நாட்டியக்காரி நற்சோணையை உடனே அழைத்துவா.

[நற்சோணையைக் காவலன் அழைத்து வந்து விட்டு, தான் வெளியே செல்கிறான்.]

என்ன நற்சோணை! யான் கூறியதுபற்றிச் சிந்தித்தாயா?

நற்சோ: சிந்தித்தேன் அரசே! இன்னும் என் மனம் உறுதி பெறவில்லை. தமிழ்ப் பெண் ஒருத்தி இத்தகைய இழிசெயலைச் செய்ய முற்படுவது உலகு உள்ளவரை பழி தேடிக்கொள்வதாகும்.

இ. பொ: எனக்கு அறவுரை கூற அமைச்சர் பலர் இருக்கின்றனர். நீ அச் செயலில் ஈடுபட

வேண்டா. இஃது என் ஆணை. நாளைக் காலையில் நீ மதுரைக்குப் புறப்பட வேண்டும். உடனே செல்க.

நற்சோ : ஆணையின்வண்ணம் சென்று வருகிறேன் அரசே !

[வெளியே சென்று காவலனிடம் மெல்லப் பேசுகிறாள்.]

காவல, இளவரசியார் எங்கு உள்ளார் ?

காவலன் : அம்மா, அவர் வேனிற்கால வீட்டில் உள்ளார்.

நற்சோ : நல்லது ! அரசரிடம் யான் இளவரசியாரைப் பார்க்கப் போவதாகக் கூறவேண்டா.

காவலன் : நல்லது தாயே !

அங்கம்—II காட்சி—4

[மதுரையில் பாண்டியன் அவை. அரசனும் புலவர் மாங்குடி மருதனாரும் சம உயரமான இடத்தில் இருக்க, அமைச்சன் வீரபாண்டியன் முதலியவர் வலப்புறம் இருக்க, காவலர் பலர் இடப்புறம் சூழ்ந்து நிற்க, இடையே அகன்ற இடத்தில் நற்சோணையின் நாட்டியம் நடைபெறுகிறது. அவளுக்கு வயது இருபதுக்குள் இருக்கும். சேரநாட்டு அழகுடன் நல்ல நாட்டியப் பயிற்சியும் காணப்படுகின்றது. நாட்டிய இசை பழைய கருநாடக இசையாயிருக்கிறது. கூடுமானவரை பாடல் ஒன்றும் இல்லாமல் ஸ்வர ஜதி அல்லது அலாரிப்பாக நிகழ்கிறது. நாட்டிய முடிவில் உரையாடல் தொடங்குகிறது.]

நெ. செ: கவிஞர்பிரானாரே, இவ்வளவு அழகாக நாட்டியம் ஆடிய இப் பெண்மணிக்கு என்ன பரிசில் தரலாம்?

மா. மரு: அரசே, நீங்கள் விரும்பும் எதுவும் தரலாம்! இது சிறந்த நாட்டியம் என்பதற்கு ஐயம் இல்லை.

நெ. செ: நற்சோணை, உனக்குப் பதினாயிரம் பொன் பரிசிலாகத் தந்துள்ளேன். ஏற்றுக்கொள்.

நற்சோ: அரசே, நான் உங்கள் அன்பை நாடி வந்தேனே தவிரப் பரிசிலை நாடி வரவில்லை. உங்களைத் தனியே கண்டு சில பேசவேண்டும்.

நெ. செ: என்னிடம் தனியாகப் பேசவேண்டுமா? (இருவரும் தனியே ஓர் அறைக்குள் வருகின்றனர்) என்ன பேசவேண்டும் என்பதை உடனே கூறுக.

நற்சோ: அரசே, நான் உங்கள் காதலி வேண்மா ளிடமிருந்து வருகிறேன்.

நெ. செ: ஆ! அப்படியா! ஏன் அவள் இன்னும் வர வில்லை? அவளைக் காணுமல் நான் படும்பாட்டை அவள் அறியாளா? யார் அவளை வரவொட்டாமல் தடுப்பவர்?

நற்சோ: மன்னர் மன்னரே, அவள் முதலில் இந்தப் பாடலை உங்களிடம் தருமாறு எழுதித் தந்தாள்.

[ஓர் ஓலைச்சுருளைத் தருகிருள்]

நெ. செ: ஆ! என் கண்மணி கவிதை புனைவதில் நிகரற் றவளல்லவா! என்ன கவிதை?

[சாவேரி இராகத்தில் உரக்கப் படிக்கிருன்]

‘ நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.’[1]

ஆ! எவ்வளவு அருமையாகத் தனது காதலை வெளியிட்டுள்ளாள்!

நற்சோ: அரசே, இன்னும் ஒன்று. சேரநாட்டிலிருந்து எந்தப் பரிசிலை யார் கொண்டு வந்தாலும் அதனை ஏற்காமல் ஒதுக்கிவிடுமாறு உங்களை வேண்டிக்கொண்டாள்.

நெ. செ: சரி பெண்ணே, அவள் யாரென்பதை இன்னும் அறியாமல் இருப்பது சரியா? அவள் யாரென்பதை நீதான் தெரிவிக்கக்கூடாதா?

---

1. குறுந்தொகை, 3

நற்சோ: அரசே, மன்னித்தருள்க! அவள் உங்களிடம் உயிரையே வைத்திருக்கிருள் என்பதைத் தவிர, வேறு ஒன்றும் கூற முடியாத நிலையில் இருக்கிறேன்!

நெ. செ: இன்னும் எத்தனை நாள் நான் காத்திருப்பது?

நற்சோ: அவள் விரைவிலே வந்து சேருவதாகச் சொல்லச் சொன்னுள்.

நெ. செ: நீ சென்று என் நிலையை அவட்குக் கூறுக; விரைவில் வருமாறு சொல்க; சென்றுவருக!

அங்கம்—II காட்சி—5

[சேரன் அரண்மனையில் தனி அறை. சேரன் கடு கடுத்த முகத்துடன் கண்களில் கோபக்கனல் வீச அமர்ந்துள்ளான். நற்சோணை அக் கோபத்திற்குச் சற்றும் கலங்காமல் நின்றுகொண்டிருக்கிருள்.]

இரும்பொறை: நற்சோணை, நமது ஆணையை நிறை வேற்றினுயா?

நற்சோ: இல்லை அரசே, அவர் திருமுன்னர்ச் செல்வதும் இயலாததாகிவிட்டது! என்செய்வேன்!

இ. பொ: தெரியும் எனக்கு! நீ கூறுவது பெரும்பொய்! என் ஒற்றர்கள் உனது செயல் முழுவதையும் கண்காணித்து உனக்கு முன்னரேவந்து செய்தி அறிவித்துவிட்டனர்.

நற்சோ: ஆ! ஒற்றரா? என் செயலைக் காண ஒற்றரை ஏவினீர்களா? நல்லது! என் செயலைத்தான் அறிந்துகொண்டீர்களே! இனி எது வேண்டுமாயினும் செய்யலாம்.

இ. பொ: பாண்டியனைத் தனியே அழைத்து யாது கூறினுய்?

[நற்சோணை ஒன்றும் பேசாது நிற்கிருள்.]

இ. பொ: ஏன் பேசாதிருக்கிருய்? சொல்லு!

நற்சோ: அரசே, என் உடம்புதான் உங்கட்கு அடிமையே தவிர, என் உயிர் அடிமையன்று. அஃது இறைவனுக்குரியது. நீங்கள் அதை ஒன்றுஞ் செய்ய இயலாது.

இ. பொ : நீ அவனிடம் தனியே கூறியது என்ன?

நற்சோ : நான் அதைக் கூறமுடியாதவளாய் இருக்கிறேன். நீங்கள் என்னைக் கொன்றாலும் அது பற்றிக் கூறமாட்டேன்!

இ. பொ : நாட்டின் கேட்டுக்கு வழி தேடிய உன்னை என்ன செய்தால் தகாது!

நற்சோ : அரசே, நாட்டின் பாதுகாவலுக்கோ, நலத்துக்கோ, ஒரு சிறிதும் யான் தீங்கு இழைக்கவில்லை என்பதைமட்டும் உறுதியாகக் கூறுகிறேன்.

இ. பொ : இப்பொழுது உண்மையைக் கூறுவிட்டால் உன்னைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தப் போகிறேன்!

நற்சோ : சிறைக்கு மட்டுமன்றி, சித்திரவதைக்கே அனுப்பினும் சரி! என் வேலை முடிந்துவிட்டது! நான் மகிழ்ச்சியுடன் செல்கிறேன்! குற்றமற்ற ஒரு பெண்ணைத் தண்டித்த பழிதான் உங்களைச் சாரும்.

[வாயிற்காவலன் வருகிறான்.]

வாயிற்காவலன் : அரசே, வாழ்க! சோழ நாட்டிலிருந்து—சோழர் பெருநற்கிள்ளியிடமிருந்து—தூதுவர் வந்துள்ளார். உடனே உங்களைக் காண வேண்டும் என்கிறார்.

இ. பொ : இவளை அழைத்துச்சென்று சிறையிலிட்டு விட்டு, உடனே அவரை அழைத்துவா.

[வாயிற்காவலன் நற்சோணையுடன் செல்கிருன். சோழன் தூதுவன் வருகிருன்.]

இ. பொ: வருக! வருக! சோணாட்டின் தூதுவரே, வருக! நும் வரவு நல்வரவாகுக! சோழர் பெருநற்கிள்ளி நலந்தானே?

தூது: சேர மன்னரே, வணக்கம்! சோழ மன்னர் தமது அன்பை உங்களுக்குத் தெரிவிக்க உத்தரவு இட்டுள்ளார். இந்தப் பரிசில்களை அவர் அன்பிற்கு அடையாளமாக ஏற்றருள்க!

[பணியாளர் நால்வர் பரிசில்களைச் சுமந்து வந்து உள் வைத்து, வணங்கி வெளியேறுகின்றனர்.]

இ. பொ: நல்லது! எனது அழைப்பிற்கு இணங்கி உடனே உம்மை அனுப்பியதற்கு எனது நன்றி உரியதாகுக! யார் அங்கே?

காவ: அரசே, ஆணை என்ன?

இ. பொ: இந்தப் பரிசில்களை உள்ளே எடுத்துவை. நமது ஆணை இன்றி யாரையும் உள்ளே விடாதே—இளவரசி நல்லினியைக்கூட—தெரிகிறதா?

காவ: ஆணை அரசே!

இ. பொ: தூதுவரே, உம்மை அழைத்ததன் காரணம் அறிந்திரா?

தூது: அரசே, அதுபற்றிச் சிந்திக்க நேரமில்லை. உடனே வரவேண்டும் என்ற உங்கள் ஓலையைக் கண்டவுடன், சோழர் வேறு ஆராயாமல் என்னை அனுப்பினுர்.

இ. பொ : சரி! அப்படியாயின், பாண்டியன் நெடுஞ் செழியனைப்பற்றி உம் மன்னர் என்ன நினைக் கிருர்?

தூது : எம் மன்னர் என்ன நினைக்கிருர் என்பதை நான் எவ்வாறு கூறமுடியும்?

இ. பொ : தூதுவரே, வன்மையுடன் வார்த்தை யாட இது நேரமன்று! நான் பாண்டியனை முழு மனத்துடன் பகைக்கிறேன்; வெறுக்கவுஞ் செய் கிறேன்.

தூது : அது தெரியாத ஒன்று அன்றே? நீங்களே அவருடன் போரிட்டீர்களே?

இ. பொ : அந்தப் போரில் நான் தோற்றுப்போனது பற்றி உம் அரசர் என்ன நினைக்கிருர்?

தூது : அவர் மிகவும் வருந்திஞர்! சிறிது அவசரப் பட்டு, காலம், இடம், சூழ்நிலை பாராமல் நீங்கள் போரில் இறங்கிவிட்டதாக அப்பொழுது கருதிஞர்.

இ. பொ : சரி; இப்பொழுது காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றை நன்கு சிந்தித்துப் போர் செய்ய லாம் என நினைக்கிறேன்.

தூது : நன்ருகச் செய்யுங்கள்! யார் உங்களைத் தடை செய்ய முடியும்?

இ. பொ : இது கூறுவதற்காகவா உம்மை அவ்வளவு நீண்ட தூரத்திலிருந்து மலைநாட்டுக்கு அழைத் தேன்?

தூது : விளங்கவில்லை அரசே! நீங்கள் கூறுவதை விளக்கிக் கூறுதல் நல்லது.

இ. பொ : இனியும் மறைமுகமாகப் பேசுவதில் பயனில்லை. நேரடியாகக் கூறினால் நீர் தவறாக நினைக்க மாட்டீரே ?

தூது : சேரவேந்தரே, மிகவும் முக்கியமான காரியம் என்று நீங்கள் எழுதியிருந்ததாலேதான் எங்கள் அரசர் என்னை அனுப்பினார். நீங்கள் நேரடியாக எந்த மறைபொருளையும் பேசலாம்.

இ. பொ : நான் பாண்டியன்மேல் படையெடுத்தால் சோழர் உதவிக்கு வருவாரா ?

தூது : வருவார் என்றே நினைக்கிறேன். நீங்கள் விரும்பினால் இது நடைபெறும்.

இ. பொ : சென்ற முறையிலேயே இது செய்யாமற் போனது என் பெருந்தவறு. போனது போகட்டும்! உறுதியாக அவர் வருவாரா ?

தூது : உறுதியாக வருவார். போருக்குப் பிறகு வையை ஆற்றின் வடபகுதி முழுதும் எங்கட்கு வந்துவிட வேண்டும். இதற்கு நீங்கள் உடன் படுவதாயின்..............

இ. பொ : சரி; அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். பிறகு.........

தூது : இதற்கு நீங்கள் உடன்படுவதால் மற்றவை எளிதில் தீர்ந்துவிடும். எப்பொழுது புறப்படுவதாக நினைவு ?

இ. பொ : வருகிற முழுமதி நாளன்று போர் தொடங்கிவிட வேண்டும். உங்கட்கு இது முடியுமா?

தூது : சோழர் படை தயாராய் இருக்கிறது. எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

இ. பொ : தலையாலங்கானமே போருக்குத் தகுந்த இடம் என்று முடிவு செய்துள்ளேன். அந்தக் கோட்டை பற்றுதற்கு எளிதானது.

தூது : அப்படியே செய்துவிடலாம். இன்னும் வேறு துணைவர் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

இ. பொ : உண்டு. நீவிர் வந்துசேருமுன்னரே அனைத்தும் தயார் செய்துவிட்டேன்.

தூது : யார் யார் துணை என்பதை அறியலாமா?

இ. பொ : நாம் இருவர் அல்லாமல், ஐவர் உளர். திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற இந்த ஐவரும் நாம் கூறும் இடத்திற்கு வருவர்.

தூது : நல்லது அரசரே, வருகிற முழுமதியன்று காலை பகலவன் உதயஞ் செய்து பத்து நாழிகை ஆனவுடன் சோழர் படை தலையாலங்கானத்தில் காத்து நிற்கும்.

இ. பொ : படைக்கு யார் தலைமை வகித்துவரப் போகிறார்?

தூது : ஏன்? சோழரே தலைமை தாங்கி வருவார். அவர் படை இதுவரை காணுத பெரும்படை யாய் இருக்கும்.

இ. பொ : மிகவும் நல்லது! சோழருக்கு என் அன்பை யும் நன்றியையும் தெரிவியும்.

[தூதுவன் செல்கிறுன். மற்றேர் அறையில் வில்லவன்கோதையும் நல்லினியும்]

நல் : அமைச்சரே, உங்களை ஒன்று கேட்கலாமா?

வி. கோ : அரசியீர், நீங்கள் கேட்பதற்கு என்ன தடை?

நல் : அரசருடன் பேசிக்கொண்டிருப்பவர் யார்?

வி. கோ : அம்மையீர், அவர் சோழனுக்கு அந்தரங்கத் தூதர்.

நல் : நம் பகைவராகிய சோழர் தம் அந்தரங்கத் தூத ருக்கு இங்கு என்ன அலுவலாம்?

வி. கோ : நம் அரசரது அழைப்பின்மேல் வந்துள் ளார்.

நல் : அழைப்பு அனுப்பவேண்டிய அவசரம் என்ன?

வி. கோ : சில நாட்களாகவே வேற்றரசர்களின் அந்தரங்கத் தூதர்கள் இங்கு வந்து போகின் ருர்கள்.

நல் : அமைச்சராகிய உம்மையும் கேளாது என்ன சூழ்ச்சி செய்கிருர் அரசர்?

வி. கோ : என்னை அவர் கேளாவிடினும், நடப்பது எனக்குத் தெரியாமல் இல்லை.

நல் : உம்மைப்போலவே நானும் அரசர் வெறுப்புக்கு ஆளாகிவிட்டேன்! இருவரும் ஒரே காரணத்தால் வெறுக்கப்பட்டது விந்தையே!

வி. கோ : இளவரசியீர், நம் அரசர் மீட்டும் பாண்டி நாட்டின்மீது படை எடுக்கப்போகிறார்.

நல் : ஆ! என்ன! மறுபடியுமா? ஏன் தந்தையாருக்கு இந்த அறிவீனம்? அவர் குணக் குன்றாகிய பாண்டியரை ஏன் இவ்வாறு வெறுக்கிறார்?

வி. கோ : அதற்காகத் தம் பகைவனாகிய சோழனையும் நட்பாக்கிக்கொள்கிறார். இது வியப்பல்லவா?

நல் : அமைச்சரே, இதை எப்படியும் பாண்டி மன்னருக்கு நான் தெரிவிக்க வேண்டும். என்ன சொல்கிறீர்?

வி. கோ : நான் என்ன சொல்வது அம்மா? நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்.

நல் : நீங்கள் இதில் உதவி செய்ய முடியுமா?

வி. கோ : நீங்களாகச் செய்வதுதான் நல்லது. நான் செய்தால் பயன்படாது போவதோடு, அது தீங்காகவும் முடியும்.

நல் : அப்படியானுல், நானே பாண்டியருக்கு இதனை அறிவிக்கிறேன்.

[இரும்பொறை உள்ளே நுழைகிருன்.]

இ. பொ : எதை அறிவிக்கப்போகிருய் மகளே ?

நல் : ஆ ! அப்பா, எப்பொழுது இங்கே வந்தீர்கள் ?

இ. பொ : ஏன் ? பயமா இருக்கிறதா ? பாண்டியப் பதருக்கு நான் படையெடுக்கப் போவதை அறிவிக்க நீ வில்லவன் கோதையைக் கெஞ்சின பொழுதே வந்துவிட்டேன்.

நல் : ஏன் அப்பா உங்கட்கு இந்த மனநிலை? பழைய பகைவனுகிய சோழனையும் நட்பாக்கி, ஒரு பாவமும் அறியாத பாண்டியர்மேல் ஏன் படை எடுக்க வேண்டும் ?

இ. பொ : இந்த அரசியல் தொல்லைகளில் நீ தலையிட வேண்டா. இது கிடக்கட்டும்; பாண்டியனிடம் உனக்கு ஏன் இவ்வளவு பற்று என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

நல் : உங்கட்கு ஏன் அவரிடம் இவ்வளவு பகைமை?

இ. பொ : சரி ! சரி! உன்னுடன் பேச எனக்கு நேரமில்லை. நீ யாரையாவது அனுப்புவது தெரிந்தால், என் கோபம் எல்லை கடந்துவிடும்! பெற்ற தந்தைக்குத் தீங்கு இழைக்காதே நல்லினி ! நான் போய் வருகிறேன்.

[இரும்பொறை வெளியேறுகிருன்.]

நல் : ஈதென்ன கொடுமை? நான் ஒன்றுமே செய்ய இயலாதுபோலத் தோன்றுகிறதே!

வி. கோ : ஆம் அம்மணி. இனி ஆள் அனுப்பும் எண்ணத்தை அறவே விட்டுவிட வேண்டுவது தான்.

நல் : சரி; ஆள் அனுப்ப முடியாது. ஆனுல்,.........

வி. கோ : என்ன! அம்மா 'ஆனுல்' என்கிறீர்களே? என்ன நினைவு?

நல் : ஒன்றுமில்லை, நான் சென்று வருகிறேன்.

அங்கம்—II காட்சி—6

[பாண்டியன் அரண்மனையில் தனி அறை. அரசனும் புலவர் மாங்குடி மருதனாரும் எதிர் எதி ராய் அமர்ந்து உரையாடுகின்றனர். அரசனுக்கு இடப்புறம் அமைச்சன் நிற்கிறான். இந் நிலையில் வாயிற்காவலன் உள்ளே வருகிறான்.]

காவலன் : அரசரே, ஒற்றன் ஒருவன் குதிரைமேல் வந்துள்ளான். மிக்க அவசரமாம். உங்களைக் காணவேண்டுமாம்.

நெ. செ : சரி; வரச்சொல்.

[ஒற்றன் வருகிறான்.]

ஒற்றன் : செழிய வேந்தரே, வணக்கம் !

[விழுந்து வணங்குகிறான்.]

நெ. செ : ஏன் இவ்வளவு அவசரம் ?

ஒற்றன் : அரசரே, தலையாலங்கானம் நோக்கிச் சேரர், சோழர் இருவருடன் சிற்றரசர் பலர் படையும் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன.

நெ. செ : என்ன சொல்கிறாய் நீ ? சேரநாடு எங்கே. சோழன் எங்கே ? இருவரும் போரிடுகின்றனரா ?

ஒற்றன் : இல்லை அரசரே! இருவருஞ்சேர்ந்து தலை யாலங்கானம் நோக்கி வருகின்றனர். நாளை மறு நாட்காலையில் அவ்வூரினுள் நுழைந்துவிடுவார்கள்.

நெ. செ : வீரபாண்டியரே, நம் ஒற்றர்கள் ஏன் இது வரை சேர நாட்டிலிருந்து ஒரு தகவலும் அனுப்ப வில்லை ?

வீரபாண் : அரசே, சேர நாட்டில் நம் தலைமை ஒற்றர் பிடித்துக் கொல்லப்பட்டார் என்ற செய்தி இன்று காலைதான் கிடைத்தது.

நெ. செ : என்ன கொடுமை! உம்! அமைச்சரே, தலையாலங்கானக் கோட்டையை நன்கு பாது காப்பதற்குரிய ஏற்பாடுகளை விரைவில் செய்யும். ஒற்றனே, பாண்டி நாடு உனக்குக் கடமைப்பட்டுளது. நீ செல்லலாம்.

வீ. பா : அவ்வாறே செய்கிறேன்.

[அமைச்சனும் ஒற்றனும் போகின்றனர்.]

நெ. செ : புலவர் மணியே, என்ன நினைக்கிறீர்கள்? இச் சேரனை விட்டது தவறு என்று அன்றே கூறினீர்கள். நான் பெருந் தவறு செய்துவிட்டேன்.

மா. மரு : அரசே, அதுபற்றி இப்பொழுது வருந்துவதால் பயனில்லை. 'என் செய்தோம் என்று வருந்தும்படியான காரியத்தைச் செய்யக் கூடாது. தவறிச் செய்துவிட்டால், பிறகு ஏன் செய்தோம் என்று கவலைப்படுவது அதனினும் தவறு'[1] என்று அறநூல் கூறுவது தாம் அறியாததா?

நெ. செ : மற்றவை போகட்டும்; வேண்மாள் ஏன் சும்மா இருந்துவிட்டாள்?

மா. மரு : அரசரே, மன்னிக்கவேண்டும். அந்த வஞ்சியாளைப்பற்றி எனக்கு எப்பொழுதுமே நல்லெண்ணம் இல்லை.

---

1 'எற்றுஎன்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று.' —குறள், 655

நெ. செ : புலவரே, என் மனம் இன்னும் அவளைச் சந்தேகிக்கவில்லை. நாட்டியமாடும் நற்சோணை யிடமும் சில செய்திகள் கூறி அனுப்பினளே !

மா. மரு : அப்படியானல், பெரிய இந்தப் படை யெடுப்புச் செய்தியை ஏன் சொல்லியனுப்ப வில்லை ?

நெ. செ : அதுதான் எனக்கும் வியப்பாய் இருக் கிறது ! ஒருவேளை, ஏழைப் பெண்ணுகிய அவ ளுக்குச் செய்தி அனுப்ப வசதிகள் இல்லாமல் போயிருக்கலாம்.

மா. மரு : அப்படி உண்மை அன்பு உடையவளா யின், அவளே நேரில் வந்திருக்கலாமே ? மேலும், அவள் அரண்மனை உளவுகள் தெரிந்தவள் போலத் தெரிகிறதே !

நெ. செ : அஃது எப்படித் தெரியும்?

மா. மரு : அல்லாவிடில் நாட்டியக்காரியிடம் கூறி அனுப்பிய செய்திகள் அவளுக்கு எப்படித் தெரிந் திருக்க முடியும் ?

நெ. செ : ஆம் ! அப்படியானல், அவள் ஏன் இப் பொழுது செய்தி அனுப்பவில்லை ?

மா. மரு : அதனலேதான் அரசே, அவளை நம்புவதில் பயனில்லை என்று அன்றே கூறினேன்.

நெ. செ : இருந்தாலும், அவளை மறக்க இயலாது. என் மனம் அவள்மேல் ஐயம் கொள்ள மறுக் கிறது.

மா. மரு : மனம் மறுக்கலாம். ஆனால், அறிவு அவள்மீது தவறு காண்கிறதே! என்ன செய்வது!

நெ. செ : புலவரே, அவளுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு அறிவால் ஆகியது அன்று; உணர்ச்சியால் ஆகியது. ஆகவே, இந்த நிலையில் என் மனத்தையே நான் நம்புகிறேன்.

மா. மரு : அரசே, மனத்தை நம்பியதால் கிடைத்த பயன் இதுதான். இனியாவது அவளைப்பற்றிய நினைவை விட்டு ஒழியுங்கள்.

நெ. செ : அஃது இயலாக் காரியம். அவளை மறந்தால் எனக்கு வாழ்வு இல்லை. அவள் எப்படியும் வந்து சேருவாள் என்ற உறுதிமட்டும் இருக்கிறது.

காவலன் : அரசரே, ஒற்றன் ஒருவனை அமைச்சர் அழைத்துவந்துள்ளார்.

நெ. செ : வருக வீரபாண்டியரே! இப்பொழுது வந்த செய்தி என்ன?

வீ. பா : பகைப்படைகள் தலையாலங்கானத்தை நெருங்கிவிட்டனவாம்.

நெ. செ : சேரனோடு சேர்ந்த துணைவர் யார் யாராம்?

வீ. பா : சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் அறுவராம்.

நெ. செ : ஆ! எலிகள் பல ஒன்ருகச் சேர்ந்தாலும் நாகம் பெருமூச்சு விட்டாலே அழிந்துவிடும் அல்லவா ?[1]

மா. மரு : அரசே, பகைவரைக் குறைத்து மதிக்கும் பிழையை நாம் செய்யக் கூடாது.

நெ. செ : கவிஞர்பிரானீர், நாம் குறைத்து மதிக்கக் கூடாதுதான். ஆனுல், அதிகமாக மதித்துக் கொண்டு நாம் ஏன் அவதிப்படவேண்டும் ?

வீ. பா : பகைவர் எழுவர் என்பதை நினைவில் கொண்டு நாம் படை திரட்டவேண்டும்.

நெ. செ : அமைச்சரே, கணக்கிட வேண்டுமானுல், எழுவர் என்று கூறலாம். ஆனுல், பெரிய வேந்தர் இருவர் தவிர, ஏனையோர் ஐவரும் சிற்றரசர் தாமே ?

வீ. பா : ஆம் அரசே !

நெ. செ : என்ன துணிவு இவர்கட்கு ! நம்மிடம் இருக்கும் நால்வகைப் படையின் அளவும் தன் மையும் இவர்கள் அறியார்களா ?

வீ. பா : இருந்தும் நீங்கள் வயதால் இளையவர் என்ற எண்ணத்தால் இவர்கள் துணிந்தார்க ளாம்.

---

1 குறள், 763

நெ செ : (வீரச்சிரிப்புடன்) முட்டாள்கள்! பாம்பையும் புலியையும் குட்டி என்று நினைத்து எதிரே வரும் எலிகளும் மான்களும் அல்லவா இவர்கள்?

வீ. பா : அரசே, இது நெடுநாட்போராக நீடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

நெ. செ : அது தவறு. இந்த எழுவரையும் நாளைப் பொழுது சாய்வதன்முன் தோல்வியுறச் செய்து, இவர்கள் முரசத்தையும் கொடியையும் யான் கவர்ந்துகொள்ள வில்லையானால்.........

(அடாணா)

“என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
‘கொடியன்எம் இறை’எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக”[1]

வீ. பா : ஆ! அரசே. ஈதென்ன வஞ்சினம்? ஏன்?

நெ. செ : ‘ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை!
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே!’[2]

பார்ப்போம் இவர்கள் வலிமையை!

மா. மரு : அரசே, இத்தகைய கடுமையான வஞ்சினம் செய்வோரை இதுவரை யான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

1—2 புறம். 72

வீ. பா : அரசே, நமது படைகட்கு இது மிகவும் உற்சாகம் ஊட்டுவதாகும். அவர்கட்கு உடனே இதனை அறிவிக்குமாறு காவலரை ஏவிவிடு கிறேன்.

நெ. செ : வீரபாண்டியரே, எனது தேர் சித்தமாய் இருக்கிறதா?

வீ. பா : வாள் மங்கலம், குடை மங்கலம் முதலியன செய்து அவை புறப்பட்டாயிற்று.

நெ. செ : சரி, நாமும் புறப்படலாம்.

அங்கம்—III காட்சி—I

[இடம்: தலையாலங்கானப் போர்க்களம். பாண்டிப் படைகள்முன்னர் நின்று பாண்டியன் பேசுகிறான். போர்க்களம் ,என்பதை அறிவிக்கக் கூடிய சாதனங்களும் திறந்த வெளியைக் காட்டும் திரைச் சீலை முதலியவைகளும் காட்சியளிக்கின்றன.]

வீரர்கள் : வாழ்க ! வாழ்க ! நெடுஞ்செழியர் வாழ்க! வெற்றி நமதே !

நெ. செ : வீரர்களே, தாய் நாட்டைக் காப்பதற் காகவே இந்தப் போரைச் செய்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா ?

வீரர்கள் : தெரியும் ! தெரியும் !!

நெ. செ : நாமாக யார்மேலும் பகைகொள்ளவில்லை.

வீரர்கள் : இல்லை ! இல்லை !

நெ. செ : சேரமான் இரும்பொறையை நாம் கருணை யினால் விடுதலை செய்தோம் அல்லவா ?

வீரர்கள் : ஆம் ! ஆம் !

நெ. செ : நன்றி மறப்பது தமிழர் மரபாகுமா ?

வீரர்கள் : ஆகாது !

நெ. செ : நன்றி மறப்பவர் எந்தக் கதியை அடைவர்?

வீரர்கள் : போரில் தோல்வியும் இறந்தால் நரகமும் அடைவர்.

நெ. செ : நியாயமற்ற முறையில் எழுவர் சேர்ந்து ஒருவன்மேல் படை எடுத்துள்ளனர். என்று

லும், இவர்களை வென்று தீர்ப்பதாக வஞ்சினம் கூறியுள்ளோம்.

வீரர்கள் : தெரியும்! தெரியும்!

நெ. செ : அந்த வஞ்சினம் பொய்க்காமல் காப்பது உங்கள் கடமையல்லவா ?

வீரர்கள் : ஆம்! ஆம்! வாழ்க செழிய மன்னர்! வஞ்சினம் பொய்க்க விடமாட்டோம்! தலையைக் கொடுத்தாகிலும் தாய் நாட்டைக் காப்போம்!

நெ. செ : இனி நீங்கள் சென்று போர் செய்யலாம். செல்க! பகைவரை அழிக்க உடனே செல்க!

வீரர்கள் : வஞ்சிக்கும் வஞ்சியானை விடமாட்டோம்!

[அதே போர்க்களம். போர்க்கள ஓசை மிகுதிப்பட்டுக் குறைகிறது. சேரனும் சோழனும் முன்னரும், சிற்றரசர் ஐவர் பின்னரும் நிற்கின்றனர்.]

சேரன் : சோழ மன்னரே, நம் படைகள் தள்ளாடுவதைக் கண்டால் மனம் கலங்குகிறதே!

சோழ : என்ன புதுமை! இப்படியா பாண்டியப்படை மேலேறி வரும் ? பேய்கள்போல அல்லவா வீரர் முன்னேறுகின்றனர் ?

சேர : இந்த முறை மிகவும் கொடுமையாகச் சண்டை செய்கின்றனர்.

சோழ : நீங்கள் பாண்டியரோடு சண்டையிட்டு யிட்டு அனுபவம் பெற்றவராயிற்றே! அவர்கள் பலவீனம் எதுவென்பது தெரியாதா ?

சேர : அந்தப் பாண்டியனுக்குப் பலவீனம் என்பதே இல்லை.

சோழ : ஆ! வயதால் சிறியவன் எத்தகைய போர் செய்கிறான்! இவன் போர்த் திறமையைக் காண் பதற்காகவாவது நாம் படை கொண்டு வந்தது நல்லதாயிற்று!

அங்கம்—III காட்சி—2

[அதே போர்க்களத்தின் மற்ருெரு பகுதி. அங்கு அமைதி நிலவுகிறது. மாங்குடி மருதனுர், கல்லாடனுர் இருவரும் போர் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டு பேசுகின்றனர்.]

மா. மரு : ஆ! சல்லாடனுரே, பார்த்தீர்களா நம்மரசர் போர்த்திறனை? ஒருவர் எழுவரை எதிர்த்துப் போர் செய்யும் விந்தை நாம் கண்டதுமில்லை கேட்டதுமில்லை!

கல்லா : மருதனுரே, போர் செய்வதற்கென்றே பிறந்த மானவிரர் நம் பாண்டி மன்னர்—சூரியன் முன் பனி போல, புலி முன் மான் போல, எலி முன் நாகம் போல.

மா. மரு : என்ன புலவரே, உவமைகளை வரிசையாகச் சொல்லிக்கொண்டே செல்கிறீரே!

கல்லா : இல்லை. இந்தப் பகைப்படை உடைந்து ஓடுவதையும் நம் அரசர் போர்த்திறனையும் கண்டால், இந்த உவமைகள்கூடப் போதாவெனத் தோன்றுகின்றது!

மா. மரு : புலவரே, எங்கும் தமிழர் மயம்! இரு பக்கத்துப் படைஞரும் தமிழர்; கொல்வோரும் தமிழர், கொல்லப்படுவோரும் தமிழர். ஈதென்ன கொடுமை!

கல்லா : மருதனுரே, இதில் என்ன கொடுமை இருக்கிறது? பகைவர்களை அழிக்கிறோம் என்ருல், அதில் மகிழ்ச்சி அல்லவா அடையவேண்டும்?

மா. மரு : யார் யாருக்குப் பகைவர்? தமிழர் தமிழருக்குப் பகைவரா? நம்ப முடியவில்லையே! தமிழ் நாட்டுக்கு இத்தகைய ஒரு காலம் வர வேண்டுமா! சேர நாட்டுத் தமிழருக்கும் பாண்டி நாட்டுத் தமிழருக்கும் என்ன வேற்றுமை இருக்கிறது? இருவர் பேசுவதும் தமிழ்; இருவர் உடலிலும் ஓடுவதும் தமிழ்க் குருதி; இருவர் பண்பாடும் தமிழ்ப் பண்பாடு. ஐயோ! இவர்களிடையில் பகைமை எங்கிருந்து முளைத்தது? தமிழ்ப் பண்பாட்டினுள் முரண் ஏற்படுவதா! திங்களுள் தீத் தோன்றுமா? குளத்துள் குவளை வேகுமா? ஏனோ இந்தப் போர்! என் மனம் கலங்குகிறதே!

கல்லா : தமிழ் வளர்த்த பாண்டிநாட்டைச் சேரர் புகுந்து அழிப்பதா?

மா. மரு : என்ன வியப்பு! கல்லாடரே, என்ன இவ்வாறு கூறுகிறீர்கள்? தமிழ் வளர்த்த பெருமை பாண்டிநாட்டிற்கு மட்டுந்தானா உண்டு? புலன் அழுக்கற்ற கபிலரும் போற்றும் தமிழ் மன்னரைப் பெற்றதல்லவா சேரநாடு? ஆ! பதிற்றுப் பத்து முழுவதும் சேரர் புகழ் பாடும் நூல் அல்லவா? பதிற்றுப்பத்தைப் பெற்ற அரசர்கள் தமிழ் வளர்க்கவில்லை எனில், பிறகு யார்தாம் தமிழை வளர்த்தவர்? இரும்பொறை அறிவு மழுங்கினதற்காக எத்தனை தமிழர் பலியாவது?

கல்லா : புலவர் ஏறே, என்ன ஆயினும், வந்த போரை ஏற்று நாட்டைக் காத்தலே அரசன் கடமை.

மா. மரு : எந்த நாட்டை யார் காப்பது? தமிழ்ப் பாண்டி நாட்டிற்கும் தமிழ்ச் சேர நாட்டிற்கும் பகைமை! தமிழ்ப் பாண்டியனோடு தமிழ்ச் சேரன் போர்புரிகிறான்! கேட்கவும் காது மறுக்கிறது! கூறவும் நா நடுங்குகிறது! தமிழனைத் தமிழன் பகைத்துப் போர் புரியும் இந்தக் கொடுமை என்று தமிழ்நாட்டை விட்டு நீங்குமோ அறியேன்!

கல்லா : ஆம்! கொடுமை என்பதை நானும் உணர்கிறேன். ஆ! அதோ சேரன் வேல் எடுத்துக் கொண்டு நம் அரசரை நோக்கி விரைகிறான்!

[சேரன் ஓடிவந்து வேலால் பாண்டியனை எறிகிறான். ஆண் உடையில் வேண்மாள் அதனைத் தன் மார்பில் ஏந்துகிறாள்.]

நெ. செ : அட பேதாய், வந்துவிட்டான் வேலால் எறிய! ஆ! இவன் யார்? விரைவாக வந்த வேலை வீரன் தன் மார்பில் தாங்காமல் இருந்தால், என் கதி என்னவாகி இருக்கும்! வீரனே, பாண்டி நாட்டின் சென்ற உயிரை மீட்டுத் தந்த நீ யார்?

நல் : ஆ! அரசே, என் சொல்லைக் காப்பாற்றிவிட்டேன்! இந்த ஆண் வேடம் என்னை மறைத்து விட்டதா ?

நெ. செ : (வருத்தமும் கோபமும்கொண்டு) ஆ! இது என்ன புதுமை! வேண்மாளா? இங்கு எப்படி வந்தாய் கண்ணே? ஐயோ! இந்தக் கோலத்திலா உன்னைக் காண வேண்டும் !

நல் : அரசே, என் உண்மைப் பெயர் வேண்மாள் அன்று. வேலால் உங்களை எறிந்த சேரருக்கு ஒரே மகள் நான். என் பெயர் நல்லினி.

நெ. செ : ஐயோ! காதலி! பல நாள் உன் வருகைக்குக் காத்திருந்த பலன் இதுதானா?

நல் : அரசே, போரைப்பற்றிய தகவல் அனுப்ப முயன்ற என்னை என் தந்தையார் தடுத்துவிட்டார். வேறு வழி இல்லாமல் அவர் புறப்பட்ட பிறகு, பிறர் அறியாமல் நான் தனியே புறப்பட்டு வந்தேன்.

நெ. செ : அன்பே, தனியே வந்து தனியாகவே புறப்பட்டுவிட்டாயா! என்னை அன்றும் பிரிந்தாய்! இன்றும் பிரிந்துவிட்டாயா!

நல் : தலைவரே, இறப்பதாயினும் உங்களிடம் வந்து தான் இறப்பேன் என்று அன்று சிறைக்கூடத்தில் கூறவில்லையா? என் சொல்லை நிறைவேற்றி விட்டேன்! இப் பிறவியில் உங்களுடன் வாழும் பேறு எனக்குக் கிட்டவில்லையாயினும், மறு பிறவியிலாவது உறுதியாக உங்களையே அடைவேன்! உங்கள் முன்னிலையில் என் உயிர் பிரிவதுபற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

நெ. செ : காதலி, உன் தந்தையின் கையினாலா நீ இறக்கவேண்டும்! ஈதென்ன கொடுமை!

நல் : இனிப் பேச எனக்கு வலியில்லை. தமிழர் தம்முள் சண்டையிட்டு மடியும் முட்டாள்தனத்தின் முடிவு, மகளைத் தந்தை கொல்வதுதான். சென்று வருகிறேன்.

[அவன் மார்பில் நல்லினி சாய்ந்து உயிர் விடுகிறாள்.]

நெ. செ : ஆ! காதலி! நீயே சென்றுவிட்ட பிறகு நான் துணையற்றவனாய் இங்கு இருந்து ஆக வேண்டுவது என்ன? இதோ நானும் உன்னுடன் வந்துவிடுகிறேன்! தந்தை மகள்மேல் எறிந்த வேல் என்னையும்.........

மா. மரு : அரசே, பொறுத்தருள்க! இஃது என்ன முறை? சாதாரண மனிதர் இச் செயலுக்குத் துணியலாம். ஆனால், அரசராகிய நீங்கள்...... பிறர்பொருட்டு வாழவேண்டிய நீங்கள்......

[வீரர் கூட்டம் 'வெற்றி! வெற்றி!' எனக் கூக்குரலிட்டு முரசும் சங்கும் முழங்குகின்றது.]

நெ. செ : இந்த வெற்றியால் எனக்கு என்ன பயன்? காதலை இழந்த எனக்கு நாடு கிடைத்துப் பயன் என்ன? வெற்றியின் பயன் இதுவானால், இந்த வெற்றியே வேண்டா!

மா. மரு : அரசே, அரண்மனை செல்வோம். பிறகு பேச வேண்டுவனவற்றைக் கவனிப்போம். வருக!

அங்கம்—III காட்சி—3

[பாண்டியன் அரண்மனையில் ஒரு தனி அறை. செழியன் உலகத்தையே இழந்துவிட்டவன்போலத் தாடையில் கையை வைத்துக்கொண்டு எல்லையிறிய வருத்தம் முகத்தில் தோன்ற அமர்ந்திருக்கிருன். அவனேடு சமமான ஆசனத்தில் கவிஞர் மாங்குடி மருதனுரும், கல்லாடனுரும் கவலை தேங்கிய முகத்துடன் அமர்ந்திருக்கின்றனர்.]

மா. மரு: அரசே, முற்றக் கற்று முழுதுணர்ந்த நீங்கள் இவ்வாறு இருந்தால் நாடு என்ன ஆவது?

நெ. செ: நான் எவ்வாறு இருக்கிறேன்? நன்ருகத் தானே இருக்கிறேன்? அரச அலுவல்களில் ஒன்றும் குறை நேராமல் பார்த்துக்கொள்கிறேன். வேறு என்ன வேண்டும்?

மா. மரு: அரசே, ஒன்றிலும் மனம் பற்ருமல் இருக்கிறீர்கள். பல சமயங்களில் உணவு உண்பது கூட மறந்துவிடுகிறது உங்கட்கு. இப்படி மனம் சோர்ந்துபோயிருப்பதைப் பிற அரசர் கேட்டால் என்ன ஆகும்?

நெ. செ: என்ன ஆனுல் எனக்கு என்ன?

மா. மரு: அரசே, உங்களுக்காக நீங்கள் வாழவில்லை. நாட்டுக்கு 'யான் உயிர் என்பது அறிகை வேல்மிகு தானை வேந்தற்குக் கடன்'.[1]

நெ. செ: நான் மனம் மாறவேண்டுமானுல், ஒரே ஒரு வழிதான் உண்டு.

---

[1] புறம், 186

கல்லா : அரசே, எத்தகைய கடினமான செயலாயினும், அதனைச் செய்து உங்கள் மனத்தை மாற்றிக்கொள்ளவே விரும்புகிறோம்.

நெ. செ : நீங்கள் சொல்வது சரி, கல்லாடரே. ஆனால், மாங்குடி மருதனார் அந்த வழியை விரும்ப மாட்டார் என்றே நினைக்கிறேன்.

கல்லா : அதுபற்றிக் கவலை இல்லை. கவிஞர் மருதனார் உங்கள் நலத்தில் கருத்துக் கொண்டவர். ஆகவே, அவர் மாறுபாடு சொல்ல மாட்டார் என்னும் உறுதி இருக்கிறது எனக்கு.

மா. மரு : அரசே, உங்கள் கருத்து என்ன என்பதை அறியாமல் நான் எவ்வாறு உறுதி கூறுவது ?

நெ. செ : புலவர்களே, இறந்த என் காதலியை நினைத்து என் மனம் பெரிதும் வருந்துகிறது !

மா. மரு : எல்லாம் கற்ற உங்கட்கு யாம் என்ன கூறுவது ? 'நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு !' [1] என்று அறநூல் கூறியதை மறந்தீர்களா ?

நெ. செ : ஆனால், அறிவின்வழி நின்று கண்ட இந்த உண்மையை மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அவளை நினைக்குந்தோறும் தோன்றும் வருத்தம், அவளைக் கொன்றவர்மேல் கோபமாகவே மாறுகிறது.

---

[1] குறள், 336

மா. மரு: அவர்களைக் கொன்றுவிட்டால் உங்கள் காதலி வந்துவிடப்போகிருளா?

நெ. செ: அவள் வரமாட்டாள். ஆனல், பழி வாங்கிய ஆறுதல் என் மனத்துயரைச் சற்று மாற்றும் என்றே எண்ணுகிறேன்.

மா. மரு: பழிவாங்குவது உண்மையான ஆறுதல் ஆகுமா?

நெ. செ: இப்போதைக்குச் சேரனைக் கொன்ருல் தான் ஆறுதல கிடைக்கும்.

மா. மரு: ஆனல், ஒன்று கூற விரும்புகிறேன்.

நெ. செ: அஞ்சாமல் எதனையும் நீங்கள் கூறலாமே!

மா. மரு: நீங்கள் சேரனைப் பழிவாங்க வேண்டுமாளுல், எவ்வாறு அதனைச் செய்ய உத்தேசம்?

நெ. செ: ஏன்? போரிடுதலேதான் வழி. இருமுறை அவன் வலுவிற் போருக்கு வந்ததுபோல நாம் ஒரு முறை ஏன் செல்லக் கூடாது?

மா. மரு: தனிப்பட்ட ஒரு நெடுஞ்செழியர், தனிப் பட்ட ஒரு சேரனைப் பழிவாங்க வேண்டும். அவ் வளவுதானே?

நெ. செ: ஆம்! அதுதான்.

மா. மரு: அதற்கு வழி தமிழ் மக்கள் பதினுயிரக் கணக்கில் பலி இடப்படுதலா?

நெ. செ: நீங்கள் கூறுவது ஒன்றும் விளங்க வில்லையே!

மா. மரு: ஏன்? போர் என்ருல் பாண்டி மக்கள் பதி ஞயிரவரும் சேர மக்கள் பதிஞயிரவரும் சாகத் தானே வேண்டும்?

நெ. செ: போர் செய்தல் அரசராகிய நமக்குச் சிறப்பே தவிர இழுக்கல்லவே?

மா. மரு: ஆம் அரசே, சிறப்புத்தான். பழிவாங்கப் போரிடுதல் இழிவன்ருே?

நெ. செ: காரணம் எதுவாக இருப்பினும், போரிடு தல் வீரர்க்கு இழுக்கல்லவே?

மா. மரு: காரணந்தான் உயிர்நிலை அரசே. போரா கிய காரியம் இரண்டாவதுதான். செய்கின்ற செயலைப் பெரிதாகத் தமிழர் மதிக்கவில்லை; அச் செயலின் பின் உள்ள மன நிலையைத்தான் காண முற்பட்டனர். போர் செய்தல் தமிழ் மரபுதான். ஆஞல், ஒருவர் தம் காதலியை இழந்த துயரத்தைப் போக்கப் பதிஞயிரவரை அதே துயரத்தில் ஆழ்த்துவது என்ன முறை?

நெ. செ: பதிஞயிரவர் என்னைப்போலத் துயரை அடைவர் என்று ஏன் கூறுகிறீர்கள்?

மா. மரு: போரில் இறக்கின்ற வீரன் ஒவ்வொருவ னுடைய காதலியும் உங்களைப் போலத் துயர மடைவாள் அன்ருே? உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது; எனவே, பழிவாங்க முற்பட்டீர் கள். அந்த ஒவ்வொரு காதலியும் தன் காதலனை இழந்ததற்காகப் பழிவாங்கும் வாய்ப்பைப் பெற் ருல், நாட்டின் நிலை என்ன ஆகும்? உங்கள்

துயரினும் அவர்கள் துயரம் குறைந்தது என்று நினைக்கிறீர்களா ?

நெ. செ : என் துயரத்தைப்போலப் பிறர் அனுபவிக்க இயலாது என்றே நம்புகிறேன்.

மா. மரு: அரசே, மன்னித்தருள்க! உங்கள் துயரை விட அவர்கள் துயரமே பெரிது. நெடுஞ்செழியர் தமக்காக வாழும் சிறு பகுதியில் நல்லினி இன்றியமையாதவள். ஆனால், பெரிய அரசராகிய உங்கள் வாழ்க்கை மக்களுக்கு அல்லவா உரிமை? பிறர் பொருட்டு வாழும் அரச வாழ்க்கைக்கும், தன் பொருட்டு வாழும் தனி வாழ்க்கைக்கும் தொடர்பு படுத்தவேண்டா.

நெ. செ: இஃது உண்மை! ஆனால், என் துயரைவிட அவர்கள் துயரம் பெரிதாவது எவ்வாறு?

மா. மரு: அரசராகிய உங்கள் வாழ்க்கையிலும் செழியர் வாழ்க்கை சிறியது. அதில் உரிமை உடையவள் நல்லினி. ஆனால், தனிப்பட்ட வீரர்களுடைய வாழ்க்கையில்—அவர்களுடைய மனைவியர் வாழ்க்கையில்—அனைத்து உரிமையும் ஒருவர்க்கு ஒருவர்தாமே? காதலனை இழந்த ஒருத்திக்கு உலகம் முழுவதும் இழந்த துயரம் அல்லவா ஏற்படுகிறது ? காதலியை இழந்த அரசனுக்குக் 'கடமை' ஒன்று இருக்கிறது. அதற்காகவேனும் அவன் உயிர்வாழ்ந்தே தீரல் வேண்டும். ஆனால், காதலனை இழந்த வீரன் மனைவிக்கு உயிர் வாழ என்ன பற்றுக்கோடு

இருக்கிறது? ஒன்றும் இல்லையன்றோ? எனவே, அவர்கள் துயரம் அதிகம் என்று கூறினேன்.

நெ. செ: உண்மைதான். என்றாலும், வீரரை மணந்த பெண்கள் தம் காதலர் போர்க்களத்தில் இறந்தால் பெருமகிழ்ச்சியன்றோ அடைதல்வேண்டும்?

மா. மரு: அவ்வாறாயின், நல்லினி ஏன் அவ்வாறு நினைக்கவில்லை? உங்களைக் காக்கத்தானே அவள் உயிரை விட்டாள்?

நெ. செ: அதனால் என்ன?

மா. மரு: ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனைக் காக்கத்தான் விரும்புவாளே தவிர, அவன் போர்க்களத்தில் இறப்பதை விரும்பமாட்டாளே!

நெ. செ: ஆம். நீங்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், என் மனம் அமைதி அடையவில்லையே! நாளை இதுபற்றி ஆராய்வோம்.

அங்கம்—III காட்சி—4

[சேரன் இரும்பொறையின் அரண்மனையில் ஓர் அறை. இரண்டு இருக்கைகள் உள்ளன. ஆனால், அரசன் இரும்பொறை இருக்கையில் அமராமல், குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருக்கிறான். இடப்புறம் ஒரு மேஜையின்மேல் குடிக்கும் பித்தளைப் பாத்திரமும், மூடி இடப்பட்ட சீசாப்போன்ற ஒரு பாத்திரமும் இருக்கின்றன.]

இரும்பொறை : (நடந்துகொண்டும், சில சமயம் நின்றும் தனியே பேசுகின்றான்) ஆ! என்ன அவமானம்! சேரமான் கணைக்கால் இரும்பொறையின் மரபில் வந்தவனா நான்! உலகம் எள்ளி நகையாடுகிறதே! சோழனிடம் அவரும் தோற்றார்! பாண்டியனிடம் யானும் தோற்றேன்! அவரும் சிறைப்பட்டார்! யானும் சிறைப்பட்டேன்! ஆனால், என்ன வேற்றுமை? பகைவனிடம் தண்ணீர் வேண்டும் என்று கேட்டு வாங்கி அருந்துதல் மானம் இழந்த செயலாக எண்ணிய அவர் எங்கே, பெண் வேடம் தரித்துப் பெற்ற மகளைச் சிறையில் தவிக்க விட்டு வந்த நான் எங்கே! தண்ணீரை அருந்தாமல் அரிய உயிரை விட்ட அவரும் சேரமன்னன்! மகளைக் கொன்றுவிட்டு இன்னும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிற யானும் சேரமன்னன்! ஐயோ! அவர் மரபில் வந்தவன் என்று கூறிக்கொள்ளவும் அவமானமாய் இருக்கிறதே!........... 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்'[1] அன்ன இரும்பொறை எங்கே, நான் எங்கே? இந்த அவ

[1] குறள், 969

மானத்தை எவ்வாறு போக்கிக்கொள்வது? பழி வாங்குதல்தான் சிறந்த வழி! பாண்டியனைக் கொன்று அவன் குலம் இல்லாமல் செய்துவிட்டால் ஒருவேளை என் பழி மறைந்துவிடும்! நேற்றைக் குப் பிறந்தவன் அவன்! அவனிடம் எத்தனை முறை தோற்பது? இன்னும் ஒரு முறை அவனை ....ஆ! என்ன பேதைமை! சோழன் உதவியும், சிற்றரசர் ஐவர் உதவியும் இருந்துங்கூட அவனை ஒன்றுஞ் செய்யக்கூடவில்லை. இனி என்ன செய்யமுடியும்? ஐயோ! அந்தச் சிற்றரசர்கள் இனி எவ்வாறு என்னை மதிப்பார்கள்! இப்படி வாழ்ந்துதான் என்ன பயனைக் காணப் போகி றேன்! என் கண்மணி நல்லினி போனபிறகு எனக்கு இவ்வாழ்க்கையில் வேறு என்ன இன்பம் இருக்க முடியும்! நல்லினி, நல்லினி, ஆண் குழந்தை அல்லையாயினும், உன்னை ஆணாக மதித்து வளர்த்து, போர்ப் பயிற்சி அனைத்தும் செய்வித்து........... என் கையா லேயே...........ஆ! இனி எனக்கு அமைதி தரத் தக்கது சாவு ஒன்றுதான்! சாவே, வா! உன்னை விரும்பி அழைக்கிறேன்! ஆனால், வீரனைப்போல வாளால் மடிய எனக்கு வாய்ப்பு இல்லை; பேடியைப்போல இந்த நஞ்சை அருந்தி...........ஆம்! இதுதான் வழி! என்னைச் சூழ்ந்த பழியும் என்னுடனேதான் நீங்கும். இதோ!

[சிறு பாத்திரத்தில் நஞ்சை ஊற்றி வாயின் எதிரே கொண்டுசெல்கிறான்.]

நல்லினி, நானும் உன்னிடம் இதோ வந்து விடுகிறேன்! கண்ணே, என்னை விட்டு உன்னைப் பிரித்த அக் கைகளே இன்று உன்னுடன் வந்து சேருமாறும் உதவட்டும்! இதோ வந்தேன்!

[குறுங்கோழியூர்க்கிழார் உள்ளே நுழைந்து அரசன் நச்சுக் கிண்ணத்தைத் தட்டிவிடுகிறார்.]

குறு. கிழார் : இரும்பொறையீர், என்ன செயல் செய்யத் துணிந்தீர்! பேடிகள் செய்யும் செயலைச் சேரமன்னர் செய்வதா ?

[இரும்பொறை நின்ற இடத்திலேயே தலையைக் குனிந்துகொண்டு நிற்கிறான்.]

அடா, யார் அங்கே? காவல !

[காவலன் உள்ளே வருகிறான்.]

காவலன் : புலவர் பெருமானே. ஆணை என்ன?

குறு. கிழார் : அமைச்சரை விரைவில் அழைத்துவா!

காவலன் : நல்லது !

குறு. கிழார் : அரசே, இந்தச் செயல் செய்ய ஏன் துணிந்தீர்கள் ? நண்பராகிய நீங்களா இவ்வாறு செய்வது ?

[அமைச்சன் வில்லவன் கோதை உள்ளே நுழைகிறான்.]

வருக அமைச்சரே, சரியான நேரத்திலேதான் வந்தீர்கள் !

வி. கோ : புலவர்பெருமானீர், அவசரமாக அழைத்ததாகக் காவலன் கூறினான். சரியான நேரம் என்

திர்களே! ஏன்? அரசர் ஏன் இவ்வளவு கவலே தோய்ந்த முகத்துடன் இருக்கிருர்?

குறு. கிழார்: இன்னும் சில விஞடிகள் கழித்து யான் உள்ளே வந்திருப்பின் நம் அரசரைக் கண் புருக்க இயலாது. அவர் நஞ்சுண்ண எத்தனிக் கையில் உள் நுழைந்த யான் தட்டிவிட்டேன் அந் நச்சுக் கிண்ணத்தை!

வி. கோ: அரசே, இஃது என்ன? புலவர் கூறுவது உண்மையா?

இ. பொ: ஆம்! வாழ்க்கையில் வெறுப்புக்குக் காரணம்' 'மகளேக் கொன்ற பாதகன்' என்றும், 'மானம் இழந்த மன்னவன்' என்றும் உலகம் கூறுவதைக் கேட்க என் மனம் பொருமையே! எனவே, இதற்கு ஒரு முடிவு காண முற்பட்டேன். இதில் தவறு என்ன?

வி. கோ: அரசே, நீங்கள் நஞ்சு உண்டு இருந்திருப்பின் பழி பின்னும் அதிகரிக்கும் என்பதை அறியவில்லேயா?

இ. பொ: பழி அதிகரித்திருக்கலாம். ஆனுல், நான் அதை இருந்து கேட்கப்போவதில்லேயல்லவா?

குறு. கிழார்: நம் காதில் விழாமல் இருப்பது ஒன்று தாஞ பெரிது! அவ்வாருனுல், அரண்மனேயின் உள்ளேயே இருந்துவிடலாமே!

இ. பொ: இப்போது அந்த மன அமைதியும் இல்லாத படி செய்துவிட்டீர்கள்! இனி என்ன செய்தால் என் மனம் அமைதி அடையும்? மீட்டும் போர்

புரிந்து அந்தப் பாண்டியனை ஒழித்தால், ஒரு வேளை இழந்த என் மகளைப்பற்றிய துயரத்தைக்கூட ஒருவாறு மறக்க இயலும்.

வி. கோ : இன்னுங்கூட அந்தப் பாழும் போர் பற்றிய யோசனைதானா? அமைதியாக நாடாட்சி நடத்தினல், நாளாவட்டத்தில் இப் பழி மறைந்து விடும்.

[காவலன் உள்நுழைகிறன்.]

காவலன் : பெருமானீர், பாண்டி நாட்டுத் தலைமை ஒற்றர் வந்துள்ளார்.

இ. பொ : உடனே வரச்சொல்.

[காவலன் வெளிச்செல்கிறன்.]

என்ன புதிய செய்தி கொண்டுவருகிறனே!

[ஒற்றன் உள்நுழைந்து வணங்குகிறன்.]

ஒற்றன் : சேரமன்னர் வாழ்க! விற்கொடி உயர்க!

இ. பொ : நல்லது! பாண்டி மன்னன் எவ்வாறு இருக்கிறன்?

ஒற் : அரசே, பாண்டித் தலை நகராகிய மதுரை, களை இழந்து காணப்படுகிறது: செழியர் அரச அவைக்குக்கூட வருவதில்லை; பிற நாட்டுத் தூதுவர் வந்தாற்கூட அவருடன் பேசுவதில்லை. அரசியல்முழுவதையும் அமைச்சர்வீரபாண்டியரும் புலவர் மாங்குடி மருதனருமே கவனிக்கின்றனர்.

இ. பொ : என்ன வியப்பு! செழியனுக்கு நோய் ஏதாவது கண்டிருக்கிறதா? காரணம் ஒன்றும் தெரியாதா?

ஒற் : தெரியாமல் என்ன! சொல்லத்தான் மனம் வரவில்லை.

இ. பொ : தாராளமாகக் கூறலாம்.

ஒற் : நம் இளவரசியாரை அவர் காதலித்தாராம். இளவரசியார் இறந்ததிலிருந்து அவர் அரசியலில் ஈடுபடாமல் இருக்கிறாராம். பல சமயங்களில் உணவுகூட உண்பதில்லையாம்.

இ. பொ : சரி, நீ போகலாம்.

[ஒற்றன் வணங்கி விடைகொள்கிறான்.]

பல நாள் காத்திருந்த எனக்கு அரிய வாய்ப்புக் கிட்டியிருக்கிறது! இனிப் பழிக்கு அஞ்சேன்!

வி. கோ : என்ன கூறுகிறீர்கள்? ஒன்றும் விளங்கவில்லையே!

இ. பொ : சேரன் பாண்டியனிடம் தோற்றான் என்ற பழி இல்லாமல் இம் முறை அவனை வென்று விடுகிறேன்! அவன்மேற் கொண்ட பழியையும் தீர்த்துக்கொள்கிறேன்!

குறு. கிழார் : இரும்பொறை, இஃதென்ன அறியாமை? இப்பொழுது மட்டும் பாண்டியனை வெல்ல என்ன அதிகமான வாய்ப்புக் கிடைத்துவிட்டது? ஏன் திடீரென்று இம் மனமாற்றம்?

இ. பொ : புலவரே, இதைவிட வேறு அரிய வாய்ப்பு எப்பொழுது கிடைக்கும்? பாண்டியன் கவலையில் தன்னை மறந்து இருந்தால், பாண்டி நாடு கேட்பார் அற்று இருக்குமல்லவா? ஆகையால், இதுவே நல்ல நேரம்!

குறு. கிழார் : அரசே, நீங்கள் பாண்டியன் சிறையில் இருந்தபொழுது நம் நாடு கேட்பார் அற்று இருந்தது ? வில்லவன் கோதை நமது நாட்டைக் காத்ததுபோல அங்கு வீரபாண்டியன் இருக்கிறான் என்பதை மறக்கவேண்டா.

வி. கோ : நமக்கு ஒரு குறுங்கோழியூர் கிழார் கிடைத்தது போலப் பாண்டியருக்கும் ஒரு மாங்குடி மருதனார் இருக்கிறார் என்பதும் நினைவில் இருத்த வேண்டிய ஒன்று! அவ்வாறு இருக்க, படை எடுத்தல் என்பது.........

இ. பொ : அமைச்சரே, இம் முறை நான் நன்கு ஆராய்ந்து முடிவு செய்துவிட்டேன். போருக்குப் போவது உறுதி! ஒன்று வெற்றி; அன்றேல், போர்க்களத்தில் வீர மரணம்! உடனே ஒரு தூதனை அனுப்பிப் பாண்டிப் பதரைப் போருக்கு வரச்சொல்லி ஆணை இடும்.

குறு. கிழார் : இரும்பொறை, உமது அருமகள் நல்லினியின் காதலால் தம்மை மறந்து இருக்கும் நெடுஞ்செழியருடன் போர் செய்ய இதுதானா தக்க நேரம்? நன்கு ஆய்ந்து பாரும். நல்லினிக்காகவாவது இம் முறை செல்வதை நிறுத்தி விடுக.

இ. பொ : நிறுத்தவாவது! இத்தகைய சமயம் இனி வாராது!

அங்கம்—III காட்சி—5

[பாண்டியன் அவைக்களம். நடுவே உயர்ந்த அரசனுடைய இருக்கையும், அதன் பக்கத்தில் மருதனுருக்கு ஓர் இருக்கையும் இருக்கின்றன. அரசன் இருக்கைக்கு எதிரே பல இருக்கைகள் இருக்கின்றன. ஆசனங்கள் பழங்காலத்து ஆசனங்களாகவே இருக்கின்றன. அரசன்மட்டும் தன் இடத்தில் அமர்ந்திருக்கிருன். புலவர்கள் உள்ளே நுழையும் பொழுது, காட்சி தொடங்குகிறது]

[புலவர் கூட்டம்]

மா. மரு: தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியர் வாழ்க!

புலவர்கள்: வாழ்க! வாழ்க!

நெ. செ: புலவர்களே, வருக! உங்கள் வரவு நல்வரவாகுக!

ஒரு புலவர்: அரசே, உமது கொற்றம் உயர்க! எம் தலைவர் மாங்குடி மருதனுர் 'மதுரைக் காஞ்சி' என்ற அரியதொரு பாடலைப் பாடிவந்துள்ளார். அதன் அரங்கேற்றம் இப்பொழுது நடைபெற வேண்டும்.

நெ. செ: மதுரைக் காஞ்சியா? காஞ்சியாவது நிலையாமைபற்றிக் கூறுவதல்லவா?

ஒ. புல: ஆம் அரசே, உலகமும் மதுரையும் நிலையாமை உடையவை என்று கூறி, எம் தலைவர் உங்கட்கு உறுதிப் பொருள் சில கூற விரும்புகிருர்.

நெ. செ: நல்லது மருதனாரே, நீங்கள் பாடினால் கேட்க யாம் சித்தமாய் உள்ளோம். கூறியருள்க!

(சுருட்டி.)

மா. மரு: 'பொய்யறியா வாய்மொழியால்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி அடிப்படரப்
பல்வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!'

நெ. செ: என்ன ஓசை இனிமை!

மா. மரு: 'காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவரவிறுத்து
அரசுபட அமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே!
நட்டவர் குடி உயர்க்குவை;
செற்றவர் அரசு பெயர்க்குவை'

நெ. செ: எல்லாம் உங்கள் வாழ்த்தின் விளைவு!

மா. மரு: 'படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே, உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே!'

நெ. செ: ஆம்! அதனால் என்ன?

மா. மரு : 'நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல
வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகர றுசிறப்பின் தோன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற்று இசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
....
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும!
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.'

நெ. செ : ஆ! புலவர் ஏறே, என் அகக் கண்களைத் திறந்துவிட்ட உங்கட்கு யான் என்ன கைம்மாறு செய்யவியலும்!

மா. மரு : நீங்கள் வாழ்க்கையின் உண்மைப் பயனைக் காணுமல், ஓயாமல் போர்புரிவதையே தொழிலாகக் கொண்டால், என்ன ஆவது?

நெ. செ : ஆவது என்ன! நீங்கள் கவிதையில் கூறியபடி கடல் மணல் போன்ற மன்னர் கூட்டத்தில் யானும் ஒருவனுக மடிந்து மட்கியிருப்பேன்.

மா. மரு : ஆம்! ஆனால், என்னுடைய செழியர் அவ்வாறு மட்கிப்போக யான் பொறுக்க மாட்டேன்!

நெ. செ : மருதனாரே, உங்கள் கவிதையைக் கேட்ட பிறகுதான் வாழ்க்கையில் போரைத் தவிர வேறு பயன்களும் உள்ளன என்பதை உணருகிறேன்! ஆனால்,.........

மா. மரு : என்ன! 'ஆனால்' என்று இழுக்கிறீர்களே?

நெ. செ : வேறு ஒன்றுமில்லை; போரில் செல்லும் மனத்தை அடக்கிய பிறகு அதனை எங்கே செலுத்துவது என்பதுதான் நன்கு விளங்கவில்லை.

மா. மரு : ஏன்? நல்ல அறிவாளிகள் கூட்டுறவில் அறிவையும் மனத்தையும் செலுத்தலாமே? உம்முடைய முன்னோர் செய்த செயல்தானே அது?

நெ. செ : உண்மைதான். ஆனால், காதலை இழந்த மனம் மற்றோர் உணர்ச்சி உலகைத் தேடுமே தவிர, அறிவுலகில் ஆனந்திக்க இடம் தருவதில்லையே!

மா. மரு : அப்படியானால், நன்றாக உண்டு உடுத்து இருப்பதும், உணர்ச்சி உலகில் வாழ்வதுதானே! பாடலின் இறுதிப் பகுதி அதைத்தானே உணர்த்துகிறது?

நெ. செ : காதலுக்கும் போருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டுபோலும்! ஆதலாலேதான் இரண்டின்மேலும் என் மனம் ஓயாது சென்றது.

மா. மரு : ஆம் அரசே, அதனை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இரண்டின் இறுதியிலும் ஆசை அடங்குவதில்லை. தீர்க்க முடியாத பேராவலைத் தூண்டி வாழ்க்கையைப் பயனற்றதாகச் செய்யும் இயல்பு காதலுக்கும் போருக்கும் உண்டு.

நெ. செ : அப்படியானால், இவை இரண்டும் தள்ளப்பட வேண்டுவனவா ?

மா. மரு : அல்ல அரசே ! இவை அளவோடு நின்றால், வாழ்க்கையில் சுவை உண்டாக்குபவை; ஆனால், அளவில் மிகுந்தபொழுது நெருப்பைப்போலப் பெருந் தீங்கு உண்டாக்கும்.

நெ. செ : அவ்வாறானால், என் வாழ்க்கையில் இவை இரண்டும் அளவின் மிஞ்சிவிட்டன என்று கூறுகிறீர்களா ?

மா. மரு : ஆம் அரசே ! நீங்கள் பிறந்தது முதல் போர்கள் நிகழ்த்தியது தவிர வேறு புகழுடைய செயல் என்ன செய்தீர்கள் ?

நெ. செ : நினைந்து பார்த்தால் ஒன்றுமில்லைதான்.

மா. மரு : இப்படியே வாழ்நாள் கழிந்துவிட்டால், முதுமைப் பருவத்தில் மன வருத்தம் அடைய நேரிடும் அல்லவா ?

நெ. செ : முயன்று பார்க்கிறேன் ! இன்னும் இளமை மாறவில்லையாகலின், வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்துக்கொள்ள முடியும் என்றே எண்ணுகிறேன்.

மா. மரு : மாற்றி அமைத்துக்கொள்ள முயலுவதற்கு முன்னர் எந்த வழியில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதைத் தீர ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும்.

நெ. செ : எவ்வாருயினும், நீங்கள் கூறிய முறையில் வரைந்து பெற்ற வாழ்நாளை இன்பத்தில் கழிக்க என் மனம் ஒருப்படவில்லை! காதலை இழந்த மனம் வேறு துறையில் இன்பத்தை அடையமுடியும் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

மா. மரு : அரசே, பின்னர் மதுரைக் காஞ்சி உங்கள் அகக் கண்ணைத் திறந்ததாகக் கூறியதன் நோக்க மென்ன ?

நெ. செ : ஆம் ! அப் பாடல் என்னைத் தட்டி எழுப்பியது உண்மைதான். ஆனுல், விழிப்படைந்த யான், நீங்கள் கூறும் முறையில் கவிதைப் பொருளை நினைக்கவில்லை. அவ்வளவு அரிய செயலைச் செய்த நம் முன்னேரும் இன்று இருந்தவிடம் தெரியாமல் மாய்ந்தனர் அல்லவா ?

மா. மரு : ஆம் ! அதனுல் என்ன ?

நெ. செ : என்னவா! இவ் வாழ்க்கையைப்பெற்றதன் பயனை அவர்கள் அடையவில்லை என்றே நினைக்கிறேன். எனவே, யான் வேறு துறையில் அப் பயனை அடைய முற்படப் போகிறேன்.

மா. மரு : அத் துறை என்ன என்பதை அறியலாமா?

நெ. செ : காலம் வரும்பொழுது கூறுவேன்.

[காவலன் வருகிருன்]

காவலன் : வாழ்க செழிய மன்னர்! அரசே, வணக்கம்! சேர நாட்டுத் தூதுவன் ஒருவன் வாயிலில் வந்து காத்திருக்கிறான்.

நெ. செ : நல்லது; வரச்சொல்.

[தூதுவன் வருகிறான்]

சே. தூதுவன் : அரசே, வணக்கம்! மூவேந்தருள்ளும் தலைமை வாய்ந்தவரான எம் மன்னர் சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஒரு செய்தி விடுத்துள்ளார் உங்கட்கு.

நெ. செ : எப்பொழுது உம் அரசர் இந்தப் பட்டத்தை ஏற்றுக் கொண்டார்? தலையாலங் கானத்தில் தோற்ற பிறகா, அல்லது முன்னமேயா ?

சே. தூ : அரசே, எதிர்பாராத காரணத்தால் எம் அரசர் தோற்றுவிட்டமையின், உங்களைத் தருக்குக் கொள்ள வேண்டா என எச்சரிக்கிறார்.

நெ. செ : அட பேதையே! பிறகு என்ன ?

சே. தூ : 'தலையாலங்கானத்துச் செருவென்ற' என்ற அடைமொழியை நீங்கள் இனிப் பயன்படுத்தக் கூடாது என்றும் கூறச் சொன்னார்.

நெ. செ : (வெடிப்புச் சிரிப்புடன்) ஏன் ? பயன்படுத்தினால் என்ன ?

சே. தூ : உடனே போருக்கு வருவதாகக் கூறினார்.

நெ. செ : போருக்கு இரண்டுமுறை வந்து தோற்று ஓடின அறிவிலி—தன் ஒரே மகளைக் கொன்ற

பாதகன்—இன்னும் போர்புரியும் எண்ணத் துடனேதான் உள்ளானு ?

சே. தூ : அரசே. ஆண்மை இருப்பின் போர்க் களத்தில் சந்திக்க வேண்டும்! ஏன் வீணுன அவதூறு ?

நெ. செ : உம் அரசன் அறிவை இழப்பினும், நாம் போர் செய்யக் கருதவில்லை என்று கூறும்.

சே. தூ : பாண்டி வேந்தரே, நாளைப் பதினைந்தாம் நாள் மீண்டும் தலையாலங்கானத்தில் எம் படை உங்களைச் சந்திக்கும்! சென்று வருகிறேன்.

அங்கம்—III காட்சி—6

[பாண்டியன் தலையாலங்கானத்தில் தங்கி உள்ளான். அங்கு உள்ள அரண்மனையில் ஓர் அறை. வெளியே தூரத் தில் போர்க்கள ஆரவாரம் கேட்கிறது. செழியன் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருக்கிருன். அமைச்சன் வீர பாண்டி அண்மையில் நின்றுகொண்டிருக்கையில் காட்சி ஆரம்பிக்கிறது.]

வீ. பா: அரசே, சேரர் படையின் முழக்கத்தைக் கேட் டீர்களா?

நெ. செ: (வருத்தமான குரலில்) ஏன்? நன்ருகக் கேட்கிறது!

வீ. பா: உடனே போருக்கு எழாமல் இப்படி இருந் தால் நாடு என்ன ஆவது?

நெ. செ: அமைச்சரே, தீர ஆராய்ந்துதான் இந்த முடிவுக்கு வந்துள்ளேன். போர் செய்வதாக எள்ளளவும் எண்ணமில்லை.

வீ. பா: அரசே, இஃதென்ன காலம்! அப்படியானால் செருக்கடைந்த சேரன் பாண்டி நாட்டைக் கைப் பற்ற விட்டுவிட்டு நாம் பேதைகள்போல இருந்து விடுவதா? தலையாலங்கானத்துச் செருவென்ற நமது வீரம் எங்கே?

நெ. செ: என்ன வீரபாண்டி! போர் செய்தால்தான் வீரம் வெளிப்படுமா?

வீ. பா: பின்னர் எப்படிப் பகைவனை நாட்டைவிட்டு ஓட்டுவது?

நெ. செ: போரைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லையா?

வீ. பா: ஐயோ! பாண்டி நாடு இந்தக் கதிக்கா வர வேண்டும்! எந்த நேரத்தில் கவிஞர் மதுரைக் காஞ்சியைப் பாடினாரோ, அந்த நேரத்தில் மதுரைப் பெருமை அழிய வேண்டுமா?

நெ. செ: என்ன உளறுகிறாய் வீரபாண்டி?

வீ. பா: அரசே, அவர் அந்தப் பாழும் பாடலைப் பாடியிராவிட்டால், நீங்கள் இப்படி மனம் மாறி விடுவீர்களா?

நெ. செ: அமைச்சரே, வையத்துள் வாழ்வாங்கு வாழ வகை தெரியாதிருந்த என்னைக் கவிஞர் கை கொடுத்து நல்வழியில் செலுத்தினார்; கொலையை அன்றி நன்னெறி அறியாதிருந்த என்னை அறநெறி செலுத்தினார். இதில் தவறு என்ன?

வீ. பா: அறநெறியைப்பற்றி எனக்கு இப்பொழுது கவலை இல்லை. பகைவனை என்ன செய்வது என்பது தான் என் கவலை.

நெ. செ: அமைச்ச, அஞ்ச வேண்டா. யானே அமர்க் களம் செல்கிறேன்.

வீ. பா: அரசே, வாழ்க நும் கொற்றம்! இதோ படைகளை அணிவகுத்து நிற்க ஆணை இடுகிறேன்.

நெ. செ: வேண்டா. படைகள் எதற்கு? நான் அமர்க் களம் செல்வது மறப்போர்புரிய அன்று; அறப் போர் புரியவே ஆகும்.

வீ. பா: ஆ! என்ன கூறினீர்கள்? படைகள் இல்லாமல் அமர்க்களம் செல்வதா?

நெ. செ: நீர் கூறும் காலாட்படை, யானைப்படை முதலியன வேண்டா என்றேன். ஆனால் என்னிடம் படைகள் உள்ளன?

வீ. பா: என்ன அரசே, விளையாட்டு நேரமா இது?

நெ. செ: அன்று அமைச்சரே! உறுதி என்னும் யானையில் ஏறி, பொறுமை என்னும் தேர்ப்படை உடன் வர, நல்லெண்ணம் என்னும் குதிரைப் படை முன்னே செல்ல, பிழை பொறுத்தல் என்னும் காலாட்படை பின் வரச் செல்லப் போகிறேன். வெற்றி நமதே.

வீ. பா: அரசே!

நெ. செ : அஞ்சவேண்டா என்பொருட்டு. இதோ மீண்டுவிடுகிறேன்.

அங்கம்—III காட்சி—7

[பழைய போர்க்களம். சில வீரர்களுடன் சேரன் இரும்பொறை மட்டும் அரங்கின் நடுவில் நிற்கிருன்.]

(தூரத்தில் குதிரையின் குளம்பு ஒலி கேட்கிறது)

இ. பொ: என்ன புதுமை! பாண்டிப் படை ஒன்றையும் காணவில்லையே! அதோ ஒற்றை ஆளாகக் குதிரை ஏறி வருபவன் யார்?

வீரன்: அரசே, அவரே பாண்டி மன்னர் நெடுஞ்செழியர். இதோ நெருங்கிவிட்டார்.

[நெடுஞ்செழியன் இரும்பொறை எதிரே வருகிருன்.]

நெ. செ: சேர மன்னரே, இரத்த வெறி இன்னும் தணியவில்லையா உமக்கு!

இ. பொ: ஆ! நெடுஞ்செழியனு? என்ன இறுமாப்பு உனக்கு! படைகள் இல்லாமலே எம்மை வென்று விடலாம் என்ற எண்ணமா?

நெ. செ: சேரரே, வெற்றியையே இதுவரையிற் பாராததால் அதன்மேல் உமக்கு இவ்வளவு ஆசை. ஆனல், ஓயாது வெற்றிபெற்ற நான் அதன்மேல் வெறுப்படைந்துவிட்டேன்.

இ. பொ. இம் முறை தோல்வியின் சுவையை அனுபவித்துப் பார்க்க எண்ணமா?

நெ. செ: (சிரிப்புடன்) இரண்டுமே எனக்கு ஒன்றுதான்.

இ. பொ: அவ்வளவு ஞானம் கைவந்துவிட்டால் அரசாட்சி எதற்காக?

நெ. செ: ஆம்! அதனையும் துறக்கத்தான் போகிறேன்.

இ. பொ. ஆ! என்ன கூறுகிறாய்? உண்மையாகவா? செழியன்தானா பேசுவது?

நெ. செ: ஆம்! தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்—நானே தான் பேசுகிறேன். வேண்டேன் புகழ்! வேண்டேன் செல்வம்! வேண்டேன் அரசு!

இ. பொ: ஏன்?

நெ. செ: ஏனா? உம் மகள் நல்லினிதான் எனக்கு இந்த அறிவைப் புகட்டினாள். எம் புலவர் பெருந்தகை மாங்குடி மருதனார் இதனை வளர்த்தார்.

இ. பொ: செழியா, என்ன! போருக்கு அஞ்சிவிட்டாயா?

நெ. செ: நீர் என்ன கூறினும் சரி. மனிதனை மனிதன் கொல்லும் செயலுக்கு இனி நான் சம்மதிக்க மாட்டேன்.

இ. பொ: அரசருடைய கடமையல்லவா இது?

நெ. செ: எது? கொல்லுவதா? (சிரிக்கிறான்.) ஓர் உயிரை உண்டாக்கத் தெரியாத அரசனுக்குக் கொல்லமட்டும் உரிமை கிடைத்துவிட்டதா?

இ. பொ: என் மகள் இதையா உன்னிடம் கூறினுள்?

நெ. செ: வாயால் கூறவில்லை; தன் செயலாற் செப்பி விட்டாள்.

இ. பொ: என்ன செப்பிவிட்டாள்?

நெ. செ: தன் தூய அன்பினைக் காப்பாற்ற உயிரையே தந்த பெருந்தகைமை பெற்ற அவள் அன்பின் சிறப்பை நிலைநாட்டிவிட்டாள்.

இ. பொ: இதற்கும் அதற்கும் என்ன தொடர்பு?

நெ. செ: போரால் உலகை வெல்ல முயன்ற என்னை, அன்பால் அவள் வென்றுவிட்டாள்! அன்பால் எல்லாம் நடைபெறும் என்பதை மெய்ப்பித்து விட்டாள் அல்லவா?

இ. பொ: இப்பொழுது நான் உன்னைச் சிறை செய்தால் என்ன செய்வாய்?

நெ. செ: என் காதலி எனக்கு அறிவுறுத்திய அன்பு வழியை, அவளைப் பெற்று வளர்த்த நீர் அறியாமலா இருப்பீர்?

இ. பொ: அறியவில்லையாயின்!

நெ. செ: அவளோடு சில நாழிகைகளே பழகினேன். ஆனுல், பல ஆண்டுகள் அவளை வளர்த்தும் நீர் திருந்தவில்லை என்ருல் அவளைப் பெற்றும் பெருதவரேயாவீர்.

இ. பொ: (சற்று ஆழ்ந்து சிந்தித்து) நெடுஞ்செழிய, நீ கூறுவது உண்மைதான். எனக்கும் அகக்கண்

திறந்துவிட்டது உன்னுல். ஆ! யான் என்ன தீய காரியம் செய்யத் துணிந்தேன்!

நெ. செ: நீரும் நானும் தவருகப் பகைமை பூண்டு அதற்காக ஒரு பகைமையும் இல்லாத இந்தச் சேர பாண்டிய மக்கள் ஆயிரக் கணக்கானவரைக் கொல்வது எவ்வளவு தவறு?

இ. பொ: ஆம்! உண்மைதான்! இனி என்ன செய்ய வேண்டும்?

நெ. செ: செய்வது என்ன? நீர் வேண்டுமானுல் இப் பாண்டி நாட்டையும் சேர்த்துக்கொண்டு ஆட்சி செய்யும். எவ்வாருயினும், சேர பாண்டிய மக்கள் தமிழர்களே. நீர் ஆட்சி செய்தலும் யான் ஆட்சி செய்தலும் ஒன்றுதான். ஆனுல், கேவலம் நிலங் காரணமாகவோ அன்றி வேறு காரணங் கொண்டோ மற்ருெரு தமிழ் மன்னனுடன் பகைத்துத் தமிழ்க் குருதியைச் சிந்தவேண்டா. இதுவே எனது வேண்டுகோள். என்னைப் பொறுத்தவரை என் பிழைக்கு இரங்கி இப்படியே வடக்கிருக்கப் போகிறேன்.

இ. பொ: அரசே, ஏன் வடக்கிருக்கவேண்டும்?

நெ. செ: இதுவரை அறியாமையில் மூழ்கி ஆயிரக் கணக்கானவரைக் கொலை செய்ததற்கும், உயிரினும் இனிய காதலி மாளக் காரணமாய் இருந்ததற்கும் கழுவாயாக வடக்கிருக்கப் போகிறேன்.

இ. பொ: அரசே, இக் குற்றங்கள் அனைத்தையும் புரிந்ததோடல்லாமல் பெற்ற மகனைக் கொன்ற பெருந் தீங்கு தீரவும் யானும் வடக்கிருத்தலே சிறந்தது போலும்! நீ ஒதுக்கிவிட்டுப் போகும் மிச்சிலான இந்த அரசை யான்மட்டும் எடுத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறேன்? எனக்கும் இது வேண்டா.

நெ. செ: 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை; யாண்டும் அஃது ஒப்பது இல்'[1] என்பது அறநூல் வாக்கு அன்றோ?

திரை

[1] குறள், 363

புனிதவதி

நாடக பாத்திரங்கள்

1. புனிதவதி
2. தனதத்தன்
3. பரமதத்தன்
4. தனகோடி செட்டியார்
5. கோடீசுவர செட்டியார்
6. இளம்புனிதவதி

காட்சி I

[காரைக்காலில் ஒரு திருமண வீடு: கோடீசுவர செட்டியார், தனகோடி செட்டியார்.]

(மேளவாத்திய இசை முழங்குகிறது)

கோடீ: என்ன தனகோடி செட்டியாரே, எவ்வளவு பொருத்தமான மணமக்கள் பார்த்தீரா? தன தத்த செட்டியார் மிகவும் தவஞ்செய்து பெற்ற மகளுக்குத் தக்க மணாளனைத் தேடிப் பிடித்து விட்டார்!

தனகோடி: புனிதவதியைப் பெறுவதற்குத் தன தத்தர் புண்ணியஞ் செய்தார் என்பதில் ஐய மில்லை. ஆனால்.........

கோடீ: (கலவரம் நிறைந்த குரலில்) என்ன? 'ஆனல்'.........என்று இழுக்கிறீர்களே?

தனகோ : ஒன்றுமில்லை. கோடீசுவர செட்டியாரே, ஏன் கலவரமடைகிறீர்? தக்க மணாளன் என்று கூறினீரே, அதைத்தான் யோசனை செய்து பார்க்கிறேன்!

கோடீ : ஏன், பண்புடையவனல்லவா அவன்?

தனகோ : உண்மைதான், வணிகர்கட்கு வேண்டும் பண்புகள் அனைத்தும் அவனிடம் இருக்கின்றன. ஆனால், புனிதவதியை மனைவியாகப் பெறுதற்குரிய தகுதி இருக்கிறதா என்றுதான் சிந்திக்கிறேன்.

கோடீ : அஃதென்ன, அப்படிக் கூறுகிறீர்கள்? ஏன் அவன் புனிதவதிக்கு ஏற்ற மணாளன் ஆகமாட்டான்? புனிதவதியுடைய தந்தையார் தனதத்தர் இப்படி ஒரு மருமகன் கிடைத்ததற்காக ஒரே மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்!

தனகோ : கோடீசுவரரே, இவற்றையெல்லாம் யான் அறியாமல் இல்லை. ஆனால், புனிதவதி இதனால் எல்லாம் மகிழ்கிறாளா என்பதைக் கவனிக்க வேண்டாவா? அவள் முகத்தைக் கவனித்தீரா?

கோடீ : ஆம், நீங்கள் சொல்லிய பிறகு உண்மை விளங்குகிறது. அவளுடைய புறக் கண் இங்குள்ளனவற்றைப் பார்ப்பதுபோல இருப்பினும், அகக் கண் எங்கோ சென்று நிலைத்துவிட்டது! ஒரு வேளை இந்தத் திருமணத்தில் அவளுக்கு விருப்பம் இல்லையோ!

தனகோ : எந்தத் திருமணத்திலும் அவளுக்கு விருப்பம் இராது. நம்மைப்போலத் திருமணஞ் செய்துகொண்டு குடும்ப விருத்தி செய்து வாழப் பிறந்தவளல்லள் புனிதவதி.

காட்சி II

[பரமதத்தன் வீடு: அடியார் ஒருவர், புனிதவதியார்.]

அடியார் : (கோலை ஊன்றி வரும் ஓசையுடன்) ஹர ஹர நம பார்வதீ பதே! ஹர ஹர மகாதேவா! தாயே, மிக்க பசியால் வாடுகிறேன்! ஏதேனும் ஆகாரம் கிடைத்தால் இப் பசிப்பிணியைப் போக்கிக்கொண்டு இறைவன் தியானத்தில் அமரலாம்.

புனிதவதி : வருக வருக! சுவாமி, விடையவன் தன் அடியாரே, பெறலரிய விருந்தானுல் பேறு இதன்மேல் யாது? உள்ளே வருக!

அடி : தாயே, உன் மனம்போல வாழ்வு பெறுவாயாக!

புனித : பெரியீர், சோறுமட்டுந்தான் ஆயிற்று. கறியமுது முதலியன சித்தமாகவில்லை.

அடி : தாயே, பசிப்பிணி அண்டும்பொழுது எதையாவது போட்டு அத் தீயைத் தணிக்க வேண்டும் என்பது தவிர, இது அது என்ற பாகுபாடு எனக்கில்லை அம்மா.

16

புனித : நல்லது சுவாமி! இந்தப் பரிகலத்தினருகில் அமருங்கள். நீங்கள் வந்த நேரத்தில் என் கணவர் கடையிலிருந்து அனுப்பிய இரண்டு மாங்கனிகள் இருக்கின்றன. இந்தத் தயிர்ச் சோற்றை இம் மாங்கனியுடன் புசித்துக் களைப் பாறுங்கள்.

அடி : தாயே, எனது மூப்பால் பொறுத்தற்கியலாத பசியைப் போக்க நினைந்த நீ, நீலமணி மிடற்று ஒருவன்போல என்றும் வாழ்வாயாக!

காட்சி III

[பரமதத்தன் வீடு: பரமதத்தன், புனிதவதியார்.]

பரம : ஆஹா! புனிதவதி, இன்று உன் சமையல் மிகுந்த ருசியுடன் இருக்கிறது. தனதத்த செட்டியார் மகள் எவ்வளவு அரிய கைத்திறமை யுடையவள் என்பதைக் காண்கிறேன். ஓ! இதென்ன மாங்கனி?

புனித : நீங்கள் கடையிலிருந்து அனுப்பியதுதான்.

பரம : என்ன சுவை தெரியுமா இது? தெலுங்கு நாட்டிலிருந்து வாணிக சம்பந்தமாக என்னைப் பார்க்க வந்த வணிகர் ஒருவர் கொண்டுவந்த பழம்; அற்புதமான சுவையுடையது!

புனித : ஆற அமர இருந்து சாப்பிடுங்கள்.

பரம : ஆமாம். இன்னும் ஒரு பழம் இருக்குமே! அதனையும் கொண்டுவந்து என் இலையில் இடு.

இத்தகைய பழத்தை யான் உண்டதே இல்லை! நல்ல வேளையாக அவர் இரண்டு பழங்களாகக் கொண்டு வந்தாரே......

புனித : இதோ கொண்டு வருகிறேன்.................. (தாழ்ந்த குரலில், வருத்தத்துடன்) பெருமானே என்ன அறியாமை! அடியார்க்கு ஒரு பழத்தை வைத்துச் சோறு போட்டதை மறந்துவிட்டு இதோ கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு உள்ளேயும் வந்துவிட்டேனே! இனிச் சென்று இல்லை என்றால் அவர் என்ன நினைப்பார்! என் சொற்களில் உண்மை இல்லையோ என்று ஐயுறுவாரே! நினைந்தவிடத்து உதவும் பெரு மானே, உன்னையன்றி..................

பரம : (உரத்த குரலில்) புனிதவதி, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

புனித : (தாழ்ந்த குரலில்) வேறு யார் துணை? இன்று நீ என்னைக் காத்தருளல் வேண்டும். பெருமானே, உன்னையே சரண் என்பார் இது வரை யாரும் தாழ்ந்துவிடவில்லை............ஆ! இது என்ன வியப்பு! ஆம், இதுவும் உன் அருள் என்றே நினைக்கிறேன்! இதோ வரு கிறேன்.

பரம : (வாயில் பழம் இருப்பது போன்ற குரலில்) என்ன புனிதவதி, பழத்தை எடுத்து வர இவ் வளவு நேரமா? சரி. இது என்ன பழம்? (நல்ல குரலில்) மாம்பழந்தான். என்றாலும் நான்

அனுப்பிய இரண்டில் மீதம் இருந்ததா? இல்லை! நிச்சயமாக இல்லை! இத்தகைய மாம்பழம் மூவுலகிலும் பெறுதற்கரிது! இப் பழத்தை எங்கிருந்து பெற்றாய்?

புனித: (தனக்குள்) இறைவா, இது என்ன சோதனை? உன் திருவருளை வெளியிடுதலுந் தவறு. ஆனால், கணவரிடம் உண்மை கூறாதிருப்பதும் தவறு. இத் தருமசங்கடமான நிலையில் யான் என்ன செய்வேன்!

பரம: என்ன புனிதம், யாரிடமிருந்து இக் கனியைப் பெற்றாய்? உண்மையைக் கூறு! ஏன் ஒன்றும் பேசாமல் நிற்கிறாய்?

புனித: (தனக்குள்) பெருமானே, உன் கட்டளையை மீறி யான் தவறு செய்தாலும் மன்னிப்பாய். ஆனால், என் நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் மேலும் கேள்விகள் கேட்கும் இவருக்கு மெய்ம்மை கூறுவதே சிறந்தது. இறைவா, நீயே சரணம்.

பரம: என்ன, நான் கேட்பது காதில் விழவில்லையா?

புனித: (மலர்ந்த முகக்குறிப்புச் சொல்லில் விளங்க) நீங்கள் அனுப்பிய இரண்டு பழங்களில் ஒரு பழத்தை அடியார் ஒருவருக்கு இட்டு அமுது படைத்துவிட்டேன்.

பரம: அது சரி. இந்தப் பழம் ஏது? யார் கொடுத்தார்கள்?

புனித : இது இறைவன் தந்த பழம்.

பரம : என்ன புனிதவதி? விளையாடுகிருயா? இறைவன் தந்ததா! இறைவனிடங்கூட வியாபாரம் பண்ணுகிருய் போல இருக்கிறதே!

புனித : இறைவன்மேல் ஆணை! நான் கூறுவது முற்றிலும் உண்மை!

பரம : உன் ஆணையைக் கண்டு இது நம்பக்கூடியதாக இல்லை. நீ கூறுவது உண்மையானல், இறைவன் அருளால் இன்னும் ஒரு பழம் வரவழைத்துக் கொடு பார்க்கலாம்! போ, கொண்டுவா, சீக்கிரம்!

புனித : (தாழ்ந்த குரலில்) அடியார் துயரம் பொருத அண்ணலே, ஈங்கு எனக்கு மற்ருெரு பழம் அளியாதுபோனல் என் உரை பொய்யாகிவிடும்.

(புனிதவதியார் கையில் ஒரு மாம்பழம் வந்து விழுகிறது. அம்மையார் பாடுகிருர்.)

'பிரான்என்று தன்னைப்பன் ளுள்பரா
வித்தொழு வார்இடர்கண்டு
இரான்என்ன நிற்கின்ற ஈசன்கண்
டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்துபொம் மென்துறைவாய்
அராநின்று இறைக்கும் சடைச்செம்பொன்
நீள்முடி அந்தணனே.'

பரம : புனிதவதீ, என்ன, பாடிப் பழஞ்சம்பாதிக்கப் பார்க்கிருயா? ஆ! இது என்ன! பழமா! பார்ப்

பதற்கே இவ்வளவு அழகாக இருக்கிறதே! எங்கே, என் கையில் கொடு பார்க்கலாம்! என்ன அதிசயம்! யான் காண்பது கனவா! உன் கையிலிருந்து என் கையில் விழுந்ததும் இருந்தது. ஆனால், அதைச் சுவைக்க வேண்டும் என்று வாய்க்குக் கொண்டு போனவுடன் மறைந்து போவானேன்! இதுதான் இறைவன் திருவருள் என்பதா! இது என்ன புதுமை புனிதவதி?

புனித : எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

காட்சி VI

[கடைவீதி: தனகோடி செட்டியார், தனதத்தன்.]

தனகோ : என்ன தனதத்தரே, மருமகன் வாணிகம் செய்கிறேன் என்று போனவன் இத்தனை ஆண்டுகளாக வாராதிருப்பானேன்? ஏதாவது தகவல் கிடைத்ததா?

தனதத்: என் மருமகன் பரமதத்தன் பாண்டி நாட்டில் கொற்கைப் பதியில் தங்கிப் பெரிய வியாபாரம் நடத்துகிறானாம்.

தனகோ : அட பைத்தியக்காரரே, இதற்கா இவ்வளவு கவலைப்பட்டீர்?

தனதத் : வாணிகம் செய்வதில் தவறு இல்லை. ஆனால், அங்கு அவன் குடும்பமே நடத்துவதாக அல்லவா தகவல் வந்துள்ளது!

தனகோ: தனதத்தரே, கவலைப்படவேண்டா. நான் இதற்கொரு வழி செய்கிறேன். அதிருக்கட்டும். புனிதவதிக்கு இச் செய்தி தெரியுமா? அவள் என்ன நினைக்கிருள்?

தனதத்: ஆம் ஐயா, அதுபற்றிக்கூட உங்களைக் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்று நினைத்தேன். ஆதியிலிருந்தே புனிதவதி ஒரு விநோதமான பெண். அவளையொத்த பெண்கள் மணல் வீடு கட்டி விளையாடும்பொழுது அவள்மட்டும் தனியே இருந்து கோயில் கட்டி விளையாடுவாள். அப்பொழுதெல்லாம் இதில் நான் ஒன்றுங் தவறு காணவில்லை.

தனகோ: பாவம்! பெண்ணைப் பெற்று வளர்த்தீரே தவிர, அவளை இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

தனதத்: கணவன் போனதுபற்றி அவள் கவலைப் படுவதாகவே தெரியவில்லை. அதுதான் புதுமை. இவ்வாறு கணவனைப் பிரிந்த மகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? அவளை எப்படியாவது அவள் கணவனிடம் சேர்ப்பது உங்கள் பொறுப்பு. இனி அவள் என்னுடைய மகள் அல்லள்; உங்கள் மகளே.

தனகோ: இதுபற்றிய கவலை உமக்கு வேண்டா. யான் விரையில் அவளை அழைத்துச் சென்று, பரமதத்தனிடம் சேர்க்கிறேன்.

காட்சி V

[மதுரை மாநகரில் பரமதத்தன் வீடு: பரமதத்தன், தனகோடி செட்டியார், புனிதவதி, இளம் புனிதவதி, பரமதத்தன் 2ஆம் மனைவி, உறவினர் முதலானோர்.]

பரம: ஐயா, மறுபடியும் ஒரு முறை இவரை என்னுடைய மனைவி என்று கூறுதீர்கள். அது பெரிய பாவம்! இதோ என் மனைவியையும் குழந்தையையும் இவரை வணங்கச் செய்து விட்டுப் பிறகு பேசுகிறேன். குழந்தை புனிதவதி, இவரை வணங்கம்மா. நமது குலதெய்வம் இவர்.

தனகோ: என்ன பரமதத்தரே, உமக்கு அறிவு குழம்பி விட்டதா? மனைவியை விழுந்து வணங்கினீர்? ஏன் என்று கேட்டால், அவள் தெய்வம் என்கிறீரே!

பரம: ஐயா, முதலில் இவரை மனைவி என்று நினைந்துதான் வாழ்ந்தேன். ஆனால், இவர் இறைவன் திருவருள் பெற்ற பெரியவர் என்பதை நேரே கண்டவுடன் இவரை விட்டு நீங்கினேன். மேலும் யான் மறுமணஞ் செய்துகொண்டு பெற்ற இப் பெண் குழந்தைக்கும் இவருடைய பெயராகிய புனிதவதி என்ற புண்ணியத் திருநாமத்தையே வைத்தேன். நீங்களும் இவரை விழுந்து வணங்குங்கள்.

தனகோ: அம்மா, புனிதவதி, இவர் கூறுவது......

புனித: பெருமானே, உன் திருவருள் இதுவானால், யான் செய்வது என்ன இருக்கிறது?

(பாடுகிறார்)

'ஈங்கிவன் குறித்த கொள்கை
இது;இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்(து) இங்(கு) உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியே னுக்குப்
பாங்குற வேண்டும் ஐயா!
படர்சடைக் கங்கை யானே!

(புனிதவதியார் பேய் வடிவாக மாறுகிறார்)

தனகோ: *ஆ! அம்மா புனிதவதி, பரமதத்தன் கூறியது எவ்வளவு உண்மை! ஆம்!* இந்தப் பேய் வடிவு உங்களுடைய குறிக்கோளுக்கு ஏற்றதுதான். வேண்டுவார் வேண்டுவதே ஈய வல்ல பெருமானை வேண்டிப்பெற்ற வடிவம் இது.

பரம: உறவினர்களே, இனி என் சொற்களில் யாருக்கும் ஐயமிராதென்றே நினைக்கிறேன். ஊன் அடை வனப்பை எல்லாம் உதறி எற்புடம்பே ஆக, வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவமான இவரை அனைவரும் வணங்குங்கள்.

இளம்புனிதவதி: *அப்பா, அப்பா,* எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! இங்கு நின்றவர் யார்? இப்பொழுது இருக்கும் இவ்வெலும்புக் கூடு யார்?

பரம: *அம்மா* குழந்தை, இப்பொழுதே இவரை வணங்கிக்கொள். இதோ இவர் புறப்பட்டுவிட்டார். இவர் போவதற்குள் இவரது ஆசியைப் பெற்றுக்கொள். பிறகு பேசிக்கொள்ளலாம்.

காட்சி VI

[மதுரையில் பரமதத்தன் வீடு: இளம்புனிதவதி, பரமதத்தன்.]

புனித. 2: அப்பா, பெரியம்மாளைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று, நான் எத்தனை முறை கேட்டுவிட்டேன்? யான் பெரியவளானவுடன் கூறுவதாக இதுவரை கூறி வந்தீர்கள். இன்று எனக்குப் பதினெட்டாம் வயது முடிகிறதே! இன்றுவரை அவர்களைப்பற்றி அறிய வேண்டும் என்ற ஆசை தளரவே இல்லை.

பரம: குழந்தை, நீ கூறுவது நியாயந்தான். ஆனால், இனிமேல் அவரைப் பெரியம்மாள் என்று வழங்காதே. 'காரைக்கால் அம்மையார்' என்று கூறு அம்மா.

புனித. 2: ஏன் அப்பா, எப்படி இருந்தாலும் அவர் என்னுடைய பெரிய தாயாரல்லவா? அவ்வாறு கூறுவதில் தவறு என்ன?

பரம: குழந்தை, நீ அவ்வாறு கூறும்பொழுதெல்லாம் என்னை வாள்கொண்டு பிளப்பதுபோலத் தோன்றுகிறது!

புனித. 2: ஏன் அப்பா அப்படி?

பரம: அம்மா, மனிதன் அறியாமல் சில சமயங்களில் பிழை செய்ய நேரிடுகிறது. ஆனால், பிழையை அறிந்த பிறகு மறுபடியும் அதனைச் செய்ய அறி

வுடையவன் துணிய மாட்டான். காரைக்கால் அம்மையாரை யான் இன்னர் என்று அறியாத பொழுது மணந்துகொண்டு வாழ்ந்தது உண்மை தான். ஆனல், அவருடைய உண்மை நிலை தெரிந்த பிறகு பழைய உறவுபற்றி நினைக்கவும் என் மனம் நடுங்குகிறது!

புனித. 2: அதனல், நான் ஏன் அப்பா அவரைப் பெரிய அம்மாள் என்று கூறக்கூடாது?

பரம: நீ அவ்வாறு கூறும்பொழுதெல்லாம் முன்னர் யான் அவரை நினைத்திருந்த உறவு முறை நினைவிற்கு வருகிறது. உடனே அச்சம் தோன்று கிறது! என் கண்கண்ட தெய்வமாகிய அவரை இனி நீ முறை வைத்து அழையாதே அம்மா.

புனித. 2: சரி அப்பா. ஆனல், இன்று அவருடைய வடிவம் முதலியன கனவு போல எனக்குத் தோன்றுகின்றன அப்பா. எப்போதுமே அவர் இறைவனிடத்தில் இவ்வளவு அன்பு பூண்டிருந்தாரா?

பரம: ஆமம்மா. அவர் பாடிய பாட்டைக் கேள்.

[பாட்டு]

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானேர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?'

'ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன்-ஒன்றேகாண்
கங்கையான் திங்கள் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்கு ஆளாம் அது.'

புனித. 2 : அப்பா, என்ன அரிய வாழ்க்கை! என்ன அரிய குறிக்கோள்! அப்பா, அவர் பேய் வடிவு கொண்டபின் என்ன செய்தார்?

பரம : இறைவனையே வேண்டிப் பெற்ற வடிவமாக லின் நேரே கைலைமலை சென்று அவனைக் காண வேண்டுமென்ற விருப்பால் வடதிசை நோக்கிச் சென்றார் அம்மா.

புனித. 2 : நல்ல அதிர்ஷ்டம் இல்லாமையால் யான் அப்பொழுது சிறியவளாய் இருந்துவிட்டேன். பேய் வடிவு கொண்டு அவர் வடதிசையில் சென்றதை எத்தனை மக்கள் பார்த்திருப்பார்கள்! அவர்களே புண்ணியசாலிகள்!

பரம : அவர் பேய் வடிவைக் கண்டு அஞ்சி ஓடினர் பலர். அவர் வடிவை எள்ளி நகையாடினர் பலர். கண்டதே கண்டு, கேட்டதே கேட்டு, உண்டதே உண்டு வாழும் இம் மக்கள் கூட்டம் புதுமையும் சிறப்பும் காணும்பொழுது எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை.

புனித. 2 : அவர்கள் இப்படி எள்ளி நகையாடியதை அம்மையார் நல்ல வேளையாகக் கேட்டிருக்க மாட்டாரல்லவா?

பரம : ஏன்? அவர்கள் பேசியது நன்றாக அவர் காதிலும் விழுந்தது. தாழ்ந்த பண்பாடுடையவர் கள் பெரியவர்களை அவமதிக்கும்பொழுதுகூட உரத்துத்தான் பேசுவார்கள்.

புனித. 2 : ஐயோ ! அப்படியானால் அம்மையார் மிக வும் வருத்தப்பட்டிருப்பார்களே !

பரம : அம்மா, நீ குழந்தையாகலின் இவ்வாறு நினைக்கிறாய். ஆனால், அவர் வருத்தப்படவில்லை. அவர் அதற்குப் பதிலாக, பேசியவர்களின் அறியாமையை நினைந்து சிரித்துவிட்டு என்ன கூறினார் தெரியுமா ?

புனித. 2 : என்ன அப்பா கூறினார் ?

பரம : 'அண்டர்நா யகனார் எம்மை அறிவரேல் அறியா வாய்மை எண்திசை மாக்களுக்கு யான் எவ்வுரு வாயின் என்னும்?' என்று பாடினாரம்மா.

புனித. 2 : ஆஹா ! அப்பா, பெரியோர் உள்ளம் இருந்தவாறு என்னே ! அவர் பார்ப்பதற்கு எவ்வாறு இருந்தார் அப்பா !

பரம : அவரே தாம் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் தம் வடிவை விவரிக்கின்றார். இதோ கேள் :

(பாடுகிறான்)

'கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பல் குழிவ யிற்று,
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்,
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்தனல் ஆடு மெங்கள்
அப்பற் கிடந்திரு ஆலங் காடே.'

புனித. 2 : ஏன் அப்பா அம்மையார் இப்படிப்பட்ட பேய் வடிவு எடுத்துக்கொள்ளவேண்டும் ?

பரம : கள்வர் முதலிய கயவர்கள் நடமாடும் உலகில் அழகிய பெண் வடிவுடன் அவர் நெடுந்தொலை சென்றிருக்க முடியாதல்லவா ?

புனித. 2 : இறைவன் கைலையிலேதான் தங்கியுள்ளான் என்று அம்மையார் கருதினர் ?

பரம : இல்லை. இறைவன் அனைத்தையும் கடந்து உருவமற்று இருப்பவன் என்பது அவருக்கு நன்கு தெரியும்.

'வானத்தான் என்பாரும் என்க; மற்று
உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தான்என்க'

என்று அவரே பாடியுள்ளார்.

புனித. 2 : அவரே விரும்பிச் சென்று, கைலைமலையை அடைந்தாரா ?

பரம : அதற்கென்ன சந்தேகம் ? கைலை மலைவரை நம்மைப்போல நடந்து சென்று அப் புண்ணிய பூமியை அடைந்ததும் காலால் நடத்தல் முறையன்று என்று கருதித் தலையால் அல்லவா நடந்தார் !

புனித. 2 : ஆ! அப்படியா! என்னே அவருடைய அன்பின் ஆழம் !

பரம : நீ கூறுவது முற்றிலுஞ் சரி. கைலை மலையில் சிவபெருமானுடன் இருக்கும் உமா தேவிக்கும்

அம்மையாரின் அன்பு வியப்பை விளைத்தது என்றால் வேறு கூறுவானேன் ?

புனித. 2 : (வியந்து) அப்படியா ! உமையம்மையார் என்ன கூறினர் ?

பரம : வியப்பு மிகுதியால் இறைவனைப் பார்த்து, 'பெருமானே, தலையினால் நடந்து இங்கு ஏறும் ஒரு பேயின் அன்பு இருந்தவாறு என்னே!' என்றார்.

புனித. 2: அப்படியா அப்பா! என்ன ஆச்சரியம்! அதற்கு இறைவர் என்ன விடை கூறினர் ?

பரம: ஆதியும் அந்தமும் இல்லாத அந்த அரும்பெருஞ் சோதி, அம்மையாரைத் தமக்குத் தாய் என்று கூறினராம்.

புனித. 2: இதென்ன வியப்பு! இறைவரே தமக்கு அம்மையாரைத் தாய் என்று கூறுவதனால் அதை விடப் பெரிய பேறு என்ன இருக்கிறது?

பரம: அவர் தமக்கு மட்டும் தாய் என்று கூறவில்லை அம்மா. உமாதேவியாரையும் சேர்த்துக்கூறின ராம். 'உமையே, வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்' என்றாராம்.

புனித. 2: தாய் தந்தையரற்ற அத் தனி மூலப் பொருளே தாய் என்று கருதவேண்டுமானால் என் பெரிய தாயார் எத் துணைத் தவஞ்செய்திருக்க வேண்டும்!

பரம: இறைவர் அவரைத் தாய் என்று கருதியது மட்டுமன்றி, அப்படியே வாயால் கூப்பிடவும் கூப்பிட்டாராம்!

புனித. 2: ஆ! இறைவர் வாயாலும் அவ்வாறு அழைத்தாரா?

பரம: ஆம் அம்மா. 'அம்மே' என்று இறைவர் அழைக்க, அம்மையார், 'அப்பா' என்று மறுமொழி கூறினர்.

புனித. 2: அப்பா, எனக்கு வியப்புத் தாங்கவில்லையே! இவ்வாறு பெரியம்மாள் கூற எவ்வளவு அன்பு இருந்திருக்க வேண்டும்!

பரம: அடியார்களே ஒரு தனி இனம் அம்மா. அவர் கைலையில் இருந்து வாழ்வதைக்காட்டிலும் இந்த உலகில் இருந்துகொண்டு இறைவருடைய உருவ வழிபாட்டில் கருத்தைச் செலுத்தவே நினைக்கிறார்.

புனித. 2: ஏன் அப்பா அப்படி?

பரம: நம்மைப் போன்ற அறியாமையுடைவர்கள், பிறப்பின் பெருமை தெரியாமையால், இது துன்பம் என்று கூப்பாடு போடுகிறார்கள். ஆனல், உண்மையாக இப் பிறவி வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள்.

புனித. 2: அதனல் அவர்கட்குத் தீங்கு நேராதா அப்பா?

பரம: அதுதான் வியப்பு! அவர்களாக வேண்டிப் பெறும் அந்தப் பிறவியில் அவர்கள் குறிக்கோளை அல்லது லக்ஷியத்தை மறப்பதில்லை.

புனித. 2: ஆம். லக்ஷியமுடையபொழுது பிறவி சிறந்ததுதான். லக்ஷியத்தையடைய இந்த உடம்பு இன்றியமையாததல்லவா?

பரம: அடியார்கட்கு லக்ஷியம், அதன் பயன் என்ற இரண்டும் ஒன்றுதான். லக்ஷியம் இறைவனைக் கும்பிடுதல். அதன் பயனும் அதுவே. ஆகவே, அவர்கள் எங்காவது ஓரிடத்தில் இறைவனைக் கும்பிட்டுக்கொண்டே இருக்க விரும்புகிறார்கள்.

புனித.2: அம்மையாரும் அப்படியே விரும்பினாரா?

பரம: ஆம். இறைவர் யாது வேண்டும் என்று கேட்டாராம். உடனே அம்மையார்,

'பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புஉண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க வேண்டும்'

என்று பாடினார்.

[திரை]

அருள் ஒளி

நாடக பாத்திரங்கள்

1. அபிராமி பட்டர்
2. நடராஜ பட்டர்
3. அமுதகடேச பட்டர்
4. கடவூர்ப் பட்டர்
5. சரபோஜி மன்னர்
6. அமைச்சர்

[திருக்கடவூர்க் கோவிலின் மண்டபம் : நடராச பட்டர், அமுதகடேச பட்டர்.]

நட : அமுதகடேச பட்டரே, கேட்டீரா அதிசயத்தை ?

அமு : என்ன ஐயா, நடராஜ பட்டரே ! என்ன அதிசயத்தைக் கண்டுவிட்டீர் ?

நட : அப்படிக் கேளுமையா ! நம்ம அபிராமி பட்டனைத் தெரியுமோ உமக்கு ?

அமு : யார் ? கடவூர்ப் பட்டரின் மகன் அபிராமி தானே ? தெரியாமல் என்ன ? நல்ல பையன். அவனுக்கென்ன ?

நட : நன்ருகக் கண்டுவிட்டீர் ! அவனும் நல்ல பையன் ; நீரும் மிகவும் நல்லவர்தான் !

அமு : ஏன் ஐயா இவ்வளவு கோபம்? அவன் என்ன அப்படிச் செய்துவிட்டான்? தமிழ், சம்ஸ்கிருதம், சங்கீதம் மூன்றிலும் அவனுக்கு நிகர் யாரும் இல்லையே நம் ஊரில் !......

நட : சரிதாங்காணும் ! உம்முடைய அளப்பை நிறுத்தும் ! அவன் படித்து யாருக்கென்ன பயன் ?

அமு : சரி, சரி ! உம்முடைய படிப்புத்தான் நாமெல்லாம் அறிந்ததாயிற்றே ! அபிராமியைப்பற்றிக் கூறினால் உமக்கும் பொருமை வரத்தானே செய்யும் ?

நட : அட, அதுக்கில்லை நான் சொல்ல வந்தது. உம்ம விஷயத்தில் அவன் அப்படி நடந்துகொண்டிருந்தால் தெரியும்...

அமு : அப்படி என்ன? சொல்லித்தான் தொலையுமே! உம்மைத் திட்டிவிட்டானா ?

நட : திட்டி இருந்தால்கூடத் தேவலாமே ! நேற்றைக்குக் குளத்துக்கு ஸ்நானம் பண்ணப் போறபோது அவன் வழியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான்.

அமு : சரி, மரத்தடியில் இருப்பது ஒரு தவறா ?

நட : மரத்தடியில் இருந்த அவனுக்கு, என்ன அகங்காரம் தெரியுமா? அவனைச்சுற்றி ஒரு பாம்பு வளைய வந்துகொண்டிருந்தது.

அமு : அடே! அப்புறம்! அது அவனுக்குத் தெரியாதா ?

நட : தெரியாமல் என்ன ? இரண்டு கண்ணாலுந்தான் பார்த்துக்கொண்டிருந்தானே ! போதாததற்கு நாங்கள் வேறு கத்தினோம் !

அமு : நல்ல வேளை ! ஓடிவிட்டானல்லவா ?

நட : அதற்குத்தானே சொல்லவந்தேன் ? ஓடினால் தான் தேவலாமே ; பைத்தியக்காரன் மாதிரி சிரித்துக்கொண்டே இருந்துவிட்டான்.

அமு : ஐயோ! ஏனையா, சண்டை போட்டாவது அவனை அப்பால் ஓடிவிடச் சொல்கிறதுதானே ?

நட : நான் எப்படிச் சண்டை போடுவது ? அவன் தான் என்னைப் பைத்தியம் என்று கூறிவிட்டானே !

அமு : அப்படிப் பேசும் பிள்ளை அல்லவே அவன் ! நீர் என்ன சொன்னீர் ?

நட : நான் சொன்னதிருக்கட்டும். அவன் வணங்கும் அபிராமி அம்பிகையின் கையிலும் கழுத்திலும் உள்ளது நாகமாம். அதனால், அவளுடைய அடியானாகிய அவனை அது தொடாதாம் !

அமு : ஆஹா ! என்ன பக்தி ! எனக்கு அப்பவே தெரியும்.

நட : அடே, அப்பவே தெரியுமா உமக்கு ? என்ன தெரியும் உமக்கு ?

அமு : அவன் பக்தியின் ஆழம். அவன் அபிராமி உபாசகன் என்பது தெரியாதா உமக்கு ?

நட : ஓ! அப்படிச் சொல்லும்! வாம மார்க்கத் தவனு? ஐயோ! பாவம்! நம்ம கடலூர்ப்பட்ட ருக்கு இப்படி ஒரு பிள்ளை பிறக்கவேண்டுமா?

அமு : என்ன ஐயா, உளறுகிறீர்? வாம மார்க்கமா வது, அபிராமிபட்டனுவது? என்ன சம்பந்தம்?

நட : அட தெரியுங்காணும் எனக்கு! நான் சந் தேகப்பட்டது சரியாப்போச்சு! அல்லாவிட்டா அவனுக்கு ஏன் இவ்வளவு அகங்காரம்? பெரி யவா சின்னவாண்ணு பார்க்கிருனு? இருக்கட்டும் பார்க்கிறேன்!

அமு : என்னங்காணும் அகங்காரம்? உம்மை ஏன் பைத்தியம் என்று கூறினுன்?

நட : அதுவா? நான் பைத்தியமாம். அல்லாவிட் டால் அம்பிகையைப் பூசை செய்கிற நான், பாம்புக்குப் பயப்படக்கூடாதாம்.

அமு : பின்னே, நீர் ஏன் இவ்வளவு பயப்பட்டீர்?

நட : நானுபயந்தேன்? அவனைக் காப்பாற்றுவதற்காக அவ்வளவு சத்தம் போட்டேன்!

அமு : சரிதான்.—நாளைக்கு நம்ம ஊருக்கு சரபோஜி மகாராஜா வரப்போருராமே, தெரியுமா உமக்கு?

நட : மகாராஜா எதுக்கு இப்ப வரார்?

அமு : நாளைக்குத் தை அமாவாசை அல்லவா? காவிரிப்பூம்பட்டினத்திலே கடல் ஸ்நானம் பண்ணப் போருராம் மகாராஜா.

நட : பின்னே நமக்கென்னவாம்?

அமு : வழியிலே திருக்கடவூரிலே சுவாமி தரிசனத்துக்காகத் தங்கப் போருராம். திருமுகம் வந்திருக்கிறது. அதற்காகப் பூஜையெல்லாம் தடபுடலாக நடக்கப் போகுது !

நட : ஓகோ! அப்படியா? எத்தனைவகைப் பிரசாதங் காணும்?

அமு : அழகுதான் ! பூசைன்னு சொல்றதுக்கு முன்னுலே பிரசாதத்தைக் கணக்குப் போடுகிற நீர் தானு அபிராமி பட்டனுடைய பக்தியைப்பற்றிப் பேச ஆரம்பிச்சுட்டீர் ?

நட : அந்தப் பய பேச்சை மறுபடியும் எடுக்காதிங் காணும் நம்மகிட்டே. அவனுக்குச் சரியா புத்தி கற்பிச்சுடறேன். நீர் பார்த்துக்கொண்டே இரும்.

காட்சி II

[திருக்கடவூர்க் கோவில்: சரபோஜி மகாராஜா, அமைச்சர், நடராஜபட்டர், கெங்குபட்டர், அபிராமிபட்டர்.]

(சரபோஜி மகாராஜா வருகிருர். பூசைமணி முதலியன ஒலிக்கின்றன.)

சர : என்ன அமைச்சரே, கோவிலினுடைய சிறப்பையும் விமரிசையையும் பார்த்தீரா ?

அமை : மன்னுதி மன்னர் சரபோஜியாருடைய கோவில்கள் நன்கு நடைபெறுவதில் ஆச்சரியமென்ன ?

சர : நல்லது. ஆண்டவனுடைய சந்நிதானத்தில் அரசனுவது, குடிகளாவது! எல்லோரும் ஒன்று தான். இதோ இங்கே தூண் பக்கத்தில் உட்கார்ந்திருக்கின்ற இவர் யார்?

நட : மகாராஜா, கடவூர்ப்பட்டர் மகன் அபிராமி பட்டன் இவன்தான். மகா அகங்காரம் பிடித்தவன்!

சர : என்ன பட்டரே, இப்படிச் சொல்கிறீர்? அவருடைய முகத்தைப் பார்த்தால் பெரிய சாந்த நிலையில் இருப்பவர்போலத் தெரிகிறதே!

நட : அவ்வுளவும் வேஷம் மகாராஜா! கண்ணை மூடிக்கொண்டிருப்பதெல்லாம் ஏமாற்று வித்தை! ஏய், அபிராமி பட்டா, எழுந்து நின்று மரியாதை செய். இதோ சரபோஜி மகாராஜா வந்திருக்கிறுர்.

அபி : ஓம் சக்தி, சக்தி, சக்தி.

நட : பார்த்தீர்களா மகாராஜா, நீங்கள் வந்திருப்பதை அறிவித்துங்கூட இந்தப்பயல் எழுந்து மரியாதை செய்யவில்லையே!

சர : அமைச்சரே, நீர் என்ன நினைக்கிறீர்?

அமை : அரசே, நீங்கள் நினைப்பதுபோல யானும் இவருடைய முக ஒளியில் ஈடுபட்டுவிட்டேன். வீண் அகம்பாவக்காரனுக்கு இவ்வளவு அமைதி முகத்தில் நிலவ முடியாது. இவரிடம் கொஞ்சம் பேசிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

சர: அபிராமி பட்டரே, அபிராமி பட்டரே, என்ன ஆராய்ந்துகொண்டிருக்கிறீர்?

அபி: ஆராய்ச்சியாவது?—அழகிய இடை, அதிலே சாத்திய குளிபடும் பட்டு, பிச்சி மொய்த்த கன்னங்கரிய குழல், கண் மூன்று......என்ன அழகு! காணக் கண் கோடி வேண்டும்!

நட: டேய் அபிராமி, என்னடா உளறுகிறாய்? மகாராஜா கேட்டதை விட்டுவிட்டு என்னவோ உளறுகிறாயே? மது மயக்கம் அதிகமோ?

சர: என்ன நடராச பட்டரே, மது உண்பாரா இவர்?

நட: வாம மார்க்கத்தவன்தானே இவன்? மது மாமிசம் உண்பான்: இப்பொழுது மது மயக்கத்தில் தான் எந்தப் பெண்ணையோ வர்ணிக்கிறான்!

அமை: அரசே, நடராச பட்டர் சொல்வதை முழுவதும் நம்புவதற்கில்லை. இவரை வாம மார்க்கத்தவர் என்று சொல்லமுடியாது. இவர் சித்தி பெற்ற புருஷர் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

நட: இல்லை, அரசே! ஊரில் யாரை வேண்டுமானாலும் விசாரித்துப் பாருங்கள். மது மாமிசம் உண்டுவிட்டுப் பித்தேறித் திரிபவன் இவன் என்ற உண்மை விளங்கும். என்ன கெங்கு பட்டரே, நமக்குத் தெரியாதா அபிராமி பட்டனை? மஹாராஜா, இதோ கெங்கு பட்டரிடம் வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளுங்கள்.

சர: என்னுடைய மனம் இன்னும் தெளிவடைய வில்லை. இதோ பேசுகிருர்; கேட்போம்.

அபி: தாயே! எட்டுத்திக்கிலும் உள்ள லோகங்களைச் சுற்றி வரும் சூரிய சந்திரர்களைக்காட்டிலும் ஒளி விடுகின்ற உன்னுடைய முக மண்டலத்தை என் நெஞ்சிற்குக் காட்டாயோ?

நட: பார்த்தீர்களா மகாராஜா? உளறல் அதிகமாகி விட்டது. இன்னும் உங்களுக்குச் சந்தேகமிருந் தால் மேலும் ஏதாவது கேட்டுப்பாருங்கள் இவனை.

அமை: துரியாதீத நிலையில் ஆனந்தம் அநுபவிக் கின்ற இவரிடத்தில் வேறு என்ன கேட்க முடியும்?

நட: பரம்பரையாக வருகின்ற பட்டர் குலத்தில் பிறந்தவன்தானே இவன்? சாஸ்திரமெல்லாம் படிச்சவன்னு எல்லாரும் சொல்கிருர்களே! இன்றைக்கு என்ன திதி என்றுவேணுமானுல் கேட்டுப் பாருங்களேன்?

சர: சாஸ்திரம் படித்தவரைச் சோதனை செய்வதற்கு இதுதானு கேள்வி? சாஸ்திர சம்பந்தமான கேள்வி ஏதாவது கேளும் பட்டரே.

நட: (அசட்டுச் சிரிப்புடன்) சாஸ்திரத்தைப்பற்றி எனக்கே அதிகமாகத் தெரியாது. ஆனுல், இவன் மது மயக்கத்தில் இருக்கிருன் என்கிறதை நிரூபிக் கிறத்துக்கு இன்னைக்கு என்ன திதி என்று வேண்டு மானுல் கேளுங்கள்.

அமை: அதுவும் சரி, அபிராமி பட்டரே, இன்றைக்கு என்ன திதி தெரியுமா? எவ்வளவு நாழிகை மீதம் இருக்கிறது? சொல்லும் பார்க்கலாம்?

அபி: சுத்த பூர்ணிமை—பௌர்ணிமை.

நட: (வெற்றிச் சிறிப்புடன்) அரசே, பார்த்தீர்களா?—நல்ல முழு அமாவாசையான இன்றைக்கு அபிராமி பட்டனுக்குப் பௌர்ணமியாம். எவ்வளவு போதை இருந்தால் இப்படி உளறுவான்!...

சர: நடராஜ பட்டர் சொல்லுவதும் உண்மைதான் போல இருக்கிறது! அபிராமி பட்டரே, மது உண்ட மயக்கத்தில் இருக்கின்ற நீர், கோயிலில் இருக்க அருகதை உடையவர் அல்லீர். பாரும் உம்மை என்ன செய்கின்றேன் என்று! வாரும் அமைச்சரே, காவிரிப்பூம்பட்டினம் சென்றுவிட்டு வரும்பொழுது பார்க்கலாம்.

(அரசர் போகின்ற ஆரவார ஓசை.)

காட்சி III

[திருக்கடலூர்க் கோவில்: கடலூர் பட்டர், அபிராமி பட்டர்.]

கடலூ: என்ன அபிராமி, மகாராஜா வந்திருந்த போது, உளறிவிட்டாயே?—அரச தண்டனை தப்பாமல் கிடைத்துவிடுமே!

அபி: என்ன அப்பா, என்ன நிகழ்ந்தது? எனக்கு ஒன்றுமே தெரியாதே!

கடவூ: தெரியாதாவது? அமாவாசையாகிய இன்றைக்கு என்ன திதி என்று கேட்டபொழுது, பௌர்ணமி என்று சொல்லிவிட்டாயே! போதாததற்கு நடராஜன் வேறு அரசன் கோபத்தைக் கிளறிவிட்டான்! நீ ஏன் பௌர்ணமி என்று சொன்னாய்?

அபி: எனக்கு ஒன்றுமே தெரியாதப்பா! தேவியினுடைய முகமண்டிலத்தில் ஈடுபட்டிருந்த எனக்கு எல்லாம் ஒளி மயமாகக் காட்சி அளித்தது. அவர்கள் கேட்ட கேள்வியே எனக்குத் தெரியாது. என்னையும் அறியாமல், தேவியினுடைய முகம், பூர்ண சந்திரன்போல இருந்தது என்று சொல்லி இருப்பேன். அதற்காக அரசர் கோபித்துக்கொண்டால் நான் என்ன செய்வது?

கடவூ: என்னவோ அப்பா, அந்த அபிராமிதான் உன்னைக் காப்பாற்றவேண்டும்! நாளைக்கு அரசர் திரும்பி வரும்பொழுது, என்ன தண்டனை அளிப்பாரோ!

அபி: இருக்கட்டும் அப்பா, அபிராமியின் திருவருள் கைவிட்டுவிடாது. நான் இங்கேயே இருந்து இன்றிரவு தேவியை ஸ்தோத்திரிக்கிறேன். அவளுடைய திருவருளுக்கு முன்னே, அரசரும் அவருடைய கோபமும் என்ன செய்யமுடியும்?

(கோயில் மணிச் சத்தம் கேட்கிறது)

கடவூ: இதோ மாலைக்கால பூசை மணி அடிக்கிறது; நான் சென்று வருகிறேன்.

[மணிச்சத்தம் அதிகரிக்கிறது]

அபி: தேவி, உன்னுடைய முகவிலாச இன்பத்தை அநுபவித்துக்கொண்டிருந்த எனக்கு இது என்ன சோதனே ?

நன்றே வருகினும் தீதே வருகினும்
நான் அறிவது
ஒன்றேயும் இல்லே

[பாடுகிருர்]

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்
போது, மலர்க்கமலே
துதிக்கின்ற மென்கொடி, மென்கடிக்
குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்றன் விழித்துணேயே.

அன்றே தடுத்துஎன்னே ஆண்டுகொண்
டாய்;கொண்டது அல்லவென்கை
நன்றே உனக்கு இனி? நானென்
செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்
றுகைநின் திருவுளமே;
ஒன்றே! பலஉருவே! அரு
வே! என் உமையவளே !

பாலினும் சொல் இனி யாய்!பனி
மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்
ளுேன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள்
பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் ளுேஅடி
யேன்முடை நாய்த்தலேயே?

நாயேனையும் இங் கொருபொரு
ளாக நயந்துவந்து
நீயே எனை ஆண்டு கொண்டனை;
நின்றனை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்
தாய்;என்ன பேறுபெற்றேன்!
தாயே! மலைமக ளே!செங்கண்
மால்திருத் தங்கைச்சியே!

விழிக்கே அருளுண்டு அபிராம
வல்லிக்கு: வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
எமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க
ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடென்ன கூட்டினியே!

குழையைத் தழுவிய கொன்றையந்
தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்
தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம்
பாணமும் வெண்ணகையும்
உழைப்பொரு கண்ணுமென் நெஞ்சில்எப்
போதும் உதிக்கின்றவே!'

காட்சி IV

[காவிரிப்பூம்பட்டினக் கடற்கரை: சரபோஜி மகா ராஜா, அமைச்சர்.]

சர: ஆஹா! அமைச்சரே, ஓடி வாரும்! இதோ பாரும் பூரண சந்திரன் உதயமாகிவிட்டதை!

ஆ! அபிராம பட்டரே, உம்மை இகழ்ந்து விட்டேன்! என்னை மன்னித்துவிடும்!

அமை: (தூரத்தே இருந்து ஓடிவரும் ஓசை) அரசே, ... அரசே ... இதென்ன? கனவு கண்டீர்களா? இன்று அமாவாசை. ஆதலால்தானே காவிரிப் பூம்பட்டினம் வந்து முகாம் தங்கியுள்ளோம்?... பூரண நிலவு புறப்பட்டுவிட்டதாகக் கூறினீர் களே!

சர: அமைச்சரே, வேறு ஒன்றுமில்லை. கனவு கண்டேன்.

அமை; அப்படியா! என்ன கனவு?

சர: நானும் நீரும் கடற்கரையில் நின்றுகொண்டிருக் கின்றோம். அபிராமி பட்டரைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே அவரும் வந்து விட்டார். என்னைப் பார்த்து அவர் கூறினார்......

அமை: என்ன? அனைத்தும் கனவிலா? என்ன கூறினார்?

சர: 'அரசே, இதோ பாரும் கீழ்த்திசையில் பூர்ண சந்திரன் உதயமாவதை!' என்று கூறினார். மேலும், 'நான் கூறினதை அபிராமி உண்மை யாக்கிவிட்டாள் பார்த்தீர்களா?' என்றுங் கூறி னார்.

அமை: அந்த நிலையிலேதான் நீங்கள் விழித்து என்னை அழைத்தீர்கள் போலும்!

சர: ஆம், அமைச்சரே, என்ன அதிசயம் பார்த்தீரா? அவரைக் கண்டதிலிருந்து என் மனம் ஏதோ ஒரு

பெரிய அமைதியை அடைந்துவிட்டதுபோலக் காண்கிறது! வாரும் விரைவில் சென்று அவரைக் காண்போம்.

காட்சி V

[திருக்கடவூர்க் கோவில்: சரபோஜி மகாராஜா, அமைச்சர், அபிராமி பட்டர்.]

சர: அபிராமி பட்டரே, உம்மைக் கண்டு வணங்க வந்துள்ளேன்.

அபி: அரசே, நான் யார் உம்மால் வணங்கப்படுவதற்கு? திதியைக்கூட அறியாத ஓர் ஏழை நான்.

சர: பெரியவரே, திதியும் நாளும் எம்போன்ற மனிதர்கட்கு வேண்டும். இறைவியின் பூரண அருளைப் பெற்ற அன்பராகிய உமக்கு இவை தெரிந்து ஆக வேண்டுவதென்ன?

அபி: என்றாலும், அமாவாசையைப் பூர்ணிமை என்று கூறியது தவறுதானே?

சர: நீர் கூறியதைத் தவறு இல்லாமல் செய்துவிட்டாள் அம்மை!

அபி: அப்படியா! அவள் விஷயமாக அபிராமி அந்தாதி என்னும் நூலைப் பாடினேன். எவ்வாறு தவறு இல்லாமல் செய்துவிட்டாள்?

சர: நேற்றுப் பூரண நிலவின் ஒளியை நான் கண்ணாரக் கண்டேன்.

அபி: அரசே, நீங்கள் கண்டது பூரண மதியின் ஒளியன்று. அபிராமி தேவியின் அருள் ஒளியே ஆகும்.

சர: பட்டரே, எனது மதிப்பின் அடையாளமாக இறையிலியாகச் சில நிலங்களை உங்கட்கு.........

அபி: அரசே, மன்னிக்கவேண்டும்! அவள் திருவருளைத் தவிர யான் வேண்டுவது வேறு ஒன்றும் இல்லை.

சர: அதுபற்றிக் குற்றம் இல்லை. தேவியின் திருவருளில் திளைக்கும் உங்கட்கு அது வேண்டாவிட்டாலும், உங்கள் சந்ததியாருக்காவது பயன்படட்டும். ஆஹா! நான் கண்ட அந்தப் பூரண சந்திரோதயமும் அதன் ஒளியும்......!

அபி: அரசே, நீங்கள் கண்டது சந்திரன் ஒளியன்று. அது தேவி பராசக்தியின் அருள் ஒளியே தவிர வேறு அன்று.

சர: ஆம்! ஆ! உங்கள் கிருபையால் யானும் தேவியின் அருள் ஒளியில் சற்று மூழ்கி இருந்தேன்! ஓம் சக்தி!

[திரை]

இளையவன்

நாடக பாத்திரங்கள்

1. விடணன்
2. அமைச்சர்
3. புலவன்
4. திரிசடை
5. இந்திரசித்து

I

[வீடணன் தர்பாரில் அமர்ந்துள்ளான்]

வீடணன்: அமைச்சரே, போரில் ஏற்பட்ட களைப்புத் தீர்ந்தும் நம் குடிகள் மகிழ்ச்சியுடன் இல்லையே!

அமைச்சர்: விபீஷண மகாராஜாவினுடைய நாட்டில் அமைதிக்குக் குறைவென்ன? இருந்தாலும், பழைய இலங்கையில் வாழ்ந்து பழகியவர் சிலர் மட்டும் இன்னும் முணுமுணுத்துக்கொண்டு தான் இருக்கின்றனர். அவர்கள் வயதின் சுபாவம்................

வீட: அவர்கள் குறை என்னவாம்? வயோதிகர் குறையைப் போக்கி அவர்கட்கு வேண்டுவதைச் செய்வது நம் கடமை அல்லவா?

அமை: அரசே, அவர்கள் நியாயமானவற்றிற்குக் குறைபட்டால் செய்யலாம். இயலாதவற்றைக் கேட்டுக் குறைபட்டால், நாம் என்ன செய்ய முடியும்?

வீட: என்ன! நம்மால் முடியாதது ஒன்றும் இருக்கிறதா? உடனே கூறும். செய்துவிடலாம்.

அமை: என்ன மகாராஜா, நீங்களே இப்படிக்கேட்டால், நான் என்ன செய்வது?

வீட: அமைச்சரே, அஞ்ச வேண்டா. மனத்தில் உள்ளதைக் கூறும்.

அமை: ஒன்றும் இல்லை. பழைய இலங்கையில் இருந்தனவெல்லாம் இப்பொழுது வேண்டுமென்ருல் எங்குப் போவது? அப்பொழுது தேவர்கள் வந்து உங்கள் தமையனுர் இராவணருக்கு ஏவல் செய்தனர். அரக்க மாதர்களைத் தேவமாதர் வந்து குளிப்பாட்டினர். அவையெல்லாம் இப்பொழுது நடைபெற முடியுமா?

வீட: இது என்ன பேதைமை! அண்ணனுடைய கொடுமைக்கும் ஆட்சிக்கும் பயந்துகொண்டு அல்லவா இவை எல்லாம் நடந்தன? சரி. இவ்வாறு கூறுகிறவர் யார்?

அமை: பலர் இருக்கின்றனர். சிறப்பாகப் புலவன் ஒருவன் இருக்கிருன். அவன்தான் உங்கள்

ஆட்சியைச் சட்டை செய்யாமல் வாயில வந்தபடி எல்லாம் ஏசித் திரிகிறான்.

வீட : அமைச்சரே, அத்தகைய புலவனை நாம் காண வேண்டும். அவனை அழைத்துவரச் செய்யும்.

II

[புலவர் வீடு: புலவர், அமைச்சர்]

புலவன் :

நந்திரு நகரே யாதி வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபே ருவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர் இலங்கையை எடுத்துக்
[காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார் அருங்கவிப் புலவ ரம்மா !

(கதவு தட்டும் சத்தம்)

யாரது ? புலவன் வீட்டிற்குத் தாழிடுவதில்லை. திறந்துகொண்டு வாருங்கள் உள்ளே.

அமை : புலவரே, உம்மை மகாராஜா காணவேண்டு மென்கிறார். உடனே புறப்பட்டு வாரும்.

புல : முதலில் நீர் யார் என்பதைக் கூறும்; பிறகு உம்முடைய மகாராஜா யார் என்பதைக் கூறும்.

அமை : என்னைத் தெரியவில்லையா ? நான்தான் இலங்கையின் முதல் அமைச்சன். மகாராஜா என்றால் யார் என்பதுகூடத் தெரியவில்லையா ? கண் மங்கும் வயதில் நினைவும் தேய்ந்துவிட்டதோ? விபீஷண சக்கரவர்த்தியார்தான். உம் புறப்படும்.

புல : (வாய்விட்டுச் சிரிக்கிறான்.) ஹா......ஹா.

அமை : புலவரே, என்ன சிரிப்பு? யாரைப் பார்த்துச் சிரிக்கிறீர் ?

புல : உம்மைப் பார்த்தும் உம் மகாராஜாவின் ஆணையைக் கேட்டுந்தான் சிரிக்கிறேன்.

அமை : சிரிப்புக்கு என்ன காரணம் ?

புல : புதிதாகக் கிடைத்த பட்டம். அதுவும் முறை தவறிக் கிடைத்ததுதானே ? ஆட்சி முறை என்ன தெரியப்போகிறது !

அமை : நிறுத்தும் ! என்ன உளறல் இது ?

புல : உளறவில்லை அப்பனே ! கேவலம் ஒரு புலவனை அழைத்து வருவதற்குச் சேவகன் ஒருவனை அனுப்பாமல் ஓர் அமைச்சரே புறப்பட்டு வந்த விந்தையே விந்தை !

அமை : நீர் ஒரு புலவர் என்று மதித்துத்தான் நானே அழைக்க வந்தேன். இதில் என்ன தவறு ?

புல : இல்லை. என்னைப் புலவன் என்று அழைப்ப தானால் இப்படி வரமாட்டீர் ; விருதுகளோடு அழைக்க வந்திருப்பீர். நான் அறிவேன் உண்மைக் காரணத்தை.

அமை : தெரிந்தால், சொல்லும் பார்க்கலாம் !

புல : சேவகன் வந்து அழைத்தால் நான் வரமாட் டேன் என்பது உமக்குத் தெரிந்திருக்கும். ஆகையால், மந்திரியாராகிய நீரே வந்துவிட்டால் அதில் மயங்கிப்போய் நான் வந்துவிடுவேன் என்று நீர் நினைத்து வந்தீர். அல்லவா ?

அமை : நீர் அவ்வாறு சொல்லக் காரணம் என்ன ?

புல : காரணம் இருக்கிறது. பதவிக்கும் பட்டத்திற்கும் ஆசைப்பட்டவர் உங்கள் மகாராஜா. அல்லாவிட்டால் உம்பரும் பிறரும் போற்ற மூவுலகை ஆண்ட அண்ணனைக் காட்டிக் கொடுத்திருப்பாரா; அதேபோலப் பிறரும் ஆசைப்படுவர் என்று நினைத்துவிட்டார் அல்லவா ?

அமை : என்ன சொன்னீர் ! இதோ என் வாளுக்கு இரையாகப் போகிறீர் நீர் ! உமது பிழையை உணர்ந்து மன்னிப்பு வேண்டும். அன்றேல்.........

புல : மன்னிப்பு எதற்கு ? உண்மை என்றைக்கும் அஞ்சாதே ! நேரே உம் அரசரிடம் வேண்டுமானாலும் இதைக் கூறுகிறேன். அவர் நெஞ்சில் கையை வைத்து, 'இல்லை' என்று கூறட்டும், பார்க்கலாம்.

அமை : நீர் இலங்கையின் பிரஜை என்பதை மறந்து பேசுகிறீர் ! அரசருடைய காரியங்கள் என்னவென்று கற்பனையில் புரளும் புலவருக்கு என்ன தெரியப்போகிறது ? சரி, புறப்படும். போக வேண்டும்.

புல : அமைச்சரே, நான் யார் என்பதை அறியாமல் பேசுகிறீர். நீர் சொல்லுகிற வீடணரை நான் என்றைக்கும் அரசர் என்று ஒப்புக்கொள்ளவில்லை. இராவணர் இருந்தவிடத்தில்......

அமை : பெருந்தவறு செய்ததனால்தானே இராவணர் உயிரை இழந்தார் ? அதைப்பற்றி ஏன் இப்பொழுது பிதற்றுகிறீர் ?

புல : பேரறிவுடைய இராவணர் தவறு செய்தது உண்மை. அதற்குத் தகுந்த தண்டனையை அவர் அனுபவித்துவிட்டார். அவர் பெருமைக்கும் தவற்றுக்கும் ஏற்ப முழுமுதற் பொருளே அவரைத் தண்டித்தது. ஆனால்...

அமை : என்ன ஆனால்?

புல : உம் அரசர், தமையனாருடன் இருந்திருந்து போர் செய்து தப்பி இருந்தால், பிறகு அரசாள்வது சரிதான். ஆனால், அவருக்கு விரோதமாகச் சதி செய்து அவர் அழிவைத் தேடியல்லவா பட்டம் பெற்றார்? அந் நன்றி கெட்டவரது முகத்தில்கூட நான் விழிக்க மாட்டேன்! வேண்டுமானால், என்னைக் கொன்றுவிடும்; அல்லது உம் அரசரிடம் போய்ச் சொல்லும்.

அமை: சரி இரும்! நான் அரசரிடம் தெரிவித்து அவர் விருப்பம் அறிந்து வருகிறேன்.

III

[அரண்மனை அந்தப்புரம்: வீடணன், திரிசடை]

திரிசடை: அப்பா, எங்குச் சென்றிருந்தீர்கள் இவ்வளவு நேரம்?

வீட : அம்மா, திரிசடை, அரசியல் விவகாரத்தில் ஈடுபட்டிருந்தேன். நீ ஏன் கவலை கொள்கிறாய்?

திரி: அமைச்சரைக் கேட்டேன் அப்பா. அவர் உடைகளை நீங்கள் வாங்கிப் போட்டுக்கொண்டு யாரோ ஒரு புலவனாமே—அவனைப் பார்க்கப்

போயிருந்திர்களாமே! ஏன் அப்பா மந்திரியின் உடை உங்கட்கு?

வீட: அது ஓர் இரகசியமான விஷயம் அம்மா. உனக்குத் தெரிவதால் நலம் ஒன்றுமில்லை.

திரி: என்ன அப்பா இப்படிப் பேசுகிறீர்கள்? அந்த நாளிலிருந்து உங்கட்கு எத்தனையோ அரசியல் விவகாரங்களில் உதவி செய்து வருகிறேன். நான் இல்லையானால் ஜானகியார் உயிருடன் இருந்திருப் பாரா? நீங்கள் இன்று இலங்கையின் ஏக சக்கிரா திபதியாய் இருப்பீர்களா? என்னையே இன்று அலட்சியம் செய்யத்தொடங்கிவிட்டீர்களே!

(அழுகிறாள்)

வீட: சரி சரி! அழாதே அம்மா! எனக்கு ஆறுதல் சொல்ல இன்று ஒருவர் வேண்டும். இந்நிலையில் நீயே அழுவதானால்.........

திரி: என்னப்பா இலங்கைச் சக்கரவர்த்தியாருக்கு அவ்வளவு பெரிய கவலை? வேத நாயகரான இராகவர் உங்கள் நண்பர்; அவரே முடி கவிக் கும் பேறு பெற்ற உங்கட்கும் கவலையா? நம்பவே முடியவில்லையே!

வீட: சரியம்மா, மேலும் அடுக்கிக்கொண்டே போகாதே. என் கவலையைப் போக்க வழி இல்லையா? எந்த நேரத்தில் இராகவரிடம் போனேனோ தெரியவில்லையே!

திரி: என்ன அப்பா இது? மண்ணுளோர், விண் ணுளோர் அனைவரும் அவர் நட்புக்கு அலை

கின்றனர். அத்தகைய இராகவரிடம் நட்புக் கொண்டதற்கு நீங்கள் வருந்துவது பொருத்த மாகத் தெரியவில்லையே!

வீட: நட்புச் செய்தது தவறு இல்லையம்மா. மற்றை யோர் பயன் கருதாது நட்புச் செய்தனர். ஆனால், நான் அவ்வாறு இல்லையாம்.

திரி: என்ன அப்பா, அந்தக் காலத்தில் நீங்கள் சேரும்பொழுது 'பிறவி நோய்க்கு மருந்தாகும் அவர் திருவடி,' என்றல்லவா கூறினீர்கள் ?

வீட: ஆம் அம்மா, சொன்னேன். ஆனால், அதை யாரும் நம்பவில்லை ! ஏன் ? அந்த இராகவர்கூட நம்பவில்லை போலும் !

திரி: ஐயோ ! இது என்ன புதுமை ! நாங்கள் அனை வரும் வேறுவிதமாக அல்லவா நினைத்தோம் ? அவர் இவ்வாறு நம்பவில்லையா ?

வீட: ஆம் அம்மா, இப்பொழுது சந்தேகமில்லை என்றுதான் தோன்றுகிறது.

திரி: அவரே சொன்னாரா அப்பா உங்களிடம் ?......

வீட: அவர் வாய்விட்டுச் சொல்ல வேண்டுமா ? நான் உள்ளே நுழைந்தவுடன் என்னை வா என்று அழையாமல், குகனையும் சுக்கிரீவனை யும் தழுவிக்கொண்டது போலத் தழுவிக் கொள்ளாமல் இருந்துவிட்டார். சும்மா இருந் தாலும் தேவலாமே என்னைக் கண்டவுடன் ! 'இந்தா வீடணா இலங்காபுரி ராஜ்யம்,' என் றல்லவா சத்தியம் செய்தார் ?

திரி: அப்படியா! ஏன் அப்பா, உடனே நீங்கள் 'இராகவரே, அதற்காக நான் வரவில்லை; உம்மைக் காண்பதற்காகத்தான் வந்தேன்' என்று கூறி இருக்கலாமே! ஏன் கூறவில்லை?

வீட: கூறினாலும் பயன் இல்லை அம்மா திரிசடை.

திரி: ஏன் அப்பா?

வீட: உனக்குத் தெரியாதம்மா! அங்கிருந்தவர்கள் முன்னமே என்னைப்பற்றிப் பேசினார்களாம். சுக்கிரீவன், நான் தமையனாரைச் சமயத்தில் கைவிட்ட துரோகி என்று கூறினானாம். அனுமர்தான் என்னை ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறிக் காரணமும் கூறினாராம்.

திரி: அவர் மிகவும் நல்லவர் என்பது எனக்கு அப்பொழுதே தெரியும் அப்பா! என்ன காரணம் கூறினாராம்?

வீட: என்ன நல்லவரை நீ கண்டுவிட்டாய்? நான் அண்ணன் அரசின்மேல் காதல்கொண்டு சமயம் பார்த்துப் போனேனாம்! என்ன சமயம் தெரியுமா? வாலியைக் கொன்றார் இராமர் என்று தெரிந்துதான் பிறகு போனேனாம். அம்மட்டோ? இராகவர்கூடக் 'காதல் அருத்தியும் அரசின்மேற்று' என்று நான் வந்த காரணத்தை விளக்கினாராம்.

திரி: அப்புறம் என்ன?

வீட: அப்புறம் என்னவா? எப்படியோ உண்மை தெரிந்துகொண்டார்கள். பிறகு என்ன செய்வது?

ஐயோ! நேர்ந்த பழியை இப்பொழுது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது!

திரி: சரி அப்பா, புலவனிடம் ஏன் சென்றீர்கள்? சாப்பிட்டுக்கொண்டே என்னிடம் கூறுங்கள்.

வீட: இல்லை அம்மா, சாப்பாடு வேண்டா. களைப்பாய் இருக்கிறது. தூங்கப் போகிறேன். காலையில் பேசிக்கொள்ளலாம்.

திரி: சரி அப்பா, நன்ருகத் தூங்குங்கள்.

IV

[வீடணன் கனவு]

வீட: என்ன இந்திரசித்து, நீயும் அறமுறை பிறழ்ந்து தவற்றை மேலும்மேலும் செய்துகொண்டு தானே இருக்கிருய்?

இந்திரசித்து: நிகும்பலையாகத்தைக் காட்டிக்கொடுத்த எக்களிப்பால் இப்பொழுது உபதேசஞ் செய்யப் புறப்பட்டீரா? ஐயோ! உமது வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா!

வீட: அறத்தைக் கடைப்பிடித்து வாழும் என் வாழ்க்கையில் என்ன தவற்றைக் கண்டாய் மகனே?

இந்: மகன் என்று என்னை அழையாதீர்! கேவலம் மனிதர்களைப் புகழ்ந்துகொண்டு வாழ்கிறீர். அவர்கள் அடிமை நீர்; முரசத்தைப் போல

அவர்கட்குப் பின்பாட்டுப் பாடும் உமக்கு அறம் ஒரு கேடா!

வீட : மகனே, உங்கள் வழி நானும் சென்றிருந்தால் பழியல்லவா என்னை வந்து சாரும்?

இந் : உமது அறிவே அறிவு! 'வழிபட உலகம் மூன்றும் அடிபட வந்ததேனும் பழிபட வந்த வாழ்வை விரும்பார் சான்றோர்' என்பதை ஏனோ நீர் அறியவில்லை ?

வீட : மேகநாத, எனக்கா பழி? என்ன உளறுகிறாய்? உங்கட்கல்லவா பழி?

இந் : பாவம்! அரசின்மேற்கொண்ட ஆசையால் பழியையும் மறந்து பகையை வாழ்த்தப் புறப்பட்டுவிட்டீர்! ஆனால், நீருள்ளவரையே வாழும் மீன்கள் போல அரக்கர் இராவணர் உயிருள்ள வரைதான் இருப்பர்; அவரோடு சேர்ந்து அழிவர்; பின்னர் இலங்கை மட்டும் மிஞ்சும்; ஏன்? நீரும் இருப்பீர். ஆனால், யாரை அரசாள உத்தேசமோ?

வீட : நான் நியாயம் என்று தெரிந்த ஒன்றுக்காகத் தான் இத்தகைய காரியஞ் செய்தேன்.

இந் : நீர் மட்டுமா நியாயத்தைக் கண்டீர்? மந்திரி சபையில் கும்பகருணச் சிற்றப்பர் பேசியது உம் காதில் விழவில்லையா? அவரும் உம்மைப் போல நியாயத்தைக் கண்டார். ஆனால், மானத்தை இழக்க அவர் விரும்பவில்லை.

வீட : இந்திரசித்து, நான் மானம் இழந்தேன் என்று யார் கூறுகிறார் ?

இந் : ஏன்? உலகம் உள்ள அளவும் கூறும்! நான் முகன் குலத்து வந்தவர் நீர்; இலங்கையையும் ஆளப்போகிறீர். உம்மைத் தேவரும் வந்து அடி வணங்குவர். ஆனால், நீரோ, மனிதருக்கு அடிமை யாகி இராவணர் செல்வத்தை ஆள்வீர். இனி உமக்கு ஏனோ மானம்! அது எங்களோடு அடங்கிற்று ஐயா!

வீட : சிறுவ, நான் அறவுரை கூறினதற்கு உன் தந்தையார் கோபித்துக்கொண்டு என்னைப் போ என்று கூறினதால்தானே நான் வந்தேன்?

இந் : ஆம் அது தெரியும். தந்தையார், தம் விழி எதிர் நிற்க வேண்டா என்றுதானே கூறினார்? பகைவரிடஞ் சேர்ந்து நிகும்பலை வேள்வியைக் காட்டிக் கொடுத்து இலங்கைச் செல்வத்தை அவர் இருக்கும்பொழுதே பெற்றுக்கொள்ளவா சொன்னார்?

வீட : அது சரி; இப்பொழுதாவது உன் தந்தையார் உண்மையை அறிந்து இராகவரைச் சரணம் அடைவாரா?

இந் : என் தந்தையார் தாம் செய்தது தவறு என்று உணர்வது ஒரு விஷயம்; இராகவரைச் சரண மடைவது வேறு விஷயம். அவர் இராகவரைச் சரணமடைந்து இலங்கைச் செல்வத்தைப் பெற வேண்டுவதில்லையே?

"கந்தனர் தந்தை யாரைக்
கயிலையோடு ஒருகைக் கொண்ட
எந்தையார் அரசு செய்வது
இப்பெரும் பலங்கொண்டு அன்று."

வீட : போனது போகட்டும் ! மைந்த, அறத்தை மறம் வெல்லாது. இராவணர் இறந்துதான் போக வேண்டும் என்று முடிவு செய்தால், நான் என்ன செய்ய முடியும் ?

இந் : ஏன்? நன்றாக முடியும்! சுத்த வீரராகிய நீர் பகைவருடன் சேர்ந்துகொண்டு இராவணர் முடிவை விரைவில் வரவழைக்கலாம். இராவணர் இப் போர்க்களம் வரத்தான் போகிறார் ; போர் நடைபெறத்தான் போகிறது. முடிவில்,

'எழுதியேர் அணிந்த திண்தோள்
இராவணன் இராமன் அம்பால்
புழுதியே பாய லாகப்
புரண்டநாள் புரண்டு மேல்வீழ்ந்து
அழுதியோ! நீயுங் கூட
ஆர்த்தியோ! இவனை வாழ்த்தித்
தொழுதியோ! யாதோ செய்யத்
துணிந்தனை? விசயத் தோளாய்?'

வீட : ஓ அண்ணா, அசுரர்கள் தம் பிரளயமே, அமரர் ஏறே, எங்கு ஒளித்தாய் அண்ணா!

(அழுகிறான்)

V

[அந்தப்புர மாளிகை: வீடணன், திரிசடை]

திரி : அப்பா, அப்பா, இது என்ன? ஏன் அழுகிறீர்கள்? யாருடன் இதுவரை பேசினீர்கள்?

தூக்கம் வரவில்லையா? ஏன் உடல் நடுங்குகிறது? எதனால் இந்த வியர்வை உண்டாயிற்று?

வீட : ஒன்றுமில்லை அம்மா! கனவு கண்டேன்.

திரி : கனவிலேதான் பேசினீர்களா? யாருடன் பேசினீர்கள்?

வீட : அந்த இளஞ்சிங்கம் இந்திரசித்தனுடன்தான் பேசினேன். ஐயோ! என்ன கேள்விகள் கேட்டான் தெரியுமா! நன்றி கெட்டவனும் நான்; துரோகியாம் நான். ஐயோ! எனக்கு ஏன் இந்த இலங்கை அரசு! இது இருக்கும்வரை ஒரு விநாடியும் உறக்கம் வாராது போலிருக்கிறதே!

திரி : என்ன அப்பா, இப்படிப் பேசுகிறீர்கள்?

வீட : ஆம் அம்மா, இராகவர் எதிரில் இருக்கிற வரை அவருடைய அமைதியில் நானும் உன்னை மறந்து, நான் செய்தவற்றை எல்லாம் அறம் காட்டிய வழி என்று நம்பி, என்னை மறந்து இருந்தேன். அவர் போன பிறகு பிறர் சொல்ல, நான் செய்த செயல்களுக்கு அவர்கள் கூறும் அர்த்தம்—ஐயோ!—என்னை வாட்டுகின்றது!

திரி : கடவுள் தன்மை பெற்ற இராகவருக்கு உதவி செய்ததில் தவறு என்ன அப்பா? மறத்தை வெல்ல அறத்திற்கு உதவியதில் தவறு என்ன இருக்கிறது?

வீட : இருக்கிறது அம்மா, இருக்கிறது! நான் யார் அறத்திற்கு உதவ? நான் இல்லாமலும் அறம் வென்றிருக்கும். நான் உதவினேன் என்பதற்கு

அர்த்தமே இல்லை. இராமருக்கு உதவிய ஒருவரும் கெட்ட பெயர் வாங்கவில்லை. நான் மட்டும் ஏன் வாங்க வேண்டும், தெரியுமா ?

திரி : எனக்கு ஒன்றும் விளங்கவில்லை அப்பா !

வீட : இதோ சொல்லுகிறேன் ; கேள் ! மறத்தை வெல்ல அறத்திற்கு உதவி மட்டும் செய்திருப்பேனுனல், இப் பெயர் வந்திராது. சொந்த இலாபத்தைக் கருதித்தான் அறத்திற்கு உதவினேன் என்ற பெயர் வாங்கிவிட்டேன். ஆதலாலேதான் அவ்வறமும் எனக்கு ஆறுதல் அளிக்கவில்லை.— அண்ணு, மைந்தா, உங்களைவிட அனைத்திலும் இளையவன் ஆனேன் ! அந்தோ !

[திரை]

பிரிவு

நாடக பாத்திரங்கள்

1. இராமன் 3. சீதை
2. இலக்குவன் 4. திரிசடை

இராமன்: (பாடுதல்)

'மானவள் மெய்இறை மறக்க லாமையின்
ஆனதோ, அன்றெனின் அரக்கர் மாயமோ,
கானகம் முழுவதும் கண்ணின் நோக்குங்கால்,
சானகி உருவெனத் தோன்றுந் தன்மையே!'

இலக்குவன்: அண்ணா, எவ்வளவு கொடுமையுடைய தாய் இருக்கிறது இரவு! இவ்வளவு கருமையை இதற்கு முன் நாம் கண்டதே இல்லையல்லவா?

இராமன்: தம்பி, இலக்குமணா, என்ன கூறினாய்? இதற்கு முன் நாம் கண்டதில்லையா? ஆம்; நீ கண்டிருக்க மாட்டாய். ஆனால், நான் இதைவிடக் கருமையான ஒன்றைக் கண்டு அனுபவித்திருக்கிறேன்.

இலக்: என்ன அண்ணா, நான் இத்தனை காலம் உறக்கங் கொள்ளாமல் இருந்திருக்கிறேன்.

ஆனாலும், நான் காணாத கருமையை நீங்கள் கண்டதாகக் கூறுவது விந்தையே! என்றைக்கு, எங்கே கண்டீர்கள்?

இரா : அதை ஏன் இப்பொழுது கேட்கிறாய்? ஆ! நினைத்தாலும் மனம் வெடித்துவிடும் போல இருக்கிறது! சீதையின் கருவிழிகள் காட்டும் கருமையில் நூற்றில் ஒரு பங்கு உண்டா இந்த இருளுக்கு?

இலக் : ஆ! அண்ணா, அதோ! அதோ! நமது கவலை போலச் சூழ்ந்துள்ள இந்த இருட்டைக் கிழித்துக் கொண்டு, நம்மை மகிழ்விக்கச் சந்திரன் புறப்பட்டு விட்டான்!

இரா : சந்திரனா? இவனா சந்திரன்? இவனையா தண்மதி என்று கூறுகிறது உலகம்? என்ன அறியாமை!

இலக் : அண்ணா, உண்மையிலேயே இவன் குளிர்ச்சி யுடையவன்தானே? பகலவனது வெப்பம் தாங்காமல் வாடி வதங்கிய உயிர்கட்குக் கருணை மழைபோலத் தன் குளிர்ந்த கிரணங்களைப் பரப்பி மகிழ்ச்சி அளிக்கிறவன் இவன் அல்லனா?

இரா : இலக்குவா, என்ன உளறுகிறாய்? இந்தப் பாவியைப் புகழவும் தொடங்கிவிட்டாயா? நெருப்பை வாரி வீசும் இவனைத் தண்மதி என்று வாய் கூசாமல் கூறுகிறாய்? இவன் கொட்டும் தணல் தாங்காமல் ஆகாயமுங்கூடக் கொப்பளங் களால் நிரப்பப்பட்டுவிட்டது தெரியவில்லையா?

இலக் : நட்சத்திரங்களையா கொப்புளங்கள் என்று கூறுகிறீர்கள்? அது கிடக்கட்டும். எத்தகையவர்களாலும் ஒவ்வொரு நன்மை ஏற்படத்தான் செய்கிறது. ஆனால், ஒருவர்க்கு நன்மையாய் இருப்பது மற்றொருவர்க்குத் தீமையாய் முடிகிறது. என்ன செய்வது!

இரா : தம்பீ, நீ சொல்வது சரிதான். ஆனால், இந்தச் சந்திரனைப் பொறுத்தமட்டில் ஒருவருக்கும் இவன் நன்மையே செய்ததில்லை. ஆலகால விஷம் தோன்றிய பாற்கடலிலேதானே இவனும் தோன்றினான்? விஷத்துடன் பிறந்த இவனுக்கு வேறு என்ன நற்குணம் இருக்கப்போகிறது?

இலக் : அண்ணா, உங்கள் பிரிவுத்துயர் இவ்வாறு பேசச் செய்கிறது. அதே பாற்கடலில் இதே சந்திரனுடன்தானே என் அண்ணியாரும் தோன்றினார்கள்? ஆகவே, என் அண்ணியாருடைய நற்குணங்களில் இவனுக்கும் ஒரு பங்கு உண்டு என்பதை மறந்துவிட வேண்டா.

இரா: இலக்குமணா, என்ன கூறினாய்? அண்ணியா? அண்ணி சீதை—சானகி—ஆ! எங்கிருக்கிறாய் கண்மணி! தம்பீ, என் கண்மணி எங்கிருந்தாலும் அவள் இருக்கும் இடத்திற்கூட இந்தப் பாவி சந்திரன் தோன்றித்தானே இருப்பான்?

இலக் : (வருத்தமான இழுகுரலில்) ஆம் அண்ணா தோன்றித்தான் இருப்பான்.

இரா : ஆ! அப்படித் தோன்றினால், ஐயோ ! என் கண்மணி என்ன பாடுபடுவாள் ! இவன் வாரிக் கொட்டும் தழலை அவள் பொன்போன்ற உடல் எவ்வாறு தாங்குமோ ! அனலிடைப்பட்ட தளிர் போன்றல்லவா வாடிவிடும் ! அவளுடன் பிறந் தவனா இவன்? ஆம் ! உடன்பிறந்தே கொல்லும் வியாதி போன்ற பாவியல்லவா இந்தச் சந்திரன் ? ஆ! கொடியவனே, உன்னை ஒழித்துவிடுகிறேன் ! தம்பீ, எடு வில்லை!

இலக் : அண்ணா, சிறிது பொறுங்கள்! யாருக்காக உள்ள வில்லை யாருக்காக எடுப்பது ? பதினைந்து நாளுக்குள் வளர்ந்து பதினைந்து நாளுக்குள் தேய்ந்து அழியும் இவனைத் தண்டிக்க வில் வேறு வேண்டுமா? உங்களுடைய கோதண்டத் தையும் மலை போன்ற தோளையும் பயன்படுத்தத் தக்க சமயம் வேறு இருக்கிறது. காலம் பார்த்து இடம் பார்த்துப் பகையை அழிக்க இவற்றைப் பயன்படுத்தலாம்.

இரா: இலக்குமணா, நன்றாகக் கூறினாய் ! ஆஹா ! இதன் பெயரா கோதண்டம் ! நல்ல வில்லடா ! நீதான் இதனைப் புகழ வேண்டும் ! சானகியை மீட்கச் சத்தியற்ற இதுவும் ஒரு வில்லா? இந்தத் தோளுக்கு அழகு செய்யத்தான் இந்த வில் இருக்கிறது!

(கேலிச் சிரிப்பு)

இலக் : அண்ணா, எல்லை மீறிய உங்கள் வருத்தத்தை அறிகிறேன். ஆனால், உங்களையும் உங்கள்

வில்லையும் நம்பித்தான் உலகம் இருக்கிறது என்பதை மறந்தீர்களா? நீங்களே கவலையில் மூழ்கி விட்டால், உலகம் என்ன ஆவது ?

இரா : நல்ல வேடிக்கை! என் மனைவியைக் காப்பாற்ற முடியாத நான் உலகத்தைக் காப்பாற்றுவதாவது! ஓவியத்தில் எழுதக்கூடாத அழகியாம் சானகியைக் கவர்ந்து சென்றவனைப் பழி வாங்க முடியாத இந்த வில், இருந்தால் என்ன, இற்ருல் என்ன ? மலைபோன்ற தோள்கள் என்று பெண்கள் பார்த்து மயங்குவதற்கு அல்லாமல், வேறு இத் தோள்களால் பயன் என்ன ? சரி, தூங்கப் போகட்டுமா ?

[மழையும் இடியும் முழங்குகின்றன.]

இலக் : அண்ணு, பொழுது விடிந்து ஐந்து நாழிகை ஆகிவிட்டதே! இனியா உறங்கப்போகின்றீர்கள் ?

இரா : பொழுது விடிந்துவிட்டதா ? வியப்பாய் இருக்கிறதே! இவ்வாறு அந்தகாரம் சூழ்ந்துள்ளது ஏன் ?

இலக் : உங்கள் வருத்தத்தின் எல்லையை அறிகிறேன். பாதி இரவிலேயே மழையும் இடியும் பேரிரைச்சல் செய்யத் தொடங்கிவிட்டன. ஆனல், அவை உங்கள் கவனத்தை இழுக்கவில்லை என்பதை அறிந்து பேசாமல் இருந்துவிட்டேன். பர்னசாலைக்கு வெளியே மழை பெய்துகொண்டுதான் இருக்கிறது.

இரா : அப்படியா! நீ இப்பொழுது கூறின பிறகு தான் கவனிக்கிறேன். ஆம்.

இலக் : இது கார்காலம் என்பதை மறந்துவிட்டீர்களா அண்ணு? வெளியே வந்து பாருங்கள். முல்லைக் கொடிகள் எவ்வளவு அழகாக, குளத்தில் மூழ்கி எழுந்த பெண்கள் போல ஆடி அசைகின்றன! இந்திரகோபப் பூச்சிகள் இரத்தம் போன்ற நிறத்துடனும், பட்டுப் போன்ற உடலுடனும் உலாவத் தொடங்கி விட்டன. வந்து பாருங்கள்.

இரா: என்ன! கொடி ஆடுகிறதா? ஆ! சீதையின் இடையைவிடவா இம் முல்லைக்கொடி துவளும்? இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்கின்றனவா? ஆம்! நான் படும் பாடு அந்தப் பூச்சிகளுக்கு எங்கே தெரியப் போகிறது. அவற்றைப் பார்த்தால் உடனே சானகியின் பவழம் போன்ற உதடுகள் நினைவுக்கு வந்துவிடும். ஏன் அந்தப் பூச்சிகள் இந்தப் பக்கம் வருகின்றன? ஆம்! அவை என்னைக் கேலி செய்யத்தான் வருகின்றன. இராவண கோபத்தால் வருந்தும் என்னை இந்த இந்திரகோபங்கூடத் துன்புறுத்தத் தொடக்கிவிட்டதே! ஐயோ! இந்நேரம் சீதை என்ன செய்கிருளோ! எப்படிக் கவலைப் படுகிருளோ!

(இசையுடன் பாடுகிருன்)

'அரிது போகவோ விதிவலி கடத்தல் என்றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்.'

III

[சீதையும் திரிசடையும் உரையாடுகின்றனர்]

திரிசடை : அம்மா, இன்னுமா நீங்கள் உறங்கவில்லை! பொன் போன்ற உங்கள் மேனி அழகு வாடி விட்டதே! இராகவருடைய வன்மை தெரிந்தும் இன்னும் ஏன் கவலை? நிச்சயம் வந்து உங்களை மீட்டுப் போவார் என்பதில் என்ன சந்தேகம்?

சீதை : திரிசடை, என் முடிவு என்ன ஆகும் என்பதில் நான் ஐயப்படவில்லை. ஆனால்......

திரி : பின் ஏன் அம்மா, 'ஆனல்' என்று இழுக்கிறீர்கள்? இரவானால் மிகுதியும் கவலைப் படுகிறீர்கள். பூரண நிலாக்காயும் இன்றைக்கு அதன் அழகைப் பார்த்து நம் கவலையை மறக்க வேண்டுவதிருக்க, கவலைப்படுவது எதற்காக? இப்படிப் பெருமூச்சுவிடச் சந்திரன் என்ன வெப்ப மாகவா இருக்கிறான்?

சீதை : (பெருமூச்சுடன்) நீ குழந்தை என்பது சரியாய் இருக்கிறது திரிசடை! உனக்கு நிலவு இன்பம் தருவது உண்மை. ஆனால், என்மீது இந் நிலவு நெருப்பைத்தான் வாரிக் கொட்டுகிறது.

திரி : (சிரித்து) என்ன அம்மா கூறுகிறீர்கள் ? நிலவு நெருப்பைக் கொட்டுகிறதா ? அதோ ! நீலக்கடல் குளிர்ந்த நிலவைக் கண்டதும் தன் வெண்மையான அலைக்கரங்களால் அவனை 'வா வா' என்று அழைப்பது தெரியவில்லையா ? அம்மட்டோ ! வாய்விட்டுக் கூப்பிடுவதுக்கூடக் கேட்கிறதே !

[கடல் அலை முழங்குகிறது]

சீதை : திரிசடை, மறந்திருக்க முயலும் என்னை நினைவூட்டித் துன்பப்படுத்துகிறாயா ? நான் உனக்கு என்ன தீமை செய்தேன் !

திரி : சீதாபிராட்டியாரே, ஒன்றுமே விளங்கவில்லையே ! கடல் ஒலியைக் கேளுங்கள் என்று தானே கூறினேன் ? இதில் தவறு என்ன இருக்கிறது ?

சீதை : வருத்தப்படாதே அம்மா ! என் துயரத்தால் உன்னைக் கடிந்துகொண்டேன். இந்தப் பாழுங்கடலைப் பார்க்குந்தோறும் அந்த நீலமேக சியாமளருடைய நினைவல்லவா வருகிறது. சாதாரணமாகப் பிரிந்துள்ளவர்கட்கே இக் கடலும் நிலவும் பகையாகும். அதிருக்கட்டும். இந்தக் கடல் ஏன் ஓயாது அலறிக்கொண்டே இருக்கிறது ஒரு வேளை...

[மறுபடியும் கடல் முழங்குகிறது]

திரி : என்ன அம்மா, ஒரு வேளை என்கிறீர்கள் ? கடல் ஒலிப்பது இயற்கைதானே ? இதில் ஒரு வேளை என்ன இருக்கிறது ?

சீதை : திரிசடை, எனக்கு ஓர் எண்ணம் உண்டா யிற்று. இக் கடலுக்கும் உறக்கம் இல்லை ; எனக் கும் உறக்கம் இல்லை. நானும் புலம்புகிறேன். இதுவும் ஓயாமல் புலம்புகிறது. ஒருவேளை என் துயரத்தைக் கண்டுதான் இது வருந்துகிறதா ? அல்லாவிடில் இக் கடலையும் யாராவது.........

திரி : என்ன பிராட்டியாரே, மயக்கமா ? 'கடலை யாராவது...' என்று இழுக்கிறீர்களே ! என்ன என்று விளக்கமாகக் கூறுங்களேன் ?

சீதை : சொல்லக்கூட வெட்கமாய் இருக்கிறது ! இந்தக் கடலையும் இராவணன் இதன் காதலனிட மிருந்து பிரித்து எடுத்துவந்து சிறை வைத்துள் ளானோ ?

திரி : நல்ல வேடிக்கை அம்மா ! கடலை யாராவது சிறை வைக்க முடியுமா ?

[பறவைகள் அலறுகின்றன]

சீதை : அதோ ! திரிசடை, கேட்டாயா அன்றிலின் அலறலை ? காதலைப் பிரிந்த அந்தப் பறவையும் என்னைப்போலவே விழித்துக்கொண்டு கதறு கிறது.

[தனிப்பட்ட புல்லாங்குழல் ஓசை-எதுகுல காம்போதி இசைக்கப்படுகிறது]

அட பாழுங்குழலே ! நீ கூடவா இராவணன் கட் சியில் சேர்ந்துவிட்டாய் ? எனக்காக வருத்தப் பட்டு அழுகிறாயா, அல்லது உன் காதலனைப் பிரிந்து என்னைப் போல வருந்துகிறாயா ?

திரி : அம்மா, இது என்ன பாவம்! இவற்றையெல்லாம் பார்த்து ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? இவைகளுக்கும் உங்கட்கும் என்ன தொடர்பு?

சீதை : திரிசடை, குழந்தை நீ. உன்மேல் குற்றம் இல்லை. இந்தப் பாழான கடலும், அன்றிலும், புல்லாங்குழலும், நீருண்ட கரிய மேகமும், பூரண சந்திரனும் ஒழிந்துவிட வேண்டும்! இவை ஒழிந்தால்தான் நான் சற்று மன அமைதியுடன் இருப்பேன். ஐயோ! இந் நேரம் அவர் எப்படி இருப்பாரோ?

திரி : யாரைப்பற்றிக் கூறுகிறீர்கள் அம்மா!

சீதை : என் கணவரைப்பற்றித்தான் கூறுகிறேன். யார் வெற்றிலை மடித்துக் கொடுக்க அவர் தின்பார்? விருந்தினர் வந்துவிட்டால் அவரும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு கண்ணீர் பெருக நிற்பார்களே! ஐயோ! பாவி ஏன் பிறந்தேன்! என் பெண் புத்தியால் அல்லவா பொன்மான் பின் போக்கினேன் அவரை![1]

[திரை]

---

[1] ‘அருந்தும் மெல்லடகு யாரிட
அருந்தும்?’ என்று அழுங்கும்;
‘விருந்து கண்டபோது என்னுறு
மோ!’என விம்மும்;
‘மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட
நோய்க்கு!’என்று மயங்கும்;
இருந்த மாநிலம் செல்லரித்
திடவும் ஆண்டு எழாதாள்.

முத்தநாதன்

நாடக பாத்திரங்கள்

1. முத்தநாதன்
2. தத்தை
3. காவலன்
4. மெய்ப்பொருள் நாயனார்
5. மெய்ப்பொருள் நாயனார் மனைவி
6. தத்தன்
7. காவலர் இருவர்

I

[முத்தநாதன் அரண்மனை: முத்தநாதனும் தத்தையும்]

தத்தை: நாதா, இன்னுமா உறங்காமல் இருக்கிறீர்கள்? இரவு இரண்டாஞ்சாமத்திற்குரிய மணிச் சத்தம் கேட்கிறதா?

முத்த: (வெறுப்புடன்) ஆம்; கேட்கிறது! என்னை இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறாய்?

தத்தை: என்மேல் ஏன் இவ்வளவு வெறுப்பு உங்கட்கு? ஏதாவது தகாத காரியம் செய்து விட்டேனா?

முத்த: உன்மேல் குறை ஒன்றும் கூறவில்லை நான். மனத்தில் பகைமை மூண்டுவிட்டால் உறக்கம் எப்படி வரும்?

தத்தை : பகைமை யார்மேல்? மனைவியாகிய என் மேலா?

முத்த : என்ன விளையாடுகிறாய், தத்தை! அரசனாகிய எனக்குப் பகைவர்கள் இருப்பதுதானே அழகு?

தத்தை : யார் இருக்கவேண்டா என்கின்றனர்? ஆனால், வேறு எந்த அரசராவது உங்களைப்போல உறங்காமல் விழித்துக்கொண்டிருப்பது உண்டா?

முத்த : அந்த மெய்ப்பொருள் போன்ற பைத்தியக்கார அரசன்றான் நன்றாகத் தூங்க முடியும்!

தத்தை : மெய்ப்பொருளையா பைத்தியக்காரன் என்கிறீர்கள்? அவர் பெரிய மலை நாட்டின் தலைவர் அல்லரா?

முத்த : நீ மிகவும் அறிவாளி என்பது உன்னுடைய எண்ணமோ! அவன் பெரிய அரசன் என்பதை உன்னைக் கேட்டு நான் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லையே!

தத்தை : அட ஆண்டவனே!.........நீங்கள் மெய்ப் பொருளினிடம் பல முறை தோற்றுப் போனால், அதற்கு நான் பொறுப்பாளியாக முடியுமா?

முத்த : முட்டாள்!......நான் தோற்றுப் போனதை நீ எடுத்துக்காட்ட வேண்டா! எனக்குத் தெரியும் அவனை ஒழித்துக்கட்டும் வழி!

தத்தை : யாராவது அந்த வழியைக் கையாண்டு உங்களை வெற்றி பெற வேண்டா என்று கூறினரா?

முத்த : இப்பொழுதுதான் அந்த வழியைக் கண்டு பிடித்தேன் !

தத்தை : எனக்குத் தெரியாதா உங்கள் வழி ? இன்னும் ஒரு முறை படை சேர்த்துக்கொண்டு சென்று போரிடப்போகிறீர்கள் ! அதனுடைய முடிவும்.........

முத்த : வாயை மூடு ! முடிவைப்பற்றி உன்னைக் கேட்கவில்லை. படை எடுத்துச் சென்று அந்த மெய்ப்பொருளை வெற்றி கொள்வது இயலாத காரியம்.

தத்தை : வேறு என்ன வழி? அவருக்கு மகள் ஒருத்தி இருந்தால் அவளையாவது மணந்து கொள்ளலாம். மகளும் இல்லையே.........!

முத்த : தத்தை, அந்த மெய்ப்பொருள் ஒரு முட்டாள். பைத்தியக்காரன் !

தத்தை : ஆஹா! இரவு முழுதும் தூங்காமல் இருந்து பெரிய உண்மையைக் கண்டுபிடித்து விட்டீர்கள்! உங்களைப் பன்முறை தோல்வி யடையச் செய்த அவரா முட்டாள் ?

முத்த : போரில் வெற்றி பெற்றுவிடுவது போதுமா ? நாடாளத் தெரியவேண்டாவா?

தத்தை : ஏன்? அவருக்கு நாடாளும் பாடம் கற்றுத் தருவதுதானே நீங்கள்.........?

முத்த : அதற்குச் சொல்ல வரவில்லை. எப்பொழுது பார்த்தாலும் பூசை, கோயில், குளம், அடியார்

என்று பொழுதைச் செலவழிக்கிருன் அந்தப் பைத்தியக்காரன் !

தத்தை : அதனுல் அவர் ஒன்றும் குறைந்துபோய் விடவில்லேயே ? பொழுதை எப்படிக் கழித் தாலும் போரில் வெற்றி அவருடையதாகத்தானே இருக்கிறது.........?

முத்த : இருக்கட்டும் ! இனி அவனுக்கு வெற்றி என்பதே இல்லாதபடி செய்துவிடுகிறேன் !

தத்தை : சும்மா உறங்குங்கள் ! ஒவ்வொருமுறையும் இப்படித்தான் கூறினீர்கள்.

முத்த : தத்தை, இம்முறை அவனே ஒழிக்காவிட்டால், என் பெயர் முத்தநாதன் அன்று! பார்!

II

[திருக்கோவலூர் அரண்மனே : முத்தநாதன், மெய்ப் பொருள் நாயனுர், அவர் மனேவி, காவலர்கள்]

காவலன் 1 : வருக ! வருக ! அடியவரே, நுமது வரவு நல்வரவாகுக ! உள்ளே எழுந்தருள்க!

முத்த : நல்லது ! மகனே, இறைவன் திருவருள் உனக்குக் கிட்டுவதாக !

காவலன். 2: வருக ! பெருமானே, உள்ளே செல்ல லாம்.

முத்த : நல்லது ! அங்ஙனமே ஆகட்டும்.

தத்தன் : அடிகளே, வணக்கம்! நீங்கள் யார் ?

முத்த : அன்பனே, மெய்ப்பொருளினுடைய அரண் மனேயிற்கூட அடியார்களே யார் என்றுகேட்கும்

வழக்கம் பரவிவிட்டதா? யான் உள்ளே செல்கிறேன் அரசரைப் பார்க்க.

தத்தன் : சுவாமி, சந்தர்ப்பம் தெரிந்து செல்ல வேண்டாவா ? சடாமுடியுடன் உடம்பெல்லாம் விபூதி தரித்துள்ள நீங்கள் அரசர் உறங்கும் நேரத்தில் அந்தப்புரம் செல்வது முறையா ?

முத்த : யாரடா நீ, என்னைத் தடுக்க முயல்கிறாய் ! மெய்ப்பொருளுக்கு உறுதி கூறுவதற்கு வந்துள்ள என்னை அற்பனாகிய நீயா தடுப்பது......?

தத்தன் : சுவாமி, மன்னித்துக்கொள்ளுங்கள் ! நானாவது உள்ளே சென்று பார்த்து வருகிறேன்.

முத்த : வேண்டா ! அடியார்கள் எப்பொழுதும் உள்ளே வரலாம் என்பது உங்கள் அரசருடைய ஆணையல்லவா? நீ நில். நானே செல்கிறேன்.

[அந்தப்புரத்தில்]

மெய். மனைவி : நாதரே, உறங்குகிறீர்களா ? நாதரே, நாதரே.

மெய் : (அப்பொழுதுதான் விழித்தவர் பேசும் குரலில்) ஏன் ? அடியார் யாரேனும் வந்துள்ளனரா ? அல்லாவிடின் என்னை எழுப்பமாட்டாயே !

மெய். மனைவி : ஆம் நாதரே ! சிவனடியார் ஒருவர் வந்துள்ளார்.

மெய் : வருக! வருக! பெருமானே, நான் என்ன தவஞ் செய்தேனோ நீங்கள் இங்கு இன்று வருவதற்கு !

முத்த : மெய்ப்பொருள், நீ அடியாரிடத்துக் கொண்டுள்ள அன்புக்காக இன்று உனக்கு உபதேசம் செய்ய வந்துள்ளேன்.

மெய் : இஃது எனது நற்பேறு என்றே கருதுகிறேன் சுவாமி, அருளிச்செய்ய வேண்டும் !

முத்த : அப்படியானால், நீயும் நானும் தனியே இருக்க வேண்டும். உன் மனைவி அப்பாற் சென்றுவிட வேண்டும்.

மெய் : அப்படியே ஆகட்டும்—தேவி, நீ அப்பாற் சென்றுவிடு.

[அரசியார் சென்றவுடன் முத்தநாதன் தன் கையிலுள்ள குறுவாளால் மெய்ப்பொருளின் மார்பில் குத்துகிறான்].

மெய் : ஆ! ......(குத்தப்பட்டவர் குரலில்) என்ன நல்ல காலம்! ஓர் அடியார் கையால் குத்தப்பட்டு இறப்பதைவிடச் சிறந்தபேறுவேறு என்ன?

தத்தன் : (ஓடிவந்து) ஆ! அரசே, நான் அப்பொழுதே சந்தேகப்பட்டு இந்த வஞ்சகனைத் தடுத்தேன். இதோ! இவனை ஒரு நொடியில் ஒழித்து விட்டு ....

மெய் : தத்தா, நில் ! நில்! இவர் அடியாரல்லரா ? இவரை நீ என்ன செய்யத் துணிந்தாய் ?

தத்தன் : அரசே, ஆணை. அடியேன் என்ன செய்ய வேண்டும் ?

மெய் : அப்பா, வேறு என்ன வேண்டும் எனக்கு? இவ்வடியார் தம் ஊர் போய்ச் சேரும் வரை இவருக்கு யாதொரு தீங்கும் நேராதபடி கொண்டுபோய் விட்டு வா.

III

[முத்தநாதன் அரண்மனை: முத்தநாதனும் தத்தையும்]

தத்தை : அரசே, நீங்கள் மகிழ்ச்சி அடையும்படியான செய்தி ஒன்றைத் தூதுவர் ஒருவர் கொண்டு வந்துள்ளனர்.

முத்த : (வெறுப்புடன்) என்ன செய்தியாம்?

தத்தை : உங்கள் பகைவர்—மெய்ப்பொருள் இறந்து விட்டாராம். எப்படி இறந்தார் தெரியுமா?

முத்த : (கவலையின்றி) எப்படியாம்?

தத்தை : பாவம்! அடியார் என்றால் அவருக்கு எதையும் செய்யக்கூடியவர் மெய்ப்பொருள்.

முத்த : இருக்கட்டுமே! அதற்கென்ன?

தத்தை : அந்த உண்மையைத் தெரிந்துகொண்டு எந்தப் பாதகனோ ஒருவன் அவரிடம் அடியார் வேடத்தில் சென்று உபதேசம் செய்வதாகக் கூறிக் கொன்றுவிட்டானும்! மகா பாதகன்!

முத்த : அவனுக்கு மெய்ப்பொருளிடத்தில் என்ன பகைமையோ! யார் கண்டார்கள்!

தத்தை : எவ்வளவுதான் பகைமை இருக்கட்டுமே. உங்களுக்குக்கூட அவரிடம் பகைமை இருக்கத்

தான் செய்தது. என்றாலும், நீங்கள் இவ்வளவு இழிந்த செயலைச் செய்யத் துணிய மாட்டீர்கள் அல்லவா?

முத்த: அது சரி; தத்தை, இதில் என்ன இழிவு இருக்கிறது?

தத்தை: என்ன இழிவு என்று கேட்கிறீர்களே! ஒருவன் பகைமை கொண்டால், போரிட்டு வெற்றி பெறுவது ஆண்மையா அல்லது வஞ்சகமாக வெல்வது சிறப்பா? உங்களுக்குக் கூட ஆண்மை மங்கிவிட்டதா என்ன?

முத்த: பகைவனை அழிப்பதில் வழி துறைகள் பார்ப்பதை நான் என்றும் ஆதரிப்பதில்லை.

தத்தை: நன்றாயிருக்கிறது உங்கள் நியாயம்! அப்படியானால், இந்த உலகில் ஒருவரை ஒருவர் நம்பி வாழ இடமில்லாமல் போய்விடும்!

முத்த: என்ன உளறுகிறாய் தத்தை? பகைவனை வஞ்சகத்தால் கொல்வதற்கும், ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வதற்கும் என்ன தொடர்பு?

தத்தை: இன்னுமா விளங்கவில்லை? அடியார் என்று நம்பித்தானே அவர் அந்தப் பாதகனைத் தனியே தம்முடன் இருக்கச் செய்தார்? பகைவன் என்று தெரிந்திருந்தால், சும்மா விட்டிருப்பாரா? பாவம்!

முத்த: தவறான இடத்தில் நம்பிக்கை வைத்தால், அதற்குத் தகுந்த தண்டனையை அனுபவிக்க வேண்டுவதுதானே?

தத்தை : நன்றாயிருக்கிறது உங்கள் நியாயம்! நம்பிக்கை வைப்பதற்கு இத்தனை சோதனை செய்வதானல், உலகில் கணவனும் மனைவியுமாய் வாழ்பவர்கூட ஒருவர்மேல் ஒருவர் நம்பிக்கை வைத்து வாழ முடியாற்போய்விடுமே!

முத்த : தன்னுடைய நம்பிக்கை பழுது என்று தெரிந்திருந்தால், மெய்ப்பொருள் என்ன செய்திருப்பான் ?

தத்தை : தெரியாமல் என்ன? தெரிந்துங்கூட அவர் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டாராம் ?

முத்த : ஏது! நேரில் கண்டவள்போலக் கூறுகிருயே?

தத்தை : நம் ஒற்றன்தான் அதையுங் கூறினன்.

முத்த : தெரிந்துமா மெய்ப்பொருள் சும்மா இருந்துவிட்டானும்? ஒருவேளை பேடித்தனத்தாற்கூட அப்படி இருந்திருக்கலாம்?

தத்தை : தயைகூர்ந்து பெரியவர்களை அப்படி வாய் கூசாமல் பேசாதிர்கள்?

முத்த : நம் பகைவனிடம் உனக்கு இவ்வளவு மரியாதையா?

தத்தை : அவர் செய்த அருஞ்செயலைக் கேட்ட பிறகு மரியாதை உண்டாகாமல் என்ன செய்யும்?

முத்த : என்ன அப்படிப்பட்ட அருஞ்செயல் செய்தானும்?

தத்தை : தம்மைக் குத்திக் கொன்றவனை உடனே காவலாளி கொல்ல வந்தானும். அவனைத் தடுத்துக் குத்தினவனை அவன் ஊர் வரையிற் கொண்டு போய் விட்டுவரச் செய்தார் என்றால்... அத்தகைய மனப் பண்பு யாருக்கு வரும் ?

முத்த : எப்படியும் குத்தியவன் தன் காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டான்!

தத்தை : நீங்கள் கூறுவது தவறு! குத்தியவனை மெய்ப்பொருளே வென்றுவிட்டார்!

முத்த : எப்படி ?

தத்தை : அடியார்கள் எது கேட்டாலும் தந்துவிடுவது என்று தாம் கொண்ட கொள்கையை நிலை நிறுத்திவிட்டார் மெய்ப்பொருள். ஆகவே, வெற்றியும் பெற்றார்.

முத்த : குத்தினவன் தான் வந்த காரியத்தை முடித்துவிட்டதால் அவனும் வெற்றியடைந்துவிட்டான்.

தத்தை : இல்லை. குத்தினவன் கொஞ்சநஞ்சம் வெற்றி என்று நினைத்தாலும் மெய்ப்பொருள் அவனை மன்னித்துவிட்டதால் அதுவும் வெற்றி அன்று.

முத்த : அவன் அதை வெற்றி என்று நினைத்தால் யார் அதைத் தடுக்க முடியும்?

தத்தை : யாரும் தடுக்க முடியாதுதான். ஆனால், கொன்றவன் ஒரு பகையை அழித்ததாக நினைத்

துக்கொண்டு மற்றொரு பகையைத் தேடிக் கொண்டான்.

முத்த: (பயந்த குரலில்) நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே!

தத்தை: மெய்ப்பொருள் குத்தினவனுக்குப் பகைவர் தான். ஆனால், எப்படிப்பட்ட பகைவர்?

முத்த: எப்படிப்பட்ட பகைவனா? விளங்கவில்லையே!

தத்தை: அவனாகச் சென்று வம்பிழுத்தால் ஒழிய, மெய்ப்பொருள் அவனுக்கு ஒன்றும் துன்பம் செய்திருக்க மாட்டார்.

முத்த: இருக்கலாம். அதற்கென்ன?

தத்தை: அதற்கென்னவா? அவரை வஞ்சகமாகக் கொன்றவன், அவரைவிடக் கொடிய பகையை —எப்பொழுதும் துன்புறுத்தும் பகையைத் தேடிக்கொண்டான்.

முத்த: (பயந்த குரலில்) என்ன புரியாமல் பேசுகிறாய் தத்தை? விளங்கும்படி விவரமாகக் கூறித் தொலை. யார் அப்படிப்பட்ட பகைவன்?

தத்தை: நீங்கள் ஏன் இவ்வளவு அஞ்சுகிறீர்கள்?

முத்த: அது கிடக்கட்டும்! யாரந்தப் பகைவன்? விரைவில் கூறு பார்க்கலாம்!

தத்தை: வேறு யாரும் அல்ல, குத்தினவனுடைய மனச்சாட்சிதான்.

முத்த : அப்பா! இவ்வளவுதானு! மிகவும் அச்சுறுத்திவிட்டாயே!

தத்தை : உங்கட்கு ஏன் அச்சம் உண்டாகிறது? (சந்தேகத்துடன்) ஒருவேளை இந்தக் கோழைத்தனமான செய்கையை நீங்களே........

முத்த : சிச்சி! நானுவது இத்தகைய செய்கையில்...

தத்தை : அதுதானே கேட்டேன்! சரி; நேரம் ஆகிவிட்டது. உறங்கப் போவதுதானே? ஏன்? உறக்கம் வரவில்லையா இனியும்?

முத்த : நன்ருக உறக்கம் வருகிறது! இதோ படுக்கைக்குச் செல்கிறேன்!

V

[முத்தநாதன் அரண்மனை : முத்தநாதனும் தத்தையும்]

(முத்தநாதன் கனவில்)

முத்த : ஐயோ! மெய்ப்பொருள், இல்லை! இல்லை! இனி இத்தகைய கோழைச் செயலில் இறங்க மாட்டேன்!

மெய் : அடியவரே, நீர் எதற்கும் அஞ்ச வேண்டா!

முத்த : ஐயோ! தத்தா, என்னை விட்டுவிடு! ஐயோ! ஏனே இந்தக் காரியம் செய்தேன்!

தத்தன் : அடா பேதாய்! நீ அடியார் வேடத்தில் இருந்தாலும், நான் ஏமாந்துவிடுவேனு? உன்னை எத்தனைப் போர்க்களங்களில் கண்டிருக்கிறேன்? இதோ உன்னை என் வாளால் இரண்டு துண்டாக்குகிறேன்!

முத்த : ஐயோ! வேண்டா! என்னை விட்டுவிடு! இதோ ஓடிவிடுகிறேன்! இனி இந்தப் பக்கமே தலை நீட்ட மாட்டேன்!

தத்தன்! வஞ்சகனே, அடியார் வேடத்தில் வந்தால் மெய்ப்பொருளை என்ன வேண்டுமானாலும் செய்ய லாம் என்று நினைத்துத்தானே வந்தாய்?

முத்த : தத்தா, என்னை விட்டுவிடு! தயை கூர்ந்து விட்டுவிடு!

தத்தன் : அட பாவி, விளக்கு இருளைப் போக்குவ தானாலும் திரி கறுப்பாய் இருப்பதுபோல, வெளி உடல் மட்டும் அடியாருக்குரிய விபூதி அக்கமணி முதலியவற்றை அணிந்திருந்தாலும் உன் உள்ளம் வஞ்சகத்தால் நிரம்பி இருக்கிறதே! உனக்கு இந்த வேடம் தகுமா?

முத்த : ஐயோ! சொல்லால் என்னைக் கொல்ல வேண்டா! வாளாலாவது கொன்றுவிடு!

தத்தன் : இல்லை, உன்னைக் கொல்ல வேண்டா என் பது எங்கள் அரசரது ஆணை. வா, உன்னைக் கொண்டுபோய் ஊரின் எல்லையில் விட்டுவிட்டு வருகிறேன்.

முத்த: ஒருவேளை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று என்னைக் கொலை செய்துவிடுவாயா?

தத்தன் : முத்தநாதா, உன்னைப் போன்ற வஞ்சகன் அல்லன் நான். அரசரது ஆணையை மீறமாட்டேன். மேலும், அவர் போகும் உயிரைத் தாங்கியிருப் பார்.

முத்த : எதற்கு?

தத்தன் : எதற்கா? உன்னை இடையூறு இல்லாமல் கொண்டுபோய் விட்டேன் என்று நான் திரும்பிச் சென்று சொல்கிற வரை அவர் உயிருடன் இருப்பார்.

முத்த : அப்பாடா! உயிர் தப்பியது. (கனவிலிருந்து விழித்துக் கொள்கிறான்.)

தத்தை : ஐயோ! இஃது என்ன, வெகு நேரமாக உளறிக்கொண்டே இருக்கிறீர்களே! ஏன் உயிர் தப்பியது என்று கூறினீர்கள்? கனவா......?

முத்த : ஆம் தத்தை, கனவுதான். ஆ! என்ன பயங்கரமான கனவு! ஐயோ! ஏன் செய்தேன் இந்தப் பாழுங்காரியத்தை!

தத்தை : எந்தக் காரியத்தைப்பற்றிக் கூறுகிறீர்கள்?

முத்த : இனி மறைப்பதால் பயனில்லை. ஐயோ! நான் தான் மெய்ப்பொருளை.........

தத்தை : ஆ! என்ன! நீங்களா! இந்தக் காரியத்தையா, நம்ப முடியவில்லையே! என்ன கேவலம்! தமிழன் செய்யும் காரியமா இது? உலகம் உள்ள அளவும் தீராத பழியைத் தேடி.........

முத்த : போதுமே, தத்தை! என் மனச் சாட்சியே என்னைக் கொல்லுகிறது! போதாததற்கு நீயும் வேறு சேர்ந்துகொண்டாயே! இனி இவ்வுலகில் வாழ எனக்கு விருப்பம் இல்லை!

தத்தை : தவறான செயல் என்று அறிந்திருந்தும் எப்படிச் செய்ய மனம் வந்ததோ!

முத்த: ஐயோ! வேண்டா! என்னை விட்டுவிடு! இதோ ஓடிவிடுகிறேன்! இனி இந்தப் பக்கமே தலை நீட்ட மாட்டேன்!

தத்தன்! வஞ்சகனே, அடியார் வேடத்தில் வந்தால் மெய்ப்பொருளை என்ன வேண்டுமானாலும் செய்ய லாம் என்று நினைத்துத்தானே வந்தாய்?

முத்த: தத்தா, என்னை விட்டுவிடு! தயை கூர்ந்து விட்டுவிடு!

தத்தன்: அட பாவி, விளக்கு இருளைப் போக்குவ தானாலும் திரி கறுப்பாய் இருப்பதுபோல, வெளி உடல் மட்டும் அடியாருக்குரிய விபூதி அக்கமணி முதலியவற்றை அணிந்திருந்தாலும் உன் உள்ளம் வஞ்சகத்தால் நிரம்பி இருக்கிறதே! உனக்கு இந்த வேடம் தகுமா?

முத்த: ஐயோ! சொல்லால் என்னைக் கொல்ல வேண்டா! வாளாலாவது கொன்றுவிடு!

தத்தன்: இல்லை, உன்னைக் கொல்ல வேண்டா என் பது எங்கள் அரசரது ஆணை. வா, உன்னைக் கொண்டுபோய் ஊரின் எல்லையில் விட்டுவிட்டு வருகிறேன்.

முத்த: ஒருவேளை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று என்னைக் கொலை செய்துவிடுவாயா?

தத்தன்: முத்தநாதா, உன்னைப் போன்ற வஞ்சகன் அல்லன் நான். அரசரது ஆணையை மீறமாட்டேன். மேலும், அவர் போகும் உயிரைத் தாங்கியிருப் பார்.

முத்த : எதற்கு?

தத்தன் : எதற்கா? உன்னை இடையூறு இல்லாமல் கொண்டுபோய் விட்டேன் என்று நான் திரும்பிச் சென்று சொல்கிற வரை அவர் உயிருடன் இருப்பார்.

முத்த : அப்பாடா! உயிர் தப்பியது. (கனவிலிருந்து விழித்துக் கொள்கிறான்.)

தத்தை: ஐயோ! இஃது என்ன, வெகு நேரமாக உளறிக்கொண்டே இருக்கிறீர்களே! ஏன் உயிர் தப்பியது என்று கூறினீர்கள்? கனவா......?

முத்த : ஆம் தத்தை, கனவுதான். ஆ! என்ன பயங்கரமான கனவு! ஐயோ! ஏன் செய்தேன் இந்தப் பாழுங்காரியத்தை!

தத்தை : எந்தக் காரியத்தைப்பற்றிக் கூறுகிறீர்கள்?

முத்த : இனி மறைப்பதால் பயனில்லை. ஐயோ! நான் தான் மெய்ப்பொருளை........

தத்தை : ஆ! என்ன! நீங்களா! இந்தக் காரியத்தையா, நம்ப முடியவில்லையே! என்ன கேவலம்! தமிழன் செய்யும் காரியமா இது? உலகம் உள்ள அளவும் தீராத பழியைத் தேடி.........

முத்த: போதுமே, தத்தை! என் மனச் சாட்சியே என்னைக் கொல்லுகிறது! போதாததற்கு நீயும் வேறு சேர்ந்துகொண்டாயே! இனி இவ்வுலகில் வாழ எனக்கு விருப்பம் இல்லை!

தத்தை : தவறான செயல் என்று அறிந்திருந்தும் எப்படிச் செய்ய மனம் வந்ததோ!

முத்த : ஆம்! மெய்ப்பொருள்தான் வெற்றி பெற்ருர். என்னை முழுமனத்துடன் மன்னித்தார் ; அம் மன்னிப்பில் வெற்றி கண்டார்! ஆ! மெய்ப்பொருளே, எனக்கு நற்கதி உண்டா ? ...இல்லை! நான் முழுப் பாவி! வாழத் தகுதி அற்றவன்! இதோ உங்களைக் குத்திய வாள்! பாவியாகிய என்னையும் இது முடித்துவிடட்டும்!

[தன்னைத்தானே குத்திக்கொண்டு மாள்கிருன்]

தத்தை : ஆ! ஐயோ! என்ன காரியம் செய்துவிட்டீர். நாதரே, என்னை விட்டுவிட்டு எங்குச் சென்று விட்டீர்!

[திரை]

இந் நூலாசிரியரின் பிற நூல்கள்

1. இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்
2. கம்பன் கலை — நாடும் மன்னனும்
3. ,, — தம்பியர் இருவர்
4. ,, — அரசியர் மூவர்
5. அகமும் புறமும் — அகம்
6. ,, — புறம்
7. மகளிர் வளர்த்த தமிழ்
8. குறள் கண்ட வாழ்வு
9. அனைத்துலக மனிதனை நோக்கி
   - தாகூர் நூலின் தமிழாக்கம்

பெருஞ்சொல் விளக்கனார்

அ. மு. சரவண முதலியாரின் நூல்கள்

1. கட்டுரைப் பொழில்
2. அழுதடி அடைந்த அன்பர்